

# நிலாவின் இந்திய உலா

நிலா

# நிலாவின் இந்தியவுலா!

## நிலா

முகில்

11, சூர்யா தோட்டம், குமரன் தெரு,
குதிரை குத்தி தாழை, மாதவரம் பால் பண்ணை,
சென்னை - 600 051

நிலாவின் இந்தியவுலா!
பயணக் கட்டுரை
உரிமை நிலா

முதல் பதிப்பு: ஆகஸ்ட் 2010
பக்கம்: 256 + 8
விலை: ரூ. 180
ஐரோப்பாவில் விலை: 8 ஸ்ரேளிங் பவுண்கள்

Nilavin India Ula
Essays
© Nila

First Edition: August 2010
Pages 256 + 8
Price Rs.180/-

வெளியீடு:

முகில் பதிப்பகம்,
11, சூர்யா தோட்டம், குமரன் தெரு,
குதிரை குத்தி தாழை, மாதவரம் பால் பண்ணை,
சென்னை - 600 051 தமிழ்நாடு
தொலைபேசி: 044 - 2594 2837, 99404 65755
மின்னஞ்சல்: mukilpublications@gmail.com

தயாரிப்பு மற்றும் விற்பனை உரிமை:
வடலி பதிப்பகம்,
54/13, 10வது தெரு, டிரஸ்டு புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024
தொலைபேசி: 044 - 43540358
மின்னஞ்சல்: sales.vadaly@gmail.com

# ஒரு சக்கர நாற்காலியின் பயணம்

உண்மையில் வாழ்தல் என்பது ஒரு லேசுப்பட்ட விடயமல்ல என்பதனை நிலாவின் இந்த பயணக்கட்டுரையை வாசித்தபின்பு நேரடியாகவே உணர்ந்தேன். சாதாரணமாக கை கால்கள் உறுதியாக உள்ள எங்களின் வாழ்வுக்கும் நிலா போன்றவர்களின் வாழ்வுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி இருக்கிறது. அது வெளியில் பார்க்கத் தெரியாத ஒன்று.

நிலாவைச் சந்திக்கும் பொழுதும் அவரோடு உரையாடும் பொழுதும் அந்த இடைவெளியை உணரவே முடியாதபடிக்கு அவர் தன்னை தானமைத்துக் கொண்டிருக்கிறார் என்பது இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது.

சக்கர நாற்காலியுடன் தான் வாழ்நாளை வாழ வேண்டும் என்று பணிக்கப்பட்ட நிலா இந்தத் தொகுப்பை தனது வாழ்வு, வலி, மகிழ்ச்சி, கோபம், இன்பம், பயணம், நண்பர்கள், வெறுப்பு, என்று தனது உணர்வுகளினூடு தொகுத்திருந்தாலும் சக்கர நாற்காலியில் வாழும் ஒவ்வொருவரின் மிக நுண்ணிய உணர்வின் தொகுப்பாகவே நான் காண்கிறேன்.

இதனை எழுதும் போது கூட நிலாவின் உடல் வலியை நானும் உணர்கிறேன்.

தனது உடல் வலியை மிக நுண்ணியமாக எல்லா இடங்களிலும் பதித்து வைத்திருக்கிறார் அவர்.

சாதாரண கையுளைவு காலுளைவுகளுக்கே நாங்கள் படும் அவஸ்தை பெரிது. கையும் காலும் இயங்காத நிலாவின் ஆத்மார்த்தமான, உண்மையான மன உணர்வுகளை இந்தத் தொகுப்புக் கொண்டு வருகிறது.

பயணம் என்பது ஒரு சாதாரணமான விடயமல்ல "ஒரு மனிதனின் உண்மையான குணங்கள் பயணத்தின் போது வெளிப்படுத்தப்படுகின்றன" என்பது முஹமது நபிகளாரின் ஹதீஸ். சில நண்பர்கள் மிகவும் அன்பானவர்களாக இருப்பார்கள். பயணம் போய்விட்டு வந்து பிரிந்து விடுவார்கள். இப்படி நண்பர்களைக் கண்டிருக்கிறேன். பயணத்தில்தான் கோபம் வெறுப்பு, சகிப்புத்தன்மை இவை எல்லாம் உண்மையாக வெளிப்படும். நிலாவின் இந்தப் பயணத்திலும் இவை எல்லாம் வருகின்றன. இணையம் இவ்வளவு நண்பர்களை உருவாக்கிறதா என்று ஆச்சரியப்படுகிறேன். உண்மையில் இணையத்தில் நண்பர்களுடன் கலந்து பேச நேரமில்லாத மிகவும் வேலைப்பளு எனக்கு. ஆகவே இணையத்தில் யாராவது சற் செய்தால் இரண்டு மூன்று நிமிடத்தில் எனது உரையாடல் முடிந்து அடுத்த வேலைக்குப் போய் விடுவேன். ஆனால் இணையத்தில் இணைந்த நண்பர்களின் அன்பை இந்தத் தொகுப்பில் பார்க்கும்பொழுது உண்மையில் நான் வியந்து தான் போகிறேன்.

ஒன்று நிலாவின் மிக நீண்ட பயணம் தொடர்பாக, அவரின் துணிவு தொடர்பாக இன்னும் எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. இரண்டு சாதாரணமாக நாங்கள் பயணம் செய்யும் போது கூட எவ்வளவு அலுத்துக் கொள்கிறோம். அதுவும் ரான்சிட் பயணம் பெரும் அவஸ்தையாகவே நினைக்கிறோம். ஆனால் நிலாவின் மனத்துணிவு மட்டும்தான் அவரது முழு உடலையும் இயக்கு கிறது. இயங்காத உடலை இயங்க வைக்க,

ஏனையோருடன் பழக, கடிந்து கொள்ள, இந்த உலகத்தில் வாழ, நிலா போன்றவர்களுக்கு நிலா முன்மாதிரி. இந்தத் தொகுப்பு இங்கேதான் முக்கியப்படுகிறது.

தனது வாழ்வை ஒளிவு மறைவின்றி எழுதிய நிலா ஏனையவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

கை கால்கள் இயங்க முடியாத ஒரு ஆணுக்கும் கை கால்கள் இயங்க முடியாத ஒரு பெண்ணுக்கும் இடையில் உள்ள பாரிய வாழ்வின் சிக்கல்கள் தொடர்பாக மிக துல்லியமாகவே இந்த கட்டுரைகளில் சொல்கிறார் நிலா. நிலா ஒரு பெண்ணாக இருந்து அந்த பிரச்சினைகளை தொடுவது மிகவும் உணர்ச்சி பூர்வமானதாகவும் உண்மையாகவும் இருக்கிறது.

சாதாரண வாழ்வில் பெண்ணும் ஆணும் சந்திக்கும் பிரச்சினைகள் வேறுபடுவதாகும். எப்படியோ பெண்கள் தங்கள் பிரச்சினைகளை மனதில் வைத்து புளுங்கிக்கொண்டிருப்பார்கள். பலர் இன்னும் முழுமையாக ஆண்களின் கட்டுப் பாட்டில் இயங்க வேண்டிய நிலைமையில் தான் இருக்கிறார்கள்.

அவர்களின் உடல், உள வலிகளைக் கூட புரிந்து கொள்ள முடியாத ஆண்கள் இருக்கிறார்கள். இது சுகதேகிகளின் பிரச்சினை.

நிலா போன்ற பெண்கள் தங்களுடைய அந்தரங்க உணர்வுகள், அன்றாடத் தேவைகள் தொடர்பான அவஸ்தையை யாரிடம் சொல்லி முழுமையாக அதனை விளங்கப்படுத்துவது என்பது பாரிய சிக்கல். அடுத்தது பெண்ணாய் பிறந்துவிட்டு கை கால்கள் இயக்கமில்லாமல் இருந்து கொண்டு பெண்களைத்தான் உதவியாளர்களாக வைத்துக் கொள்ள வேண்டும் எனும் நிலைமை வரும் பொழுது ஏற்படும் பலவிதமான உளச் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் நிலா வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறார்.

தன்னுடைய திருமணமாகாத நண்பரின் வீட்டில் ஒரு பெண்ணாகப் போய் எப்படித் தங்குவது என்று நிலா சொல்லும் பொழுது தமிழ்ப் பெண்ணுக்குரிய மன உணர்வின் துல்லியம் எனக்குத் தெரிகிறது.

கை கால்கள் இயங்காதவர்களின் சிலோன் வாழ்வுக்கும் லண்டன் வாழ்வுக்குமான பதிவை அழகாகச் சொல்லிக்கொண்டு போகிறார்.

சிலோனில் எத்தனை பேர் எமது கண் முன்னால் மூன்று சக்கர சைக்கிளில் போவார்கள். அடிப்படையில் அவர்களை மனிதர்கள் போல யாருமே மதிப்பது இல்லை. ஆனால் லண்டனில் உடல் இயக்கமில்லாதவர்கள் வாழ்வதற்கான எல்லா வழிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கிறது. நிலாவின் அந்த அதிசயக் காரை இன்னும் நான் பார்க்கவில்லை. பார்க்க வேண்டும்.

வெள்ளைக்காரருக்கும் எங்களுக்கும் இடையிலான குடும்ப உறவு எவ்வளவு பாசமானதும் வித்தியாசமானதுமாக இருக்கிறது. வலது குறைந்த ஒரு பிள்ளையின் தந்தையான வெள்ளைக்காரர் ஒருவரைச் சந்தித்தேன். தனது பிள்ளையை இங்குள்ள பராமரிப்பு நிலையமொன்றில் வைத்துப் பராமரிப்பதாகவும் கிழமைக்குக் கிழமை பிள்ளையைச் சென்று பார்த்து வருவதாகவும் சொன்னார். வீட்டில் வலது குறைந்த பிள்ளையை வைத்துப் பராமரிப்பது தொடர்பாக எமது பெற்றோர்களின் அர்ப்பணிப்பும் பாசமும் அளப்பரியது. நிலாவின் அப்பா அம்மாவின் பாசமும் அன்பும் பெரிது. பெரிதாக வளர்ந்து விட்ட பின்பும் நிலாவை பராமரிக்கும் அம்மா, அதுவும் வீட்டில் என்றால் பரவாயில்லை பயணத்தில் படும் சிரமம் பெரிதினும் பெரிது.

இந்தத் தொகுப்பில் வரும் ஒவ்வொருவரின் உணர்வுகளையும் அழகாக புரிகிறார் நிலா.

ரகு, இளங்கோ, பாலாஜி, சிவா, பணிப் பெண்கள், அம்மா, அப்பா, ராகவன், ராம்குமார், லோகேஷ்,

குருஜி, மாமி, விசு என்று எல்லோருடைய மன நிலையையும் அந்தந்த நேரத்து உணர்வுகளையும் மிகவும் துல்லியமாகப் பதிகிறார் நிலா.

நிலா வாழ்வின் பல வசந்தங்களைப் பார்த்திராதவர் என்று இந்த தொகுப்பை பார்த்த பின்பு சொல்லத் தெரியவில்லை. தனது விடாப்பிடியான உழைப்பின் மூலம் டிகிறி எடுத்திருக்கிறார். தனது மன உணர்வு களை துல்லியமாக இன்னொருவருடன் பகிர்ந்து கொள்வதில் வெற்றி கண்டிருக்கிறார். பயணம் போகிறார், படிக்கிறார், எழுதுகிறார் என்று உடலைத் தன்னோடு கஷ்டப்பட்டு அழைத்துக் கொண்டு மிக துணிச்சலான பெண்ணாக அவர் இருக்கிறார்.

சக்கர நாற்காலியைத் தன்னுடைய காலாகவும் கையாகவும் கொண்டு வாழ்கின்ற நிலாவின் வாழ்வு எதற்கெடுத்தாலும் சோம்பல், தள்ளிவைப்பு, பொழுதுபோக்குத்தனம் என்பவற்றோடு வாழும் எம்மைப்போன்ற மனிதர்களுக்கு ஒரு உற்சாக ஊக்கம். இந்தத் தொகுப்பை படித்து முடித்த போது ஒரு பெரிய நண்பர்கள் வட்டத்தைப் பேணி பாதுகாத்துக்கொண்டிருப்பது இன்னும் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஒரு மனிதனுக்கு அவரின் துன்பத்தில் இருந்து ஆறுதலாக இருங்கள் என்று சொல்வது என்பது வெறும் வார்த்தை அல்ல. ஆனால் அவர் ஆறுதலடையவும் வேண்டும். அந்த மனநிலை துன்பப்பட்டவருக்கு இருக்க வேண்டும். நிலா எவரிடமும் பச்சாபதாயம் எதிர்பார்க்காதவர். கை கால்கள் இயலாதவர்களுக்கு எமது தமிழ் சமூகம் காட்டும் முதல் துன்பம் பச்சாத் தாபம். அவருக்கு இயலாது இயலாது என்று அவரை இயலாவாளி ஆக்கிவிடுகிறோம். ஆனால் நிலா மிக உறுதியான பெண்.

அது சரி இவ்வளவு சிரமமான பயணத்திற்கு பிறகும் நிலா இந்தியாவிற்கு போக வேண்டும் என்று முடிக்கிறார்.

உண்மையில் தமிழ் நாடு எமது நெஞ்சுக்கு நெருக்கமாக இருக்கிறது. அது மற்றுமொரு எம்மவர் பூமி என்பதாலோ என்னவோ? அல்லது அதுதான் தொப்புள்கொடி உறவோ என்னவோ? அல்லது தமிழ் தான் இணைக்கிறதோ என்னவோ? எப்பொழுது தமிழ் நாட்டுக்கு போய் விட்டு வந்தாலும் மீண்டும் எப்பொழுது போவோம் என்று எனக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நினைப்பு இருக்கும். அதுதான் தமிழ் நாடு.

ஒவ்வொரு தாய்க்கும் பிள்ளைக்குமான உறவு ஒரு பிள்ளை இயலாவாளி ஆகிப் போனாலும் எப்பொழுதும் இருக்கும். ஒரு பிள்ளை சுகதேகி இல்லை என்றவுடன் தாய் படும்பாடு சொல்லொணாதது. எனக்குத் தெரிந்த இரண்டு தாய்மார் தங்கள் பிள்ளைகள் கை, கால், மூளை இயங்காமல் போய் விட்டார்களே என்று தினம் தினம் கண்ணீர் விட்டுக் கலங்கிக் கொண்டு இருப்பதை ஒவ்வொரு நாளும் இங்கு எனது அயல் வீடுகளில் பார்க்கிறேன்.

தாயின் துக்கம் அளப்பரியது. இந்த வயதிலும் நிலாவின் அம்மாவின் மனத் துயரமும் மன உணர்வுகளும் எனக்குப் புரிகிறது. அந்த அம்மாவை இந்த இடத்தில் நினைத்துப் பார்க்கிறேன். ஒரு கெட்டிக்காரியான பிள்ளையை பெற்றிருக்கிறீர்கள் என்ற தைரியத்தை மட்டும் அவருக்குச் சொல்கிறேன்.

நட்பு வட்டம் மிகவும் உணர்வு பூர்வமானது. அவர்களை நானும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.

**இளைய அப்துல்லாஹ்**

லண்டன்

## எழுத்தின் வெளிச்சத்தில் மின்னுகிறது நிலா...

சுதந்திரத்தின் வலிஉணர்ந்த எழுத்து, தடுக்கும் இடமெல்லாம் முயற்சிகளால் உடைத்தெறிந்த திறன், வீழும் உலகம் சரிந்து தலை மேல் வீழினும் எனக்கொன்றும் ஆகாதெனும் நம்பிக்கை, நிலாவின் நம்பிக்கை!

மின்னும் நட்சத்திர வானில் ஒரு புள்ளியாய் தெரிவதல்ல, நட்சத்திரமாக ஓர்தினம் வீழ்ந்து விடுவதும் அல்ல, நிலைத்து வானத்தின் வெண்மையை பறைசாற்றும் ஓர் நிலவின் ஒளிபோல் நம் இதயத்தை வெளிச்சத்தால் நிறைக்கும் ஒரு உயர்ந்த படைப்பாளியின் எழுத்து நடை 'நிலா'வின் எழுத்து நடை!

'தெருவில் நடப்பவருக்கு லாட்டரி அடித்தால் கீழே எங்கேனும் கற்றையாக பணம் கிடைத்தால் ஏதேனும் பொன்முடிப்பு எப்படியாவது கிடைத்து வங்கியிலிட்டு விட்டால் மூன்று வேளை சோறுக்காகுமே' என்று எண்ணி வாழும் பலருக்கு மத்தியில் தன் வலிகளையும், தான் பட்ட அவமானங் களையும் மறந்து தனக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், எங்கேனும் ஓர் பிறப்பு தன்னைபோல் இருந்துவிட்டால் அப்பிறப்பிற்கு தான் ஒரு முன்னுதாரணமாக இருத்தல் வேண்டுமென்றும், நிலா

கொண்டுள்ள சிரத்தை 'நிலா'வின் "எழுத எழுத" எனும் முதல் படைப்பிலிருந்தே தெரியாமலில்லை யென்றாலும், கண்ணீர் சொட்ட சொட்ட வாழ்ந்த வாழ்வின் ஈரத்தில் வீறுகொண்டெழுந்த 'வெற்றிகளின் எழுத்தாகவே மின்னுகின்ற வார்த்தைகளின் லயம் - மிளிர்கின்றன நிலாவின் இந்திய உலா எங்கும்!

ஊனம் என்பது முயற்சி செய்யாதாரின் போக்கு ஊனம் என்பது உழைக்க இயலாதார் பேசும் பேச்சு ஊனமுற்றோர் எவரும் முழு ஊனமுற் றோறில்லை என தன் எழுத்தாலும், பதினைந்து நாடகம் இயக்கிய திறத்தாலும் ஒன்பது பேருக்கு வேலை கொடுத்து நடத்திய 'சரஸ்வதி கலையகத்தின் வாயிலாகவும் நிரூபிக்கும் ஒரு உயர் மதிப்பிற்குரிய 'தமிழ் சமுதாயம் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டிய தோள்; தோழி; இந்திய உலாவின் ஆசிரியர் இந்த நிலா அவர்கள்!

விமான நிலையத்திலிருந்து வெளி வருவதாக சொல்லும் ஓரிடத்தில், நான்கு சக்கர நாற்காலியில் அமர்ந் திருக்கும் தன் தாயிடம் கேமிராவின் கண்களிலிருந்து மறைந்து நின்றவாறு, விமான பணியாளன் ஒருவன் சேவகம் செய்ததற்கு பணம் கேட்டதாக சொல்லி வருத்தமுருகிறார். அந்த வருத்தம்போல் ஆங்கங்கே, தோலுரித்து அம்மண மாய் திரியும் பண ஆசை பித்தர்களின் போக்கு நிலாவின் எழுத்திற்கிடையேயும் பட்டுத்தெறித் திருக்கும், நம்தேச அவலநிலையை எண்ணி மனம் வருத்தமென்ன, தலைகுனியவே செய்கிறது.

ஆக, இப்படி மனதை பிழிந்து கசக்கும் இடங் களிலும் பக்குவப்பட்டு தெளிந்த நிலாவின் எழுத்து வலி தாண்டி அவரின் துணிச்சலையும் தன்னம் பிக்கையையுமே காட்டுகிறது எனலாம்!

நாமெல்லாம் நம்பிக்கையின் நட்சத்திரம் என்று பார்ப்பவர் யாரையாயினும் வழக்கமாக சொல்லிக் கொள்வோம். ஆனால் சற்று யோசித்துப்பாருங்கள்.

கைகளிரண்டும் முழு நேர இயக்கமில்லை, கால்கள் இரண்டும் முழுதாக இயக்கமில்லை, மனதொன்றே பலமென்று இவராற்றும் சாதனை தான் இவரை நம் முன் உண்மையான நம்பிக்கையின் நட்சத்திரமாக்கி நிற்க வைக்கிறது போல்!

சில இடங்களில் நம்மை மீறி கண்ணீர் கரைபுரண்டோடியும் விடுகின்றன. அதற்கான காரணத்தை வெறும் எழுதிய நடையின் அழகு என்று சொல்லி ஒதுங்கிக்கொள்ள முடியாது; அது அவர் வாழும் யதார்த்த வலி என்பதே நிஜம் என்றும் புரிகிறது.

உண்மையில் நிலா என்றாள் என்ன? நம்பிக்கை எனும் உயிர் தாங்கி அம்மா அண்ணன்கள் சுற்றமெனும் உடல் சுமந்து நட்பெனும் பலத்தால் விண்ணை முட்டும் கனவுகளோடு வாழும்; அல்லது வாழ இயலாமையை கண்ணீராக அல்லாமல் எழுத்தாக உதிர்க்கும் ஒரு சாதனை பெண் என்பதே சரி என்பதை இந்த 'இந்தியா உலா'வினை வாசித்து முடிக்கையில் நீங்களும் அறிந்துக் கொள்வீர்கள்.

அந்த சாதனை பெண் என்ற ஒற்றை வார்த்தையை மீண்டும் சரித்திர நாயகியாய் நிறுத்தி நிலாவின் தரத்தை மேலும் நம் பார்வையில் மெருகூட்டி செல்கிறது அவரின் திறம்பட உழைக்கும் இதர அத்தனை உழைப்பும்.

இதுஅவரை, மூன்று புத்தகங்களை எழுதியுள்ளார், பதினைந்து நாடகங்களை இயக்கியுள்ளாராம், பாடம் கற்றுக் கொடுக்கிறாராம், வானொலி நிகழ்ச்சி நடத்துகிறாராம். இதற்கெல்லாம் மத்தியில் உடல் உபாதையின் போராட்டம் எதிர்த்து லண்டனிலிருந்து சென்னை வந்து புத்தகம் அச்சடித்து வெளியீட்டு விழாவும் எடுக்க இருக்கிறாராம், இவரின் மனபலமும், முயற்சியும், உழைப்பும், உலகத்தால் ஓர்தினம் பாராட்டப் படும் என்பதற்கு என் முன்கூட்டிய வாழ்த்தினை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நட்பை அப்படி பெருமை படுத்துகிறார் இந்த பயணக் கட்டுரையின் ஆசிரியர் நிலா. இவரின் அத்தனை அசைவுகளுக்கும் துணையாய் இருந்து நட்பு ஒன்றே இவரை இத்தனை பெருமை படுத்தியதென்பதை, இவரின் ஒவ்வொரு பக்கத்திலும் அறிய இயலாமலில்லை. அண்ணன்களின் பெருமை ஒரு புறமெனில் நட்பின் புகழையே அதிகம் பேசித் தீர்க்கிறது இந்த 'நிலாவின் இந்திய உலா'.

பொதுவாக அணிந்துரை எனில் புத்தகம் பற்றி பேசுவார்களே, அவர் எழுதிய முக்கிய இடங்களை கோடிட்டு காட்டுவார்களே, நீங்களென்ன நிலாவை பற்றியே பேசுகிறீர்களே என்று யாரும் எண்ணிவிடாதீர்கள். புத்தகம் பேசும் ஒவ்வொரு இடமும் எனக்கு நிலாவின் உழைப்பையும், தன்னம்பிக்கையையும், முயற்சியையுமே பெரி தாக்கிக் காட்டுகிறது என்பதால் அவரை பற்றிய சிறப்புகளையும் வலிகளை யும் முன்வைத்து விடுவேனெனில், புத்தகம் தானே உங்களுக்குப் பரிட்சயப்பட்டு விடுமென்பதே என் நோக்கம்.

பயணக் கட்டுரை என்பது ஒரு சுவாரஸ்யம் மிக்க, வழி போக்கர்களின் அனுபவத்தை பறைசாற்றி நிற்பது. ஆனால் இப்படைப்பு முழுவதும் உங்களுக்கு நிலா பற்றியான உபாதையும் வலிகளும், அதை எதிர்த்து அவர் போராடிய சம்பவங்களும் அதன் பின்மறைவில் நிற்கும் உறவின் நட்பின் பெருமையும் தவிர நம் தேசத்தின் சீர்கேடல்களால் எழும் அவரின் சாடல்களுமே "நிலாவின் இந்திய உலா" என்று எண்ணம் கொள்ளச் செய்யும்.

ஓரிடத்தில், பக்ரீன் சென்று காலை கடன்களை முடிக்க உதவ ஆளின்றி பெரும்பாடுபடுவதாகவும், அதை காண இயலாதவராக அவரின் தாய் அவருடைய உயிர்போனாலும் பரவாயில்லை என தானே தூக்கி சென்று தேவைகளை பூர்த்தி செய்ய உடனிருந்து உதவி செய்ததாகவும் சொல்லுமிடம் மனதை கண்ணீர் விட்டு கண்ணீர்விட்டு கரைக்கிறது.

தன் முடியாத வயதிலும் மகளுக்கென போராட துடிக்கும் அந்த தாயை எண்ணி பெருமை கொள்வதா, அல்லது நிலாவின் இயலாமையை எண்ணி கண்ணீர் வடிப்பதா என்றெண்ணுகையில் அத்தகைய கோழையல்ல நிலா என்றெண்ணி, எங்கு என் கண்ணீர் அவரின் நம்பிக்கையை உடைத்துவிடுமோயென கனமான மனதோடு புத்தகத்தை மூடி விட்டேன்.

இதுபோல் மூடி வைத்து கனத்த மனதோடு நிலாவை எண்ணி உருகுமிடம் இந்'நிலா'வின் இந்திய உலா எங்கிலும் நிறைந்தே இருக்கிற தென்றாலும், இவரின் வெற்றிகளை எல்லாம் தாண்டி அந்த தாயின் அன்பிற்கு, தியாகத்திற்கு, உலகின் ஏதேனும் ஒரு உயர்ந்த பரிசினை காணிக்கையாக்க என் மனதெல்லாம் சிபாரிசு நிறைகிறது.

இப்படி, நீளும் புத்தகமெங்கும் வியாபிக்கும் மனதாக, புத்தகத்தை பிரித்த உங்களிடம் நானே பேசி நேரம் கடத்த விரும்பவில்லை. எப்படி யாயினும் இப்படைப்பினை முழுமையாக படித்து முடிக்கையில், அண்ணன்களின் மேல் காட்டும் பாசம், நண்பர்களின் மேல் கொள்ளும் நட்பு, மனிதரின் மேல் வைக்கும் நம்பிக்கை என ஒரு உயர்ந்த பெண்மணியாகவே நிலா உங்களின் மனதெங்கிலும் நிறைவார் என்பதில் ஐயமில்லை.

ஆக, அவரின் இயலாமைகளை கடந்து, அவரின் சாதனைக்கான முயற்சியாகவும், வாழ்விற்கான ரசனையாகவும், சமூகத்திற்கான கோபமாகவும் கனகம்பீரமான எழுத்துக்களால் இலக்கிய உலகின் வெற்றி மலரை இந்த பயணக் கட்டுரை மூலம் பறித்தேக் கொள்கிறார் நிலா என்பது உறுதி யென்றாலும், இயற்கையை வர்ணிக்கும் விதமும், நெடுக நீளும் பயணத்தின், ஒரு அத்யாயத்தை அல்லது பக்கங்களை முடித்து நிறுத்தும் திறனிலும் மனதில் ஆழமாக பதிகிறது அவரின் எழுத்து.

ஏதோ ஒரு சோக படம் பார்த்த மனதாகவும், நம்பிக்கையில் மீண்ட உயிராகவும், யாரோ தன் ஒரு நெருங்கிய தோழியின் மனதெல்லாம் சுற்றி வலம் வந்ததாகவும் அவரின் நிஜ முகத்தை நமக்கும் நினைவுகொள்ள செய்கிறது இந்த "நிலாவின் இந்திய உலா."

ஒரு இரவு விழித்த விழிப்பின் பலனாக பகலில் வாங்கும் ஊதியமும், அதை சார்ந்த வாழ்வாகவுமே ஒவ்வொருவரின் கடின உழைப்பும் அவரவருக்கான வாழ்வின் வெளிச்சத்தோடு பல உயரிய வெற்றிகளையும் சுமந்தே வருகிறது. அதுபோல் என் அன்பிற்குரிய தோழி, நிலாவின் இந்த "இந்திய உலாவும், இலக்கிய உலகின் நிலைத்த நூலாக நின்று, தமிழுக்கு சேர்க்கும் மற்றுமொரு பெருமையாக விளங்கி ஒரு பெண்ணின் வாழ்ந்த, வென்ற, அடையாளமாக காலத்திற்கு சொல்லி நிற்கட்டும்.

நாளொன்றின் பொழுதுகளில் இலக்கிய வாசல் தேடி வரும் ஆயிரமாயிரம் படைப்புகளில் இவரின் படைப்பும் முத்தாய்ப்பானதாய் விளங்கட்டும். இன்னும் பல அரிய படைப்புக் களை படைக்கும் உயர்ந்த திறனையும், போதிய உடல்நலத்தையும் பெற்று, இந்நிலாவின் நூல்கள் இனி வருவோரின் வாழ்க்கைக்கு பெரும் நம்பிக்கையின் சக்தியாக திகழ எல்லாம் வல்ல இறைவனையும் வேண்டி, இப்படைப்பினை நம் முகில் பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதில் பெருமை கொண்டு ஒரு படைப்பாளியின் வெற்றியை தன் வாசிப்பில் வைத்திருக்கும் வாசகர்களாகிய உங்களிடமே இந்நூலினையும் விட்டுவிட்டு, நிலாவின் மொத்த முயற்சிகளுக்கும், வெற்றிகளுக்கும், உங்கள் ஆதரவிற்கும் பெருத்த வணக்கமும் நன்றியும் தெரிவித்தவனாய்...

**வித்யாசாகர்**

www.vidhyasaagar.com

வாழ்த்துரை

இயங்க மறுக்கும் கை, கால்களைப் புறந் தள்ளிச் சக்கர நாற்கலியுடன் வாழ்வை, இலக்கியத்தை, நட்பைச், சவாலை நேசிக்கப் பழகியவள் நிலா, அம்புஜம் என அறியப்பட்ட உதயகுமாரி பரமலிங்கம். யாழ்ப்பாணம் அரியாலையில் பிறந்து, வேம்படி மகளிர்கல்லூரியில் கற்றுச், சரஸ்வதி கலையக நிர்வாகியாகி, நாடக இயக்குனராகிக் கணித ஆசிரியையாக ஊரில் மிளிர்ந்தவள்.

1998 இல் இலண்டன் குடிபெயர்ந்து, கணனிப் பொறியியல் பட்டதாரியாகி, இலண்டன் தமிழ் வானொலியில் 'மத்ஸ் கோணர்', 'வல்லமை தாராயோ', ஆகிய நிகழ்ச்சிகள் தொகுத்தளித்து 'நிலாமுற்றம்' எனும் இணையத்தள நடத்துனராகி 'எந்தையும் நானும்', 'எழுத எழுத' ஆகிய நூல்கள் தந்து இன்று 'நிலாவின் இந்திய உலா' மூலம் உங்களைச் சந்திக்கின்றாள்.

எழுதுவேன்! எழும்புவேன்! எழுந்தே நிற்பேன்;! என் எழுத்துக்கள் அதைச் செய்யுமெனச் செயலில் காட்டும் செயல் வீராங்கனையின் நட்புடன் கூடிய முகம் எனக்கு எப்போதும் பிடிக்கும். அவள் எழுத்துக்கள் உங்களுக்குப் பிடிக்கும்.

சாதிக்கப் பிறந்தவளே! சிறப்புற்றுப் பணியாற்று; வாழ்த்துக்கள்!!

நட்புடன்

**மாதவி சிவலீலன்.**

# வாழ்த்துரை

மிக நீண்ட இடைவெளிக்குப் பின் ஒரு பயணக்கதையை வாசித்த மகிழ்வு தன் அனுபவங்களை தன்னுடன் நாமும் அனுபவிக்கும் விதத்தில் எழுத்தில் தந்துள்ள நிலாவிற்கு பாராட்டுக்களைத் தந்தாக வேண்டும்.

தந்தையின் அறிவாற்றல் நிச்சயம் பிள்ளைகளை தொட்டுச் செல்லும் என்பது விதி. தன் கல்வி வாழ்வியல் அனுபவங்களை அவ்வப்போது வானலைகளில் அவர் குரலில் தரக் கேட்டிருக்கிறோம். அவரின் தமிழ் மீதான காதல் அவரின் ஒலி பெயர்ப்பில் தெரிகிறது.

தன்னுடனான நட்பை ஏற்று உலகின் பல பாகங்களிலுமிருந்தும் வலம் வருகின்ற தமிழ் ஆர்வலர்கள் தமிழுடன் அளவு கடந்த பாசத்தையும் இவர் மீது வைத்திருப்பதை நானே வியந்திருக்கிறேன். மொழி மீதான காதல் அதனை வாலாயப்படுத்துகிற திறமை கைவரப் பெற்ற நிலாவின் கைவண்ணம் நூலாக வருகிறது. இவரின் எழுத எழுத நூலிலிருந்து அவருடன் நாமும் புதிதான அனுபவங்களைப் பெற்றுள்ளதை மறுக்க முடியாது. இங்கு நல்ல நாவலை வாசிக்கிற உணர்வு. இந்த நூல் உங்களுக்கும் ஏற்படுத்தும் தமிழை உள்ளுணர்வுடன் சுவாசிப்பவனால்

தான் மொழியை கைகளுக்குள் அடக்க முடியும். தமிழை நேசிக்கின்ற நிலாவின் வார்த்தைகளுக்குள் மொழி நர்த்தனமாடுகிறது எனலாம்.

மின்னம்பலத்தில் தான் சந்தித்த நண்பர்களை உறவுகளை நேரில் சந்திக்கையில் அவர்களை பிரிந்து மீண்டு வருகையில் வருகிறபோது ஏற்படுகிற உணர்வுகள் வாசிக்கிற நமக்கும் ஏற்படவே செய்கிறது. தன் உடல் உபாதைகளை அது தருகின்ற வலிகளை தனது அல்லது தாயின் ஊடாக வெளிப்படுத்துகையிலும் நண்பர்கள் தருகின்ற உற்சாகம் ஒத்துழைப்பு புதிதாய் பிறக்க வைக்கிற அல்லது புத்துலகம் காணத்துடிக்கிற பாத்திர சிருஷ்டிப்பு நிலாவை சிறப்பாக உயர்த்தி வைக்கிறது. பயணக் கட்டுரை என்பதா அல்லது நாவல் என்பதா? வாசகர்கள் தீர்மானிக்கட்டும்.

விசுவை சந்தித்தது. இளங்கோவின் பிரியாவின் இன்னும் பிற நண்பர்களின் அன்பான உபசரிப்பு கூடவே மருத்துவர்கள், தாதிகள், அனுசரனையாளர்கள் எனப் பலரை நினைவு கூர்ந்து எழுதியது பாராட்டுக்குரியவர். எழுத எழுதத் தான் ஒருவனின் எழுத்தும் புடம் போடப்படும் என்பதற்கு நிலாவின் எழுத்தும் உதாரணம். அத்தியாயங்களாய் பிரிக்கப்பட்டுள்ள விதம் அதனை இலகுவாக வாசகர்கள் புரியும் வண்ணம் நகர்த்திச் சென்ற விதம் அலாதியானது.

வாசிக்கையில் இடையிடயே கண்ணீர் கோடிடுவதை தடுக்க முடியவில்லை. நீங்களும் உணருங்கள்.

நாளைய தமிழீழத்துக்கான இன்றைய நம்மவரின் சமூகப் பணி இவரைப் போன்ற எழுத்தாளர்களிடமும் தரப்பட்டுள்ளது.

மகிழுர்தி போன்று நல்ல தமிழ்ச் சொற்களை எழுத்தில் சேர்த்துக்கொண்டதில் எனது மகிழ்ச்சியையும் நூலுக்கான எனது வாழ்த்தையும் இப்போதே விடுகிறேன்.

வாழ்த்துக்களுடன்

**முல்லைஅமுதன்**

■

கணபதி துணை

# என்னுரை

உள்ளத்தில் தோன்றுவதை எழுத்தில் வடிப்பது அதாவது அச்சேற்றுவது என்பது இலேசான காரியமல்ல. அதுவும் என்போன்ற வாழ்வே சவாலாகக் கொண்ட உடல் உபாதை கொண்டவர்களுக்கு இமயமலை ஏறுவது போன்ற பெரிய பிரயத்தனம். எத்தனையோ விடயங்கள் எழுதப்பட வேண்டியதாய் இருக்க எனது இந்தியவுலா பற்றி எழுத வேண்டுமா என்ற கேள்வி எனக்குள் எழாமலில்லை.

ஆனால் உள்ளத்துள் தேங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை எழுதும் போது மனம் இலேசாவதை உணர்கிறேன். அது மட்டுமல்ல மனித வாழ்வில் மற்றவர்களை நேசிப்பது, நம்புவது, நம்பிக்கைக்கு ஏற்ற விதமாக நடந்து கொள்வது, மற்றவர்களது துன்பத்திலும் இன்பத்திலும் பங்கு கொள்வது இவை யெல்லாம் இன்றியமையாதது அல்லவா? இயந்திர உலகில் சற்று ஓய்ந்து சிந்திக்க வேண்டியதுவும் அவசியமாயிருக்கிறது.

இணையத்தில் நாம் பலரையும் சாதி, மத, வயது, பால், அந்தஸ்து வேறுபாடின்றி சந்திக்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது. இதனால் நம் கைகள் நீட்டும் எல்லைகூட பெரிதாக இருக்கும் போது என் போன்ற உடல் வாதைப்படுபவர்கள் வாழ்வில் இரட்டிப்பு

மகிழ்வு கிட்ட வழி கிட்டுகின்றது. நான்கு சுவர்களுக்குள் மடிந்து விடக்கூடிய திறன் கூட உலகப்பரப்பில் விரிந்து ஒளி பாய்ச்சக் கூடிய சந்தர்ப்பம் அமைகின்றது. நான், என்னை ஓர் தனி நபராக பார்வைக்குள்ளாக்கும் போது என் வாழ்வின் ஓட்டங்களின் மீது ஆச்சரியம் தான் ஏற்படுகின்றது.

இதன் பின்னணி என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் நிச்சயமாக அன்பு ஒன்றுதான் ஊக்க சக்தியாக என்னை இயக்குகின்றது. என் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், இணைய நண்பர்கள் என்ற விதமாக அன்பு அலை என் வாழ்வின் நீரோட்டத்தை வளப்படுத்துகின்றது. இந்த 'நிலாவின் இந்திய உலா' என்ற நூல் எனது மூன்றாவது படைப்பாகும். இந்தளவிற்கு நாடு கடந்து வந்து சென்னையில் இந்த நூலை வெளியிட வேண்டும் என்ற எனது ஆர்வத்திற்கு முழுக்காரணமும் உலகம் பூராவும் செறிந்து வாழும் எனது அன்பிற்குரிய என் தமிழ் இணைய நண்பர்கள் தான்.

என் நண்பர்களுடன் நேரஞ் செலவு செய்யக் கிடைத்த வேளைகளில் நான் பெற்ற மகிழ்வு அளப்பரியது. இந்த அனுபவத்தைப் பகிர்வது மட்டுமன்றி ஒரு நோயாளி தன்வாழ்வை எப்படிக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது என்பதை மற்றவர்கள் அறிவதன் மூலம் என் போன்ற உள்ளங்களின் உணர்வுகளை, தேவைகளை புரிந்து நடக்கவும் என் அனுபவம் உதவக் கூடும். அத்தோடு என் நண்பர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட குண நலங்களையும் கூட வளர்ந்து வரும் சமுதாயம் பின்பற்றினால் நட்பு எனும் தோட்டத்தில் மகிழ்வுப் பூக்களை பறிக்கலாம்.

**"உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**

என்ற வான்புகழ் வள்ளுவனின் குறளுக்கிணங்க என் இணைய நண்பர்கள் தந்த ஊக்கம் இன்று

என்னை எழுத்தாளர் வரிசையில் உட்கார்த்தி வைத்திருக்கிறது. அதைவிட எதை எடுத்துக் காட்டாக சொல்வது? என் சுக துக்கங்களில் சேர்ந்தே பயணிக்கும் அன்பு உறவுகளுக்கு இவள் நிலாவின் நட்புச் சமர்ப்பணம்.

என் 2003, 2009 ஆம் ஆண்டுப் பயணத்தை இந்த நூலில் தொகுப்பதன் மூலம் எமது நட்பு வட்டம் இன்றும் எவ்வாறு இயங்குகிறது என்பதை உங்கள் முன்வைப்பதில் பேருவகை கொள்கிறேன். அணிந்துரை எழுதி இப்புத்தகத்தை கௌரவித்த திரு முல்லையமுதன், திரு இளைய அப்துல்லாஹ் மற்றும் அணிந்துரை கொடுத்ததோடும் வெளியிட்டும் உதவிய 'முகில் பதிப்பகம்' திரு. விந்யாசாகருக்கும், தயாரித்து உதவிய 'வடலி பதிப்பகம்' திரு. அகிலன் அவர்களுக்கும் கணனியில் உதவி புரிந்த வசந்திக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

நட்புடன்
**நிலா**

■

Flat 1, Ithell Court
18, Crawford Avenue
Wembley, Middx
LONDON, HA0 2HW
U.K.

தொலைபேசி : 0044-208 7955838
மின்னஞ்சல் : nilaaa2001@gmail.com

■

# நிலாவின் இந்தியவுலா!

இன்று ஒக்டோபர் மாதம் பத்தாம் திகதி. கேரளாவிலுள்ள கோட்டக்கல் வைத்தியக் கல்லூரியில் வைத்தியத்தின் நிமித்தம் 303 ஆம் அறையில் தங்கியிருக்கின்றேன். மேலே மின்விசிறி சுற்றிக் கொண்டிருக்கிறது. பெயரளவில் காற்று மேனியைத் தழுவினாலும் மூக்கின் மேலே வியர்க்கின்றது. கேரளாவில் நல்ல காலநிலை என்பது பொதுவான பேச்சாக இருப்பது என்னவோ உண்மை. ஆனால் சில விதிவிலக்குகள் எங்கும் இருக்கத்தான் செய்யுமோ!

நோயாளியான என்னுடன் அம்மாவும் லண்டனிலிருந்து வந்திருக்கிறார், அத்துடன் என்னைப் பராமரிப்பதற்கென இந்தியாவிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்ட இரு பணிப்பெண்கள். என் வாழ்வே விசித்திரமானது. என்னாலேயே நம்பமுடியாதது.

நான் யார்? வைத்தியம் மேற்கொள்ள எனக்கு என்ன வியாதி? அது எப்படி என்னைப் பாதிக்கின்றது என்ற உங்கள் கேள்வி எனக்குப் புரிகின்றது.

நான் இலங்கை நாட்டின் யாழ்ப்பாண நகரைப் பிறப்பிடமாகவும் 98 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டவள். நான் லண்டனில் கணனித் துறையில் தொழில்நுட்ப வலையியல் பொறியியலாளர் (Computer Network Technology Engineering) துறையில் இளநிலைப்பட்டதாரி. முக்கியமாக, நான் இரண்டு கைகளும் கால்களும் இயக்கம் குறைந்த நோயாளி. 'மஸ்கியூலர் டிஸ்ரொபி' (Muscular Dystrophy) எனும் வியாதி என்னை அறியாமலேயே பன்னிரண்டு

வயது முதல் என்னைப் பீடித்து தினம் தினம் வளர்ந்து இருபத்திரண்டு வயதளவில் என்னைச் சக்கர நாற்காலியில் உட்கார வைத்தும் விட்டது

என்னால் மிகச்சில காரியங்கள் மட்டுமே செய்ய முடியும். பேனா பிடித்து எழுத முடியும், மற்றும் இந்த மின்சார சக்கர நாற்காலியில் அமர்ந்து முன்னே சற்றுக்குனிந்த நிலையில் இடது முழங்கையை இடது காலின் மேல் ஊன்று கொடுத்து, இடது உள்ளங்கையும் விரல்களும் வலது கைக்கு ஆதரவு கொடுக்க, உயரும் வலது கையின் உதவியுடன் என்னால் கணனியை உபயோகிக்க முடியும். இந்த நிலையில்தான் எனது பட்டப்படிப்பை 2005 இல் வெற்றிகரமாக முடித்துள்ளேன்.

என்னிடம் உள்ள இயந்திர நாற்காலியின் இயங்கும் தன்மையுள்ள ஓர் பிடியை (Joystick) இயக்குவதன் மூலம் எனது நடமாட்டம். படுக்கையில் என்னைப் போட்டு விட்டாலும் கூட அந்தப் படுக்கையிலே திரும்பிப் படுக்க முடியாதவள் நான். எனது வாழ்வானது 24 மணிநேரமும் பணிப்பெண்ணின் உதவியுடன் தான் நகருகின்றது. காரணம் என் சொந்தத் தேவைகளைக் கூட சுயமாக என்னால் தீர்க்க முடியாதே.



கணனியுடன் நான்



ஹொய்ஸ்ட் எனும் இயந்திரம்

உதவி செய்ய ஒருத்தி வருவாள் என்பதற்காக நான் நித்திரையிலிருந்து எழுந்து கொள்ள வேண்டும், அவள் வந்து விட்டாளே யென குளிக்க வேண்டும். என் காலைக் கடன் களைக் கூட முடிக்க வேண்டும், என இப்படியாக மற்றவர்களைச் சார்ந்திருப்பவள் இன்று பயணம் போக வேண்டுமென்றால் எத்தனை திட்டங்கள். ஆம்! இந்த நிலையில் உள்ள என்னால் எப்படி இந்தியா வரை போக முடியும்? போனாலும் எப்படி என் காரியங்களைச் செய்யப்போகின்றேன்? சிந்தித்துப்பாருங்கள்!



பெயரளவில் இந்தியா செல்வதென நினைத்தாலும் திட்டமிட்டு அதை நடைமுறைப்படுத்த நான் பட்டபாடுகள் அநேகம். சாதாரண மனிதர்களுக்கான ஆயத்தங்களுடன் நோயாளிப் பராமரிப்புகளுக்கான ஆயத்தங்களை நோயாளியே ஏற்படுத்துவதென்பது பலத்த பிரயத்தனம். எல்லாம் விசேட ஏற்பாடுகள். முக்கியமாகச் சிறந்த திட்டமிடல்தான் என்னை இந்தளவிற்கு இயக்குகின்றது. என் திட்டங்கள் வெற்றியாவதற்கு ஒவ்வொரு தினமும், அதன் பகுதிகளும் திட்டமிடலில் தான் இயங்குகின்றன. என் இணைய நண்பர் ஒருவர் ஒருநாள் சொல்லி ஆச்சரியப்பட்டார். என்னவெனில் நான் எனது இயற்கை உபாதைகளைத் தீர்க்கக்கூட திட்டமிட வேண்டுமென. அவர் சொன்னது முற்றிலும் உண்மை.

நோயால் இறுகிப்போயிருக்கும் எனது உடல். அதைத்தளர்த்த பலவித எண்ணெய் உருவுதல்கள் எல்லாம் செய்ய வேண்டியிருக்குமே. பெண்ணாக வேறு பிறந்து தொலைத்ததால் பெண் ஊழியர்களே எனக்குத் தேவை. நான் போனால் அங்கு என்னைத் தூக்கிப் பராமரிக்க

வேண்டிய சூழல் வரப்போகின்றது. பொதுவாக என்னை அடிக்கடி இருக்கையில் இருந்து இடம் மாற்ற வேண்டியிருக்கும். ஒவ்வொரு தடவையும் என்னைத் தூக்கி இடம் மாற்றுவது என்பது இலேசான விடயமல்ல. தூக்குபவர்களாலும் முடியாது. தூக்கப்படும் போது ஏற்படும் வலியைத் தாங்கும் வலிமையும் என்னுடலுக்கில்லை.

இலங்கையில் வாழும் காலங்களில் எனது அம்மா என் கைகளைத் தன் கழுத்தைச்சுற்றி மாலைபோலப் போட்டு என்னை இழுத்துத் தூக்கி கட்டிலுக்கும் சக்கர நாற்காலிக்கும், சக்கர நாற்காலியிலிருந்து மலசலகூட இருக்கைக்கும், பின் இருக்கையிலிருந்து சக்கர நாற்காலிக்கும் என மாற்றி மாற்றி உட்கார வைப்பார்.

இப்போது என்னைப் பராமரிப்பது வேறுவிதமாகத்தான் இருக்கின்றது. காரணம் நான் இங்கிலாந்தில் இருப்பவள். இங்கு எம் போன்றவர்க்கென நவீன வசதிகள், அதற்கான சாலையோர அமைப்புகள், வாகனங்கள், வீடுகள் எல்லாமே இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் வாழும் முறை முற்றிலும் வித்தியாசமாயிற்றே. அதை முகம் கொடுக்க நான் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் பலவாயிற்றே. எனை இடம்மாற்றுவதை இலகுபடுத்தவென நான் கொண்டு செல்லும் உபகரணத்துடன் மற்றைய சாதனத்தையும் இயக்கக் கூடிய ஓரளவாவது கல்வியறிவு கொண்ட பெண்கள், சேவை மனப் பான்மை உடையவராகக் கிடைக்க வேண்டுமே!

இங்கிலாந்தில் என்னிடம் பணிபுரிபவர்களில் சில 'பிஸியோதெரபி' (Physiotherapy) தகுதி பெற்றவர்களும், தாதியர்களும், பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களும் கூட பணியாற்றுகின்றனர்.



ஹொய்ஸ்ட் எனும் இயந்திரம்

படித்தவர்களால் தான் படிப்பில் நாட்டம் உள்ள என் போன்றவர்களின் மனதிற்கு ஆறுதலாக நடந்து கொள்ள முடிவதை அனுபவத்தில் காண்கின்றேன். எம் போன்ற நாடுகளில் கற்றால் தரமான வேலைக்குத்தான் போவோம் இல்லையேல் பட்டினி கிடந்து சாகவும் பின்வாங்க மாட்டோம், அல்லது கல்யாணம் என்ற பெயரில் கடன் கழித்துவிடுவோம் என்று சிந்திப்பவர்கள்தானே உள்ளனர்.

அதே நாம் என்ன செய்கிறோம்? வெளிநாடு போய் இப்படியான வேலைகளில் உழைத்து அனுப்பும் பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பவர்களும், வரட்டு கௌரவம் பார்ப்பவர்களும் எம்மிடையே இருக்கத்தானே செய்கின்றார்கள். ஐரோப்பா நாட்டின் வாழ்க்கைத்தர உயர்வுக்கே காரணம் ஓயாத பலரின் உழைப்புத்தான். ஓய்வு எடுப்பது வேறு, வெட்டியாகப் பொழுதைக் கழிப்பது வேறு. வளர்முக நாடுகளில் வீண் கதை பேசி வெட்டிப் பொழுதைக் கழித்தே வாழ்நாட்களைப் பயன்படுத்தாது வாழ்கிறோமே.

பராமரிப்பவரை நண்பரின் மூலம் ஒழுங்குபடுத்தி னாலும் நான், எனது அம்மா எனது பணிப்பெண்கள் நால்வருக்குமான தங்குமிடம் ஒருங்காக அமையவேண்டுமே, அதே நேரம் வசதிநிறைந்த ஹோட்டலில்தான் வசதி கூடிய அறைகள் கிடைக்கும். அதற்கு ஏற்ற பணச்செலவுகள்! என்னை பராமரிப்பதற்கென பெரும் பணச்செலவு செய்து வாங்கிய ஹொய்ஸ்ட் (hoist) எனப்படும் ஒரு பாரம் தூக்கி போன்ற ஓர் உபகரணம் உண்டு. அதை இணையம் வழி தேடி அறிந்து, அதுவும் பயணத்தின் போது கொண்டு செல்லத்தக்கதாக அமைந்துள்ளதா எனக்கண்டுபிடித்து கொள்வனவு செய்து வருவித்து அதைப்பொருத்திப் பயன்படுத்திப் பார்த்து, அதை இயக்குவது எப்படியென விளக்கம் கூறிப் படம்பிடித்து கணனியில் இறக்கியுள்ளேன்.

இப்போது இரண்டு வருடங்களாக நான் இரவில் தூங்கும் போது மூச்சு எடுப்பதற்கு உதவியாக ஓர் உபகரணம் பயன்படுத்தி வருகின்றேன்!. அந்த உபகரணத்தின் பெயர் வென்ரிலேற்றர் (ventilator). இதனால்த்தான் என் சுவாசப்பை விரிந்து சுருங்கி போதுமான காற்றை உள்ளெடுக்க உதவுகின்றது. இந்த உபகரணத்திலிருந்து வரும் குழாயுடன் கூடிய முகமூடியை

ஒவ்வொரு இரவும் என் மூக்கையும் வாயையும் மூடிக்கொள்ளும் விதமாக பொருத்தி பட்டிகளை இறுக்கிச் சரியாகச் சீரமைக்க வேண்டும். அது சரியாகப் பொருந்தாவிட்டால் இயந்திரத்திலிருந்து வெளிவரும் காற்றானது வேகமாகத் திமிறிக்கொண்டு வெளியே பீறிடும். அது மட்டுமல்ல. இந்த இயந்திரமானது 'கீ..' என்று பெரிய சத்தத்தையும் ஏற்படுத்தும் அதனால் மற்றவர்களின் நித்திரையும் குழப்புமே என்ற சங்கடமும் என் நித்திரையைக் கெடுக்குமே! இப்படித் தூங்கும் என்னை இடைக்கிடை வேறு திருப்பிப் படுக்கவும் வைக்க வேண்டுமே.

இதைச் செய்வதற்கு முகஞ்சுழிக்காத பணிப்பெண்கள் அமைய வேண்டுமே! என்னிடம் வேலை செய்யும் அனைத்துப் பணிப்பெண்களும் அன்பானவர்கள். பணி புரிய விருப்பம் குறைந்தவர்களையும் நான் சந்திக்காம லில்லை. அவர்களை நான் கருத்தில் எடுப்பவளும் அல்ல. காரணம் என் வாழ்வில் இவற்றுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தால் என் வாழ்வு இன்னும் நரகமாகிவிடுமே. பொதுவாக அவர்கள் தாமாகவே வேலையினின்று கழன்றுவிடுவார்கள் அல்லது தருணங்கள் வரும்போது தகுந்த காரணம் காட்டி அவர்களை நிறுத்தியும் விடுவேன். பணத்தைக் கொடுத்து மனவருத்தத்தைக்கொள்வனவு செய்ய வேண்டுமா? என்ன!

அது மட்டுமா! போகும் இடத்தில் பாவிப்பதற்கென நான்கு சில்லுகள் கொண்டதும் உருளக்கூடியதும் உட்காரும் பகுதியில் பெரிதாகத் துவாரம் இடப் பட்டதுமான நாற்காலியொன்றை வேண்டமுடியுமா என இணையத்தில் துழாவினேன். டில்லியில் இதற்கான நிறுவனம் இருப்பது தெரிந்து தொலைபேசி மூலம் இந்தியாவில் இருப்பவளே பேசுவது போலப்பேசி, பாண்டிச்சேரியில் உள்ள நண்பன் சிவாவுக்கும் தொடர்பு கொண்டு பணம் அனுப்ப, ஒழுங்கு செய்து இருக்கின்றேன். அந்த நாற்காலியை பெங்களூரில் உள்ள நண்பி பத்மாவைக்கொண்டு பெற்றுக்கொள்ளும்படி திருநெல்வேலியிலுள்ள தம்பி ராம்குமார் அபிப்பிராயம் தெரிவிக்க நானும் தொலைபேசி, மின்னஞ்சல் என யாவற்றிலும் தொடர்புகொண்டு காரியத்தை ஆற்றியிருக்கின்றேன். நான் பெங்களூர் போயிறங்கும்

காலை அந்த நாற்காலியும் புகையிரதத்தில் பெங்களூர் வந்து சேரும் என்ற நம்பிக்கையில் என் பயணம் அமைகின்றது.

பணிப்பெண்களை ஈரோட்டிலுள்ள எனது நண்பன் இளங்கோவின் தங்கை சுஜி கோயம்புத்தூரிலிருந்து ஒழுங்குசெய்ய சென்னையிலுள்ள நண்பி பிரியா அதற்கான முனைப்பில் ஈடுபட்டிருக்கின்றார். அதன் பிரதிபலிப்பாக பயணம் புறப்படும் வேளை, முகவர் மகேந்திரன் தொலைபேசியில் தொடர்புகொண்டு எல்லாம் ஒழுங்காகி விட்டதாக சொல்லியிருக்கிறார்.

சிந்தித்துப் பாருங்கள். வாழும் நாட்டில் இப்படியான ஒழுங்குகள் செய்வதே சிரமம். வேற்று நாட்டில் செய்விப்பதென்றால்? இந்த ஏற்பாடுகள் எல்லாவற்றுக்கும் எத்தனையோ தொலைபேசி அழைத்தல்கள், மின்னஞ்சல்கள் எல்லாம் மேற்கொள்ள வேண்டியிருந்தன. நண்பர்கள் பலம்தான் என்னே!

இவ்வளவு ஆயத்தங்கள் செய்து போகும் எனது பயணம் பயனுள்ளதாக அமையவேண்டுமே என்ற பிரார்த்தனை மனதில். இயன்றளவு தெரிந்த ஆட்களை, நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பை அமைத்துக்கொள்ள வேண்டுமே என மனம் ஆவலில் தவித்தது. துணிந்தாயிற்று. தயங்கி இலாபமென்ன?

நான் இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து கர்நாடகா, தமிழ்நாடு, இப்போது கேரள மாநிலமெனப் பயணித் திருக்கிறேன் என்றால் ஆச்சரியமன்றி வேறென்ன?

■

## ஹீத்ரோவிலிருந்து பெங்களூர் வரை

**ஹீ**த்ரோ விமான நிலையத்திலிருந்து விமானம் மேலே உயர்வதை என்னால் உணர முடிகின்றது. உள்ளத்துக்குள் ஒரு விதமான கிளுகிளுப்புத் தென்பட்டாலும் மனதின் ஓர் மூலையில் எனது குடும்ப அங்கத்தவர்களை விட்டு அதிக தூரம் புறப்படுகின்றோமே என்ற கவலையும் அரிக்கத்தான் செய்கின்றது. கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் எனது பயண காலமாக இருக்கப் போகிறது.



எனது இரண்டு அண்ணாமாரின் குடும்பங்களும் லண்டனில் தானுள்ளன. பெரியவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர் பொழுது தன் மனைவி பிள்ளைகள் எனக்கழிந்தாலும் எங்களை அடிக்கடி வந்து சந்தித்துப் போவார். அம்மாவின் சாப்பாடு அடிக்கடி இவருக்கு விழுந்தே ஆகவேண்டும். ஏச்சுகளும் தான். எனக்கு வந்து போகும் சளித்தொல்லை குறித்து இரண்டு அண்ணன் மாருக்கும் கவலையே. அடிக்கடி 'நிமோனியா' வயப்பட்டு அம்புலன்ஸில் வைத்திய சாலை செல்பவள் இவளாச்சே! அது தந்த கலக்கம்தான்.

தினமும் மாலைநேரமும், வார இறுதிகளிலும் என்னையும் அம்மாவையும் சின்னண்ணர் வந்து சந்திப்பார். அம்மாவின் சாப்பாட்டை வேண்டுமென்றே விமர்சித்து அம்மாவின் கரிப்புகளுடன் தன்வயிறு நிரப்புபவர். இவருடன் கூடப்பிறந்தது தான் நான் முற்பிறப்பில் செய்த புண்ணியம். அம்மாவிலா, என்னிலா அதிகபாசம் என்பது இவருக்கே தெரியாது. ஆயினும் எங்களுக்கு மின்னல் போலச் சிறு சிறு சண்டைகள் அடிக்கடி வந்து போகும். எம்பிரச்சனைக்குள் தலையிட்டு மூக்குடைபட இவர் மனைவி லோகாகூடத் தயாரில்லை.

எனக்குத் தினமும் உடற்பயிற்சி தருவது இவர்கள் வழக்கம். இருந்த இடத்திலேயே கைகளையும் கால்களையும் விரல்களையும் தம்முதவியுடன் இயக்க வைப்பதை விருப்புடன் செய்து வருகிறார்கள். நானும் தினமும் சுவாசப் பயிற்சி செய்து வருகிறேன். நான் தான் வாழுங்கலையின் உறுப்பினர் ஆச்சே! இவர்களுக்கு நானும் அம்மாவும் பிரிந்து போவது துன்பந்தருமே என்ற கவலையெமக்கு. பிரிவில் தான் உறவின் வலிமை புரியும்!

எனது பயணங்களே வித்தியாசமானவையாகவே இருக்கின்றன. வைத்தியம் என்ற பெயரில் சுற்றுலா போகின்றேனா அல்லது சுற்றுலா என்ற பெயரில் வைத்தியத்துக்குப் போகின்றேனா என்று என்னாலேயே வரையறுக்க முடியவில்லை. போராட்டமே வாழ்வாக இத்தனை வருடங்கள் வாழ்ந்தாலும் அந்தப் போராட்டத்தின் மத்தியிலும் தென்றலைத் தேடுவதாக இருக்கிறது என் வாழ்வமைப்பு. அந்தத் தென்றலைத் தரவல்ல எனது நண்பர்களை நினைக்கும்போது மனதில் கிளுகிளுப்பு வருவதில் ஆச்சரியமில்லையே?



இணையம் மூலம் என்வாழ்வில் ஒருபகுதியென ஆகி விட்ட எனது நண்ப நண்பியர்களைப் பார்ப்பதென்றால் மகிழ்ச்சி தானே! 2003 இலும் எனக்கு இவர்களில் பலரைப்பார்க்கும் இனிய வாய்ப்புக்கிட்டியது. இப்போது 2009 இலும் மீண்டும் சந்தர்ப்பம் வாய்க்கும் என நான் நினைக்கவில்லை. 2009 மேமாதம் மரணத்தின் எல்லையைத் தொட்டு விட்டது போல் உணர்ந்த எனக்கு மீண்டும் வாழலாம் என்று ஓர் நம்பிக்கையைத் தந்த மூச்சுப் பயிற்சிக்குக் காரணமான, வாழுங்கலைக் கர்த்தாவைக் காணவேண்டும் என்ற பெருவிருப்பும், அத்துடன் இறுகிப்போய்த் தொல்லைபண்ணும் உடலுக்கு ஓர் எண்ணெய் வைத்தியம் ஆறுதலாய் இருக்குமே என்ற உணர்வுகளும் என்னுள்ளே.

விமானத்தில் பற்றியுள்ள மௌனம், அம்மாவின் அருகாமை எல்லாமே மனதிற்கு மிகுந்த இதத்தைத் தருகின்றன. பார்வைக்குச் சக்கர நாற்காலியில் உட்கார்ந் தாலும் மற்றவர்களைப் போல் நானும் ஓட்டமாகவே வாழ்க்கையை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் ஒரே கூரையுள் வாழ்ந்து கூட அம்மாவுடன் சாவகாசமாக

அளவளாவும் தருணங்கள் குறைவாகவே அமைந்து விட்ட எனது வாழ்க்கைமுறை. இல்லையில்லை, அமைத்துக் கொண்ட வாழ்க்கைமுறை.

"ஆமாம்" எப்போதும் மும்முரமாக இருப்பதே எனக்குப் பிடிக்கும். அப்படி மும்முரமாக இல்லாதவளாக நான் இருந்திருந்தால் எப்போதோ என் கதை முடிந்திருக்கும். இப்போதும் பாருங்கள்! இரண்டு கைகளும் கால்களும் இயக்கம் குறைந்த இந்த நிலையில் எத்தனையோ ஆயத்தங்கள் செய்து இந்தியா போகின்றேனே!"

இந்த நிலையில் இருந்தாலும் நான் எப்போதும் ஏதாவது செய்து கொண்டு தானிருப்பேன். கணனியுடன் என் காலமே கழிகிறது. இணையம் எனக்கு சிறகுகளைக் தந்திருக்கிறது. எனை நான் என்றும் 'இயலாதவள்' என்ற வகைக்குள் சேர்ப்பவளல்ல. என் குடும்பத்தவரும் தான். நான் தான் எல்லோருக்கும் அதிகாரம் காட்டுவேன், நிச்சயம் அதில் அன்பு குழைத்திருக்கும். அதேநேரம் அனுதாபம் என்பது பிடிக்கவே பிடிக்காது. மற்றவர்கள் வியக்கும்படி வாழவேண்டும் என்பது என் இலட்சியம்!



மேலும் நான் லண்டன் தமிழ் வானொலியில் மற்ஸ்கோணர் (Maths Corner) எனும் நிகழ்ச்சியை நடாத்தி வருகிறேன். தமிழில் கணிதம் சம்பந்தமான கேள்விகளை நான் தொடுக்க (மூன்று பிரிவாக) எல்லா வயதினரும் தொலைபேசி மூலம் பங்கு பற்றும் நிகழ்ச்சி. நானும் தொலைபேசியில் தான் கலையகத்துடன் தொடர்பு கொள்வேன். கலையகத்தில் லண்டன் தமிழ் வானொலியில் அப்போது பணியிலிருக்கும் அதிபர் நடாமோகனின் மனைவி வாணி தொடர்புகளைக் கையாளும் தொழில் நுட்பத்துக்குக் கைகொடுக்க, என்பக்கம் பணிபுரியும் பெண்ணும் அந்த ஒரு மணிநேரம் எனது தொலைபேசியை தன் கையால் உயர்த்தி எனக்கு செவியுற்றுப் பேசும் வண்ணம் உதவுவார். காரணம் என்னால் தான் கையை உயர்த்தி தொலைபேசியை அவ்வளவு நேரம் பிடிக்க முடியாதே! இத்தனை இடர்களின் மத்தியிலும் என் தொண்டு நான்கு வருடங்கள் தொடர்கிறது. இந்தியா வந்தால் அது எவ்வளவு சாத்தியம் எனப் பொறுத்திருந்து தான் பார்ப்போமே! இது நேரடி ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி.




எனது லண்டன் கல்வியகம்



அந்த ஒரு மணிநேரத்துக்குள் அவர்களது விடைகளை உள்வாங்கி, புள்ளிபோட்டு பின் விடைகளுக்கு விளக்கம் கொடுத்தும் புள்ளிவழங்குவேன்.

இலக்கிய ஆர்வமுள்ள இவள் அரசலும் புரசலுமாக சில கவிதைகளும் எழுதுவாள். என் நாடு எமக்குத் தந்த அவலம் தான் போர் ஆச்சே. அதன் பாதிப்பில் கவிதைகள் வெளிப்படும். வானொலிகள், தொலைக்காட்சிகள் இவற்றில் சந்தர்ப்பம் வாய்க்கும் போது வாசித்தளிப்பேன். எத்தனையோ களம் இருந்தும் அதிகம் படைப்புகளை என்னால் ஆக்க முடியவில்லை. காரணம் ஆரோக்கியமான எனது நேரம் மும்முரமாகவே கழிகிறது. எனக்கு இணையத்தளம் அமைப்பதிலும் ஆர்வம் நிறையவுண்டு. அமைப்பதாலும் நேரங்களை இழந்திருக்கிறேன்.

ஒலியுடன் கூடிய ஒளிப்படங்களை வெட்டி ஒட்டி ஒலி சேர்ப்பதும் எனது விருப்பமான துறை. இது தவிர அண்ணாவின் பிள்ளைகளான எனது மருமக்களுக்கும் கணிதம் படிப்பிப்பவள். தனியார் கல்வி நிறுவனத்தை நடாத்திய அனுபவம் கொண்ட இவள் இங்கு லண்டனிலும் ஒன்றரை வருடங்கள் 45 மாணவர்களும் மூன்று ஆசிரியர்கள் கொண்ட 'யூசிமாஸ்' என்ற 'அபகஸ்' கொண்டு பயிற்றும் படிப்பை இங்குள்ள குழந்தைகளுக்கு

வழங்கி, தொடர்ந்து வாட்டும் நோயின் நிமித்தமும் இன்னும் சில பல காரணங்களாலும் நிறுத்த வேண்டியவளானேன்.

ஒன்றைக் கவனியுங்கள். நாம் மும்முரமாக இருந்தால் மற்றவர்களைத் தொல்லைப் படுத்துவது குறைவாக இருக்கும். அதேவேளை எம்மைப்பற்றிக் கவலைப்பட நேரமிருக்காது. நாம் செய்யும் காரியங்கள் எமக்கும் நன்மையளிக்கும். மற்றவர்களுக்கும் பயன் கொடுக்கும். வாழுங்கலைப் பயிற்சியின்போது நான் கற்றுக் கொண்டதும் பொறுப்புணர்ச்சி வலிமையை வளர்க்கும் என்பதைத்தான். இது ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் உபதேசம்.

நான் பலரிலும் சார்ந்திருப்பவள். அது போல் என்னில் சார்ந்திருப்பவர்கள் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். உதவி செய்ய விழைந்து பல உபத்திரவங்களுக்காளாகியும் இருக்கிறேன். அதுவே எனது பலமும் பலவீனமும். உதவும் போது நான் இயலாதவள் என்றில்லாமல் மற்றவர்போல் இயல்பாக இருக்கிறேன். உபத்திரவப்படும் போது என்னை மற்றவர்கள் சாதாரண மாந்தரைப் போல் நடத்துகிறார்களே. இது என் பலமின்றி வேறென்ன? நட்டமடைதல், வசைக்குட்படுதல் என் பலவீனம். நிச்சயம் நாம் செய்யும் நன்மையானது, யார் மூலமாகவோ பல இக்கட்டான சமயங்களில் எமக்கு நன்மையைத் தரும் என்பதை நம்புபவள் நான்.

இந்த உடல்நிலையிலுள்ள எனக்கு இந்த விபரீத எண்ணம் வந்த காரணம் தான் என்ன? பேராசையா? நிர்ப்பந்தமா? அதீதத் துணிச்சலா? அது எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் நான் ஒன்றை மட்டும் மறுப்பதற்கில்லை. நண்பர்கள் விடயத்தில் நான் மிகவும் கொடுத்து வைத்தவள்.

ஆம்! அதனால் தான் நான் இந்தியாவிலுள்ள எனது நண்பர்களை இரண்டாவது தடவையாகச் சந்திக்கப் போகிறேன். என் நினைவுப் பறவை ஆறுவருடங்கள் பின்னோக்கிப் பறக்கின்றது. அப்போதும் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து தான் புறப்பட்டோம்.

■

# ஆறு வருடங்களுக்கு முன்பு

நவீனமும் அழகும் நிறைந்த அந்த லண்டன் ஹீத்ரோ ரேர்மினல் 4 விமான நிலையத்தில் நானும் அம்மாவும் இளைய அண்ணரும் அவர் மனைவியும் அமர்ந் திருக்கிறோம். இன்னும் ஏறக்குறைய ஒரு மணி நேரமிருக்கிறது நாம், அதாவது நானும் அம்மாவும், உள்ளே சென்று விமானத்தில் ஏறுவதற்கு.

என் சின்னண்ணர் அவசரப் படுத்தி "அங்கை பார்! மணிவண்ணன்" என்றார். உடனே என் நினைவில், என் ஒன்றுவிட்ட தம்பி மணிவண்ணனே வந்து போனான். சக்கரநாற்காலியில் அமர்ந்திருந்த நான் வினாக்குறியுடன்



இயக்குனர் மணிவண்ணனுடன் ஹீத்ரோவில்

நிமிர்ந்து பார்த்தேன். "டைரக்டர் மணிவண்ணன்" என்று அழுத்திக் கூறினதும் ஆர்வக்குதிரை கண்பார்வையை, தூரத்தே நின்ற 'டைரக்டர் மணிவண்ணன்' மேல் கொண்டு போய்விட்டது.

அருகில் நாம் சென்றோம். தன் பயணத்துக்காக உறுதிப் படுத்தும் அலுவல்களை எல்லாம் முடித்துக் கொண்ட இயக்குனர் மணிவண்ணன், அவரை வழியனுப்ப வந்த இலங்கை நாட்டைச் சேர்ந்தவர் ஆகியோர் அருகே வந்ததும், நாம் அவரது அனுமதியுடன் அவருடன் சேர்ந்து படங்கள் எடுத்துக் கொண்டோம். கடிகாரம் தன் கடமையை வழமைபோல், சரியாகவே செய்தது.

அடுத்த கட்டத்துக்கு நாம் ஆயத்தமானோம். அப்போது மனதுக்கு கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. எங்களைப் பிரிவது தற்காலிகம் ஆனபோதும், அது அண்ணரையும் மனைவியையும் பாதித்ததை அவர்கள் வதனங்கள் கூறத் தவறவில்லை. மனதால் நாங்கள் மூவரும் குழந்தைகள். நான், சின்னண்ணர், அவர் மனைவி மூவரும் பழகுவது அப்படித்தானிருந்தது.



நான் சதா ஏதேதோ பொறுப்புகளைச் சுமந்து கொண்டு தானிருப்பேன். இப்போதும் கூட எழுத்துத்துறையைப் பொறுப்பெடுத்து இருக்கிறேனே அதைப்போலத்தான். அவர்களோ பல்கலைக்கழகத்தில் படிக்கும் எனது விடுமுறையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அதைக்கெடுத்து நான் அம்மாவையும் அழைத்துக்கொண்டு ஆறு கிழமைகளுக்கு தூர தேசத்திற்கு பிரிந்தல்லவோ போகிறேன்.

98 ஆம் ஆண்டு இங்கிலாந்து வந்து உதவிக்கேதும் பெண் இல்லையென்ற நிலையில், என்னைப்பராமரிப்பதற்கு அரசாங்க உதவியுடன் ஓர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்டு கடந்த ஐந்து வருடங்களாக வாழ்கிறேன். ஓர் அறையில் நான் வாழ்ந்தாலும் என் பொழுதைப் பயனுள்ளதாகக் கழிக்கிறேன். முதல்வருடப் படிப்பைப் பல்கலைக்கழகத்தில் தொடரும் நான் விடுமுறை வருவது எப்போது, அப்பாவின் சம்மதம் கிடைப்பது எனக் காத்திருந்து கிடைத்த வாய்ப்பில், கடந்த வருடம் இங்கிலாந்து வந்துள்ள அம்மாவுடன் பயணிக்கிறேன் இப்போது.



இன்னும் அலுக்கவில்லை அம்மாவுக்கு



இந்தவயதில் அம்மாவாலும் என்னைப் பராமரிக்க முடியாது. அதேநேரம் என்னால் என் அம்மா தன் தாளாத வயதில் என்னைப்பராமரிப்பதைச் சகித்துக் கொள்ளவும் முடியாது. நான் இருக்கும் நிலையத்தில் மணியை அழுத்தியதும் வந்து உதவி செய்கிறார்கள். சிலர் மனமாக, பலர் பணத்துக்காக! இந்தச்சூழலில் தொட்டதற்கும் உதவி தேவைப்படும் நான் எப்படிப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறேன், படிக்கத்தான் வேண்டுமா என்ற வினாக்கள் முன்னிற்கிறதா?

குழந்தையாய் இருந்த காலங்களில் என்பெற்றோர் குறிப்பாக அம்மா, நான் ஓடிப்போய் அவரின் மடியில் விழுந்த காலங்களில் கண்ட பெரிய கனவு அது. "என்ர பிள்ளை டொக்ரராகவோ எஞ்சினியராகவோ வருவாள்" என்பது அம்மாவின் வாசகம். பெற்றோரின் கனவை காலங்கடந்தாவது நிறைவேற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன்.

திடீரென ஒழுங்கான பயணத்தை தடுக்க எங்கள் அப்பாவே முன்வராதபோது என் அண்ணரோ மனைவியோ பயணமனுப்புவதைத் தவிரவேறேதும் அவர்களால் செய்ய முடியவில்லை. அந்தம்வரை என் சக்கரநாற்காலியைத் தள்ளிக் கொணர்ந்து அம்மாவிடம்

அந்தப் பொறுப்பைக் கையளித்தார் அண்ணர். கட்டியணைத்தோம். "அம்மா கவனமாய் போட்டு வாங்கோ! பணம் முக்கியமில்லை. உங்கட சுகம் தான் முக்கியம்!" இது அண்ணர். "ஏனடா அப்பிடிச் சொல்லுறாய். நாங்கள் வந்துடுவம் தானே கவனமாய்" இது அம்மா. அம்மாவின் எரிச்சலின் காரணம் தன் சின்னமகனின் சற்று உறுத்தும் உணர்வு கலந்த பேச்சு. அவர் தற்செயலாகச் சொல்வது உண்மையில் நடந்து விடுவதாக அம்மாவின் நம்பிக்கை.

பாதுகாப்பை முன்னிட்ட பரிசோதனை முடிந்ததும் அங்கிருந்து விமானத்தை நோக்கிப் போவோமென்றால் எங்கள் கண்களில் விழுந்தது அந்த அழகான வணிகத் தொகுதிகள். வண்ணப்பொருள்கள் அதிகமிருந்தாலும் என் எண்ணம் முழுவதும் பதிந்தது அந்த சொக்கலேட்டுகள்' மேல் தான். மிகவும் தரமான, அதே நேரம் விலையுயர்ந்தவை அவை!

ஆனபோதும் நான் வாழ்நாளில் சந்தித்தேயிராத, ஆனால் தினமும் என் நலனில் அக்கறை காட்டும், என் மகிழ்வின் ஒரு பகுதியான அந்த உத்தம உள்ளங்களுக்கு சந்தித்த மாத்திரத்தில் வழங்கி மகிழ இதை வாங்குவோமே என அவசர அவசரமாக பைகளில் திணித்து பணமும் செலுத்தி முடியவும் எம்மைச் சுற்றியிருந்த சகபயணிகள் எங்கோ தூரப் போய்க் கொண்டிருந்தனர்.

அம்மா என்னை கடிந்தபடியே விமானம் நோக்கித் தள்ளிச் சென்றார். திறந்த, மூடிய நீண்ட விறாந்தைகள் எனப்படுகின்ற தரைகள். விமானம் வரை போகும் மட்டும் நான் வாயே திறக்கவில்லை. ஏற்கனவே தாராளமாக 'சூட்கேசுகளில்' வைத்துள்ள 'சொக்கலேட்டுகள்' போதாதென்று மேலும் வாங்கமுற்பட்டது என் தவறு தானே!

அம்மா என்னைக் கொண்டுபோய் விமானத்தின் நுழைவாயிலில் விட்டதும் விமானத்துப் பணிப்பெண்கள், ஏற்கனவே அவர்கள் சக்கரநாற்காலிப் பயணியாகிய நான் வருவதை முற்கூட்டியே அறிந்திருந்ததாலோ என்னவோ மிகவும் கனிவுடன் பேசி, என் நிலை அறிந்து ஓர் ஆண் பணியாளரையும் உதவிக்கு அழைத்து என்னை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு போய் இருக்கையில் உட்கார வைத்தனர்.

அம்மா என்னருகே வந்து அமர்ந்து என்னை மேலும் பராமரித்து வசதிப்படுத்தி விட்டார். தானும் ஆசுவாசமாக உட்கார்ந்து கொண்டார். என்சிந்தை முழுவதும் ஒருவித இனம்புரியாத உணர்வு ஆக்கிரமித்து இருந்தது. அதில் சந்தோசத்தின் விகிதாசாரம் தொண்ணூறு வீதத்தை தாண்டித்தான் இருந்தது. ஆயினும் பிறநாடு, வியாதி களுடன் கூடிய நான், வயதான என் அம்மா, என் தேவைகளை முழுதாக அறிந்திராத அன்பை மட்டுமே கொண்டிருக்கும் என் நண்பர்கள் இவற்றையெல்லாம் எண்ணியெண்ணி உள்ளம் சற்று சங்கடப்பட்டது. என்னைப் போதாக்குறைக்கு ஆண்டவன் பெண்ணாகவு மல்லவோ படைத்துவிட்டார். எத்தனையோ விடயங்கள் என் மனதை எட்டினாலும் என் நண்பர்கள் இருக் கிறார்களே எனக்கு, என்ற அசராத நம்பிக்கை எட்டிய விடயங்களை தட்டி உட்காரவைத்து விட்டது.

பணிப்பெண்கள் எங்கள் இருக்கையிலுள்ள பட்டி களைச் (seat belt) சரிப்பண்ணுகிறார்கள். நானோ அம்மாவோ பேசக் கூடவில்லை. நானோ இருக்கையின் ஒருபக்கக் கரையிலுள்ள கைப்பிடியின் கீழமைந்துள்ள பதிவுக்கருவியிலிருந்து வெளிவரும் இசையை 'ஹெட்போன்' மூலம் காதுகளுக்குள் செலுத்தியபடி கனத்த சிந்தனை யிலாழ்ந்தேன். அவசர அவசரமாக பயண ஏற்பாடுகள், அத்துடன் பரீட்சைக்குப் படிக்கும் பொறுப்பு, இதனால் எவரையும் சரியாகத் தொடர்பு கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பமே மிகக்குறைவு இப்படி இவற்றால் ஏற்பாடுகள் ஆனதற்கான பதிலேதும் இல்லாமலேயே பயணம் புறப்படுகிறோம்.

■

# கனிந்தது காலம்

இந்தப்பயணம் 'என் இலட்சியம்' ஆகிய சிட்டையில் மிகவும் பிரகாசமாகத் தெரிவது. "காலம் கனிந்துள்ளது, அதைப் பயன் படுத்திவிடு" அடிக்கடி கூறும் என் உள் மனது. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் என்னை அறியாமலேயே எனக்குள் வளர்ந்து விட்ட என் வியாதி வேறு, அது இன்னும் வளராது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?



அதேவேளை நாளும் என் நண்ப, நண்பியர்க்கு கூடிவரும் வயது. எனக்கும் தான்! இன்னும் ஆண்டுகள் ஐந்தானதும் இதே குறும்புத்தனங்கள், நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இதே மனப்பான்மை எல்லாம் எமக்கு இருக்கப் போகிறதா? என்ற சிந்தனை, அத்துடன் 'சந்தர்ப்பம் எப்போதும் கதவைத் தட்டாதே' என்ற எண்ணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்று என்னை இந்த விமானத்தில் உட்கார்த்தி வைத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, என் அன்பு அம்மாவுக்காகவும் தான். என் அம்மாவும் வாழ்க்கையில் என்னைக் காப்பாற்றப் பட்டபாடுகள் தான் எத்தனை! அப்பப்பா! சொல்லி முடியாதவை! அந்த நடமாடும் தெய்வத்துக்கு என்னால் கொஞ்சமாவது மகிழ்ச்சியை அளிக்கமுடியாதா வாழ்வில், என்ற ஏகப்பட்ட கனவுகளும் என்னுள்ளே!

இந்தியா போகலாம், என் இணைய நண்பர்களைச் சந்திக்கலாம், அவர்கள் மனதில் நான் எந்தளவு பதிந்திருக்கிறேன் என்பதைக் காட்டலாமே, அவர்கள் அன்பு மழையில் அம்மாவும் நனையட்டுமே என்ற எதிர்பார்ப்பு.

அப்பாவை அழைத்தாலும் எங்களுடன் சேர்ந்து பயணம் புறப்படும் ஆரோக்கியம் அவரிடம் இருக்கவு மில்லை. அவரும் தன் சௌகரியங்களை இழந்து எம்முடன் பயணஞ்செய்ய, தயாராகவுமில்லை. தானுண்டு, தன் பாடுண்டு என்று வாழ்வது அவரது வாழ்க்கைமுறை. அப்பா 83 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது லண்டன் வந்தவர். உண்மையில் இரண்டு நாடுகளுக்கு போவதற்கு அனுமதி கிடைத்தும் அமெரிக்கா போவதையே விருப்பப்பட்டு அங்கு வேலை ஒழுங்காகட்டுமே எனக் காத்திருந்த வேளை இனக்கலவரம் வெடிக்க 'தப்பினேன் பிழைத்தேன்' என்று உடனடியாகப் பேரூர்ந்தில் உயிரைக் கையில் பிடித்து வந்து விமானம் ஏறியவர்.

83 இல் இங்கிலாந்து வந்தவரை நான் சந்தித்ததே பதினைந்து வருடங்களின் பின்னர் தான். எனது பயணம் சரிவராமல் போய்விடுமோ என்ற கவலை தந்த குருதி உயர் அமுக்கம் (high blood pressure) காரணமாக தன் நினைவுகள் சிலவற்றை இழக்கும் நிலைக்குள்ளாகித் தேறி வருகிறார். அவரது எழுத்தாற்றல் எல்லாம் முடக்கப்பட்டு விட்டது. அப்பாவும் ஓரளவு கவிதைகள், கதைகள் புனையவல்லவர். காலம் சம்மதித்தால் அவரது கவிதை களையும் "எந்தையும் யானும்" எனும் தலைப்பில் நூலாக வெளியிட வேண்டும் என்ற கனவு 2003 இல் உள்ளது. பல்கலைக்கழகப்படிப்பு, அத்துடன் என் வியாதியோடு இணைந்துள்ள மேலும் சில வியாதிகளுக்கு வைத்தியம் செய்தல் என்பன என் பொறுப்புகளாக இருக்கிறதே இப்போது. பொதுவாக அப்பாவுக்கு தன் சூழலை விட்டு அதிகம் செல்வது பிடிக்காது. அதேநேரம் என்னையும் தூரமாக எங்கும் போகவிடமாட்டார். கடந்த ஐந்து வருடமாக என் நடவடிக்கைகள் பார்த்து இப்போது, இவள் தன் விடயங்களைக் சமாளிப்பாள் என்ற நம்பிக்கை அப்பாவுக்கு வந்திருக்கிறது. அதைச் சாதகமாக்கி நானும் அப்பாவிடம் நான் இந்தியாவுக்குப் பயணம் போவேன் என சில மாதங்களாகவே நகைச்சுவை போல சொல்லிவந்த நான், இதற்கென அவரிடம் போய்ச் சாதுரியமாகக் கதைத்து, விகடம் கலந்து பேசி அனுமதியையும் பெற்றிருந்தேன். ஆம்! நான் அம்மா அப்பாவுடனல்லாமல் பிறிதோர் இடத்திலல்லவா வாழ்ந்து வருகிறேன்.

என் சொந்தத் தேவைகளை என்னால் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையிலும் 98ம் ஆண்டு தனியாகவே

இலண்டன் வந்து விட்டேன். இங்கு நான் வந்தாலும் என்னைப் பராமரிக்க எவரும் இங்கு இல்லாததால் அரசாங்க உதவியுடன் ஓர் பராமரிப்பு நிலையத்தில் வசித்து வருகின்றேன். அவசரமான இந்த நாட்டுச் சூழலில் வார இறுதிகளில் என்னைச் சின்னண்ணர் வந்து பார்த்து வருகின்றார். நான் பல்கலைக்கழகத்தில் பயின்று வருவதால் என் இருப்பிடம் வரும்போது இருட்டி விடும். கடும் குளிர், அத்துடன் இவ்வியலாத நிலையில் பல்கலைக்கழகப் படிப்பு, என்னைப் பராமரிப்பதற்கான நேரத்தை மற்றவர்களுக்கு ஒதுக்குதல் போன்றவற்றின் சூழ்நிலைக்கைதியான எனது வாழ்வின் துணையாக இருந்த எனது இணையம். எந்தவொரு வேலையையும் செய்வதற்கு மற்றவர் தயவை நாடிய நிலை. இதற்குள்ளும் ஏதோ "வாழ்ந்து பார்" என எனது பிடரிக்குள் ஓர் சக்தி!.

ஓரிடத்தில் தொடர்ந்து உட்காரமுடியாமல் தவித்த நான் பணியாளர்களின் உதவியுடன் 'உட்கார்ந்த நிலை' யை மாற்றி மாற்றி உட்கார்ந்து பயணத்தை மேற்கொண்டேன். பலவகை உணவும் பானமும் வழங்கினார்கள். நானோர் அபூர்வப்பிறவி என நினைக்கிறேன்.



ஏனென்றால் புதுவுணவென்றதும் என் இரைப்பை விடுமுறை எடுக்கக் கெஞ்சும். மேலும் வெளியே போனால் நீராகாரம் உட்கொள்வதற்கு நான் என்வாய்க்கு அனுமதி கொடுப்பது இல்லை, காரணம் இயற்கை உபாதைகளைத் தீர்க்கக் கூட என்னை என்னால் இயங்கமுடியாதே.

அதுவும் விமானத்தில் ஏறியதும், தேவைப்படின் எப்படியும் தூக்கிக்கொண்டு போய்த் தாங்கள் என் இயற்கைத் உபாதைகளைத் தீர்க்க உதவுவதாக பணிப் பெண்கள் கூறினார்கள். நடைமுறைச்சிக்கல் தெரிந்த நான் வாய்க்கு அளந்து நீராகாரம் வழங்கி, மௌனம், கண்ணயர்வு எனப் பொழுதைக் கரைத்து 'பாஹ்ரெய்ன்' விமான நிலையத்தை அடைந்தோம்.

■

# பாஹ்ரெய்ன் விமான நிலையத்தில் சிலமணிநேரம்

அத்தனைபேரும் விமானத்திலிருந்து வெளியேறியபின் நானும் வெளியேற்றப்பட்டேன். ஆனால் துன்பம் என்ன என்றால் பாஹ்ரெய்ன் விமான நிலையத்தில் என்னை உட்காரவைத்த சக்கரநாற்காலி எனதல்ல. மெத்தை கூடப்போடப்படாத அசௌகரியமான மிகப்பெரிய சக்கரநாற்காலியது. அதில் நான் ஒழுங்காக உட்கார முடியாமல் பட்ட துன்பம் ஏழாண்டின் பின்பு இப்போதும் நினைவில் இருக்கிறது என்றால் பாருங்களேன்!

ஏற்கனவே விமானத்தில் தந்திருந்த வாக்குறுதிக்கு இணங்க, பெண் உதவியாளர் உடனே கிடைக்காததால் பலரிடமும் விசாரித்துக் கடைசியாக ஒரு ஆங்கிலம் கூட தெரியாத அரேபியப் பெண் ஊழியர் தானாகவே உதவுகிறேன் என்று முன்வந்தபோது அவர் உதவியுடன் என் தேவைதீர மேலும் ஒருமணிநேரம் ஆகிவிட்டிருந்தது.

அதற்குள் தன் சேய் தன் இயற்கை உபாதைளைத் தீர்க்கவில்லையே எனத் தவித்துவிட்டது அந்தத்தாய்மனம். வந்தவளுக்கு உதவ மனமிருந்தும் மொழிபெயர்ப்பு செய்ய முடியாத சூழலில் பொறுக்க மாட்டாமல் தன்னுயிரைக் கொடுத்துக் கூட தன்மகவின் தேவை தீர்க்கவிழைந்த தாய்மனம். நான் தடுக்கத்தடுக்க என்னைக் கட்டிப்பிடித்து இழுத்துத் தூக்கி என்தேவைகளை நிறைவேற்ற விழைந்த என் அருமை அம்மா.

எல்லாம் முடிந்து அங்கு சுற்றி கண்ணைப் பறிக்கும் கடைகளை எல்லாம் பார்த்தோம். எனக்கு அழகான

கைக்கடிகாரம் வாங்கினேன். அது மட்டுமல்ல, அராபியர் கைவண்ணத்தில் உருவான ஒட்டகம், மற்றும் மயில் போன்றவைகளின் உருவங்களை ஞாபகப் பொருட்களாக வாங்கி வைத்தோம்.

நானோ அந்த அழகு நிறை சூழலை என் சக்திக் கேற்றவகையில் கொண்டுபோயிருந்த ஒளிப்படக்கருவியில் இருநிமிடங்கள் மட்டில் படம்பிடித்திருப்பேன், அப்போது தான் புரிந்தது அந்தப் ஒளிப்படக்கருவிக்கு படம்பிடிக்கும் ஆற்றலே அதிகம் இல்லாதளவுக்கு, அதன் மின்கலத்தின் சக்தி குறைந்துவிட்டது என்பது. சென்னை விமான நிலையம் இறங்கியதும் என் அன்புள்ளங்களைச் சந்திக்கும் போது படம்பிடிக்க வேண்டுமே என மின்கலத்தில் இருக்கும் சக்தியை செலவு செய்யாமல் வைத்திருந்தேன். நான் தான் அவசர அவசரமாக பயண ஒழுங்குகளைச் செய்தவளாயிற்றே!

நாற்பத்தியைந்து நிமிடங்களானதும் நாம் வரிசையில் நின்று தேவையான காரியங்களை நிறைவேற்றி மீண்டும் இந்தியா செல்லும் விமானத்தின் இருக்கைக்கு மாற்றப்பட்டேன். முன்னையதைவிட சௌகரியம் குறைவாகவே இந்த விமானத்தில் இருந்தது எனினும் அதை அசட்டையாக எடுத்துக் கொள்ளும் துள்ளல் மனதில். மகிழ்வில் திளைப்பதற்கு மௌனம் சாதகமாக இருந்தது அப்போது.

அம்மா மிகவும் அன்யோன்னியமாக உற்றநண்பிபோல் அளவளாவக் கூடியவர் ஆனபோதும், எப்படியும் அம்மாவின் மனதுக்குள் இந்தியாவில் என் எதிர்காலத் தேவைகள், அத்தேவைகள் எப்படித்தீர்க்கப்படுமோவென்ற யோசனை இருக்கும் என்பது எனக்குத் தெரியும்,

அந்த நேரத்தில் என்பேச்சுக்கு பெறுமதி இருக்காது எனத் தெரிந்து மௌனத்துடன் ஐக்கியமானேன். அம்மாவுக்கும், நான் நண்பர்கள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை அளவு என் நண்பர்கள் மேல் நம்பிக்கை இருக்குமென்றோ, இருக்கவேண்டும் என்றோ நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஒன்று என்மீது நம்பிக்கை இருக்கிறது, அதனால் தான் வருகின்றாரோ என்னுடன். அல்லது தன்னால் ஆனவுதவியைத் தன்மகவுக்கு செய்யப் புறப்பட்டாரோ யாருக்குத் தெரியும்?

அம்மா என்னைப் பராமரித்து எனது தேவைகளைத் தீர்த்து என்னை வளர்த்து இருக்கிறார் தான். அதனுள் சிறப்பு என்னவென்றால் என் மனவுணர்வு புரிந்து நடந்தது தான். நான் விரக்தியின் விளிம்பில் கோபம் மிகுந்தவளாக விருந்தேன். அந்நேரங்களில் மௌனமாக இருந்து நான் சாப்பிட மறுக்கும்போது தானும் சாப்பிட மாட்டேன் என மறுத்து என் உணர்வுகளைப் புரிந்து, மிக இங்கிதமாக அதேநேரம் எப்போதும் ஊக்கத்தையே ஊட்டியவராக இருக்கிறார். நான் இலங்கையில் இருந்தபோது மிக விரக்திக்குள்ளாகி தற்கொலை செய்து சாகவேண்டும் என்று வெதும்பி அழுது அடம் பிடிக்கும்போது ஒருநாள் "நீ பிள்ளை அப்படி தற்கொலை செய்து செத்துவிட்டால், நானும் செத்துவிடுவேன் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் பார்ப்பவர்களும் 'உன் பிள்ளையை நீ பார்க்குமட்டும் பார்த்துப் பராமரித்து விட்டாய்!' என்று சொல்வார்கள். ஆனால் அதைக் கேட்கும் மனபலம் எனக்கில்லை. ஆகவே நான் ஊரை விட்டே போய் விடுவேன்" என்று அழுதார். அது தான் தாய் மனம்.

திறமையிருந்தும் கற்க முடியவில்லையே என நாட்டில் நான் பட்ட துன்பங்கள்! அப்பப்பா! அதேநேரம் என் சொல் அம்பலம் ஏறவேண்டும் என்றால் ஒரு பட்டமாவது பெற்றவள் என்ற துணிவு எனக்கு இருக்கவேண்டுமே எனப்பல எண்ணங்கள் தந்த விளைவுகள் இன்று வேலை செய்ய வேண்டிய வயதில் படிக்கிறேன். படிக்க வேண்டிய வயதில் வேலை செய்தேன்.

இலங்கையில் 10 வருடத்துக்கு மேலாகத் தனியார் கல்வி நிறுவனத்தை நடாத்தி 9 ஆசிரியருடன் ஏறக்குறைய 150 மாணவர்களைக் கொண்டு நடாத்தினேன். அப்போது சாதாரணச் சக்கர நாற்காலியே இருந்தது. அம்மா ஆரோக்கியமும் இளமையும் உள்ளவராக இருந்தார். அத்துடன் என் மாணவர்கள் என் மீது அக்கறையுள்ள வர்களாக அன்பைச் சொரிந்தார்கள். அவர்கள் அன்புக் கரங்கள் சக்கரநாற்காலியைத் தள்ள ஆதரவு தந்தது. சிலர் விடுதலைப்புலிகளுடன் இணைந்து, இறந்தும் போனார்கள். மிகவும் அன்னியோன்னிய சகோதரனாக அன்பு சொரிந்த சுதாவினை இராணுவம் பிடித்து அவன் எங்கென்று இன்றும் தகவலில்லை என்பது என்றும் துன்பம் தரும் சோகக் கதை.

■

# பாஞ்ரெய்னிலிருந்து மீனம்பாக்கம்

இந்தியா செல்லும் இந்தவிமானம் எனக்கு விமானத்தில் வருகிறேன் என்ற எண்ணத்தையூட்டாமல் ஏதோ பேரூந்தில் வருவது போன்ற பிரமையை ஊட்டியது. விமானத்துள் அருகால் நடந்து போகிறவர்களில் சிலர் எம்மீது உரசிப்போவதும், நின்றபடி பிரயாணம் செய்வதுவும், மாறி மாறி மற்றவர்கள் இருக்கையில் அமர்வதுவும் ஒருவித அருவருப்பைத் தந்தது.



ஒரு இஸ்லாமியப்பெண் எம்பக்கம் திரும்பி விசாரித்தார், "நீங்க ஸ்ரீலங்கனா" என்று. "ஓம்" என்றோம். "ஓ! அப்படியா, எங்கேந்து வர்ரீங்க" என்றதும், "இங்கிலாந்து" என்றோம். "ஆ! அப்படியா? சமாச்சாரம்? மகாராணி அங்கு தான் இருக்காங்களா? அதுசரி ஆமாம். இங்கிலாந்து இந்தியாலேந்து ரொம்ப தூரமா? அல்லது ஸ்ரீலங்கா ரொம்ப தூரமா" என்றதும் எமக்கு தூக்கிவாரிப்போட்டது.

காட்டிக்கொள்ளாமல் பதில் கூறினோம். தொடர்ந்து "அது ஏன் நீங்க மட்டும் இந்தியாவர முடியுது நாம் ஸ்ரீலங்கா வரமுடியல?" விடைசொல்லமுடியாமல் தவித்தேன். என்ன தான் சொல்ல முடியும்? தன்னுடன் இலங்கையைச் சேர்ந்த பெண்கள் வேலை செய்வதாகவும் அவர்கள் மட்டும் இந்தியா போயிருக்கிறார்களே நாம் ஏன் அங்கு போகவில்லை? என்ற ஆதங்கம் அவருக்கு. அது அவருக்கு மட்டுமல்ல பலருக்கும் உள்ள ஆதங்கம் என்பது இந்தியா போனபின்பு எனக்குப் புரிந்தது.

மாலை நேரம் தன் கரிய திரைவிலக்கி ஆதவனை வரவேற்கும், படலம் ஆரம்பமானது. பாரதியார் மீது நான் மிகவும் பொறாமைப்பட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா?,

பாரதியாருக்கு மட்டும் இந்த இயற்கை மகளை இரசிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டவில்லையே! என்று. அந்த இயற்கை மகள் மெல்ல வெளளித்திரையைச் சேலையாக்கி அன்னநடை பயின்றுவந்தாள்.

அவளின் அழகைப் பருகினது பிடிக்காமல் அவள் மகன் சூரியன் தன்கதிர்களைப் பரவவிட்டான். அதன் பக்க விளைவு வேர்வையாக முற்பட விமானம் சற்றுத் தகிக்க ஆரம்பித்தது. 'ஆமாம்'நாங்கள் சென்னை வந்துவிட்டோம் என்பதை நிரூபித்தது. சிங்காரச் சென்னையில் உள்ள மீனம்பாக்கத்தில் தடக்கித் தடக்கித் தரித்தது விமானம்.

■

# எமது பதட்டம்

ஆர்வம் சக ஆனந்தத்தால் இதயம் வேகம் மீறித் துடித்தது. எல்லா ஆவணங்களையும் சரியாகச் சமர்ப்பித்து வெளியே போவோமென்றால் எனது சக்கரநாற்காலியைக் காண வில்லை. அம்மாவும் நானும் வெல வெலத்துப் போனோம்.

ஆனால் விமானத்தில் இருந்து ஒரு மிக இளவயது வாலிபன் மாற்றி உட்காரவைத்து சக்கர நாற்காலியுடன் என்னைத் தள்ளிச் செல்கிறான். நானோ சிணுங்குகிறேன். அவனை, எப்படியும் என் நாற்காலியைத் தேடி அதில் மாற்று வதற்கான வழியைப்பார் என்று வலியுறுத்தி வேண்டுகிறேன்.

எப்படியும் என் நண்பர்களைக் காணுமுன் நான், என் நாற்காலிக்கு மாறியுட்கார்ந்து விடவேண்டுமென்ற துடிப்பு. அவர்கள் எல்லார்க்கும் என்நிலை தெரியும், இருந்தாலும் 'முதற்சந்திப்பு' ஒரு சங்கடமில்லாததாக இருக்கட்டுமே என்பது என் அவா.

ஒருவிதமாக எல்லாப் பொருட்களுடனும் சக்கரநாற் காலியும், பாகங்கள் கழன்று போன நிலையில் கிடைத்தது. அதன் மேல் போடும் சிறிய மெத்தையைத் தேடுவித்து எல்லாவற்றையும் பொருத்துவித்து அம்மாவும் அந்தப் பையனும் சேர்ந்து என்னைத் தூக்கியுட்காரவைத்ததும், அம்மா என்நிலையைச் சரிபார்த்து வெளியில் என்னையும் அழைத்துச் செல்லத் தயாரானார்.

எனது கையில் மீண்டும் 'ஒளிப்படக்கருவி' ஏறியுட்கார்ந்து கொண்டது. என் சக்கர நாற்காலியை ஒருவர் தள்ள முடிந்த வரை படம்பிடிக்க முயற்சித்தது தான் மிச்சம், குத்தும் வெயிலில் என் ஒளிப்படக்கருவி எதையும் உள்வாங்க மறுத்துவிட்டது. என்றாலும் அதைப்பிடித்தபடி வந்தேன்.

■

## முதற் சந்திப்பு

இருவர் என்னைப் படம்பிடித்ததை என்மூளை பதிவு செய்தது. வரிசையில் நின்று தங்கள் உறவுகளுக்காக, நண்பர்களுக்காக, தெரிந்தவர்களுக்காக, தெரியாதவர்களுக் காக என முண்டியடித்துக் கொண்டிருந்தனர் மக்கள். அதற்குள் இருந்த எனது நண்பர்கள் சக்கரநாற்காலியில் உள்ள என்னை அடையாளம் கண்டது ஒன்றும் புதினமல்ல.

என்னை வெளிப்பகுதிவரை கொணர்ந்து விட்டான் அந்த இளைஞன். கண்ணைக் குத்தும் வெயிலில் சுற்றிநிற்கும் என்நண்பர்களைப் பார்க்கிறேன்.

முதலில் என் கண்ணில் தென்பட்டவர் நண்பர் இளங்கோ. புகைப்படத்தில் பார்த்தவுருவம் வியர்வை மழையில் நனைந்திருக்கிறது. இளங்கோ ஈரோட்டிலிருந்து என்னை வரவேற்கவென தன் தொழில் துறையை மற்றவர்களிடம் பாரம் கொடுத்து விட்டு வந்திருக்கின்றார். இவர் சில வயதுகளால் என்னிலும் இளையவர். மணமாகாதவர் கலகலவென்று நகைச்சுவை குழைத்துப் பேசவல்லவர். ஏறக்குறையத் தினமும் என்னுடன் அரட்டை யடிப்பவர். நானும் என் துன்பம் நிறைந்த அனுபவங்களை இவருடன் பகிர அவரும் அதற்கேற்ற உற்சாக வார்த்தை களைப் பதிலாகத் தருவார். என் கவிதைகளைத் தவறாது படித்து விமர்சனம் வைப்பவர். புரிந்துதான் விமர்சனம் செய்தாரா என்று அவரிடம்தான் கேட்க வேண்டும். அந்த அன்பு கலந்த சிரிப்பை அடிக்கடி நான் காணக்கிடைக்கும் என அப்போது எனக்குத் தெரியாது.

அடுத்து மேலுமோர் உயர்ந்தவுருவம் கைகுலுக்கியது. விருப்பம் இருந்தோ இல்லாமலோ கைகுலுக்கவேண்டிய

தாயிற்று. காரணம் நான் வருவது இங்கிலாந்து நாட்டிலிருந்தாச்சே என்பதற்காக அல்ல. அதற்காகக் கொள்கையைக் கைவிடவேண்டும் என்றில்லைத்தான். சிந்திக்க அவகாசம் இல்லாமல் சில நடந்துவிடுவதும் உண்டு. இது இரண்டாவது ரகம் தான்.

காரணம் அந்த உருவத்துக்குச் சொந்தக்காரன் இணையம் மூலமே அறிமுகமான, அறிமுகம் மட்டுமேயான மாதவன் எனப்படும் ஒருவர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ரகுவெனப்படும் ஒரு நபர். அவர் தான் எனக்கு வைத்தியர் ஒருவரை ஒழுங்குபடுத்தி இருக்கிறார்.

நண்பர்களைப் பார்க்கவென வந்துவிட்டு குறை கூறுகின்றேன் என்று நினைத்துவிடாதீர்கள் மாதவன் என்பவர் யாஹூவில் சாதாரணமாக அறிமுகமானவர். சென்னையில் வாழும் இவருக்கு நான் சென்னை வருகின்றேன் என்ற செய்தியை இருந்த அவசரத்தில் நானும் உளறிவிட்டேன். அவர் அறிமுகப்படுத்திய நபரே இந்த ரகு. அறிமுகமான ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவர். இவருக்கு என்னைப் பற்றித்தெரியாது. எனக்கும் இவரைப்பற்றி அதிகம் தெரியாது.



மணமாகித் தன் மனைவியிடமிருந்து பிரிந்து வாழ்பவர், என்பதுதான் என் காதுகளுக்குக் கிட்டிய சேதி. இவர் சென்னையில் இருப்பதால் ஒரு வாகனம் ஒழுங்கு செய்யும் படி மாதவனிடம் கூறி இளங்கோ, சிவா இவர்களின் தொடர்பிலக்கங்களையும் தெரிவிக்க தமக்குள் தொடர்பு கொண்டு ஒருங்கே விமான நிலையம் வந்திருக்கின்றனர்.

அடுத்து என் கண்களில் ஒரு பெண் தெரிந்தாள். அவள் தான் என்.ஆர்.பீ எனப்படும் பிரியா. முகமெல்லாம் புன்னகையாக சுடிதாரில், அக்கா என்று கையைப் பிடித்தாள். அகமெல்லாம் பூரித்தது.

பிரியாவோ ஓர் குடும்பத்தலைவி. கணவன் இரண்டு பிள்ளைகளுடன் சென்னையில் அழகாக குடும்பம் நடத்துகிறார். மணமான பெண்கள் நட்புக்கு ஆண்கள் அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது நான் கண்ட அனுபவம். ஆனால் பிரியாவின் செயல்பாடுகள் அப்படியாக எனக்குத் தெரியவில்லை. அதற்காகப் பிரியா ஒன்றும் பொறுப்பில்லாத பெண் அல்ல. அமெரிக்காவில்

கணவன் பிள்ளைகளுடன் வசித்து வந்த அவர் இணையம் மூலம் தன் இனிய பாட்டுகளால் என்னைக் கவர்ந்தவர்.

"நான் யார் தெரியுமா?" என்றான் மற்றைய வாலிபன். என்னிடம் இவர்கள் பலரின் புகைப்படங்கள் இருப்பதால், இவர்களை அவற்றுடன் ஒப்பிட மனம் விளைந்தது. "இவர் யார் தெரியுமா?" என்று மற்றவரைக் காட்டினார் இளங்கோ.

சிந்திக்கக் கிடைத்த அவகாசம் சிறிது. "இவர் தான் சிவா" என்றதும் சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது. படத்தை வைத்து சற்று உயரமானவராகத் தானிருப்பார் எனவென் எதிர்பார்ப்பு தப்பாகிவிட்டது. என் நலனில், முன்னேற்றத்தில் மிகவும் மகிழ்வு காணும் இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. இணையத்து அரட்டை தொடங்கிய காலம் முதல் இன்று வரை எனது சினேகிதன். முக்கியமாக கணனித்துறையில் புலமைபெற்ற இவர் அதேதுறையில் வேலை பார்ப்பதுவும் அது பற்றி பேசியதாலும் அதிகம் பழக்கமாகியவர். அம்மாவையும் மிகவும் கவர்ந்தவர். இவர் குடும்பமே என்னுடன் பிணைந்தவர்கள். தாய், தந்தை தங்கை, பிள்ளைகள் யாவரும் இவள் நலனுக்காக தினமும் பிரார்த்திப்பவர்கள்.

"நான் தான் ராகவன்" முதலாமவன் கூறினான். ராகவன் என அழைக்கும் ராகவேந்திரனும் திருமணமாகாதவர். இவருக்குத் திருமணம் ஆகாமல் ஓர் அக்கா இருக்கிறார் என்ற தகவல் எங்கள் இதர பையன்களுக்குள் ஓர் ஆவலை ஏற்படுத்தியது விந்தையில்லையே!

கொளுத்தும் வெயிலில் எம் சந்திப்புகள். "நிலாவுக்கு வெயிலடிக்கிறது" இளங்கோ சூரியனின் நேரடி ஒளியை மறைக்க தன்னுடலால் நிழலளிக்க விழைந்தார். ஆமாம்! இணையம் மூலம் பலருக்கு என்னை 'நிலா' என்ற பெயரில் தான் அறிமுகம் என்பதை மட்டும் இப்போது சொல்லி வைக்கிறேன்.

இவர்கள் காட்டும் அன்பு, அதிகம் பழக்கம் இல்லாத ரகுவுக்குப் புதிதாக இருந்தது. மாதவன் அதாவது ரகுவின் நண்பன் கூட, மௌனமாகப் பார்த்தபடி நின்றார். அம்மாவோ அருகிலிருந்த மரநிழலில் வெயிலில் இருந்து ஒதுங்க முயற்சித்தார். பிரியாவினுதவியுடன் என் அப்பாவுக்கு தொலைபேசி மூலம் நலமாக வந்திறங்கிய

சேதியைத் தெரிவித்து விட்டு வந்தார் அம்மா. என் வாழ்நாளில் மறக்கமுடியாத நாட்களில் இதையும் சேர்க்க வேண்டியவளானேன்.

சென்னை போவதற்கு முன்பாக நான் என் நண்பர் களிடம் ஒழுங்கு பண்ணும் வாகனத்தை விசாலமானதாக, என்னைச் சக்கரநாற்காலியோடு அப்படியே தூக்கியேற்றக் கூடிய, வாகனமாக அதாவது வண்டியாக ஒழுங்கு படுத்தும்படி மிகவும் வலியுறுத்திக் கேட்டிருந்தேன், ரகு தான் அந்தப் பொறுப்பை ஏற்பதாகக் கூறி ஒருவாகனமும் ஏற்பாடு செய்து கொணர்ந்திருந்தார். வாகனத்துக்கருகே போனதும் தான் தெரிந்தது அப்படியே என்னை உள்ளே கொண்டு போவதாயின் ஓர் இருக்கையைப் பெயர்க்க வேண்டும் என்பது.

என்னை வரவேற்பதற்கு இளங்கோவுடன் இன்னும் இருவாலிபர்கள் வந்திருந்தனர். பாலாவை இணையத்தில் "வணக்கம், நலமா?" எனக் கேட்குமளவுக்குப் பழக்கம் உண்டு. ஆனந்த் அப்போது மட்டுமே அறிமுகமானார். அத்தனை பேரும் மிகவும் சிரமப்பட்டாலும் கவனமாக என்னையுள்ளே நாற்காலியோடு கொண்டு சென்று உட்காரவைத்தனர்.



வண்டி அரும்பாக்கத்திலுள்ள வைத்தியநிலையம் நோக்கியேகியது. வெயில் அகோரமாகத் தானிருந்தது. குழந்தையை இடையில் தாங்கியபடி ஒரு பெண் அவசர சாலையில் அக்கறையில்லாமல் அவசரமாகக் கடந்தாள். நல்லகாலம் அடிபடாமல் தப்பிக் கொண்டாள்.

பயணம் வந்தாயிற்று, ஆனால் இன்னும் தங்குமிடமோ, உதவிக்குப் பெண்களோ ஒழுங்காகவில்லை. நல்லநேரத்தில் வைத்தியம் தொடங்கவேண்டுமாம். அதனால் நேரடியாகவே தனது நிலையத்துக்கு வந்துவிடும்படி வைத்தியர் கூறியிருக்கிறார். அதனால் நாம் எல்லோரும் அங்கு போய்க் கொண்டிருக்கிறோம்.

■

# வைத்திய நிலையம்

சந்துபொந்து தேடி நாம் வைத்தியநிலையம் சென்றாயிற்று. அங்குள்ள குளிர்மை தரும் மரமும் அந்த வீட்டமைவும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கள் வீட்டை ஞாபகப்படுத்தியது. அங்குபோனதும் என் கண்களில் தெரிந்த பிள்ளையார் உருவம் என்னை நெகிழச் செய்தது. என் மனதுக்கு மிகவும் பிடித்தமான கடவுள் விநாயகன் என்பது என்னை இணையத்தில் தெரிந்த நண்பர்களுக்கு கூடத் தெரிந்த விடயம். என்னவோ தெரியவில்லை, எனக்கு சிறுவயதிலிருந்து கடவுள் பக்தி அதிகம்.

வைத்தியரிடம் கொண்டுபோகப்பட்டேன். வைத்தியர் அப்படியொன்றும் வயதானவர் அல்ல. குனிந்து பாதங்களைப் பிடித்துப் பார்த்தார். என்னை நடக்கவைக்க முடியும் என அடுக்கு உறுதிமொழிகளை அள்ளித் தெளித்தார்.

நான் ஒன்றும் உச்சிகுளிர்ந்து போகப்போவதில்லை, அந்தளவுக்கு நான் அனுபவப்பட்டிருக்கிறேன். எனக்கு, எப்படியும் இழந்த என்நலத்தைப் பெற்றுத்தந்து விட வேண்டுமென, என் பெற்றோர் இன்றளவும் செலவு செய்த பணத்துக்கு எத்தனையோ மாடி வீடுகள் கட்டி இருக்கலாம். வைத்தியத்துக்கு மட்டுமல்ல என்னை சௌகரியமாக வாழவைப்பதற்கும் தான். அந்த அனுபவத்தில் நான் சந்தித்த வைத்தியர்கள், வைத்தியங்கள் எத்தனை!

அதற்காக அந்த வைத்தியரின் திறமையை தரங்குறைத்துப் பேசும் நோக்கமில்லையெனக்கு. என் நோய்க்கு என்னை அந்தளவுக்குப் பிடித்திருக்கிறது என்பது தான் விடயம். என்னைப் பார்ப்பவர்களுக்கு என் நோயின்

ஆழம் புரியாது. ஆம் பார்க்கும் போது எல்லோரையும் போல் எதுவித நோயுமற்றவள் போல் தான் காட்சி யளிப்பேன். அது எனக்கு ஒருவகையில் பிடித்திருக்கிறது. பீடிப்பில் ஒரு பிடிப்பு!

சரியாகச் சொல்வதானால் என்னால் கைகளையோ, கால்களையோ தன்னிச்சையாக நீட்டவோ மடிக்கவோ முடியாது. இப்படியான என்வியாதிக்கு வைத்தியம் செய்யவென பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் என் அப்பா பல இலட்சங்கள் செலவுசெய்து இந்தியாவிலுள்ள வேலூர் மருத்துவமனைக்கு இலங்கையிலிருந்து அனுப்பிவைத்து வைத்தியம் செய்ய விழைந்திருக்கிறார் என்றால் என்பெற்றோர் என்வைத்தியத்துக்காக எடுத்த முயற்சியின் தாற்பரியம் சொல்ல வேண்டியதில்லை.

இப்போதும் கூட நான் நோயையொரு சாக்காக வைத்துக் கொண்டுதான் இந்தியப் பயணத்துக்கு அடிகோலி யிருக்கிறேன். அப்பாவும் சிறுகச் சிறுகச் சேமித்து, ஒரு தாளில் சுருட்டி வைத்த பிரித்தானிய நோட்டுகளை மிக ஆர்வத்துடன், அத்தோடு ஆச்சரியப்படுத்தும் விதமாகக் கொணர்ந்து நீட்டினார். அதுவும் ஐந்நூறு ஸ்ரேளிங் பவுண்கள் அடங்கிய சுருள் அது. ஐந்து பென்ஸ் என்றாலும் சிந்தித்தே செலவு செய்யும் அப்பா தன் மகவுக்காகச் செய்கிறார்! ஒரு நப்பாசை தான்!

1983 இல் இங்கிலாந்து வந்த என் அப்பா நோயைத்தீர்க்க வழியிருக்கிறதா என்பதை அறிவதற்காக உலகம்பூராவும் எழுதித்தொடர்பு கொண்டு, அறியமுயற்சி செய்ததை பதினைந்து வருடங்களுக்குப்பின் இங்கிலாந்து வந்த நான் காணக்கூடியதாக இருந்த பத்திரங்கள் சாட்சி பகர்கின்றன.

காலப்போக்கில் நான் இங்கிலாந்து வந்தும், எனது நோயையொரு பெரியவிடயமாகக் கருதாமல் அது என்னுடலில் இருக்கக்கூடியதாக மேலதிகமாக வரும் வியாதிகளுக்காக வைத்தியம் செய்யும் ஆங்கில நாட்டு மருத்துவம்! ஐரோப்பிய நாட்டைவிட்டு வைத்தியத்துக்கு வென இந்தியாவுக்கு ஏன் இவள் வருகிறாளே என பலருக்கும் கேள்வியெழலாம்.

திறமை எங்கு இருக்கிறதோ அதைத்தேடி பயன் படுத்துவதிலோ பாராட்டுவதிலோ தப்பேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!

# அடுத்து என்ன?

**வை**த்தியரைச் சந்திக்கும் படலம் முடிந்து வெளியே வந்து அமைதியான அந்த மருத்துவமனையின் ஒருபகுதியில் அமைந்துள்ள பல நாற்காலிகளால் நிறைந்துபோன அறையுள் நண்பர்கள் யாவரும் மீண்டும் குழுமினோம். பதினான்கு மணித்தியாலங்களுக்கு மேலாகப் போட்ட உடைகளை, மாற்றாமல் எவ்வளவு மணிநேரம்தான் இப்படி உட்கார்ந்தே இருப்பது?

அப்போது பிரியாவும் ராகவனும் ஓடிப்போய் சுகாதாரமான முறையில் அமைந்துள்ள கடைகள் தேடி சாத்துக்குடிப்பழரசம் வாங்கிவந்து எனக்கும் அம்மாவுக்கும் அன்புபொங்க வழங்குகிறார்கள். எனது நண்பர்களும் களைத்து விட்டார்கள். "அக்கா எப்போது தான் இவற்றைத் தரப் போகிறீர்கள்" என்று வெளிப்படையாகக் கொண்டு வந்திருக்கும் சொக்கலேட் பார்களடங்கிய அந்தப்பை களைக் காட்டுகிறார் ராகவன். அப்போது தான் அது எனக்கு மனதில் உறைத்தது. சாக்லேட்டுகள் பரிமாறப் பட்டன.

இளங்கோவின் நண்பர்கள் பாலாவும் ஆனந்தும் ரகுவைப்போல் சென்னைவாசிகள்தான். எங்கெல்லாமோ வீடுவாடகைக்கு எடுத்துவிட வேண்டுமென மிகவும் பிரயத்தனப்படுகிறார்கள். 'வீடு நான் வாடகைக்கு ஒழுங்குபடுத்துகிறேன்' என்று மீண்டும் மீண்டும் எனக்கும் ஈரோட்டிலிருக்கும் இளங்கோவுக்கும் வலியுறுத்திக் கூறிய ரகு இப்போது தான் பல இடங்களுக்கும் தொலைபேசி மூலம் விசாரணை செய்கிறார்.

■

# வாடகைக்கு வீடு

நான் மேற்கொள்ள இருக்கும் எண்ணெய் வைத்தியத் துக்கு அலங்காரமான விடுதிகளில் ஒன்றும் தங்கி அங்குள்ள, சுவர்களையோ தரையையோ அழுக்குப்படுத்த முடியாது. அது ஒருபுறமிருக்க லண்டன் மாநகரத்து வாழ்க்கை நவீனத்துடன் நாகரீகமும் நிறைந்து அமைந்து இருந்தாலும் மனமோ சாதாரண வாழ்க்கையுள்ள இடத்தில் வாழவிரும்புகின்றது. 'இயற்கைக் காற்றை அனுபவி', 'கட்டுப்பாடில்லா சுதந்திர சூழல் வேண்டும்' எனக் கெஞ்சிக் கேட்கிறது. அந்த விருப்பத்தில் நான் இந்தியா போகு முன்பாக, வீடுவாடகைக்கு எடுத்தே தான், நாம் இந்தியாவில் தங்கவேண்டுமென அழுத்தமாகக் கூறிவிட்டேன்.

ஏற்கனவே என்மனதில் பல குடும்பத்தினர் மத்தியில் வீட்டை வாடகைக்கு எடுத்து தேவையான அடிப்படைச் சாமான்களை நானும் அம்மாவும் வாங்கி மேலும் இரண்டு பணிப்பெண்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுடன் ஒரு கூரையின்கீழ் வாழவேண்டும், வரும் நண்ப நண்பியர் களை வரவேற்று உபசரித்துப் பல மணிநேரங்களை செலவழித்து விருந்தோம்பிக் கும்மாளம் அடிக்கவேண்டும் என்ற கனவு இருந்தது.

இந்த நிலையில் வாடகை வீடு தேடப்படுகிறது. 'நினைப்ப தெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லையே' என்ற கண்ணதாசன் வரி இதை எழுதும்போது என் ஞாபகத்துக்கு வருகின்றது. தொலைபேசி உரையாடல் மூன்றாம் மாடியொன்றில் வீடு இருப்பதையும் அங்குள்ள குளியலறைக்குள்ள வாசலின் அகலம், என்னை சக்கரநாற் காலியுடன் உள்ளே கொண்டு செல்லமுடியாத நிலையில் உள்ளது என்ற பட்சத்தில் நான் இந்தப்பயணத்தை

மேற்கொண்டிருக்கத்தான் வேண்டுமா என்பது வினாவாகத்தான் இருக்கின்றது.

வீடு எடுப்பதாயின் நிலமட்டத்துடன் அல்லது சீரான மட்டமுள்ள, 'லிப்ஃட்' உடன் கூடிய 'பிளாட்' என்று சொல்லப்படுகின்ற இடத்தில், மேற்கத்தியப் பாணியில் அமைந்துள்ள விசாலமான குளியலறைகளையுடைய இரண்டு அறைகளைக் கொண்டுள்ள வீடாகவிருந்தால் மட்டுமே வாழ்க்கை ஓரளவு இலேசானதாக இருக்கும்.

என்வாழ்வில் எனது நோயுமதிகரிக்க வசதிகளும் அதிகரித்து வந்துள்ளன. 'நாற்சார் வீடு' எனப்படும் நான்கு புறமும் தளமும் நடுவில் வானம் தெரியும் விதமான முற்றமும் கொண்ட அமைப்பில் அமைந்துள்ள எங்கள் வீட்டில் எல்லாத்தரையும் ஒரேமட்டமாக இருக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் நோயுமதிகரிக்க எங்கள் வீட்டின் நிதிநிலையில் முன்னேற்றங்கள்! அதற்கேற்ப வசதியும் அதிகரிக்கிறது! நான் வ்ாழவேண்டும் என்ற அமைப்பு இருந்திருக்கிறது.

அம்மாவின் முதுமை தெரிந்து காலம் என்ற காற்று அடித்து, சற்றும் எதிர்பாராத விதத்தில் இங்கிலாந்துக்கு கொணர்ந்து சேர்த்திருக்கிறதே, அதை என்னவென்பது! நம்பமுடியாத நிகழ்வுகளின் சேர்க்கை தான் இந்த நிலாவின் சரிதமோ!

■

# வசிக்கவொரு இடம்

என் தேவைகள் பலவற்றைத் தீர்க்கமுடியாத அந்த வீட்டுக்குப் போய் வசிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தயார் படுத்திய வேளை அந்த வீட்டுக்குச் சாவியை வாங்க முடிய வில்லையே என்ற செய்தி அடுத்த தொலைபேசியழைப்பில் தெரியவந்தது.

மேலும் அடியுடனே வந்த அழைப்பு இன்னோரிடத்தில் வீடு ஒன்று வாடகைக்கு இருப்பதாகவும் அதற்கான முற்பணம், சாவி வாங்கும் நபர் பற்றிய தகவலைத் தந்தது. அங்கும் உள்ள குளியலறையின் அமைவு எனக்குச் சாதக மாக இல்லாதபோதும் இனியும் தாமதித்தால் நீண்ட நேரப்பயணத்தால் ஏற்கனவே நொந்துபோன எனதுடல் நிலை. கடவுளின் அமைப்புக்குமீறிய கட்டுப்பாட்டினால் அவதிப்படும் என் சரீரம்!

இவற்றைக்கருத்தில் கொண்டு ஏதோவோர் இடத்தில் தங்கினால் போதும் என்ற இக்கட்டான நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி சம்மதத்தை, மௌனத்துடன் கூடிய சகிப்புத் தன்மையை புன்னகையாக வெளிப்படுத்தினேன்.

இன்னும் ஒருதடவை நான் அந்த சிற்றூர்ந்தில் சக்கர நாற்காலியுடன் தூக்கி ஏற்றப்பட்டேன். எனக்குப் பின்னால் அமர்ந்து இருக்கிறார் இளங்கோ. சிற்றூர்ந்தோ சிரிக்கவைக்கும் அவர் பேச்சாலும் எல்லாருடைய சீண்டல்களாலும் நிறைந்து போகிறது.

எனினும் இடைக்கிடை "நிலா நேர்சஸ் ரெடியா? கேளுங்க" தன் கண்ணிமையை ரவியைச் சுட்டும் விதமாக உயர்த்தி ரகுவிடம் கேட்கும் படி தாழ்ந்தகுரலில், ஆனால் கரிசனையுடன் கேட்கிறார். திருமணம் ஆகாத இளங் கோவுக்கு எனக்கு உதவிக்காகவரும் இளந்தாதிமார்களைக்

காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் இப்படிக் கேட்கிறார் என நகைச்சுவையுடன் நாம் சொன்னாலும் மனதுக் குள்ளொரு குடைச்சல் எடுப்பதை நான் உணர்கிறேன்!

ஏனெனில் லண்டனில், நான் வசிக்கும் இடத்தில் 'ஹொய்ஸ்ட்' (hoist) எனப்படும் ஒருபாரந்தூக்கி போன்ற ஒன்றினால் ஒருவகையான அகலமான 'ஸ்லிங் (sling)' என்று சொல்லப்படுகின்ற ஒருவகை துணியாலான ஒன்றை இதனுடன் கொழுவி என்னை லாவகமாகத் தூக்கி கட்டிலில் இருந்து நாற்காலிக்கோ, நாற்காலியிலிருந்து குளியலறைத் தொட்டியின் இருக்கைக்கோ, அதனிலிருந்து நாற்காலிக்கோ இடம் மாற்றுவதற்கு இடம் மாற வைப்பார்கள்.

அது பயிற்சி பெற்ற உதவிபுரியும் நபருக்கும், நோயாளிக்கும் எதுவித பாதிப்பையும் உடலில் ஏற்படுத்தாது. அந்த வசதிகள் இல்லாத இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சரீரப்பணிதான் சம்பளத்துக்குப் பெறவேண்டும். அம்மாவால் தனியே ஐந்து வருடங்களுக்கு முன்புபோல் தன்னையுருக்கி என்னைச் சுமக்கமுடியுமா?

இந்த நிலைப்பாட்டில் தளபாடமெதுவும் இல்லாத, தேவைப்பட்டாலும் கூட வெளியே போகக் கூட முடியாத விதமாக, ஒரு இரண்டாம் மாடிக்கட்டடத்தில் 'வைத்தியம்' என்ற காரணத்துக்காக நாம் முப்பத்தியொன்பது நாட்கள் 'ஒருவிதமான சிறை' என்று வர்ணிக்கக்கூடிய தனித்த ஓரிடத்தில் அடைபடப் போகிறோம் என்பது நான் சற்றும் எதிர்பார்த்தே இருக்காத விடயம்.

பல நண்பர்களதும் ஒருமித்த ஆதரவால் நான் பதினாறு படிகள் தாண்டி இரண்டாம் மாடிக்குச் சக்கர நாற்காலியுடன் ஏற்றுமதி செய்யப்பட்டேன். ரகுவும் மாதவனும் கூடத்தான் சேர்ந்து உதவினார்கள். எனக்கு என் நண்பர்களும் மற்றும் பலரும் படும் துன்பம் குறித்து கவலையாக இருந்தது.

கவலைப்பட மட்டுமே என்னால் முடியும். துணிந்து வந்தாயிற்று. பின்வாங்க முடியுமா? என்ன! அது சரி! நாம் யார், நமக்குள் அப்படியென்ன தனித்துவமான நட்பு இருக்கிறது ,என்றெல்லாம் நீங்கள் உங்கள் புருவத்தை உயர்த்துவது எனக்குப் புரிகிறது.

■

## நிலாமுற்றம்

இந்த நேரத்தில் உங்கள் பார்வையை 'நிலாமுற்றம்' எனும் எங்கள் இணையத்தில் நம் நண்பர்கள் ஒன்று கூடுமிடம் நோக்கிச் செலுத்த வேண்டுகிறேன். இணையம் என்றறிந்தவர்கள் 'யாஹூ' என்ற இணையத் தளத்தை அறியாமல் இருக்கமாட்டார்கள்.

அந்த இணையத் தளத்தில் இருக்கிறது 'சாட்றூம்' எனப்படுகின்ற அந்த அரட்டையரங்க அறைகள் எனப்படும் பிரிவுகள். அதில் தமிழ் மக்களுக்கெனவும் அறைகள் உள்ளன. சில பல கிளிக் என ஆங்கிலத்தில் அழைக்கின்ற அழுத்தல்கள் செய்வதன் மூலம் அந்த அறைகளுக்குள் நாம் சென்றடையலாம்.

ஒரு குறிப்பிட்ட நாட்டு மக்களை சந்திக்க வேண்டுமாயின் அந்த நாட்டை அந்த சிட்டையிலிருந்து 'கிளிக்கு'கள் மூலம் தெரிவு செய்து அந்த குறிப்பிட்ட நாட்டவர்களை அல்லது குறிப்பிட்ட மொழி பேசுபவர்களைச் சந்திக்கலாம். கடந்த ஐந்து வருட கால எல்லைகளுக்குள் ஒலி வாங்கி மூலம் தொடர்புகொள்ளக் கூடிய வசதிகள் கொண்ட தொழில்நுட்பம் நிறைந்த இந்த தொடர்புமுறை மூலம் ஒருவர் ஒருவருடனோ, ஒருவர் பலருடனோ, பலர் பலருடனோ பேசலாம், பாடலாம், ஏன் "கடலை" என்று சொல்லப்படும் கேளிக்கை விதமான பேச்சுகள் கூடப்பண்ணலாம்.

இந்த தொழில்நுட்பம் பல நன்மைகளைத் தந்தாலும் மிகப்பெரிய தீமைகள் கூட விளைவிக்க அமைந்து விடுவது துர்ப்பாக்கியமே. எது எவ்வாறு இருப்பினும் மேலை நாட்டில் தங்கி வாழும் எங்களுக்கு இந்த இணையத்து

அரங்க அறைகள் மிகவும் ஆறுதல் தரும் சாதனம் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக வேற்றுமொழி, வேறு விதமான கலாசாரத்தில் சிக்கித்தவிக்கும் நம்போன்ற வர்களுக்கு முக்கியமாகத் தாளாமையில் தவிக்கும் என் போன்றவர்களுக்கு இது ஒரு ஆறதலளிக்கும் சாதனம்.

அத்துடன் நமது மொழி அதாவது என்னை பொறுத்தவரை தமிழ்மொழி மீதுள்ள பற்று என்னை அறியாமலேயே தமிழ் நாடு அரங்க அறைகளுக்கு அழைத்துச் செல்வது தவிர்க்க முடியாதது. போதாக் குறைக்கு சிறிய வயதிலிருந்தே நட்பு என்றால் ரொம்ப பிடிக்கும் எனக்கு. நொந்துபோன உள்ளங்களைத் தூக்கி நிறுத்த அன்பு ஒன்றால்தான் முடியும் என்று யாவரும் ஒப்புக்கொண்டாலும் நட்பிற்கு இருக்கும் சக்தியே தனித்துவமானது என்பது எனது அசைக்கமுடியாத அபிப்பிராயம்.

அந்த அபிப்பிராயம் உள்ள நான் பல உள்ளங்களைப் பல நாடுகளில் இருந்து சம்பாதித்திருந்தாலும் தமிழ் பேசும் மக்களின் சினேகிதம் என் நாட்களை நம்பிக்கையுடன் நகர்த்தவே செய்தன. எனக்கு வருடாவருடம் தினப்பதிவேடு அதாவது டைரி வாங்கும் பழக்கமுண்டு எனினும், தினமும் தினப்பதிவு எழுதும் பழக்கம் கிடையவே கிடையாது. ஆனால் நாளாவட்டத்தில், தினமும் என் பிரியமான வர்களைச் சந்திக்கும்போது அன்று என்ன நடந்தது, எப்படி எப்படி என் வாழ்க்கை கழிந்தது, என்பதைப் பரிமாறுவதில் தனி சுகம் கண்டேன்.

இது இப்படியிருக்கப் பலரும் அறிமுகமானதால் அவர்களை எல்லாம் ஒரே அறையில் கூடிப்பாடுவது, பேசுவது, கேலி பண்ணுவது என்று பொழுது கழிந்தாலும் எங்களுக்குள் ஓர் பெரிய பிணைப்பு இருந்ததை ஐந்து வருடங்களுக்குப் பின் இன்றும் நமக்குள் இருக்கும் தொடர்பு சுட்டிக்காட்டுகின்றது.

அதற்கேற்ப, பொதுவாக மாந்தர்கள் கூடுமிடத்தில் தேவையற்ற விதமாக, அநாகரிகமாப் பேசும் மாந்தர்களைத் தவிர்க்கும் முயற்சியாக ஆரம்பத்தில் 'ரோஜாத்தோட்டம்', 'தமிழ்நாடு' என சிறிய அரங்க அறைகளில் சந்தித்த நாம், 'அன்பு அரண்மனை' என்ற பெயரில் பலரும் சந்திக்கக் கூடிய ஓர் அரங்க அறையை உருவாக்கினோம். அதற்காகக்

குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இணைய நண்பர்களைப் பதிவுசெய்து தினமும் மின்னஞ்சல்கள் பரிமாறிக் கொண்டோம். அந்த அன்பு அரண்மனையைக் குறிப்பிட்ட ஐந்து நண்பர்கள் தான் திறந்து வைப்பது வழக்கம்.

## இணையத்திலே நாம்!

*இனம் மறந்தோம்! சனம் மறந்தோம்!*
*இணைந்து விட்டோம்! இணையத்திலே!*
*எமை மறந்தோம்! இதயம் திறந்தோம்!*
*மனந் திறந்தோம்! மகிழ்ந்து சிரித்தோம்!*

*ஆலமரம் இந்த இணையம்அதில்*
*சாலவும் ஆறவ ந்தோம் யாமும்*
*அமரும் குருவிகளோ அநேகம்அதில்*
*பகரும் விடயங்க ளோஅ திகம்!*
*பாலிரு க்கும்கள் ளிருக்கும்நாமும்*
*பாலினைப் பகிர்ந்திட ,பாங்குடன்*
*ஆக்கிவைப்போம்!அழகுக்கூடம்*
*அதன்பெ யரோ ரோஜாத் தோட்டம்!*

*கூவுகின்ற குயில்களுட ன்கூடவே நாமிருந்து*
*பேசுகின்ற 'ஜொள்ளுகள்' பெருங்கதைகள் !*

*கணீரென்ற குரலால்மனம்*
*கவர்ந்திழுக்கப் பாடும் கார்த்திக்!*
*கலகலவென்று சிரிப்பு கமழ*
*கலக்கி வைப்பார் பாட்டால் மூர்த்தி!*
*பரபரக்கும் பேச்சால்பாரத்*
*பகரும் கதைகள், படுசுவை!*

*கிளிப்பேச் சால்கிளர் வூட்டும்*
*இனிக்கும் குரலாள்மீனா!*
*இதமான குரலால், இதயம் கொள்ளை*
*கொள்ளும் பெண்ணாள்சுபா!*
*மனந்திறந்து மகிழச்சி ரிப்பாள்சவீதா!*
*எத்தனை யோஇளம் குயில்கள்*
*எம்மா லமரத் தினிலே!*
*திலா, ரீவா, அவ்ரீன், தேவிசிவா*

ஈஷ்வரி,கிறமைஸ்,டிஸ்குளொசர்
இவர்கள் பெயர்கள் அதனுள் அடக்கம்!
இவர்கள் குரலில் நாங்கள் முடக்கம்!

சுந்தரக் குரலில் சுவையாய்
வந்தனங் கள்கூறும் trueman
எத்தனை யோபெ யரில்வந்து
எமைக் கவரும் கட் டிளங்காளை!
Lv யின்குறு ம்புகள்எல் லோரையும்
கவர்ந் திழுக்கும்! சிறப்பாய்...
பாட்டுக் கள்பல பாடும் pals நம்
pals உள் ஒருவர்!

கத்துகி றேனென்று சொல்லி
நித்திரை யில்பாடும் கதிரவன்!
மக்களை க்கவர mac mac
பேச்சும் அபாரம்!
மும்மூச்சா ய் music போடும்எங்கள்
MK_madras
பெரும் பெரும் அக்கறையுடன்
பேசுவாரு Petor!
Hai ram, கடவுள், Shrinee
களைசே ர்ப்பர் கூடத்தை!

Brown eye,Sathisku,Hussain,Raghu,
Chennai boy, Hari Harran, Ram chand
எனஎத் தனையோ சிங்கங்கள்!
அத்த னையும்முத் துக்கள்!

அந்த அன்பு அரண்மனையில் ஆஸ்தானக் கவிஞையாக 'உதயகுமாரி' எனும் பெயரில் நான் உலவி வந்தேன் என்பதை இத்தருணம் அவையடக்கத்துடன் சொல்லுதல் பொருந்தும்.

அன்பு அரண்மனை திறந்துவைக்கும் அந்த ஐந்து நண்பர்கள் இல்லாத பட்சத்தில், காலப்போக்கில் 'நிலா'என உலாவந்த நான் 'நிலாமுற்றம்' என்னும் அரங்க அறையை உருவாக்க முனைந்தேன். இப்படியாக எங்கள் நட்பு, ஆலமரமென வளர்ந்து அன்பு என்ற விழுதூன்றி இன்றும் எம்முன் இருப்பதை எண்ணி இறைவனுக்கு நன்றிகூறி

மகிழ்ந்து கொள்கிறேன். அந்த 'நிலாமுற்றம்' என்ற அந்த அரங்க அறைக்கும் 'நிலாமுற்றம்' என்ற இணையத் தளத் துக்கும் மிகப்பெரிய உறவு இருப்பதை அந்த இணையத் தளத்துக்குப் போகிறவர்கள் அறிந்து கொள்வார்கள. அந்த விதமாகப் பிணைப்புற்ற நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கப் பேச ஆசைப்பட்டதில் தவறென்ன இருக்க முடியும்?

நிலாமுற்றம் பற்றி நான் எழுத என் ஆர் பீ ஆகிய பிரியா பாடிய கவிதை இதோ

ஓடியோடிக் களைத்த நாங்கள்
தேடித்தேடி இணையும் நிலாமுற்றம்!
பாடிப்பாடி பேசிப்பேசி எமைமறப்போம்! ஒன்று
கூடிக்கூடிக் கலைவோமே.. தினந்தோறும்!

கனக்கும் இதயத்தை இலேசாக்க
திறக்கும் எங்கள் கலைக்கூடம்!
சுரக்கும் மகிழ்வூற்று,சுவையாக
பிறக்கும் நிம்மதி பேரானந்தமே!

அறைக்குள் இருந்து அவனியடங்க
அகலும்நம் நட்புச்சிறகுகளே! அதனால்
குறையும் மனப்பாரம், குறையும் இடைவெளிகள்!
குறைகளும் கோள்குண்டணிகளும் கறைதானிங்குமே!

இதயத்தை இதயமாக மதித்திடநமக்கு
இணையத்தில் கிடைத்தவினிய பொழுதுகளே!
வலயத்தை, நட்புவலயத்தை விரித்திட
குவலயத்தில் கொடுத்து வைத்தோமே!

இந்த நிலாமுற்ற, அன்பு அரண்மனை நட்புக்காக தான் இந்த நிலா வாழ்நாளில் ஒரு முறையாவது எனது அன்புள்ளங்களைச் சந்தித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் இந்தியா வந்திருக்கிறேன். இந்த நேரத்தில் வள்ளுவரின் குறள் வாய் வரை வந்து நிற்கிறது. "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்" என்ற அவர் மொழிக்கிணங்க இந்தியா வரை வந்துவிட்டு ஏன் வந்தேன், எப்படி பிழைப்பேன் என்று வருந்துவதில் ஏதும் அர்த்தமில்லை.

■

# கிடைத்ததை வைத்து..

அந்த இரண்டாம் மாடி வீட்டின் நடுக்கூடாரத்தில் சக்கரநாற்காலியில் நான் அமர்ந்திருக்க என்னைச் சுற்றி என் நண்பர்கள் தரையில் அமர்ந்து இருக்கிறார்கள். இப்போதும் ராகவன் கடைகளுக்கு ஓடிச்சென்று மோர் மற்றும் குளிர் பானங்கள் வாங்கி வந்து உபசரிப்பதில் அக்கறை காட்டுகின்றார்.

சிவாவுக்கு ஏகப்பட்ட கவலைகள் இருப்பதை உயர்ந்த அவர் புருவங்கள் கூறுகின்றன. எல்லாரும் சேர்ந்து எப்படியாவது என் உதவிக்கு ஆட்களைக் கூட்டி வரும்படி அழுத்திக் கேட்கிறார்கள். வீட்டுக்குத் தேவையான சாமான்கள் வாங்கப்படுகின்றன. பிரியாவினதும் சிவாவினதும் உதவியுடன் குளியலறைக்கு கொண்டு செல்லப்படுகின்றேன். அம்மா என்னுடன் வந்ததால் ஏதோ என் வாழ்க்கைச் சக்கரம் சுமுகமாக ஓடுகின்றது.

சுடிதாரில் புகுந்து மீண்டும் அலங்காரப் பொருள் நிலா காட்சிக்கு வைக்கப்படுகின்றது. ஆம்! அத்தனை கண்களும் என்மேல் பதிய ஆனந்தத்தின் எல்லைக்கே போகும் அளவுக்குக் கிண்டல் கேலி என நம்பொழுது, நண்பர்கள் வாங்கிவந்த சாப்பாட்டைப் பகிர்ந்து உண்பதில் கழிகின்றது.

தயிர், மோர் போன்ற உணவுகள் எனக்குப் பிடிக்கும் என்பதால் சிணுங்கல் ஏதுமில்லாமலேயே என்வயிறு நிரம்பிக் கொள்கிறது. வியாதி நிரம்பிய எனது உடலோ 'நன்றாக ஓய்வெடுத்துக்கொள்' என்று கெஞ்சோ கெஞ்சு என்று கெஞ்சுகிறது.

சமையலறைச் சாமான்கள் ஒருபுறம், கைத்தொலைபேசி வாங்கும் அலுவல்கள் ஒருபுறம் என மும்முரமாக

ஈடுபட்டிருந்தவர்கள் தலைசாய்ந்து தூங்குவதற்கு ஏதும் வாங்கவில்லையே என சிவாவைக் கடிந்து கொள்கிறேன். வாங்கி வரப்பட்ட பாயில் பலதலையணைகளைப் போட்டு பிரியாவும் அம்மாவும் என்னைத்தூக்கிப் படுக்க வைத்தார்கள்.

இளங்கோவும் அவர் நண்பர்கள் பாலா, ஆனந்த் ஒருபுறம் எனக்கு உதவிக்குப் பெண்களேதும் ஒழுங்கு செய்யமுடியாதா என்று எண்ணிப் போய் விட்டார்கள். அதைப்போல் பிரியாவின் மொபெட்டை இரவல் வாங்கிய ரகு மாதவனை எங்கோ கூட்டிசென்று விட்டுவந்தார். சரியாகச் சொல்லப்போனால் அவர்களுக்கு எனது துன்பங்கள் அவ்வளவாகப் புரிந்திருக்கவில்லை. அதேநேரம் அவரது செய்கைகளில், கொள்கைகள் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

'இம்' என்று ஒருவார்த்தை நான் கூறியிருந்தால் அந்தப் பணிப்பெண்கள் எனக்குச் செய்யவேண்டிய உதவியை அவரே செய்து விட்டுப் போயிருப்பார் என்பது போன்ற தொனியுடன் கூடிய ரகுவினது பேச்சு! இதுவே நானொரு ஆணாக இருந்திருந்தால் அவர் செய்யமுற்பட்டிருப்பாரா என்பது கேள்விதான்!! அந்தக் கேள்விக்கு என்னைப் பொறுத்தவரையில் பதில் 'இல்லை' என்பது தான்.

நான் ஒன்றும் ஆண்களை வெறுப்பவள் அல்ல. ஆனால் அதே நேரம் எனது இயலாமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் எவரையும் மனதார வெறுக்கிறேன். இப்படியான என்னுடைய கொள்கையால் மிகப்பெரும் துன்பங்கள் சில என் வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கின்றன. அதனால் நான் அவதிப்பட்டு மிருக்கிறேன். ஆனால் அதற்காக நான் ஒன்றுமே கவலைப்பட்டதில்லை.

இந்தவிதமான ரகுவினுடைய பேச்சில் எனக்குப் பணிப்பெண்களை ஒழுங்கு செய்து தருவார் என்ற போக்குத் தெரியவில்லை. இதேநேரம் பாண்டிச்சேரியிலிருந்து வந்த சிவா அவரது தொழிலின் நிமித்தம் ஊர் திரும்ப வேண்டிய கட்டாயமிருந்தது.

■

# உதவிக்குப் பெண்கள் இல்லையே

ஈரோட்டிலிருந்து வந்த இளங்கோவிற்குச் சென்னையில் அக்காவீடு உண்டு. இவரது தங்கையின் கணவர் பயணம் செல்வதை வழியனுப்பாமல் என்னை வரவேற்க வந்தவர், எந்த விதத்திலாவது என்னை வசதிப்படுத்தித் தங்க வைத்து விடவேண்டுமென முடிந்தவரை பாடுபடுகிறார். அவருக்கும் ஈரோடில் அவரது தொழில்துறை இருக்கிறது. அடுத்தது, ராகவன் சென்னையிலேயே வசிப்பவர். இயன்றளவு எனக்கு எப்படியும் உதவிட தன் முழுப்பலத்தையும் காட்டுகிறார்.

ஒரு சொந்தச் சகோதரியை போலப் பயணம் வந்த பொருட்கள் எல்லாவற்றையும் நான் கேட்டதற்கிணங்க பிரியா வெளியே எடுத்து ஒழுங்கு படுத்துகிறார். அன்பு உள்ளங்களுக்கென நான் கொண்டு வந்த அன்பளிப்புகளை பெயரிடப்பட்டதிற்கிணங்க வெளியில் எடுத்து அடுக்குகிறார். வலது கரத்தால் கொடுப்பது இடது கரத்துக்கே தெரியக்கூடாது என்பார்கள், எனவே நான் அவை பற்றிய சேதி சொல்ல முற்படவில்லை. அதை எதிர்பார்த்த அன்பல்ல அவர்கள் நட்பு, என்பதும் எனக்குத் தெரியும்.

சாய்ந்து சற்றுக் கண்ணயர்ந்தால் நல்லது என என்னுடல் கெஞ்சினாலும் நட்புள்ளங்களைக் கண்ட களிப்பு அதைமீறி எனை அளவளாவ வைத்து இருக்கிறது. அந்த அறையின் தரையில் பாய்மேல் படுக்க என்னால் முடியவில்லை. சாதாரணமாக மேலை நாடுகளில் குளிருக்கு அஞ்சி கம்பளி மெத்தைக்குள் புதையுண்டு படுத்த சாதாரண உடல்நிலையுள்ள பேர்வழிகளால் கூட இப்படிப் பாய்மேல் படுக்க முடியாது படும் அவதி குறித்து கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த நிலையில் என்கதி?!

அகம் பூரித்தநிலையில் பொழுது கரைந்து மாலைநேரம் பந்திவிரிக்கிறது. மெத்தையுடன் கூடிய கட்டில் கடையிலிருந்து வந்தாயிற்று. பொருத்துவிக்கப்பட்டு இடம்மாற்றப்படுகிறேன். இயன்றளவு நினைவைக் கூர்மையாக்குகிறேன் யார் வாங்கினார்கள், எவ்வாறு இடம்மாறினேன் என்று உங்களுக்குச் சொல்ல!

நினைவுக்கு வருவதெல்லாம் நான் எப்படியான மகிழ்வான நிலையில் இருந்தேன் என்பது தான்! நீங்களே சொல்லுங்கள்! என் சொந்தச்சுகாதாரத் தேவைகளைத் தீர்க்க முடியாத நான் அதற்கான உரிமைகள் கிடைத்து என் மிகப்பெரிய கனவை நனவாகக் காணுகிறேன் என்றால் என்மனநிலை எந்தளவு மகிழ்வு வயப்பட்டிருக்கு மென்று!

ஆம்! நான் பாக்கியசாலி தான்! இந்த நிலையிலும் இந்தளவுக்கு அன்பைச் செலுத்தும் நண்பர்களைப் பெற்றிருக்கிறேனே! நாங்களே பேசிப் பேசி வியந்து போகிறோம். முக்கியமாகச் சிவாவிற்கு நம்பவே முடிய வில்லை நான் சொன்னபடி, சொன்னதை நிறைவேற்றி விட்டேன் என்பதை! எனது தொலைபேசிக்கு 'சிம் காட்' போடப்பட்டாயிற்று. தொலைபேசி இலக்கமும் கிடைத் தாயிற்று. பாவம் அவர்கள்!! அத்தனை பேரும் களைத்துப் போனார்கள்.

பாண்டிச்சேரியிலிருந்து வந்த சிவா, அவர் வீடு போக வேண்டும், வரும் ஞாயிறு வருகிறேன், தொலைபேசி யிலழைக்கிறேன் பணத்தை மாற்றி அனுப்பும் வழி செய்கிறேன் என்று கூறிப் போய்விட்டார். எல்லோருக்கும் முன்பாகவிருந்தே எனக்குப் பழக்கமானவர் அவர். அவரை எனது நிலாமுற்ற நண்பர்களுக்குத் தெரியாது. சிலபல காரியங்களுக்கு அவர் என் நண்பர்களில் சிலரையும் அவர்கள் சிவாவையும் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

மேலும் நான் இவ்விடம் வந்ததால் இவர்களுக்குள் தொடர்பு வலுத்து இருக்கிறது. வந்தபின்பு நட்பும் ஏற்பட்டிருக்கிறது. தொலைபேசி இலக்கம் பரிமாறு பவர்களும் மாறி மாறிக் கேலி, கிண்டல் என இடமே ஆனந்த மயமாகிறது. அடுத்து ராகவனும் வேலைக்கு இன்று விடுமுறை எடுத்தவராயிற்றே! காலையில் வேலைக்கு

முன்பாகவே வருவேன் என்று கூறிப் புறப்பட்டார். புறப்பட முற்பட்டவேளை தான் தெரிய வந்தது யாதெனில் இன்னும் பிரியாவின் கணவரும் வீடுவரவில்லை என்பதும் அத்துடன் பிரியாவின் தாயாருடன் தங்கி இருக்கும் பிள்ளைகளை இனிப்போய் அழைத்துப் பிரியா வீடுபோக வேண்டும் என்பதும். எல்லோருமே களைத்துப் போனார்கள்.

அதேநேரம் அவரவர் குடும்பங்கள், பிரச்சனைகள் அத்தோடு பத்து மணிக்கும் மேலாகப் பயணஞ்செய்த எமது ஓய்வின் தேவைகள் கருதி விரும்பியோ விரும்பாமலோ அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர். இருளுடன் மௌனமும் கைகோர்த்துக் கொள்கிறது. கண்ணயர முற்படுகிறேன். அதிகம் நொந்து போன எனது உடல் வாதைப் படுகிறது. அதிகம் களைத்துவிட்டால் தூங்கவும் முடியாதே! என்னையறியாமலே நான் பிதற்றியதால் கலங்கிப் போன என் தாயார் துடித்துப் போகிறார்.

■

## பருகவொரு பானம்

பாவம் அம்மா! எங்கிருந்தோ வந்து அவசரத்துக்குக் கூட யாரை அழைப்பது என்று தெரியாத நிலையில்! நானோ காய்ச்சல் வயப்பட்டு அதன் கோரம் தாங்காது ஏதோ பிதற்றுகிறேன்!! செய்வது தெரியாமல் என்னை எழுப்பி எழுப்பி நான் தேறக்கூடிய நிலையில் உள்ளேனா என்று பரிசீலிக்கிறார். எனக்கும் ஏதாவது உட்கொண்டால் நன்றாக இருக்கும் என்றிருக்கிறது, ஆனால் இன்னும் எதுவித அடுப்பும் எங்கள் வசிப்பிடத்தில் ஒழுங்காக வில்லையே! தெரிந்ததால் மௌனத்தைப் பானமாக்குகிறேன்.

இரவு பத்தரை மணி இருக்கலாம். கைத்தொலைபேசி ஒலிக்கிறது. நண்பர் இளங்கோ நமது நிலை பற்றி விசாரிக்கிறார். மென்று விழுங்குகிறோம். "என்ன நிலா? என்ன சொல்லுங்க. ஏதும் ஒதவி வேணுமா" கேட்கிறார். விடயத்தைக் கூறுகிறேன். குரலின் தளர்வு என்நிலையை அவர்க்குணர்த்த "பொறுங்க அம்மாகிட்ட விசாரிச்சுட்டு வாரேன், ஏன்னா அவங்க டாக்டர்" என்று கூறி ஹைதரா பாத்திலுள்ள தனது அம்மாவிடம் தொலைபேசியில் அழைத்து விசாரித்து விட்டு வருகிறார்.

வந்தெனைப் பார்த்ததும் கண்திறந்து பேசக்கூட முடியாத எனது நிலையும் எனைப் பராமரிக்கும் அம்மாவின் நிலையும் இளங்கோவுக்கு மனச்சங்கடம் கொடுத்திருக்க வேண்டும். நண்பன் பாலாவுடன் போய் ஹோர்லிக்ஸ் பானம், மருந்து சகிதம் திரும்புகிறார். எனது உடல் மேலும் பொறுக்காது என்ற சூழலில் தான் நான் இந்த வீட்டில் தங்கிவிட முடிவுசெய்தது! நாம் முடிவு செய்வதை விட சந்தர்ப்பங்களும் முடிவு செய்கிறது! வாழ்வினோட்டத்தில் நான் மட்டுமென்ன விதிவிலக்கா?

நான் மருந்தை உட்கொண்டு ஹோர்லிக்ஸ் பானம் அருந்தி கொஞ்சம் அமைதிபெற நண்பர்கள் வெளியேற மீண்டும் மௌனம் தன் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளக் கடிகாரப் பெண்ணைக் கைப்பிடித்த இரவுமங்கை மெல்லவே நகர்கிறாள். ஜூன் நான்காம் திகதி கிழிக்கப் படுகிறது.

காலைக்கதிரவன் தன் பொற்கதிர்களைத் தாராளமாகவே பரவவிட்டான். காலையானதும் வாழ்வைப்பற்றிய பயம் மீண்டும் பற்றிக்கொண்டது. நாம் வாழ்வது தான் சிங்காரச் சென்னையாச்சே. ஒன்று நாங்கள் விரும்பியோ விரும் பாமலோ எமைப் பற்றி விடும் உணவுத்தேவை. எந்த உணவுத் தேவையை தீர்த்தாலும் உடன் சுகாதாரத் தேவை தீர்க்காமல் வாழ்வு நகர்ந்து விடுமா என்ன?

கங்காரு தன் குட்டியை காவுவது போல் தன் மகவின் தேவை தீர்க்கத் தாயார் தயார் தான். ஆனால் அவரைப் பற்றும் முதுமை மேலும் சில வருடங்களாகப் பராமரித்த பயிற்சியின்மை... இப்படி ஏகப்பட்ட இடைஞ்சல்கள். ஏதோவிதமாக சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டேன்.

ரகுவும், மாதவனும் கதவைத் தட்டினார்கள். வைத்தியர் இன்றே நல்ல நாள் எனவும் வைத்தியம் தொடங்கிட வேண்டுமனவும் கூறினார். எனக்குத் தான் காய்ச்சலாச்சே அதற்கு முதலில் மருந்து பெற்றுக்கொணர்வதற்காக வைத்தியரின் தொலைபேசி அழைப்புக்கிணங்க போய் விட்டனர்.

அடுத்து ராகவன், இளங்கோ, இளங்கோவின் நண்பர்கள், பிரியா என்று மாறி மாறி வந்து பல விதமான வீட்டு சௌகரியங்கள் பேண தாங்கள் முழு ஒத்துழைப்பு வழங்கினர். இதற்கிடையில் இருந்த இந்தியப் பணத்தை தீர்த்துவிட கையிலிருந்த தனது வங்கி அட்டையைத் தந்து விட்டு சென்றிருந்தார் நண்பர் சிவா. ஏற்கெனவே தான் வைத்தியரிடம் ஒருபகுதிப்பணம் செலுத்தியாயிற்றே. பகுதி பகுதியாக மருந்தைப் பெற்றுக் கொள்வதற்கு மேலும் பணம் வேண்டும் என்றார் ரகு. அவருக்கு ஒத்து ஓதும் மாதவன்.

இதற்குள் என்னைத் தூக்கிப் பராமரிக்க ஆட்கள் இல்லையே என்று இடத்துக்கு இடம் சென்றும் தொலைபேசியிலழைத்தும் பாடுபடும் நண்பர் இளங்கோ.

தன்னால் ஏதும் சரீரரீதியாக உதவ முடியுமா என என்னுடனேயே தங்கி அம்மாவின் சுமையை குறைக்க விழையும் நண்பி பிரியா. இதற்குள் மாறி மாறிச் சிணுங்கும் கைத்தொலைபேசி. தகிக்கும் வெயில்! அதைத் தணிக்கும் மோர் அதைத் தானும் குடித்து தகிப்பைத் தவிர்க்கக் கூட முடியாத உடல் நிலை. அம்மாவோ தன்னைச் சுதாரித்து ஏதாவது ஆக்கிப்போட விழைகிறார். மதியவுணவு தயாராகிறது.

எவ்வளவு கஷ்டங்கள் மத்தியிலும் மகிழ்வு துளிர்விட ஆரம்பிக்கின்றது. என்ன தான் ஆனபோதும் நாம் வாழ்ந்த சூழலையொத்த சூழலில் வாழும்போது மனம் சற்று சாந்தி பெறுவது இயற்கையே. அகோரமாக வெளியில் எறிக்கும் வெய்யில். இயற்கையாகவே, மிக இயற்கையாகவே உள்ள மரக்கறிகள் குளிரூட்டப்பட்ட போதிலும் அன்றே தயாரான மோர், சுவையான வாழைப்பழம். இப்படிக் கொஞ்சம் வாழ்ந்த சூழலின் கதிர்கள் எம்மைத் தழுவும் போது கிடைக்கும் நிம்மதி சுகந்தமாகவே இருக்கின்றது. இயலாத உடலைத் தந்த இயற்கையை இரசிக்கும் சின்னச் சின்ன மகிழ்வுகளைத் துல்லியமாகக் கவனிக்கும் இதயத்தையாவது தராமல் விட்டு இருக்கலாமே.

அந்தத் துல்லியமாக இரசிக்கும் இதயம் தான் வாழ்விலுள்ள துன்ப மூட்டைகளை விடுத்து இடையே யுள்ள இன்பத் துவாரங்களைக் கணக்கிலெடுக்க வைக்கிறதோ என்னவோ! அந்த வீட்டில் உள்ள ஒப்புரவில்லாத சீமேந்து அலுமாரிகள் கூட நான் வாழ்ந்த சூழலை நினைவுப் பலகையில் ஆணியாக அடித்துள்ளதே. மிகப் பெரிய மகிழ்வு என்ன என்றால் நான் எனக்கென வீடு வாடகைக்கு எடுத்து அங்கு வாழ்ந்து இன்று என் நண்ப நண்பியர்களுக்கு விருந்தோம்பல் செய்ய முடிகிறதே. அது எனது பாக்கியம் தானே!

எங்கோ உள்ள இங்கிலாந்து நாட்டுக்கு இத்தனை அன்புள்ளங்களை அழைத்துப் போக முடியுமா, என்ன! அல்லது அவர்கள் எல்லோரது இல்லத்துக்கும் நான் தான் போக முடியுமா? போனாலும் அத்தனை வீட்டாரும் என் நண்ப நண்பியர்களைப் போல் என்மீது அன்பு செலுத்துவார்களா? என்ன! என் நண்ப நண்பியர்கள் மிகவும் சிறப்பானவர்கள் என்பதில் எனக்குப் பெருமை!

எத்தனை வசதி படைத்தவர்களாக இருந்தாலும் பாயில் உட்கார்ந்து இலையில் உண்ணவும் அவர்கள் தயார். கிடைத்ததை மிகவும் குதூகலமாக உண்டு அந்த இடத்தையே பிருந்தாவனமாக்கும் அன்பில் திளைத்து மகிழ்ந்தேன்.

என் காய்ச்சலுக்கு இனிமேல் என்னவேலை? என் நண்பர்கள் எனைச்சுற்றி இருப்பதால் தன்னால் என்னைத் அணுகமுடியாது எனப் பறந்தே போய் விட்டது.

■

# அப்பா! அப்பா!

நிலாவின் இந்திய உலா தந்த அனுபவங்கள் எத்தனை எத்தனை! உஷ்! அமைதியாயிருங்கள்! சத்தமே இல்லாத அமைதியான அந்த வேளை! பாடசாலைக்கெல்லாம் சிறார்கள் போய்விட தாய்மார் தங்கள் அடுக்களையிலோ குளியலறையிலோ மிக மும்முரமாகத் தங்கள் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் அந்த இரண்டாம் மாடியிலிருந்து "அப்பா!, அப்பா! என்று ஓர் அலறல் கேட்கிறதே! யார் அலறு கிறார்கள? ஏன் அலறுகிறார்கள் என்று யாருக்காவது தெரியுமா? நான் தான்! நானே தான் அலறுகிறேன். ஏன் அதுவா? அந்தளவுக்கு வலி தரும் விதமாக இரண்டு பெண்கள் என்னுடலிலுள்ள வாதையைப் போக்க 'நோவு உருவுதல்' என்று கூறுவார்களே அந்த விதமாக என் உடல் முழுவதையும் சுடு எண்ணெயால் ஊறவைத்த (பல தானியங்களடங்கிய சூடாக்கப்பட்ட பொட்டலம் என்று கூறப்படும்) துணியிலான ஒரு சிறுமூட்டையால் எனக்கு ஒத்தடம் தந்து உருவுகிறார்கள்.

நான் படும் அவஸ்தை கண்டு அம்மா கண்ணீர் வடிக்கிறார். வந்த மருத்துவப் பெண்களில் ஒருவர் கொஞ்சம் வயதானவர். அவருக்கு எம்மீதெல்லாம் மனவருத்தம் இருந்ததை மறுநாள் அறிகிறோம். ஏனென்றால் ஏதோ தாம் எம்மைக் கொடுமைப் படுத்துவது போலவும் அம்மாவும் சேர்ந்து அழுவது தொனிக்கிறது" என்று கவலைப் பட்டாராம்.

வேதனைப்பட்டேன். துடித்தேன். "அப்பா, அப்பா" என்று அலறும் எனைப் பார்த்து எதற்கு அம்மா அருகிலுள்ள போது அப்பாவை விழித்து அலறுகிறேன் என்று அந்த

மருத்துவப்பெண்களே கேட்டறிந்து கொண்டார்கள். இப்படித்தான் நான் இலங்கையில் அப்பாவைப் பிரிந்து வாழும்போது கூட சிலவேளைகளில் வாய்விட்டே "அப்பா! அப்பா!" என அழைத்து என் அப்பாவை நினைத்துக் கொள்வேன். துன்பங்கள் என்னை வாட்டும் போது எங்கோ ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் எனது பிரிய தந்தையை விழித்தே அழுவேன். 'அப்பா, உங்கள் சின்னமகள் படுகிற பாட்டைப் பார்க்க நீங்கள் அருகிலில்லையே' என்று வருந்துவேன்.



நிலாவின் அப்பா திரு. பரமலிங்கம்

அது என்மனதில் ஊறிப் போனதொன்று. அந்த அலறல் ஐந்து மாதங்களுக்கு அப்பாவை முற்றாகவே இழக்கப் போகிறேன் என்பதற்கு ஒத்திகையோ!

அது ஒருபுறமிருக்க வேடிக்கை என்னவென்றால் இன்றும் பிடிக்காத உணவு அம்மா தயாரித்து விட்டால் என் சாப்பாட்டு மேசைக்கு எதிராகவிருக்கும் 2003 இல் காலமாகிப்போன எனது அப்பாவின் உருவப்படம் பார்த்து நகைச்சுவையுடன் முறையிடுவது என் வழக்கமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தளவில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வேறுபாடு இல்லை. நான் துன்பப் படும்போது அப்பா உங்கள் பிள்ளை படும் பாட்டைப் பாருங்கள் என் மனம் சொல்லும். அதற்காக அம்மாவின் உழைப்பை உணராதவள் என நினைத்து விடாதீர்கள்.

■

# கதவைத் தட்டினால் ...

நினைத்தே பார்க்கமுடியாத புழுக்கம். நாற்பத்தி மூன்று பாகை சென்ரிகிறேட் சாதாரண வெப்பநிலையாக இருந்தது சென்னையில். எனது அறையைக் குளிரூட்டக் கூடத் தயார்நிலையிலுள்ள, எனது தம்பியென்று பெருமைப்படக் கூடிய என்னுடன் பிறக்காவிடினும் கூடப்பிறந்தவனாய் அக்கறை காட்டும் ராம்குமார். திருநெல்வேலியில் அருமையான ஒரு தங்கும் விடுதிகொண்ட தரமான ரெஸ்ராரண்ற் நடாத்தும் முப்பது வயது இளைஞன்.



யாரோ கதவைத் தட்டுவார்கள். விசாரித்தால் "ராம்சார் தந்து விடச்சொன்னார்'' என்று உள்ளே வந்து தளபாடங்கள், பிற பொருட்கள் எல்லாம் வைத்து விட்டுப் போகும் உதவியாட்கள். என் தொலைபேசி உரையாடல்கள் மூலம் நான் சொல்லாமலேயே என் தேவைகளைப் புரிந்து, மற்றவார்கள் மூலம் என் தேவையை வேவுகண்டு என் வீடுதேடி அனுப்புகிறார். தொலைபேசியில் இடப்படும் கட்டளைகள் மூலம் இயக்குகிறார். மின்விசிறி புதிதாகவே வாங்கிப் பொருத்தியாயிற்று. காற்று குளிர்மைப்படுத்த ஒரு சாதனம் (Air Cooler) பொருத்தப்படுகிறது. எந்த முயற்சியும் தூக்கத்தையும் வாங்கித் தரவில்லையே! கண்ணை மூடமுடியும் ஆனால் நித்திரை கொள்ள முடியாத அளவுக்கு ஒரே வியர்வை.

தன் பாரிய பொறுப்புகளின் நிமித்தம் தன்னால் சென்னைக்கு அப்போது வந்து பார்க்க முடியவில்லை என்பதனாலோ என்னவோ தன் தங்கை துர்க்காவை தன் பிரதிநிதியாக என்னைச் சென்று பார்த்து வரும்படி தம்பி அனுப்பியிருக்கின்றார். அத்தோடு வேறொருநாள் அவருடைய உறவுக்காரப் பையன் ஒருவன் வந்து என்னை

மிக நேசத்துடன் விசாரித்து போனதை இன்றும் மறக்க முடியாது. அந்தப் பையனின் பெயர்தான் மது. நான் ஒவ்வொருவரையும் தனித்தனி குறிப்பிட வேண்டியதன் நோக்கம் என்னவெனில் எங்கிருந்தோ வந்திருக்கும் என்னை என் விலாசம் தேடி வந்து பார்க்கும் அளவிற்கு என் நண்பர்களின் மனதில் நான் பதிந்து இருக்கின்றேனே என்பது எனக்குத் தரும் வியப்புதான் காரணம்.

■

# பல நிறங்கள்

இது ஒரு புறம் ஏதோ தான் தான் என் ஆத்ம நண்பன்போல் எப்போதும் மணிவண்ணன் சகிதம் என் வீடு வந்து செயற்கை சிரிப்பை முகத்துக்கு முலாமாக்கும் ரகு, மாதவன் அவர் நிழல்! கொடுத்த பணம் திரும்பி வராமலே போய்விடும் என் அம்மா சக நண்பர்களின் நச்சரிப்புத் தொடர்கிறது. எனக்கோ அந்த பணத்துடன் ரகுபோனாலும் அத்துடன் இனிமேலாவது எமது நட்டமடைதல் நிற்குமே என்றவுள் எண்ணம்.



என் உதவிக்கெனப் பெண்கள் இருவரைத் தேடிப்பிடித்து தந்துவிட்டே நண்பன் இளங்கோ ஈரோடுபோனார். வந்தபெண்களுக்கோ தங்கள் உடலை பத்திரமாக வைக்கும் அக்கறை இருந்ததேயொழிய எனக்குச் சேவைசெய்யும் ஆர்வம் குன்றியே இருந்தது. அதனால் அம்மாவுக்கே தன்பிள்ளையை தானே மீண்டும் தூக்கிப்பராமரிக்க வேண்டியசூழல். ஆனால் அந்த மருத்துவப்பெண்களோ தாங்கள் சுடு எண்ணெய் கொண்டு பூசி உருவிவிட்டு அதேயளவு சூட்டுடன் கூடியநீரில் குளிக்க வார்ப்பதற்கு மிக அருகில் உள்ள குளியலறையின் தரைப்பகுதிக்கு நான்குபேராக இணைந்து என்னைத்தூக்கி இடமாற்றம் செய்வதற்கு இந்தப் பணிப்பெண்களினதும் உதவி தேவை என்று நின்று கொண்டார்கள்.

■

# வைத்தியத்தின் வேகம்

**அ**வர்கள் இவ்வாறு என்னைத் தூக்கும்போதெல்லாம் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிய நிலை அம்மா வினுடையது. இறைவனை மன்றாடுவதைத்தவிர அம்மாவுக்கு வேறுவழி தெரியவில்லை. இப்படியெல்லாம் குளிப்பாட்டி, துவட்டி முடித்த அந்த மருத்தவப் பெண்களுக்கு தேனீர் கொடுப்பார் எனது அம்மா. அந்த தேனீர் பரிமாறும் நேரத்துக்குள் நான் படும் அவஸ்தை அப்பப்பா! விண் விண் என்று அத்தனை கால் நரம்பும் துன்பப்படும், துடிக்கும். அந்தத் துன்பத்தை கொஞ்சமாவது தடுக்கவல்லது அம்மாவின் கரம் கொண்ட தடவுதல். அந்த அளவிற்கு நான் வாதைப்பட்டேன். என் அம்மா தந்த ஆறுதலில் என் உயிரும் இளைப்பாறும். இங்கிருந்து இந்தியா போயும் என் அருமையான நேரம் எப்படி எல்லாம் காலத்தால் விழுங்கப் படுகிறது பார்த்தீர்களா?. நோய் தரும் வாதை ஒருபுறம், வைத்தியம் தரும் சங்கடம் மறுபுறம். அத்துடன் சலிக்காது எனை ஆதரிக்க அருமை அம்மாவையும் தந்த இறைவன்!

வாழ்தல் என்பது என்ன? நாட்களை கழித்தல் தானே! அந்த நாட்கள் எப்படி கழிகிறது என்பதே முக்கியம். அந்த நாட்களைச் சிறப்பாக்கப் படும் பாடுகள் தான் எத்தனை! தினமும் பத்திய உணவு, கசப்பான மருந்துவகை, அத்துடன் அடிக்கடி ஒலிக்கும் தொலைபேசி என என் வாழ்வு. ராகவன் வந்து அன்பு பொங்கப் பேசுவான். மிக மிகப்பாசமான அன்பும் அக்கறையான விசாரிப்பு அவனது. அனுப்பும் ஒரு தொலைபேசிச் செய்திக்குப் பத்தே நிமிடத்தில் வந்திறங்கும் வாயு அடுப்புக்கான தாங்கி.

பிரியாவும் வந்து வந்து சுகம் விசாரிப்பதும் அம்மாவுடன் வெளியில் போய் வருவதும் என மிகவும் உதவி செய்தார். அவசர நாட்டில் அவசரமாக வாழ்ந்த யான் இந்தியா போய் இளைப்பாறாவிட்டாலும் ரம்யமாக நாட்களைக் கழிக்கலாம் என்றால் வந்த நாட்டிலும் நாட்கள் சுபமாகக் கழியக் காணோமே.

98 ஆம் ஆண்டில் இலண்டன் வந்த நான் அம்மாவுடன் தங்கும் பாக்கியமின்றி வேறோர் இடத்தில் வாழ்ந்து வந்ததால் பயணம் வந்த வேளையிலாவது அம்மாவோடு என் தினங்களைக் கழிப்போம். ஆக்கித் தரும் உணவை அகமகிழ்வுடன் உண்போம் என்றால் அதற்கும் நான் கொடுத்து வைக்கவில்லை. நானும் என்வாழ்வில் சந்திப்பதெல்லாம் சாட்டையடிகளாக இருக்கிறதே.

நாம் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் நினைப்பதொன்று நடப்ப தொன்றாக யாவுமே நடக்குமென்றால் வாழ்வில் பிடிப்பு எப்படி வரும்? நாம் முயற்சி செய்யலாம். நடப்பது இறைவனின் கரங்களில், அல்லது நடப்பது நடந்தே தீரும் என்றோ வாழ்வெனும் நதியில் சருகுகளாக நாம் அடித்துச்செல்வதை நாம் ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வரவேண்டியது தான். 'எனக்கும் கீழே உள்ளவர் கோடி' நினைத்துப் பார்க்காமலில்லை. அதற்காக நாம் முயற்சிக்காமலோ திட்டங்களை வகுக்காமலோ இருந்து விடலாமா?

நாடு விட்டு நாடு வந்து நாற்பத்தியெட்டு நாட்கள் நானும் அம்மாவும் அனுபவித்தது ஒரு வகைச்சிறையே. அந்த அனுபவிப்பாலும் கூட கொஞ்சம் பயன் இருக்கத் தானிருந்தது. மெத்தையில்லாத கட்டிலில் தான் என்னைப் படுக்கவே அனுமதித்திருந்தார்கள். அந்த கொழுத்தும் வெயில் கொண்ட சென்னையில் தூங்குவது தான் எப்படி? அதை விடுங்கள். ஆனால் ஒன்று நானாகவே திரும்பிப் படுக்குமளவுக்கு எனது உடல் திருத்தம் பெற்றது. அதுமட்டுமா! சந்தித்த நண்பர்கள்தான் எத்தனை!!

■

# மேலும் நண்பர்கள்

சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு வந்த அண்மையில் விதவையான இரு பிள்ளைகளின் தாயான ரேஷ்மாவும் ஏதோவோர் மத்திய கிழக்கு நாட்டிலிருந்து வந்திருந்த ஜே.பி. என நாம் அழைக்கும் நண்பரும் ஒன்றாகவே இந்தியா பயணமாகி வந்திருந்தனர். அவர்கள் திருச்சியி லுள்ள கோவிந்த் மூலம் தொலைபேசி இலக்கமறிந்து எம் வீடு வந்தனர். சந்தித்தனர். ஒளிப்படமும் எடுத்துக் கொண்டோம். கணனிக்கு கணனி தொடர்பு கொண்ட வர்களை நேரில் சந்திப்பது இனிய அனுபவமே.

கோவிந்த் எனும் எனது நண்பர் திருச்சியைச் சேர்ந்தவர். இங்கு ஒரு நிறுவனத்தில் முகாமையாளராகப் பணிபுரியும் இவருடன் நாங்கள் எப்போதும் ஒருவரையொருவர் தாக்கிப்பேசுவதுதான் எமது பொழுதுபோக்கு. இன்றும் கூட நான் அவரை டொங்கீ (donkey) என்பதுவும் அவர் என்னை மங்கீ (monkey) என்பதுவும் வழக்கத்தி லுள்ளவொன்று. கோவிந்தும் சில கவிதைகள் எழுதி அனுப்புவார் என் பார்வைக்காக. இவரது பேச்சு நடையில் ஓர் சிரிப்பொலி எப்போதும் இருக்கும். 'ஒற்றை ரூபாய் தாறேன்' என்ற பாடலை அமெரிக்காவில் வாழும் மலேசியப்பெண் புஸ்பாவுடன் அரங்க அறைக்குள் இவர் பாடும்போது நாம் மிகமிகக் கலகலப்பாக எங்கள் நேரத்தைப் போக்குவோம். இவர் இன்றும் தன்னை மன்மதனாக நினைத்து அரங்க அறைக்குள் வலம் வந்தாலும் பழக இங்கிதமானவர். உரிமையாகச் சண்டை பிடிப்பேன். நாம் கோபித்துக் கொள்வதில்லை. கொள்ளவும் முடியாது. இனிய நட்பு எமது.

ரேஷ்மாவுடன் அதிகம் பழக்கம் எனக்கில்லை. ஜே. பி. ஓர் இரக்கசாலி. ஊக்கம் தரும் விதமாகப் பேசுவார். என் கவிதைகள் அவரைக் கவர்ந்தவை. என் முயற்சி அவருக்குப் பிடிக்கும். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த என்னைச் சந்திக்க வந்திருக்கிறார். ரேஷ்மா இணைந்து எனைப்பார்க்க வந்திருக்கிறார். எதிர்காலத்தில் இவர்கள் கணவன் மனைவியாக இணைவார்கள் என நான் எதிர்பார்க்கவே இல்லை.

கோவிந்த் இரு பெண்கள் சகிதம் வந்து இருந்தார் என்னைப்பார்க்க. ஒரு பெண்ணின் பெயர் பிரியா. அன்புடன் சேர்ந்த துடிப்புள்ள பெண். அவளை இணையம் மூலமே தெரிந்து சென்னையில் வந்து சந்தித்து நேரில் அழைத்து வந்தார். தான் இணையம் மூலம் அறிமுகமான நண்பியல்ல. நேரடி அறிமுகமாகி இணையம் மூலம் தொடர்பைப்பேணும் நண்பி என்பதில் பெருமை அவளுக்கு. அவளுடன் ஓர் மலையாளப் பெண்ணையும் சந்தித்தோம். மகிழ்ந்தோம். பிரியாவின் விருப்பத்திற்கு இணங்க 'பிடிக்கவில்லை' என்ற கவிதையை வாசித்துக் காண்பித்தேன். உங்கள் சுவைக்காக.



**பிடிக்கவில்லை!**

*இங்கிலாந்து நாட்டிலிப்போ*
*வெந்துதகிக்கும் வெய்யில்*
*பிடிக்கவில்லை!*

*இங்கிதமறிந்து பழகமறுக்கும்*
*நண்பர்கள் சுயநலநட்பு*
*பிடிக்கவில்லை!*

*அங்கொன்றும் இங்கொன்றும்*
*விதமாய்நடிக்கும் உறவுகள்*
*பிடிக்கவில்லை!*

*பங்கம்தரும் விதமான இரகசியங்களை*
*பகிரங்கமாக்குவது*
*பிடிக்கவில்லை!*

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



இளங்கோ, ராகவன்



நிலா, பிரியா



ரேஷ்மா



ஜே பி



பிரியாவின் பிள்ளைகள்



பாலா, இளங்கோ, நிலா

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



சம்பத் அண்ணா



மீனா அக்கா



ஆர்த்தி, சுபஸ்ரீ, திவ்யா



சீதாம்மா



இந்து, வினோத்



கோவிந்த் குடும்பத்தினர்

பணம்வந்ததும் பழையதை
மறக்கும் பாமரர்செயல்
பிடிக்கவில்லை!

மணந்தரும் மலர்களின் திறமைகளை
மெச்சமறுப்பது
பிடிக்கவில்லை!

மதந்தரும் மகிமைகளை
ஊடகமாக்கும் உன்மத்தரைப்
பிடிக்கவில்லை!

சினந்தரும் வதந்தியால் சீர்பெற்றநல்வாழ்வுகள்
சின்னாபின்னமாவது
பிடிக்கவில்லை!

யார்கெட்டால் என்னநான் வாழ்ந்தால்
போதுமென்ற சிந்தைகள்
பிடிக்கவில்லை!

பெயர்கெட்டால் என்னவிப்போ?
எப்படியும் வாழ்வோம்
என்பதும் பிடிக்கவில்லை!

பார்கெட்டால் என்னபதவிதான் பெரிது
என்றவர் போக்கும்
பிடிக்கவில்லை!

ஆர்கெட்டால் என்னஆம்பிளை நானெனும்
ஆடவரையும்
பிடிக்கவில்லை!

திறமைகள், கடும்முயற்சிகள்
கணக்கிலெடுக்காமற் போவது
பிடிக்கவில்லை!

புலமைகள் சிலபொழுதுகளில்
களவெடுக்கப் படுவதும்
பிடிக்கவில்லை!

தலைமைகள் தந்தவறுகளை
தம்கீழார் தலைகளிற் சுமத்துதல்
பிடிக்கவில்லை!

நிலைமைகளறிந்து தம்பெற்றோருடன்
ஒத்துநடவாத சிறார்களையும்
பிடிக்கவில்லை!

செய்யாத தவறுக்குத் தண்டனை
பெறும் கோழைகளைப்
பிடிக்கவில்லை!

செய்யாத தவறை
செய்ததாய் நிறுவும் சீற்றமும்
பிடிக்கவில்லை!

பெய்யாத மழைமுகிலாய்
சொல்லாத காதல்களும்
பிடிக்கவில்லை!



கொய்யாத மலராய்
கூரையைப் பார்க்கும் குமர்கள்மூச்சும்
பிடிக்கவில்லை!

சுற்றிவளைத்து சொன்னதையே
சொல்லும் சிலர்கதைகள்
பிடிக்கவில்லை!

மெச்சிவதைத்து காரியம் ஆற்றுவிக்கும்
கயமைகள்
பிடிக்கவில்லை!

தட்டிக்கழித்து கடமைகளை
தாமதமாக்குபவர்களைப்
பிடிக்கவில்லை!

நீட்டிநிமிர்ந்து நிதமும்நித்திரையில்
நேரம்போக்குபவர்களை
பிடிக்கவில்லை!

சொல்வதொன்று
செய்வதொன்று செய்பவர்களைப்
பிடிக்கவில்லை!

கொள்கையென்று இல்லாத
மனிதசகவாசமுந்தான்
பிடிக்கவில்லை!

கல்கவென்று தன்குழந்தைகளை
வழிநடத்தா பெற்றோரைப்
பிடிக்கவில்லை!

வெல்வதென்று
நோக்கமில்லாப் போட்டியாளர்களைப்
பிடிக்கவில்லை!

கட்டியவள் கண்கலங்க
சூதாட்டம் ஆண்வர்க்கம்
பிடிக்கவில்லை!

வெட்டியென
வீண்பொழுது போக்கும் எவரையுமே
பிடிக்கவில்லை!

பட்டியெனக் கிளர்ந்துபோய்
பச்சையாய்ப் பேசும்வாலிபர்களைப்
பிடிக்கவில்லை!

சிமிட்டிப்பேசி சமிக்ஞை கொடுத்துச்
சீரழிக்கும் சிங்காரிகளைப்
பிடிக்கவில்லை!

பெற்றவர்கள் முதுமையை
உணராத மகவுகள் தன்னைப்
பிடிக்கவில்லை!

கற்றவர்கள் மத்தியில் கனதியாய்ப்
பேசுமற்றவர் தரம்
பிடிக்கவில்லை!

கெட்டவர் சகவாசம் கூடாதெனும்
சொல்கேட்கா பிள்ளைகள்
பிடிக்கவில்லை!

பட்டவர் அனுபவங்கள் பாடங்கள்!
புத்தி தெளியாதவர்களைப்
பிடிக்கவில்லை!

நாமுந்தப்பு செய்யக்கூடும்
எனவெண்ணமறுக்கும் மாந்தரைப்
பிடிக்கவில்லை!

நாளுந்தப்புச் செய்து
மன்னிப்புக் கேட்கும் பாங்கும்
பிடிக்கவில்லை!

கோளுந்தப்புச் செய்யும்
தொடர்ந்த வினைத்திறனால்! நம்பாதவர்
பிடிக்கவில்லை!



நானுந்தப்புச் செய்து
நயம்பத் தோன்றியதோ? இக்கவிதை!
யாருக்குப் பிடிக்கவில்லை?

இந்தக்கவிதையை எழுதத்தூண்டியது இங்கிலாந்தில் திடீரெனக் கொழுத்தி எறித்த வெயில். எழுத எழுத வார்த்தைகள் வந்து விழுந்ததால் விளைந்த நீண்ட கவிதையிது. இந்தக் கவிதையை ஒருநாள் சீ ஐ ரீ வீ (CITV) தொலைக்காட்சியில் வாசித்து முடிக்கும் பொழுது "பிடிச்சிருக்கு, ஆஹா பிடிச்சிருக்கு" என்ற பாடலைத் தெரிவுசெய்து போட்டு அசத்திவிட்டார்கள். அது தான் எனக்குக் கிடைத்த பாராட்டுப் பத்திரம்.

அவ்வேளை என்.ஆர்.பீ. எனும் பிரியா வந்து புதிய பிரியாவை அறிமுகம் பெற்றுக்கொணடார். அத்தோடு இவர் மிக அழகாகச் சங்கீதப் புலமையுடன் பாடிய வராதலால் 'சின்னஞ்சிறு கிளியே' பாடி எமை மகிழ்வித்தார். கோவிந்தும் பிரியாக்குட்டியும் அவளது சிநேகிதியும் போய்விட பிரியாவும், பிரியாவின் கணவர் ரமேஷும் எம்முடன் அளவளாவிப் போனார்கள். பிரியாவின்

குழந்தைகள் ரம்யாவும் ஹரியும் வந்து பேசியும் பாடியும் மகிழ்வித்தார்கள். இவர்களைப் படம்பிடிப்பதில் எனக்கு நிறைவு. ஹரி, "ஐ ஆம் ஹரி! சன் ஒவ் பிரியா அன்ட் ரமேஷ்" (I am Hari, Son of Priya and Ramesh) என்று சொல்வதை நான் ரசித்துச் சிரிப்பேன். பிரியாவின் தம்பி பாலாஜி ஒருநாள் அம்மாவை திருக்காளகஸ்தி கோவிலுக்குப் பத்திரமாக அழைத்துப் போய் வந்திருந்தார்.

ராகவன் தான் வந்து என்னுடன் செலவு செய்யும் நேரம் போதாது என்ற சிந்தையில் இன்னும் இருபெண்களை அறிமுகம் செய்துவைத்தார. உண்மையில் எனக்கோ அம்மாவுக்கோ ஆறுதல் தரும் விதமாக 'நானிருக்கிறேன் உங்களுக்கு உதவியாக' எனத் தம்பி என்று தன்னிடத்தை வரித்து எம்மிடம் அன்பு காட்டினார். இவர் ஏதோ தொலைத்தொடர்பு நிறுவனத்தில் தொழில்புரிபவர்.

வாரங்கள் வரும்! வார இறுதியும் வரும்! அதுபோல் நண்பர் சிவாவும் ஒவ்வோர் ஞாயிறன்றும் பாண்டிச் சேரியிலிருந்து மூன்று மணிநேரம் பேரூந்து பிடித்து சென்னை வந்து விடுவார். வந்தும் என்ன பேசுவதற்கு கூட நேரம் இல்லாமல் ஓடித்திரிவார். தெரியாதா? சென்னை போன நாம், கிடைத்த சந்தர்ப்பத்தில் வண்ணச் சேலைகள், பாவாடைத்துணிகள் என கொள்வனவு செய்ய வேண்டாமா? அதுவும் நாணயத்துடன் அனுபவம் மிக்கவருடன் தானே கடைக்குப் போக வேண்டும். அடித்துப் பிடித்து கடைக்குப் போவதும், வருவதும், அவசரமாக அம்மா ஆக்குவதை வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடுவதுமாக சிவாவினது பாடு.

நாம் நினைப்பது நடப்பது முயற்கொம்பாகவே உள்ள வாழ்வில் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பாலமாகப் பாவித்து வாழ்வின் தடங்களை அமைப்பதைத் தவிர வழியேதுயில்லை. ஏதேதோவெல்லாம் கற்பனைகளுடன் இந்தியா வந்த நாம் "பறப்பதைப் பார்த்து கொட்டாவி விடாமல் இருப்பதை வைத்துப் பிழைப்பதே மேல்" என்பதற்கிணங்க ஏதோ வந்தோம் இந்தியா, வாங்கினோம் பொருட்கள் என்பதற்கிணங்க அம்மாவும் ஏதோ தன் சக்தியாவற்றையும் திரட்டி சேலைகள், காப்புகள் என எமது குடும்ப அங்கத்தவர்க்கு மட்டுமே வாங்கி வைத்தோம்.

மேலும் எனது நண்பர்கள் பல திக்கிலிருந்தும் என்னைப்பார்க்க வந்திருந்தார்கள். தெலுங்குமொழி நண்பர் சந்த்ரா என்பவர் பலவகைப் பழங்களுடன் வந்தார் எனைச் சந்திக்க. தமிழில் பேசி எமது தமிழையும் வியந்து போனார். சேலத்திலிருந்து ராஜகணபதி எனும் நண்பர். எம்முடன் பேசும் பேசும்போது இவரது தமிழ் வேறு ரகமாக இருக்கும். இவரால் சில பல கவிதைகள் எழுதப்பட்டு செவியுற்றிருக் கின்றேன். என் இளமை குறித்து வியந்துபோனார். அவருக்கும் கவிதைகள் பிடிக்கும். எனது வயதை அவர் குறைத்தே பேசினார். நானும் வாய் திறக்கவேயில்லை.

■

# பணிப்பெண்கள் பக்கத்தில்

இதற்குள் நான்கு பணிப்பெண்கள் பணிக்கமர்த்தி யாயிற்று. முதல் வேலைக்கு அமர்த்திய ஒரு சோடிப் பெண்கள் ஓர் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு பணிபுரிய வந்த பணிப்பெண்களா. முகத்தின் முன்பு மிக லாவகமாகப் பேசும் அவர்கள் கடைக்குப் போவதும் தங்களுக்கென களவாகப் பொருள்கள் வாங்குவதும் அத்தோடு அம்மாவுக்கு உதவிபுரிய வேண்டியவர்கள் அம்மாவின் உதவியை ஏற்க எண்ணுவதை என்னால் ஏற்க முடியவில்லை. 

ஈரோட்டிலிருந்து இளங்கோ மேலும் இன்னுமோர் சோடிப் பெண்களை அனுப்பி இருந்தார் உதவிக்கு. அதில் வந்த ஒரு பெண்ணின் காதலைத் தடுக்க அவளது ஒன்றுவிட்ட சகோதரன் தன் மனைவி சகிதம் அவளை அழைத்து வந்து எம்மிடம் வேலைக்கமர்த்திப் போனார். எவ்வேளையும் தன் காதலனுடன் கண்மறைந்து விடுவாளே என்ற கலக்கம் எங்களுக்கு. என்ன கொடுமை என்றால் அந்தப் பெண் ஏற்கெனவே மணமானவளும் ஒரு குழந்தையினதும் தாயும் கூட. தன் கணவனை விட்டு வாழும் இவளுக்கு இது புதுக்காதலாம்.

அவள் பற்றி எமக்குக் கவலை வரக் காரணம் எமது பாதுகாப்பு பற்றியதே. இப்படியானவளை வீட்டுக்குள் வைத்துக் கொண்டு எப்படி நாம் நிம்மதியாய்த் தூங்குவது? அருகிலுள்ள கடைக்குப் போகிறேன் என்று கூறிச்சென்று தொலைபேசியில் தன் காதலனுக்கு என் தொலைபேசி இலக்கம் கொடுத்து விட்டு வர என் கைத்தொலைபேசிக்கு வருகிறது அழைப்பு. ஒருவாறு அந்தப் பெண்ணையும் வீட்டுக்கனுப்பிவிட்டு இறுதியில் ஒரு பெண்சகிதம் எனதும் அம்மாவினதும் வாழ்வுச் சுக்கரம் சுழன்றது. காலப்போக்கில்

அனுப்பிய அந்தப்பெண் அவனுடனேயே சென்று விட்டாளாம்.

நாளும் நெருங்குகிறது. ஜுலை 15ம் திகதி நாம் இங்கிலாந்து திரும்பும் காலம் வருகிறது. மீண்டும் ஒரு நாள் திருச்சியிலிருந்து கோவிந்த் வந்து சந்தித்தும் போனார். மனதுக்கு ஆறுதலாக இருந்தது. என்னுடன் இருந்த பணிப்பெண்ணுக்கு மிக்க ஆச்சரியம். ஆணும் பெண்ணும் பழகினால் அது நட்பாகவும் இருக்கும் என்பதை எம்மைச் சந்திக்கும் வரை தன்னால் நம்ப முடியாததாக இருந்த தாகவும் இங்கு வந்த பின்பு தான் அதைக் கண்ணால் காண்பதாக பெருத்த விமர்சனத்தை முன்வைத்தாள்.

அவள் தம்பிக்கு நடந்த கொடுமையை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள். பெங்களூருக்கு வேலை தேடிப்போன 25 வயதுக்கு அண்மித்த வயதுடைய அவனது இரண்டு சிறுநீரகங்களையும் சத்திர சிகிச்சை மூலம் அகற்றி விடப்பட முச்சக்கர வண்டியில் வந்து நண்பர்களிடம் கூறிவிட்டு இறந்து போனாராம் அந்தத் தம்பியார். பத்திரிகைகள் சஞ்சிகைகளில் படித்த சம்பவங்கள் அதை அனுபவித்தவர் வாயிலாகக் கேட்கும் போது ஏற்படும் மனப்பாதிப்பு ஆழமானதே. எம் நாட்டிலும் எத்தனை உயிர்கொடுப்புகள். அப்பப்பா!

■

# காதலித்தது தப்பு

அடுத்து என் கதவைத்தட்டியவர் 'அன்பு' என எம்மால் அன்பாக அழைக்கப்படும் நண்பர். அன்பு தேனியில் வாழ்பவர். தனியாகவே ஒரு தொழில் ஒன்றை நடாத்தி வருகின்றார். விசாரித்தால் ஏதோவோர் பெட்டிக் கடையை நடத்துவதுபோல் அலட்சியமாக 'பீடி வியாபாரம் செய்கின்றேன்' எனப் பதிலளிப்பார். எவர் பாடினாலும் மிகத் தரமான ஆங்கிலச் சொற்களை அணிசேர்த்துப் பாராட்டும் இவரை நண்பர்களாகிய நாம் கேலியாக விமர்சிக்கும் போது ரசித்துச் சிரிப்பார்.

இன்று நாளை என இருந்துவிட்டு தன் தங்கையின் திருமண அழைப்பிதழுடன் வந்து என்னைச் சந்தித்தார்.

அவர் கூறிய தகவல்கள் ஆச்சரியம் தந்தது போல் நாம் தங்கியுள்ள சூழல் அவருக்கு ஆச்சரியம் அத்துடன் வேதனையையும் தந்ததை அவதானிக்க முடிந்தது. தங்கைக்குத் தேனியிலிருந்து வந்து சென்னையில் திருமணம் நடாத்துவதால் ஏகப்பட்ட அலுவல்கள் அவருக்கு. அதனாலும் வந்து சந்திக்கக் கூச்சப்பட்டும் அவர் என்னைச் சந்திப்பதையும் பின்போட்டுவிட்டார். கூச்சப் பட்டதை இளங்கோ தொலைபேசியில் சொல்லிச்சிரித்தார்.

'அன்பு' எனப்படும் நண்பர் எங்கள் அரட்டை அரங்க அறையில் கடகடவென்று தொடர்ந்த அதிர்ந்த சிரிப்பால் பலரையும் கவர்ந்தவர். நிலா என்று மிக கம்பீரமாக அழைக்கும் அவருக்குக் கூச்சமென்றால்! அவரது கூச்சம் பற்றி அன்புடன் கதைக்க எனக்குக் கூச்சமாதலால் அந்த அத்தியாயம் திறக்கப்படவே இல்லை.

தான் தன் தங்கையுடன் தங்குமிடமும், எமக்கு மிக அண்மையானது என்பது தனக்குத் தெரிந்திருக்கவில்லை

யெனவும் தனக்கு என் நிலைதெரிந்திருந்தால் மிக நல்ல இடம் எடுத்துத் தந்திருக்கலாம் எனவும் வருத்தப்பட்டார். "கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம்'' என்பது இதைத்தானோ!

அன்பு தன் தங்கைக்குத் தானே முன்னின்று திருமணம் நடாத்துகின்றார். அதில் ஆச்சரியமில்லைத்தான். ஆனால் அத்திருமணத்துக்கு அவர் பெற்றோர் வரப் போவதில்லை. அதாவது அவர்களுக்கு இத்திருமணம் குறித்துச் சம்மதமில்லை. ஆனால் அன்புவின் தங்கையோ பல வருடங்களாகவே ஒன்றாகவே படித்து ஒன்றாகவே வேலைபார்த்த ஒருவரைக்காதலித்துவிட்டார்.

அந்த மணாளன் சாதரணமாக பேச்சுத் திருமண முறையில் அணுகியிருந்தால் பெற்றோர் ஏற்றுக் கொள்ளத்தக்க தராதரம் உள்ளவர். அன்புவின் தங்கை காதலித்தது தான் தப்பு. அவளுக்கு என்று ஆசைகள் அபிலாஷைகள் இருந்தது தப்பு என்பது போன்ற கருத்து அவர் பெற்றோருக்கு. காரணம் அவர்கள் பணச்செருக்கு. அது ஒருபுறமிருக்க தங்கை என்பதற்காக இத்திருமணத்தை நடாத்துகிறேன் என்பதிலும் காதல் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக நடாத்தினேன் என்று கூறும் எனது நண்பர். இவர்கள் திருமணம் இனிது நடக்க 'நிலாமுற்றம்' சார்பாக, இவர்களுக்கு கோவிந்த் சென்று நான் புனைந்த வாழ்த்துப்பா ஒன்றை வழங்கி ஒளிப்படமும் எடுத்து வந்தார்.

இத்தனைக்குள்ளும் என்னைத் தொலைபேசியில் அழைத்து என் சுகம் விசாரித்து ஆறுதல் அளித்த எனது இணைய நண்பர்கள் வரிசையில் ஜேர்மனியிலிருந்து லிங்கம் அண்ணா, கட்டாரிலிருந்து கௌதம், சவுதியி லிருந்து பாபுராஜூ மற்றும் சிங்கப்பூரிலிருந்து 'நத்திங் பட் விண்ட் (nothing but wind)' என்ற ரவி மாறிமாறி தொலைபேசியில் அழைத்து சுகம் விசாரிப்பார்கள். எங்கள் நிலாமுற்றம் குடும்பம் எப்படியெல்லாம் பிணைப்பாக இருந் திருக்கின்றது என்பதை எண்ணும்போது பெருமைதான். இன்னுமொரு நண்பன், பேரெழில் குமரன் எனது விலாசம் அறிந்து தனது படைப்பான 'லவ் நிலாக்கள்' என்ற நூலையும் எனக்கு அனுப்பியிருந்தார்.

■

# மற்றவர்கள் மகிழ்வில் மண்

**கா**ற்று வேண்டி திறந்து விடப்பட்ட வெளிக் கதவையண்டி நாம் இரவில் அமர்ந்திருக்கும் விதமாக அமைந்திருக்கும் சிறு பல்கனி. ஏற்கனவே நான் சொன்னது போல் நான் 'கணபதி பக்தை' என்பதால் போலும், எனக் கென இளங்கோ எனக்கு அன்பாக அளித்த அழகான ஐம்பொன் நிறத்திலான பிள்ளையாரின் சிலை என் பரந்த அறையில் சற்று உயரமான மேசை மீது வைக்கப் பட்டிருந்தது. இருபக்கமும் கதவுகள். என் நண்பர்களுக்கு ஏனோ ரகுவின் போக்கே பிடிக்கவில்லை. அவரை நம்புவதற்கு அவர்கள் தயங்கினார்கள். ஒரு நாள் ராகவன் வந்து என்னுடன் கலகலப்பாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

அச்சமயம் வீடு வந்த ரகுவிடம் அம்மா கதைத்துக் கொண்டிருக்கின்றார். நானும் ரர்கவனும் சிரித்துக் கதை பேசிக்கொண்டிருப்பதை பொறுக்காத ரகு எதிர்பாராத விதமாக ராகவனை வம்புக்கிழுக்க ராகவனின் முகம் மாறுகிறது. அதைக் கவனித்த நான் அவரது சீற்றம் தலைக் கேறுவதை உணர்கின்றேன். அது கைகலப்பில் முடியுமோ என்றளவுக்கு வாய்ப்பேச்சு வளர்கிறது. நானோ அந்த நிலைமையை சமாளிக்க ராகவனை அடக்குகின்றேன். ஏனெனில் ராகவன் எம் நட்பு வட்டத்தினர். என்னைப் புரிந்தவர். எம்மைச் சார்ந்தவர்களைச் சமாதானப்படுத்துவது தானே சுலபம்.

எமக்கு அதிகம் பழக்கமில்லாத ஒருவரை எப்படி நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது? தன் சீண்டல் கூட பெரிய சச்சரவைத் தோற்றுவிக்கவில்லை என்ற ஆதங்கமோ என்னவோ மிகவும் சீற்றத்துக்குள்ளான ரகு தன்

முகவியர்வையை அப்படியே கையால் முகத்திலிருந்து வழித்து என் அறையிலுள்ள பிள்ளையார் சிலை மீது தப்பி விடுகின்றார். சில வேளை எங்கள் நண்பர் குழாத்தில் தன்னை இணைக்கவில்லை என்ற ஆதங்கமோ அல்லது ஏதோ தன் திட்டம் பலிக்கவில்லை என்ற காழ்ப்புணர்வோ, அல்லது தாழ்வு மனப்பான்மையோ காரணம் என நான் அறியேன். ரகுவின் தோழன் மாதவன் அவரை ஒருவாறு சமாளித்து அழைத்துச்செல்ல அங்கே அமைதி பரவுகின்றது. மற்றவர்களின் மகிழ்வில் மகிழும் மனம்தான் இல்லா விடினும் மகிழ்வைச் சிதைக்காத உள்ளமாவது இருப்பது மனித நேயமன்றோ!

■

# மனமாற்றம்

இன்னும் ஒருவாரத்தில் இங்கிலாந்துக்கு போகவேண்டும் நாம். ஜூலை 12 மட்டில் எமது வைத்தியத்தை நிறைவு செய்வோம் என்றிருந்த என்னை ஒரு தொலைபேசி உரையாடல் சற்று மனம் மாறவைத்து விடும் என்று சற்றுமே நான் எதிர்பார்க்கவில்லை. "இவ்வளவு தூரம் வந்த நீங்கள் இந்த அறைவாழ்விலேயே வைத்தியம் என்று செலவு செய்து விட்டீர்களே. ஏன் மேலும் சிறிது நாட்கள் தங்கியிருந்து நண்பர்களைச் சென்று பார்க்கக்கூடாது?" என்றார். அந்த உரையாடலுக்குக் காரணமானவர் யாரென்று இப்போது நான் சொல்ல மாட்டேன். எனக்கும் அந்த யோசனை சரியாகவே பட்டது. எமது பயணத் தேதியைப் பின்போடும் படி சிவாவிற்குத் தெரிவித்தேன். அவரும் சம்மதித்து விட்டார்.

இதையறிந்த இளங்கோ ஈரோட்டிலிருந்து தனது தொழில் துறையைக் கூட மீண்டும் விட்டுவிட்டு சுமார் பத்து மணி நேரம் புகைவண்டிப் பிரயாணம் செய்து என்னையும் அம்மாவையும் தன்னூருக்கு அழைத்துச் செல்வதற்கு சென்னை வந்து விட்டார். நேர்மையாகச் சொல்லப் போனால் இளங்கோ வீட்டுக்குப் போவதில் எனக்கதிக நாட்டமிருக்கவில்லை. காரணம் ஏன் தெரியுமா. என்னைவிட சில வருடங்களில் மட்டுமே இளையவரான இளங்கோவும் மணமாகாதவர். அப்படியான ஒருவர் வீட்டில் நான் தங்குவது சரிதானா என எனக்குள் தயக்கம். அம்மாவும் தானே என்னுடன் இருக்கிறார் என என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஏதோவோர் கலந்துரையாடலில் கோவிந்த் இளங்கோ தன் தாய் சகோதரிகளுடன் வாழ்வதாகவும் தானும் அங்கு

போயிருந்தாகவும் கூறியிருந்தார். இதை மனதில் கொண்டு ஈரோட்டுக்கும் போகலாம் எனத்திட்டம் போட்டோம். ஆயினும் அதை ரகு, மாதவன் இவர்களிடமிருந்து எம் பயணத்தை மறைக்க விரும்பினோம். காரணம் ரகு அதை இதைச் சாட்டாகக் கூறி எமைத்தொடரலாம். முள்மீது போட்ட சேலையாக எம் நிலை. திருச்சிக்குப் போவதாகச் சொல்லி ஈரோடு போய்விட இரகசிய ஒழுங்குகள் செய்தோம்.

வைத்தியம் தொடங்கிய ஓரிரு நாட்களிலேயே ரகு அடிக்கடி என்னிடம் வந்து "கையைக் கொஞ்சம் உசத்துங்க, கொஞ்சம் கொஞ்சமா உசத்திடலாம். அதற்குத்தான் டாக்டர் மருந்து தாராரு" என்றெல்லாம் மிகப்பெரிய எதிர்பார்ப்பு அவர் வார்த்தையில் தெரிந்தது. ஆனால் 48 நாள் வைத்தியத்தின் பின் கிடைத்த இந்த மாற்றம்தான் எனக்குக் கிடைத்த பயன் எனலாம். என்னைப் பொறுத் தளவில் இந்த வைத்தியமானது முழுதான சுகத்தைத் தராவிடினும் நோயால் அவதியுற்று இறுகிப்போயிருந்த என் உடலை இளக வைத்திருக்கின்றது. சாதாரணமாகப் படுக்கையில் நானாகத் திரும்பிப் படுக்க முடியாமல்த்தான் சென்னை வந்திருந்தேன். இங்கு வைத்தியரின் ஆலோசனைப் படி இத்தனை எண்ணெய் உருவுதல்கள், எண்ணியே பார்க்க முடியாத அளவு தட்பம் நிறைந்த வெந்நீர்க் குளியல்கள் அத்தோடு பத்தியத்துடனான மிகக்கைப்பு நிறைந்த கஷாய உருண்டைகள், லேகியங்கள், தங்க பஷ்பம் போன்றவற்றின் உட்கொள்ளல்கள் எல்லாம் தந்த பயன்கள் என்னவென்றால் என்னால் இப்போது நானாகவே திரும்பிப்படுக்க முடிகின்றது. வைத்தியம் நிறைவுறும் நாள் வழமைபோல் டாக்டர் என்னை வந்து பார்த்தார். எம்முடன் ஒளிப்படம் எடுக்கும்படி கேட்டோம். ஏனோ மறுத்து விட்டார்.

■

# யார் இவர்கள்?

இன்றும் மாறி மாறி விருந்தாளிகள். ஏனென்றால் நாளை நான் எனது சிறையிலிருந்து, "ஆமாம்" ஏறக்குறைய எனக்கும் அம்மாவுக்கும் அமைந்த சிறையிலிருந்து மீளப் போகிறேன். ஏதோவோர் பேச்சுவாக்கில் "என் நண்பர்கள் யாவரையும் அவரவர் வசிப்பிடச்சூழலில் சந்திக்க விரும்புகிறேன்" என்று நான் கூறினது தான் நான் செய்த தப்பு என்பதா அல்லது விதி என்பதா அல்லது பாக்கியம் என்பது எனக்குத் கூறத்தெரியவில்லை.



பொறுங்கள். மேலுமிருவர் எங்கள் கதவைத்தட்டு கின்றனர். கதவைத் திறக்கிறார்கள் நண்பர் ராம்தாஸும் அவர் நண்பர் சங்கரும். நண்பர் ராம்தாஸும் அவரது நண்பரும் என்னை வரவேற்க சென்னை விமான நிலையம் வந்திருந்தும் மற்றைய எனது நண்பர்களின் தொடர் பில்லாததாலும் என்னைக் காணும் சந்தர்ப்பம் கிட்டாமையாலும் மிகுந்த கவலையுடன் தனதூருக்குத் திரும்பிவிட்டவர். இவரோ பாடகி வசந்தராதாஸின் விசிறி . இவர் புனைபெயரோ யாஹூ இணையத் தளத்தில் Das - Vasanthara என்றால் பாருங்களேன். இந்த நண்பரோ நாத்திகன். நாத்திகனையும் ஆஸ்திகனையும் இணைக்க வல்லது நட்பு. வியப்பில்லைத் தான். இருப்பதைப்பரிமாறி மனம் மகிழ்கிறோம். பூச்செண்டு கொணர்ந்தார். ஒளிப்படம் பிடிக்கிறோம். அது ஒருபுறமிருக்க வந்த நண்பர் ராம்தாஸின் சகநண்பர் சங்கரை இளங்கோ தன் வழமையான நகைச்சுவைப் பேச்சால் கவர்ந்து விட்டார்.

இதற்குள்ளாக எங்களை ரகுவும் மாதவனும் பயணம் அனுப்ப வந்தார்கள். 'வழுவழுத்த உறவை விட வன்மையான பகையே மேல்' என்று கூறுவார்கள்.

அதுபோல் இவர்கள் நட்பு நம்புவதற்கரியதாகத் தெரிய வில்லை. என்றாலும் தெரிந்தோ தெரியாமலோ அவர்களை எனக்கு வைத்தியரை ஒழுங்கு செய்விக்க பணித்த நாம் நன்றியில்லாமல் உதாசீனம் செய்யவும் முடியவில்லை. 'பாம்பு என்று விரட்டவும் முடியாமல் பழுது என்று உள்ளே போடவும் முடியவில்லை' என்று நாம் கிராம வழக்கில் கூறுவோமே. இதுவும் அதைப் போலத்தான்.

ஒருவாறு வந்தவர்கள் யாவரும் கிளம்பி விட இருக்கும் பொருட்கள் பலவற்றையும் இயன்றவரை எனது வழிகாட்டலுக்கு இணங்க எனது பணிப்பெண் அடுக்கி வைத்தாள். காலையானதும் பாண்டிச்சேரியிலிருந்து நண்பர் சிவா, மற்றும் நண்பர் அன்பு, இளங்கோ என எல்லோரும் ஆளை ஆள் மாறி மாறிக் கேலிப்பேச்சுக்களால் காலை வாருவதாகப் பொழுது கழிகிறது. தூசியுடன் கையேற்ற வீட்டை மிகத்துப்பரவாகக் கையளிக்க ஆவன செய்யப்படுகிறது. ஆரம்பத்தில் கொடுத்த முற்பணமும் அதற்கு, இதற்கு எனக் கழித்து விட்டார்கள், வீட்டுரிமை யாளர்கள்.



லண்டனிலும் இது போன்ற பித்தலாட்டங்கள் தாராளமாகவே நடக்கத்தான் செய்கின்றன. இப்படி முற்பணம் கொடுத்து ஏமாற்றப்படுவதும், 'சீட்டு நடத்துகிறோம்' என ஆசைகாட்டிப் பணத்தைச் சேகரித்து வீடுகள் வாங்குவதும், இடையில் சீட்டுக்கள் முறிவடை வதும், கேட்டால் "என்னிடம் சீட்டுக்கட்டியதை பொலிஸில் அறிவித்தாலும் ஒண்டும் செய்யேலாது". என்று வீறாப்புப் பேசுவதும், வீட்டை அண்ணாவின் பெயரில் சட்டப்பிரச்சனை காரணமாக வாங்குவதும், தம்பியை அண்ணா ஏமாற்றுவதும் உறவுகளை மதிக்காத, பணத்தையே குறியென வாழும் குறுகிய சிந்தை படைத்தவர்களின் செய்கைகளாகிவிட்டன.

இளங்கோவுக்கோ பணம் கொடுத்து ஒழுங்கு செய்யும் மகிழூர்திகளின் தரம் குறித்து திருப்தியிருக்கவில்லை. காரணம் ஏற்கனவே செய்த வைத்தியம் காரணமாக எனது உடல் மிக மிக நோவு கண்டதும் கூடிய தூரம் பயணம் செய்யும் பலம் என்னுடலுக்கு இல்லை என்பதும் இளங்கோவுக்குத் தெரியும். எனக்கோ மனதுள் ஜூலை பதின்மூன்றாம் திகதி குறித்த சிந்தனை ஒன்று. அன்று

என் அப்பாவின் பிறந்ததினம். நினைத்தாலும் நாமாக அப்பாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாத சூழல். வெளிநாட்டுக்கு தொடர்பு கொள்ளும் வசதி எமது கைத்தொலைபேசிக்கு இருக்கவில்லை. அத்தோடு பதின்மூன்றாம் திகதி எனக்கு நல்ல நாளாக அமைவதில்லை என்பது போன்ற மன உணர்வு எனக்குள். குழப்பம் எனும் குரங்கு, மனம் எனும் மரத்தில் அங்குமிங்குமாய் அலைந்தபடி.

■

# நண்பனின் திட்டு

இது இப்படியிருக்க நண்பர்கள் சூழ அமர்ந் திருக்கும் போது நடந்த சாதாரணமான உரையாடலில் இளங்கோ வாகனம் ஓட்டப்போவதை அறிந்த நான், இளங்கோவின் திட்டுதலைப் பெற்றுக்கொள்ள எனது வாக்கு காரணமாகிவிட்டது. இளங்கோ தானே என்ற நினைப்பில் "நாங்கள் போய்ச் சேர்ந்தாலே பெரிய விடயம்" என எனது கிண்டல் பேச்சு அவருக்குப் பிடிக்க வில்லை.



"நிலா நீங்கள் இப்படிச் சொல்லாதீங்க. கவிதை சொன்ன வாயால இப்படிச் சொல்லாதீங்க" என எரிந்து விழுந்தார். வழமையில் நகைச்சுவையுடன் பேசும் இளங்கோ மிகப் பொறுப்பானவராகக் காணப்பட்டார். அது சிலருக்கு மூட நம்பிக்கையாகத் தோன்றக்கூடும். ஆனால் எனக்கோ என் நண்பரின் அக்கறை தெரிந்தது. நாம் நல்லதையே பேச வேண்டும். நல்லதையே பார்க்க வேண்டும். நல்லதையே கேட்க வேண்டும் என்பார்கள். இதுவும் அதுபோல் தானோ?

இளங்கோ தனது அக்காவினது கணவரின் மகிழூர்தியை இரவல் வாங்கி வந்தார். அன்றும் சிவா, இளங்கோ, இளங்கோவின் நண்பர் பாலா, பாலாவின் நண்பர் மூர்த்தி யாவரதும் ஒருமித்த உழைப்பால் சக்கர நாற்காலியுடன் நான் இரண்டாம் மாடியிலிருந்து நிலமட்டத்துக்கு தூக்கி வரப் பட்டேன். நண்பர் அன்புவுக்கு உண்மையில் மகிழ்வு கலந்த பெரிய ஆச்சரியம் எம் நட்பு வட்டத்தைப் பார்த்து.

பிரியா வீட்டுக்குப் போக விரைந்தது வாகனம். பிரியா வீட்டிலும் ஓரிரு நாட்கள் தங்கப்பிரியப்பட்டாலும் அங்கும் ஒரு மாடி ஏறியே அவர் வீறிட்டுக்கும் போகலாம் என்பதோடு அவர்கள் வீட்டில் என் அத்தனை தேவைகளையும் தீர்க்கும் வசதியில்லை என்பதால் ஈரோடு போக முடிவு செய்தேன். புறப்பட்டாயிற்று. போகும் வழியில் பிரியா வீட்டு வாசலிலாவது போய் அவருக்கு நன்றி தெரிவிக்கப் பிரியப்பட்டோம். முன்னே ஒரு மகிழூர்தியில் அன்பு தன் சாரதியுடன் செல்ல எமது மகிழூர்தியில் நானும் எனது அம்மாவும் நண்பர்கள் சிவாவும் இளங்கோவும் மகிழூர்தியில் இளங்கோவின் அக்கா வீடு நோக்கி பயணிக்கிறோம். காரணம் சென்னையிலுள்ள அக்காவினது கணவரின் மகிழூர்தியில் மிக அக்கறையுடன் இளங்கோ இரவில் ஈரோடு கூட்டிச்சென்றார். இடையில் சிவா பாண்டிச்சேரி போகும் பேருந்து நிலையத்தில் இறங்கிக்கொள்ள இளங்கோவின் மைத்துனரையும் ஏற்றிக்கொண்டு மகிழூர்தி அன்பு செல்லும் பாதையிலிருந்து பிரிந்து ஈரோடு போகின்றது.

கடந்த 48 நாட்களாக எண்ணெய்க் குளியலும் சூடான ஒத்தடமும் நோவு உருவுதலுமாக நாலு சுவருக்குள் கழிந்த என் சிறைவாழ்க்கையைப் பற்றி மனம் இரணமாக வலித்தாலும் நண்பர் வீடு நோக்கிப் போகின்றோமே என்ற குதூகலத்தில் என்னுள்ளம் துள்ளுகின்றது. 10 மாதம் சுமந்தது போதாதென்று மேன்மேலும் என்னை சற்றேனும் சலிக்காது எனது கால்களையும் கைகளையும் தொட்டுத் தடவி "என்ர பிள்ளை இண்டைக்குத்தான் வீட்டை விட்டு வெளிக்கிடுது இந்தியாவுக்கு வந்ததுக்கு" என்று கூறிக் கொண்டு வருகிறார் என் அம்மா.

எந்த ஒரு துன்பத்தையும் கலகலப்பாக மாற்ற வல்ல இளங்கோவின் பேச்சு மிக ஆறுதலாக இருக்கின்றது. ஏதோ ஓர் இடத்தில் இளங்கோவின் மைத்துனர் சொந்த அலுவலின் நிமித்தம் மகிழூர்தியில் இருந்து இறங்கிச் சென்ற அவகாசத்தில் அம்மா ஓர் உரையாடலில் இளங்கோவின் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று கேட்க "அம்மா நானும் அம்மாவும் என் அக்கா ·பசங்களும் இருக்கோம். என்னண்ணு கேட்டா எனக்கு

ரெண்டு அம்மா இருக்காங்க". என்றார். எனது அம்மா அதை நம்பவில்லை அதையும் அவரது நகைச் சுவையாகவே எடுத்துக் கொள்கிறார் அவர் அதை மீண்டும் வலியுறுத்தி "ஓர் அம்மா ஹைதரபாத்தில் இருக்காங்க அவங்க டாக்டர் மற்ற அம்மா எங்கூட இருக்காங்க".

■

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



நண்பர் மைக்கேலுடன் விஷ்வா, நிலா



ரவிசங்கர்



பவளம் தன் மகளுடன் நிலா



ஈச்சனாரிப் பிள்ளையார்



ஹோர்லிக்ஸ் (அன்ரன்) தம்பதி



ரகு தம்பதியுடன் நிலா

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



பிரியா, நிலாப்பெண், நிலா



குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்



நிலாவின் சின்னமாமி



பானு, பிள்ளைகள்,
தம்பி, நிலா



நிலா, இந்து



இளங்கோ தம்பதி

# புது அனுபவம்

நான் திடுக்கிட்டுப்போகிறேன். ஓர் குடும்பத்தில் இரண்டு தாரங்கள் இருப்பதை கேள்விப் பட்டிருக்கின்றேன் ஆனால் அந்தத்தாய்மாரை "அம்மா" என்று அத்தனை அன்புடன் விழிப்பதோடு அல்லாமல் எவ்வித கசப்புணர்வுமில்லாமல் "எனக்கு ரெண்டு அம்மா இருக்கிறாங்க".

என்று கூறும் இளங்கோவின் அந்தத் தொனியைப் பார்த்து வியந்து போகின்றேன். அந்தக் குடும்பத்தினரைப் பார்க்க வேறு சம்மதித்து பயணித்துக் கொண்டிருக்கும் எனக்கு எதுவுமே பேச முடியவில்லை.

இது ஒருபுறமிருக்க கும்மிருட்டின் மத்தியில் எதுவித சாலை விதிகளுக்கும் உட்படாமல் நம்மைக் கடந்து செல்லும் வாகனங்கள் எமக்கு எதிரே வந்து இடது பக்கமாகக் கூடச்செல்கின்றது. வாகனம் ஓட்டும் விடயத்தில் இளங்கோ மகா கெட்டிக்காரன். வாகனம் ஓட்டுவது, என்பது ஒருவிதத்தில் துணிகரமான செயல். அதுவும் இந்தியாவில் வாகனம் ஓட்டுவதென்பது மிக மிகச் சவாலானது. சாலை விதிகளைப் பின்பற்றுகிறார்களா, அப்படிப் பின்பற்றுபவர்களும் எப்படித் தான் வாகனம் செலுத்துவது. அந்தளவுக்கு மோசமாக அமைந்துள்ள போக்குவரத்து. இங்கிலாந்தில் வாகனம் ஓட்டும் போது அறிவுறுத்தல் ஒலி (horn) அடிப்பதே அசாதாரணம். இந்தியாவில் எரிபொருளிருக்கிறதோ இல்லையோ அறிவுறுத்தல் ஒலி (horn) இல்லாமல் வாகனம் ஓடாது என்றவிதமாக சாலையொழுங்கு மீறிய வாகனச் செலுத்தல்களும் அத்துமீறல்களும்!

■

# இளங்கோவின் வீட்டில்

**எ**ட்டு மணிநேரம் மட்டில் பயணித்து இரவு ஒன்றரை மணியளவில் ஈரோடு சென்றுவிடுகின்றது எமது வாகனம். இளங்கோவின் அக்கா கணவர் மேலே உள்ள தங்கள் அறைக்குச் சென்றுவிட அம்மாவும் எனது பணிப் பெண்ணும் என்னை ஒருவாறு சக்கர நாற்காலிக்கு இடம் மாற்றுகின்றனர். ஏற்கனவே இளங்கோவின் அறிவித்தலுக் கிணங்க அந்த இரவிலும் எமக்காகக் காத்திருக்கும் இளங் கோவிற்கு வேண்டியவரான வினோத், இளங்கோவுடன் சேர்ந்து நான்கு படிகள் உயரம் கொண்ட இளங்கோவின் வீட்டுக்குள் தூக்கிச் செல்கின்றனர்.



அந்த ஈரோடு சாலையின் ஓர் சந்தியில் அமைந்துள்ள அந்த மூன்று மாடிகள் கொண்ட அழகான வீட்டில்



இளங்கோவின் வீட்டில்

நடுக்கூடாரத்தில் விரிக்கப்பட்டிருக்கும் மெத்தையில் யாரோ பிள்ளைகள் தூங்குவதை அந்த மெல்லிய வெளிச்சத்திலும் காண முடிகின்றது. அங்கு கால் குந்தியிருந்து அந்தத் தூங்கும் குழந்தைகளின் தலையை அன்பாகக் கோதிவிடும் மாமன் இளங்கோவின் அன்பு வித்தியாசமானது.

■

# சீதாம்மா

அதைத்தொடர்ந்து மேலே அவர் தன் அறைக்குப் போய்விட நாமும் பயணம் வந்த களைப்புத் தீர எம்மை ஆசுவாசப்படுத்தி இருக்கும் வேளையில் இளங்கோவின் அம்மா, என் அன்பை சுவீகாரம் எடுத்துவிட்ட சீதாம்மா "நிலாவுக்கு என்ன பிடிக்கும்?" என்கிறார். அவர்களிற்குச் சிரமம் வேண்டாம் என்பதற்காக எதையாவது அவர்கள் வசதிக்கு ஏற்ற விதமாக ஆக்கட்டுமே என்ற நோக்கத்தில் "தோசை பிடிக்கும், இட்லி பிடிக்கும், பொங்கல் பிடிக்கும்" என்று நான் கூறிவிட்டு சீதாம்மா தந்த அந்த அருமையான காபியையும் (இலங்கை வழக்கில் கோப்பி) அருந்திவிட்டு எமக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட அவர்களது பெரிய அறையில் தஞ்சம் புகுகின்றேன்.



அடுத்தநாள் காலையில் பார்த்தால் பத்து மணியளவில் இளங்கோ என்னைத்தானே என் சக்கர நாற்காலியைத் தள்ளி அந்தப் பெரிய மேசை கொண்ட சாப்பாட்ட றைக்குள் கொண்டு சென்றார்.. அங்கு பார்த்தால் நான் சொன்ன அத்தனை சாப்பாடுகளும் சீதாம்மாவினால் சமைக்கப்பெற்று மூடி வைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல சுடச்சுட தோசை உடனே தயாரித்து வழங்கு வதற்குத் தயாராக இருக்கும் சீதாம்மா. கலகலவென்று பேசும் இளங்கோவின் அம்மாவின் பேச்சு கரிசனை என்றுமே மறக்க முடியாது. 'நிலா காபி சாப்பிட்டுச்சா?' என்று கேட்கும் அவர் குரலை நான் ஆழ்ந்து கிரகித்தால் அப்பழுக்கு இல்லாமல் அப்படியே என் அன்பைச் சுவீகாரம் எடுத்துவிட்ட அவர் முகத்தை நினைவுக்குக் கொண்டுவர முடியும்.

இவர்களுடன் வாழ்ந்த சீக்காளியான இளங்கோவின் பெரிய தந்தை மகளான மரகதம் ஓர் அற்புதமான பிறவி. எத்தனைதான் தனக்குள் நோயுள்ள போதும் அதை வெளியே காண்பிப்பதன் மூலம் மற்றவர்களை வருத்தக் கூடாது என்பதற்காக 'சிவனே' என்று வாழும் இவர் எப்போதும் புன்னகையுடன் காணப்படுவார். என் மீதெல்லாம் அதீத அன்பைச் சொரியும் இவர் மூன்று நான்கு வருடங்களிற்கு முன்பாக இளங்கோவுடன் அவர்கள் குடும்ப நலனுக்காக சுறுசுறுப்பாக இயங்கி ஆதாயம் தேடிக்கொடுத்தவர். திடீரென இவருக்கு ஏற்பட்ட நோய் இவரை வீட்டில் முடக்கி வைத்திருந்தாலும் தான் சாவதற்கு முன்பாக தன் தம்பி இளங்கோவின் திருமணத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புள்ளவர். மற்றவர்கள் மகிழ்வைப் பாதிக்க விரும்பாத இவருள்ளம் சிறப்பே.

இணையம் என்னும் வானில் மலிந்து கிடக்கும் இணையத்தளங்கள். பலருக்கும் தங்கள் மனவுணர்வுகளை வெளிப்படுத்த இவை பல விதத்தில் உதவுகின்றன. கட்டுரைகள், கவிதைகள், நிழற்படங்கள், ஓவியங்கள், வியாபாரங்கள் என அதன் வளர்ச்சி மிக்க அபாரம்! ஆனாலும் ஓர் விடயத்தை புத்தகத்திலோ பத்திரிகையிலோ படிக்கும் போதும் பார்க்கும் போதும் உள்ள சுவையுணர்வு கணனியில் இருப்பதில்லை. முன்பெல்லாம் ஆனந்தவிகடன், குமுதம், கல்கி என வரும் கதைகள் தந்த சுவையே தனி!

எங்கள் அப்பா, சித்தப்பா, மாமி, அம்மா, என் சிறியதாயார் எல்லோரும் வாசிப்பதில் பிரியர்கள். அப்பா தொடர் கதைகளைத் தொடராகச் சேகரித்துச் தொகுத்து நூலாகக் கோர்த்துக் கூடவைத்து இருந்தார். அந்தப் புத்தகத்துள் ஒன்று தான் இன்றும் என்மனதில் நிற்கும் "மிதிலா விலாஸ்" அதில் பார்க்கும், ரசிக்கும் பாத்திரங்கள், வீட்டமைப்புகள், சாப்பாட்டு பழக்க முறைகள் இவற்றை நேரில் காணும் போது நாமடையும் மகிழ்வு அனுபவித்தே அறியக் கூடியது. இளங்கோ வீட்டமைப்பு அந்தப் புத்தகத்தில் வாசித்த சூழலை எனக்குள் காட்டியது. அதில் வந்த பாத்திரங்களின் குணாதிசயங்கள் நினைவிலில்லை. ஆனால் அதில் வர்ணித்த சூழல் என் கண்முன்னே விரிவது போன்ற பிரமை.

மேல்மாடியில் வசிக்கும் இளங்கோவின் மூத்த சகோதரி மீனா ஓர் வைத்தியர், அவர் மகன் ஷியாம். அப்போது அவனுக்கு 14 அல்லது 15 வயதிருக்கலாம். தனது கராத்தே

பற்றியும் அதன் குரு அதில் வல்லவர்கள் பற்றியும் எனக்குத் தந்த விளக்கங்களை சற்றும் சலிக்காமல் கவனித்தேன். புரிந்ததை விட புரியாதது தான் அதிகமான போதும் அந்தப் பையனின் மனம் கோணாதிருக்கக் கவனித்தேன் என்பது தான் உண்மை. இளங்கோவிற்கு மேலும் இந்து சசியென இரு அக்காமார்கள். இளங்கோவின் தொழில் துறையில் உதவியாக இந்து செயற்படுகின்றார். இந்துவின் மகள் ஆர்த்தி. இளங்கோவின் மற்றைய சகோதரி சசி ஆசிரியை, அவருக்கு திவ்யா, சுபஸ்ரீ என்று இரு பெண்பிள்ளைகள் வாரக் கடைசி என்பதால் திவ்யாவும், ஆர்த்தியும் இங்கு தங்கி யுள்ளனர். மூன்று பிள்ளைகளின் தாயான, தங்கை சுஜியின் குடும்பம் ஹைதராபாத்தில் உள்ளனர். அவர்களுடன் மற்றைய தாயான முன்னைய வைத்தியர் வாழ்கின்றார்.

கொண்டு சென்ற ஒளிப்படக்கருவியில் எல்லோரையும் படம் பிடித்தேன். இளங்கோவின் ஒன்றுவிட்ட அண்ணா சம்பத் என்று அவர் பெயர். மிகமிக நகைச்சுவையுடன் இளங்கோவின் மருமக்களை வம்புக்கிழுத்துப் பேசிய படியே இருப்பார். அந்தக் குழந்தைகள் பழகும் விதமே மிக அழகு. பதின்மூன்று வயதை அண்மித்த ஆர்த்தி இரண்டு சினிமாப் பாடல்களுக்கு நடனங்கள் ஆட நான் ஒளிப்பதிவு செய்தேன். ஷியாமும் மிக உற்சாகமாக தான் கராத்தேயில் கற்றதை செய்து காட்டி மகிழ்விக்க படம் பிடித்தேன்.

■



இளங்கோவின் அக்கா இந்துவுடன்

# விபத்தில் நாம்

கூவிக்கொண்டு விரைகிறது அந்த அம்புலன்ஸ் வண்டிகள். நானும் அம்மாவும் ஓர் வண்டிக்குள் கிடத்தப் பட்டிருக்கின்றோம். மேடு பள்ளம் எவற்றையுமே அசட்டை செய்யாது பறந்து கொண்டிருக்கின்றது எங்கள் அம்புலன்ஸ் வண்டி. எனக்கும் அம்மாவுக்கும் ஒரே கிலி. காரணம் அந்த வண்டி திடீரென நிறுத்தப்பட்டால் எமது தலை வண்டியின் ஓர் பகுதியை போய் இடிக்குமே என்றளவிற்கு அந்த வண்டி விரைகிறது. எம்முடல் நிலை பற்றிச் சிந்திக்க அவகாசமில்லாமல் அந்த இருபது நிமிடங்கள் கழிகின்றன.

■

# ஜீ.கே மருத்துவமனை

சுற்றி வர வெள்ளை உடுப்புடன் தாதிமாரும் பணியாட்களுமென ஒரே மக்கள் கூட்டம். அது மட்டுமல்ல இளங்கோவின் குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருமே அங்கே எமக்காகக் காத்திருக்கின்றார்கள். இளங்கோவின் பெரிய அக்கா மீனா, சசி, இந்து இவர்களின் பிள்ளைகள் என எல்லோருமே நிற்கின்றனர். அவர்கள் முகங்களில் ஒரே துக்கத்தின் சாயல். பின்னே! என்ன? ஒரு மணி நேரம் முன்பாக வெள்ளை நிற சுடிதாரும் கலகல பேச்சுமாகச் சென்ற அவர்களது விருந்தினர் நிலா அதுவும், ஏற்கனவே இரண்டு கை காலும் இயங்க முடியாமல் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டும் நிலா எந்த நிலையில் வருவாரோ, நிலாவின் அம்மாவின் பாடு என்னவோ என்ற துக்கம் கலந்த கேள்விகள் அவர்களது வதனங்களில். இளங்கோவின் அக்கா மீனா டாக்டர் ஆதலால் அங்கே அவர்களிற்கு நிறையவே செல்வாக்கு இருக்கின்றது. எதுவித மறுகேள்விகளும் இல்லாமல், நானும் அம்மாவும், அடுத்த அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு வரப்பட்ட பணிப்பெண்ணும் அனுமதிக்கப் படுகின்றோம்.



இப்படியா எங்கள் சுற்றுலா அமைய வேண்டும்? இளங்கோவின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கி விட்டு தம்பி ராம்குமாரைச் சந்திக்க வேண்டும் அவர் வாழும் சூழலைப் பார்க்க வேண்டும் என்ற ஏகப்பட்ட கனவுகளுடன் அம்மா பணிப்பெண் சகிதம், இளங்கோவின் தனித்த கவனத்தின் பெயரில் ஒழுங்கு செய்யப்பட்ட குவாலிஸ் ஜீப் வண்டியில், பலத்த அறிவுறுத்தல் படி அமர்த்தப்பட்ட சாரதி சகிதம் ஈரோட்டிலிருந்த புறப்பட்ட எங்களை நோக்கி சன சந்தடியே இல்லாத ஓர்

நேர்பாதையில் வந்த மஞ்சள் லொறி கணக்காக எங்கள் ஜீப் வண்டியை நோக்கி வரவும் எம் சாரதி அலறிக் கொண்டே எமது வண்டியை சாலையின் கரையிலுள்ள வயல் வெளிக்குள் திருப்பி தப்பிக்க முயற்சிக்கிறார்.

என்றாலும் அந்த லொறி எங்கள் ஜீப்பை சரித்து விழுத்தும் அளவுக்கு மோதியதால் அந்தப்பக்கம் உட்கார்ந்திருந்த எமது பணிப்பெண் வலது கால் எலும்பு முறியும் அளவுக்கு பலத்த காயத்திற்கு உள்ளாகின்றார். காரணம், அவரது கால் சாரதி இருக்கைக்குள் அகப்பட்டு விட்டது. எனக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. நினைவு வருவதும் போவதமாக இருக்கின்றது. அம்மாவும் பணிப்பெண்ணும் யாராவது காப்பாத்துங்கோ என்று கத்துவது கேட்கின்றது.

நானோ எனது இஷ்ட தெய்வமான பிள்ளையாரையே நினைத்துக் கொள்கின்றேன். சுற்ற வர அந்தக் கிராமத்து மக்கள் தமிழில் பேசிக் கொள்கிறார்கள். நாங்கள் அடிபட்ட இடத்திலிருந்து இரண்டாவது வீடாக ஓர் சிறிய மருத்துவமனை இருந்ததால் எங்கள் மூவரையும் அங்கே கைத்தாங்கலாகத் தூக்கிக் கொண்டு போய் கிடத்துகிறார்கள். நானோர் சிறிய உயரம் குறைந்த மேசை மீதும், எனது பணிப்பெண் அதை விட உயரம் கூடிய மேசை மீதும் கிடத்தப்படுகின்றார்.

அந்தப் பணிப்பெண்ணை நினைக்கும் போது கவலையாக இருக்கின்றது நான்கு பிள்ளைகளின் தாயான அவர் இரத்தப் போக்கினால் அவஸ்தைப் பட்டுக் கத்து கின்றார். அடுத்த அறையில் உள்ள அம்மாவோ பலரையும் அழைத்து எனது நிலையையும், பணிப் பெண்ணின் நிலையையும் பற்றிக் கேட்பது எனக்குக் கேட்கின்றது. அம்மாவால் எழுந்து வர முடியாத நிலை என்பது எனக்குத் புரிகின்றது. எங்களிடம் எங்களின், எமக்குத் தெரிந்தவர் களின் தொலைபேசி எண்களை விசாரிக்கிறார்கள்.

அந்தக் கலக்கத்திலும் எனக்கு ஞாபகத்தில் இருந்தது தம்பி ராம்குமாரின் தொலைபேசி இலக்கம் மட்டும் தான். நான் விபத்துக்குள்ளாவதற்கு இரண்டு நிமிடத்திற்கு முன்பும் நான் வந்து கொண்டிருக்கின்றேன் என்ற குறுந்தகவலை (எஸ்.எம்.எஸ்) அனுப்பிவிட்டிருந்தேனே. தொலைபேசி அழைப்பு போகும்போது தம்பி ராம்குமார்

என்னை வரவேற்பதற்காக திருச்சியிலிருந்து திருநெல்வேலி நோக்கி புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருக் கிறார். அழைத்தவரோ உதயகுமாரி ஆகிய நான் விபத்துக் குள்ளானதை மட்டும் கூறி விட மீதி விபரம் கேட்பதற்குள் அலைவரிசை சீரின்மை காரணமாக கைத்தொலைபேசி அழைப்பு துண்டிக்கபட்டு விட்டதாம்.

இது ஒருபுறம் இருக்க எங்களது சாரதி இளங்கோவுடன் தொடர்பு கொண்டு 'சார் நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாப்புச் சொன்னீங்களோ அது மீறிப்போச்சு' என்று அழுதாராம். என்னைப் பயணம் அனுப்பிவிட்டு வழமை போல் பிற்பகல் தூக்கத்திற்குத் தயாரான இளங்கோவிற்கு இப்படி ஒரு செய்தி போகவும் எப்படி இருந்திருக்கும். இருபது நிமிடத்துக்குள் உடனடியாக அம்புலன்ஸுடன் விரைந்து வந்து விட்டார்.

■

# நாணயமானவர்கள்

இதற்குள் அந்த சிறிய மருத்துவமனையில் கூடிவிட்ட மக்களில் சில பெண்கள் எம்மைப் பராமரித்த விதம் இன்றும் நன்றியுடன் நினைவுக் கூறத்தக்கது. அது மட்டுமல்ல வெளிநாட்டிலிருந்த போயிருந்த நாங்கள் ஒளிப்படக் கருவி வெளிநாட்டு சூட்கேஸ் என ஆடம்பரமாகக் காட்சியளித்தும் ஓர் குண்டு மணியைக் கூட தமக்கென அபகரித்துக் கொள்ளாத அந்தக் கிராமத்து அன்பு நெஞ்சங்கள். இதுவே சென்னையாக இருந்திருந்தால்.



இப்படியாகத்தான் நாம் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றோம். அங்கு உள்ள மீனாக்காவின் செல்வாக்கால் எங்களிற்கு வைத்தியம் தொடங்கப்படு கின்றது. அம்மாவிற்கு மருத்துவம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் எனக்கான வைத்தியம் எதுவுமே ஆரம்பிக்கும் சைகை காணப்படவில்லை. எக்ஸ்ரேயைப் பார்வையிடும் வைத்தியர்கள் தங்களுக்குள் பேசிக்கொள் கிறார்கள். மீனாக்காவுடனும் தான்.

அவர்கள் அருகில் வந்ததும் என் வயிற்றுக்குள் கட்டி ஏதும் இருக்கின்றதா, என்று நானே அவர்களிடம் கேட்கின்றேன் காரணம், எனக்கே என் வயிற்றுள் ஓர் கனமான திண்மம் இருக்கின்றது என்ற ஓர் உணர்வு இங்கிலாந்தில் இருந்த போதும் சென்னையில் மருத்துவம் பார்த்த பெண்கள் என் வயிற்றின் மீது எண்ணை விட்டு உருவும் போதும் உறுதி செய்து கொண்டதால் அந்த வைத்தியரும் இங்கிலாந்து போனவுடனேயே சத்திரச் சிகிச்சை மேற்கொள்ளும்படி கூறியிருந்தார்.

நான் இவ்வாறு சொன்னதும் வைத்தியர்களின் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது. அங்கு இடமில்லாத காரணத்தால்

நாம் அதி கவன வைத்தியப்பிரிவான ஐ.சி யுனிற்றில் அனு மதிக்கப்படுகின்றோம். இளங்கோ என்னருகில் வந்து தோழமையுடன் என் கையைப் பற்றி எல்லாம் சரிவரும் என்று ஆறுதல் மொழி கூறுகின்றார். எனக்கோ கண்கலங்கி விட்டது.

■

# உறைக்கும் உண்மைகள்

அவர் புறப்பட்டதும் தான் பல உண்மைகள் உறைக்கின்றன. இந்த விபத்திலிருந்து தப்பிவிட்டோமே என்ற உணர்வு போய் இந்த விபத்து நடந்திருக்க வேண்டுமா என்ற துன்பம் கவ்வுகின்றது. நாம் இங்கிலாந்து திரும்புவோமா என்ற அச்சம் பற்றிக்கொள்கின்றது. என்னுடைய கடவுச்சீட்டு சற்று வித்தியாசமானது. அது ட்ரவல் டொக்கியூமன்ற் எனப்படுகின்ற ஒரு பத்திரம். அப்போதிருந்த சட்டத்தின் பிரகாரம் எனக்கிருந்த ஏதோ ஒரு அதீத துணிச்சலில் கிடைத்த அந்த சிறிய அவகாசத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு இந்தியா போய்விட்டேன்.



குறிப்பிட்ட காலத்தில் நான் இங்கிலாந்து திரும்பா விட்டால் இலங்கைக்கு கூட நான் திருப்பி அனுப்பப் படலாம். நினைக்கும் போதே பயமாக இருந்தது.

எத்தனையோ சிரமங்களின் மத்தியில் இங்கிலாந்து போயக் கிடைத்த வசதிகளுடன் கூடிய வாழ்வை இந்த விபத்து பறித்து விடுமோ என்ற அந்த பயம். நான்தான் பதினைந்து வருடங்களுக்குப் பின் என் அருமைத் தந்தையைச் சந்தித்து அவர் அருகாமையில் அகம் பூரித்திருப்பவள் ஆயிற்றே. அந்த பாக்கியம் எல்லாம் பறிக்கப்பட்டுவிடுமே என மனதுக்குள் புழுங்குகிறேன். அத்தோடு உடல் நலம் குன்றிய எனது வயோதிபத்தந்தை, ஏற்கனவே உணர்ச்சிவசப்பட்டு தன் உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டவர். இந்த சேதியைக் கேட்டால் என்ன ஆவாரோ என்ற பயங்கரமான உணர்வு என்னை வதைக்கிறது.

கையில் வேறு குறிப்பிட்டளவு பணமே பயணத்தின் கடைசித் தேவைகளுக்கென ஒதுக்கி வைத்திருந்தோம். இந்த

வைத்திய சாலையின் செலவுகளுக்குப் பணம் கொடுக்க வேண்டுமே அதை எப்படி ஒழுங்கு செய்வது என்ற கவலையும் வேறு. வானமே இடிந்து தலையில் விழுவது போன்ற உணர்வு. நடப்பது நடக்கட்டும் என்று கண்ணயர்கின்றேன். காலையானதும் இன்னும் சில உண்மைகள் உறைக்கின்றன.

இந்த வைத்தியசாலைக்கு எம்மைத் தேடி இளங்கோவின் வீட்டாரைத்தவிர எவருமே வரப்போவதில்லை. எமது அன்றாட உணவான பிட்டு, இடியப்பம் போன்ற எதுவுமே கிடைக்கப் போவதில்லை. தொட்டதற்கெல்லாம் இளங்கோ வீட்டாரையே தொல்லைபடுத்தப்போகின்றோமே. உதவிக் கென்று அமர்த்திய பணிப்பெண்ணும் உபத்திரவப் படுகிறாரே. அவருக்குரிய பாரிய பணச்செலவை நாமே தான் பொறுப்பேற்க வேண்டுமே. இவையெல்லாவற்றையும் விட என்னைப் பராமரிக்க தகுந்த உதவிகள் இல்லையே என்ற கொடுந்துன்பமும் என்னையும் அம்மாவையும் ஓர் அறையிலும் எனது பணிப்பெண்ணை இன்னுமொரு அறையிலும் அனுமதித் துள்ளனர். அம்மாவிற்கு எற்பட்ட உட்சவ்வு வெடிப்பும், வாகனக் குலுக்கலால் ஏற்பட்ட அதிர்வும் அம்மாவின் உடலைப் பாதித்துவிட அம்மாவோ ஒரே நித்திரை வயப்பட்டுவிடுவார். நானோ தனிமையில் நேரத்திற்கு நேரம் வரும் மருந்துகளை உட்கொண்டபடி.

சீதாம்மா ஆட்டோ பிடித்து மதிய உணவு கொணர்ந்தார். ஏற்கனவே ஆட்டோக்காரனிடம் காலை உணவை கொடுத்து விட்டிருந்தார். இப்படி இவர்களைச் சிரமப்படுத்துகின்றோமே என்ற துக்கம் என்னை வாட்டி எடுத்தது. 11 மணியானதும் கதவு தட்டப்படும். அதைத் தொடர்ந்து மாநிறமான மெல்லிய கை கதவைத்திறப்பதைப் பார்க்கலாம். ஆம் இளங்கோ தினமும் தன் வேலை பார்க்கும் இடத்தைத் திறப்பதற்கு முன்பாக எங்களை வந்து பார்த்து தன்னுடைய நகைச்சுவைப் பேச்சால் என்னையும் அம்மாவையும். சிரிக்க வைத்து விட்டுத்தான் அங்கு செல்வார்.

என்றுமே இளங்கோவை, இளங்கோவின் நட்பை எம்மால் மறக்க முடியாது.

தனது தொழில் துறையைக் கவனிப்பதா அல்லது எமது பிரச்சினைகளிற்கு முகம் கொடுப்பதா என்ற அந்தச் சூழலிலும் சுமுகமாக அதை அணுகிய விதம் ஆச்சரி யத்தைத் தந்தது. தேனியில் உள்ள நண்பர் அன்புவிடம் தொலைபேசியில் அழைத்து அவசரமாக ஓர் சிறிய தொகைக் கடன் பெற்று வைத்திய சாலையில் முன்பண மாகக் கொடுத்து எமது வைத்தியத்தையும், பணிப் பெண்ணின் சத்திர சிகிச்சையையும் மேற்கொள்ளச் செய்தார். எரிகிற வீட்டில் கூரையைப் பிடுங்குவது போல் தனது மனைவியின் கால் முறிவை மூலதனமாக்கி பணம் சம்பாதிக்க நினைக்கும் எம் பணிப்பெண்ணின் கணவர்.

■

# மீண்டும் இளங்கோ வீட்டில்

**நா**ன் இந்தியா போய் இளங்கோவிட்டில் வசித்தது போல் மற்றவர்கள் வீட்டில் வசிக்க என்வாழ்நாளில் எனக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்றே கூறலாம். இளங்கோ வீட்டிலே எனக்கு அந்த மகிழ்வு கிடைத்தது. எனது நண்பர்களில் சிலர் இங்கும் தூர இடத்தினின்றும் வந்து சந்தித்துப் போனார்கள்.



பெங்களூரில் வந்து எனைச் சந்தித்த ஜெயகுமாரன் எனும் பெயருக்குரிய Lovable fool jeykk என்ற ஐடியைக் கொண்ட 26 வயது வாலிபன் வந்து சந்தித்தது மனதுக்கு இதத்தை தந்தது. இளம் வயது மனிதர்களின் சிந்தனைக்கும் வயதேற ஏற அவர்களின் சிந்தனைக்கும் இடையே நிறைய வித்தியாசமிருக்கிறது என்பதை இவரைச் சந்திக்கும் போது உணர்ந்தேன். ஊக்கம் தரும் விதமாக பேசும் அன்பு நண்பன் தன் வேலைக்கு விடுப்பு எடுத்து வந்து பார்த்துப் போனார். இவர் ஏற்கனவே இளங்கோ வீட்டுக்கு அறிமுகமானவர் என்பதால் உரிமையோடு சீதாம்மாவிடம் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார். நாம் மூவரும் மிக மகிழ்வுடன் சில மணித்தியாலங்களைக் கழித்தோம்.

லண்டனிலுள்ள அப்பாவிடம் போவோம் என்றால் அதற்கும் நாம் சென்னை போக வேண்டுமே. இளங்கோ வீடு போயும் எனது உடல் உபாதை குறையும் அறிகுறி தெரியவில்லை. ஈரோட்டிலிருந்து சென்னை போக ஏறக்குறைய பத்து மணி நேரம் பயணம் செய்ய வேண்டும். அதுவும் கரடு முரடான அந்த நெடுஞ்சாலைகளில்! பாவம் அம்மா. வோக்கர் எனப்படும் ஊன்று கொடுக்கும் உபகரணம் ஒன்றைப் பாவித்து தன் படுக்கைக்கு அருகில் உள்ள கழிவறைக்கு போகும் அளவிற்கு தேறிவிட்டார்.

திரும்பிக்கூடப் படுக்க முடியாத உடல்நிலை எனக்கு இருந்தது. நான் கொஞ்சம் கொஞ்சமாக சக்கர நாற்காலியில் உட்காரும் அளவிற்கு தேறி விட்டேன்.

இளங்கோ நான் மகிழட்டும் என தனது நண்பர்கள் பலரையும் எனக்கு அறிமுகம் செய்கின்றார். மேலும் தமிழ்ப் பற்றாளர்களான ஒரு வைத்தியரையும், ஓர் அச்சகம் நடாத்துபவர் குடும்பத்தினரையும் கூட அறிமுகம் செய்து வைத்தார். அந்த வைத்தியர் எமக்குப் புட்டு பிடிக்கும் என்பதால் தனக்குத் தெரிந்த கேரளப் பெண்களைக் கொண்டுவித்து புட்டு, சொதி என்றெல்லாம் தயாரிக்க வைத்து கொணர்ந்து தந்தார்.

■

# வெள்ளை மகிழுர்தியில் ...

**மே**லுமோர் பணிப்பெண் வேலைக்கமர்த்தப்பட்டாள். வேலைக்கு அமர்த்திய பணிப் பெண்கள் தங்களுக்குள் மோதுவது பூதாகரமாக, இளங்கோவோ ஏழாவது பணிப்பெண்ணை தேடும் படலத்தில் ஈடுபட்டார். ஒருவாறு நிலைமையை சமாளிக்கும் விதமான சூழல் உருவானது. திடீரென இளங்கோ வீட்டு வாசலில் ஒரு வெள்ளை நிற மகிழூர்தியில் வந்து நின்றது. தம்பி ராம்குமார் தனது மனைவி ஷீலா சகிதம் வந்திருந்தார். நான் படுக்கையில் இருப்பேன் என எதிர்பார்த்து வந்தவர்கள் நான் சக்கர நாற்காலியில் இருப்பதைப் பார்த்ததும் என்னை எப்படியும் தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போக முடிவு செய்து இளங்கோவையும் ஒத்துப் பாட வைத்து விட்டனர். அம்மாவிடம் அனுமதி கிடைத்தால் வருவேன் என்றேன். அனுமதியும் கிடைத்தது.



எனது பணிப்பெண் சகிதம் வெள்ளை மகிழூர்ந்தில் நானும் தம்பி ராம்குமாரும் அவரது மனைவி ஷீலாவும் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம் இனம் புரியாத உணர்வு என் மனதை வியாபித்திருக்கிறது. மகிழ்வா அல்லது துன்பமா என்று இனம் காணமுடியாமல் மனம் தவிக்கிறது. மகிழ்வை எண்ணி மனம் பாய்ந்தாலும் நடந்த துன்பங்கள் மனதை துளைக்கிறது.

நடந்த துன்பங்களை நினைத்து மனம் வருந்துவதை விட கிடைத்த இனிய வாய்ப்புகளை அனுபவிப்பது தான் தென்பு நிறை வாழ்வைத் தரும். இப்படித்தானே மானிட வாழ்வில் பெரும் பகுதி கழிகிறது.

மனது நிறைந்த பெருமையுடன் மௌனமாக நானும் உதிரத்திலோ உதரத்திலோ ஒன்றல்ல ஆயினும் அதரம்

திறந்து அழைத்து எனை அக்கா என வரித்தவரான என் தம்பி ராம்குமாரும் ஒரு வருடத்திற்குள் மணம் முடித்த ஷீலாவும் மகிழ்வாக பயணித்துக் கொண்டிருக்கிறோம். சரியாக குணமடையாததால் என் உடல் வலிக்கிறது. வெளியே காட்டிக்கொள்ள மனமில்லை.

மற்றவர்கள் எனக்காக தங்களை விட்டுக் கொடுக்கும் போது நான் மட்டும் முறைப்படுவது நியாயமில்லையே. இரவு நேரம் பயணிப்பது அச்சம் தருகிறது. போகும் வாகனம் எல்லாம் எங்கள் மீது மோத வருவது போன்ற உணர்வு விபத்தில் அகப்பட்டு மீண்டதால் வந்த விளைவு தான் அது. மதுரைக்கூடாக எமது மகிழூர்தி போவதை அறியவைக்கும் வீதியோரம் துலங்கிக் கொண்டிருக்கும் பல மின் விளக்குகளால் அலங்கரித்த தெய்வ உருவங்களைப் பார்க்கும் போது மனம் குதூகலிக்கிறது.

இந்த மதுரை அம்மாளை தரிசித்து திருநெல்வேலி போகப்புறப்பட்டு நானும் அம்மாவும் எங்கள் பணிப்பெண்ணும் விபத்துக்குள்ளானோமே! எதற்கும் எமக்கு கொடுப்பனவு வேண்டாமா? இப்போதும் கூட மதுரையூடு போகின்றோம். மீனாட்சி அம்மன் கோவில் போகும் வாய்ப்பு

கிட்டவில்லை காரணம் ஏற்கனவே இருள் கவ்விவிட்டிருக்கிறது. இன்னும் கடக்க வேண்டிய தூரம் நிறையவே இருக்கிறது. மேலும் அந்நேரம் கோயில் திறந்திருக்குமோ யார் அறிவர். அப்படித்தான் போலத்தோன்றினாலும் அவ்வளவு சுலபமானது இல்லையே.

மௌனம் குறைந்து பேச்சு ஆரம்பிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக மகிழ்வு எமைத் தொற்றுகிறது. எந்த இடம் என்று நினைவில்லை பெற்றோல் பெற்றுக் கொள்ளும் நிலையம் வருகிறது. அங்கு தம்பி ராம்குமாரும் அவரது சாரதி ஜானகிராமும் இறங்கிக்கொள்கின்றனர். தம்பியின் மனைவி ஷீலா தங்கள் விடுதிபற்றி அங்குள்ள வானொலியில் விளம்பரம் போவதைச்சுட்டிக் காட்டுகிறார். மிகவும் பெருமையாக இருக்கிறது. சாதாரணமாக வானொலியில் போகும் விளம்பரங்களை பொதுவாக ரசிக்கும் நாம் அந்த விளம்பரத்துக்கு உரியவர்கள் எங்களுக்கு வேண்டப் பட்டவர்கள் எனும்போது கிடைக்கும் மகிழ்வே தனி.

■

# தடுமாற்றத்தின் பின்னே

இந்தப்பெண் ஷீலாவைத் திருமணம் பேசியிருந்த காலம் முதல் எனக்கு அறிமுகம் செய்து வைத்து இருந்தார் தம்பி. அப்படியிருக்கும் காலங்களில் திருமணமாவதற்கு முன்னாகவே தம்பி ராம்குமாரின் அப்பா திடீரெனக் காலமாகி விட்டார். அது ஓர் அதிர்ச்சியான சம்பவம். நோய் என்றே படுத்திராத ராமின் அப்பா இரவு படுக்கைக்குப் போனவர் காலையில், மனைவி எழுப்பும் போது எழுந்திருக்கவே யில்லையாம். இதையறிந்த வருங்கால மருமகளாக இருந்த ஷீலா தன்னை மருமகளாக்க எண்ணியதால், அந்த துர்காலம் காரணமாகத்தான் வருங்கால மாமனராக இருந்த ராம் குமாரின் தந்தை இறந்தார் எனக் கூறி மணம் முடிக்கவே மறுத்துவிட்டாராம். ஆனால் ராம்குமாரின் குடும்பத்தினரோ ஷீலாவின் எண்ணத்தை ஏற்க அடியோடு மறுத்து விட்டனர்.

அதனுள் சிறப்பு என்னவென்றல் ராம்குமாரின் தாயார் எப்படியும் இந்த ஷீலாவைத்தான் தன்மகன் மணம் முடிக்க வேண்டும் எனத்திட்ட வட்டமாகக் கூறி விட்டாராம். அதுவும் மிக விரைவில் அந்தத் திருமணம் நடக்கவேண்டு மெனவும் கூறிவிட்டார் என்ற அந்த நிகழ்வை மிக நன்றியுணர்வுடன் கூறிநெகிழ்ந்தார். இப்படி மனவிசாலம் கொண்ட மாமியார் எத்தனை பேர் தமிழ்நாட்டிலுள்ளார்கள்? அதை மற்றவர் களிடம் சொல்லி மகிழும் மருமகள்களும் தான்!

முகம் முழுவதும் நிறை புன்னகை தான் ஷீலாவின் சீதனம் என்று கூறுமளவுக்கு சிறப்பான பெண் இவள். மகிழூர்தி மீண்டும் திருநெல்வேலி நோக்கிக் கிளம்பியது யோகும் வழியில் மகிழூர்தியை நிறுத்து ஓர் கோவிலுக்குத் தேங்காய் உடைத்து வழிபட்டார். ஷீலாவும் இறங்கிப்போய் வழிபட்டார். தம்பி ராம்குமார் வீடுபோனோம்.

■

# தம்பி வீட்டில் தடபுடல்

அவர்கள் இருந்த வீட்டில் முன்னுள்ள உட்காரும் சிறியபகுதிக்கென அமைந்த வாசலும் படிகளும் நான் உள்ளே சக்கர நாற்காலியில் செல்லமுடியுமா என்ற பிரச்சனையை முன்வைத்தது. ஒருவாறு உட்கொண்டு செல்லப்பட்டேன். தம்பி தங்கள் படுக்கையறைகளில் என்னைத் தங்கும்படி வேண்டினர். காரணம் மேலேயுள்ள விருந்தினர் அறைக்குப் போவதாயின் சிரமமாச்சே. நான் கட்டிலில் படுக்க வைக்கப்பட்டேன்.



என்னுடலோ மிக வாதைப்பட்டது. காய்ச்சல் வந்து விடுமோ என்று பயப்படுமளவுக்கு உடல் முழுதும் நொந்தது. இரவு ஒரு மணியளவில் ஆகிவிட்டது. நாம் வரும் போதே ஹோட்டலில் இருந்து வரவழைக்கப்பட்ட இடியப்பம். இது எனக்காக விசேடமாக கொண்டு வரப்பட்டது மற்றும் சொதி சகிதம் சாப்பாடு கொணர்ந்து தந்தார்கள். எனக்கு சாப்பிட முடியாத உடல்வாதை. ஆனால் ஷீலாவோ ஒரு தட்டில் உணவைப்போட்டு வந்து தானே ஊட்டிவிட வேண்டும் என ஒரே பிடிவாதமாக இருந்தார். என்னால் உணவை உட்கொள்ள முடியாது என்றபோதும் அவர்கள் அன்புக்காக ஓரிரண்டு வாய் கொள்ளுமளவு உண்டேன். அன்பின் சக்தியே தனி.

எனக்கோ நிமிர்ந்து படுக்கவே முடியாத அவஸ்தையாக இருந்தது. கண்மூடி விழிப்பதற்குள் இரவு கரைந்து விட்டது. படுக்கையிலிருந்து எழும்பவே மனமில்லை. காய்ச்சல் வரும் போல் தோன்றியது. மிகவும் பிரயத்தனப் பட்டு எனது சக்கர நாற்காலிக்கு மாறினேன். தம்பி ராம்குமாருடன் பேசுவதில் என் பொழுது கழிந்தது. அவர் தனது திருமணநாளின் காட்சிப்படங்களை எனக்கு காட்டி



தம்பி ராம், மனைவி ஷீலாவுடன்

மகிழ்ந்தார். அந்தக் கல்யாணத்துக்கு பங்கேற்க முடிய வில்லையே. உண்மையில் என்மனம் தவித்தது. அப்போது எனை அழைத்தும் வர அனுமதி கிடைக்காத சூழல்.



அத்தனை சிறப்பான திருமண வைபவத்தை படம் விளக்கியது. தம்பி ராமின் திருமண வீடியோவைப் பார்ப்பதிலும் மற்றைய நண்பர்களைப் பற்றி அள்வளாவு வதிலும் என்பொழுது இனிதாகக் கழிந்ததில் கன்னியா குமரிக் கடற்கரைக் காட்சியைக் காணப்போக அவசர அவசரமாக ஆயத்தங்கள் செய்யவேண்டியதாயிற்று.

■

# கன்னியாகுமரி

ஒரு மணி நேரப் பயணம் அங்கிருந்து வெயில் கண்ணிலடிக்க வேகமாக விரைகிறது மகிழூர்தி. நான், தம்பி, ஷீலா, தம்பியின் அம்மா, செந்தாமரை எனும் உறவுக் காரச் சிறுமி சகிதம் போய்க் கொண்டிருக்கிறோம். தம்பியின் திருமணப் பேச்சு பற்றி சுவைபடக் கதைத்துக் கொள்கிறோம். நாம் அங்கு செல்வதை விரும்பாமலோ என்னவோ சூரியபகவான் மறைந்து போனான். இரவுக் காரிகை மேகமகளை மூடிக்கொள்கிறாள்.

அங்கே விரிந்து கிடந்த சிறிய கடைகளில் கடற்திர வியங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட சிப்பிமாலைகள் சங்குகள் கொண்ட் சுவர்மாட்டிகள் என ஒரு கலையம்சம் கூடிய கடைகள் என்னைக் கவர்ந்தாலும் நான் கீழே இறங்க முடியாத நிலை. கற்கள் நிறைந்த அந்த மணற்பரப்பில் எப்படி எனது சக்கரநாற்காலியை இறக்கி வைப்பது? எப்படி என்னை அதில் உட்காரவைப்பது? எனக்கு ஏதாவது அன்பளிப்பு வாங்கித் தருவது எனத் தம்பிராம் மிகவும் மும்முரமாக கடைக்குக்கடை ஓடித்திரிகிறார்.அவரது அன்பளிப்பை நிராகரிக்க என்னால் முடியுமா! என்ன?

அழகான சங்குகள் இரண்டை என் விருப்பம் வினவித் தெரிந்து வாங்கித் தந்தார். தூரத்தில் தெரிந்த மிகவுயர்ந்த திருவள்ளுவர் சிலையும் கொந்தளிக்கும் கடலும் அந்த இருட்டிலும் அழகாகத் தானிருந்தது. என்றோ இலங்கையில் நயினைதீவு அம்மனைத் தரிசிக்க கடலில் பயணம் செய்தது நினைவுக்கு வந்தது.

இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடலாம் என இரண்டு மூன்று தொகுதி உடைகளைத் தான் எம்முடன்

எடுத்தும் போயிருந்தோம். கையில் வேறு பணமுமில்லை. இதைச் சொன்னால் பல உடைத்தொகுதிகளை வாங்கி வந்து விடுவார் தம்பி! என, வாயே திறக்கவில்லை. இளங் கோவிடம் சொன்னால் அது எப்படியும் தம்பியின் காதுக்கு எட்டிவிடும் என்பதால் நான் வாளாவிருந்தேன். எனது பணிப்பெண் துவைத்து என் உடைத்தேவைகளைத் தீர்த்தார்.

திடீரென ஒருநாள் தம்பி ராம்குமாரின் சகோதரன் ராஜ் தனது மனைவி கவிதா, மகன் பிருதுவி சகிதம் திருவனந்த புரத்திலிருந்து தன் குடும்பம் சகிதம் தொழில்துறை எல்லாவற்றையும் யாரிடமோ பொறுப்புக் கொடுத்துவிட்டு என்னைச் சந்திக்க வந்துள்ளனர். நானும் தம்பி குடும்பமும் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்த வண்ணம் இருக்கையில் வந்த இவர்களில் பிருதுவி உள்ளே வர மறுத்து விட்டார். காரணம் என்னவெனில் "நிலா அக்காவைப் பார்க்க எனக்கு வெட்கம்" என்று கூறும் பத்து வயதுப்பையனான இவன் அடிக்கடி தொலைபேசியில் 'நிலா அத்தை' என என்னுடன் பேசி இருந்தாலும் அங்கு வந்ததும் நிலா அக்கா என என்னை அழைத்து வெட்கப்பட்டது எங்களுக்கு நகைச்சுவையாக இருந்தது. இவரது தாயாரின் தாயாரையும் சந்திக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது.

தம்பி ராம்குமாரின் தாத்தா சிறு வயதாக இருக்கும் போது இந்தியாவிலிருந்து இலங்கை போய் அங்கு ஓர் ஹோட்டலில் சாதாரண பணியாளாக வேலை செய்து வந்தவர். காலப்போக்கில் மீண்டும் இந்தியா வந்து திருமணம் முடித்து இலங்கை திரும்பியிருக்கின்றார். இவரின் கடும் உழைப்பைக் கண்ட அவர் முதலாளி அவருக்கென ஒரு பகுதியை எழுதி வைத்ததாகவும் அந்த தொழிலில் வளர்ச்சி கண்டு காலப்போக்கில் இந்தியாவில் தொடங்கி வைத்த அந்த ஹோட்டலில் தான் தம்பி ராம் குமாரைப் பயிற்றுவித்து இவரிடம் கையளித்த ஹோட்டலில்தான் ஸ்ரீ ஜானகிராம் ஹோட்டல். இவர்களுக்கு திருவனந்தபுரத்திலும் ஓர் கிளையிருக்கின்றது. அதை இவரது அண்ணனான தம்பி ராஜ் நிர்வகித்து வருகின்றார்.

இவர்களிடம் எனக்குப் பிடித்த விடயம் என்ன வென்றால் நன்றி மறவாமை. தங்கள் தாத்தாவின் ஊரில்

உள்ள அவரது நினைவுத் தூபியை ஒவ்வொரு நல்ல விடயங்களின் போதும் உதாரணமாக திருமணத்தின் பின்பு சென்று விளக்கேற்றி வணங்கி வருவதை வழமையாகக் கொண்டிருக்கினறார்கள். தாத்தா, பாட்டிக்கு எழுதிய காதல் கடிதங்களைக் கூட பொக்கிஷமாகப் பேணுவது அவர்களுக்குப் பெருமையாக இருக்கின்றது.

எம் நாட்டிலெல்லாம் இப்படி நினைவுப் பொருட் களைப் பேணுவது என்பது முயற்கொம்பு. என்னிட மெல்லாம் ஏறக்குறைய இருபது அல்பங்கள் நிறைய படங்களும் அரிய புத்தகங்களும் இருந்தன. இவற்றில் எனது பெற்றோரின் திருமண அழைப்பிதழ் மற்றும் காலஞ்சென்ற பலரின் திருவுருவப்படங்கள் மற்றும் எனது சின்னமாமி குழந்தையாக இருக்கும் போது பெரியமாமி தூக்கி வைத்திருக்கும் இளமைக்கால புகைப்படம் இப்படி எத்தனை பொருட்களை இடப்பெயர்வு என்ற பெயரால் இழந்து தொலைத்திருக்கின்றோம். இவை மட்டுமா எத்தனை ஆயிரம் உறவுகளைப் பறிகொடுத்த பாவிகள் நாம். தமிழைப் பேசியதால் அமிழும் துக்கத்தில் நாம்.

■



ராமின் அண்ணன் ராஜ்

# திருநெல்வேலி கிருஷ்ணாபுரம் கோவில்

பச்சைநிறத்துக்கு செம்மஞ்சள்நிறக் கரைவைத்த பட்டுச்சேலை சரசரக்க ஷீலா எம்முடன் வர ஆயத்த மானார். திருநெல்வேலியிலுள்ள கிருஷ்ணாபுரம் கோவிலுக்கும் போனோம். கொழுத்தும் வெயிலில் ஜீப்பிலிருந்து இறங்கி கோவிலின் உள்ளே நுழைகிறோம். அன்று சனநடமாட்டம் அதிகமில்லை. அந்தக் கோவிலுக்குப் போவதற்கே நாம் "ராஜயோகம்" உடையவர் களாக இருக்க வேண்டும் எனப் பூசகர் கூறினார். மிகப் பெரிய பெருமாள் விக்கிரகத்துடன் கூடிய இந்தக் கோவிலின் உள்ளே அமைந்துள்ள சிலைகள் அற்புத மானவை. என்னால் அங்குள்ள சிலைகளின் நுட்பத்தைப் பார்க்கும் போது ஆச்சரியம் தாளவில்லை. அவ்வளவு தத்ரூபமானவை. ஒரு தொகுதி வில்லும் நாணும் பார்த்தேன். அந்த வில்லானது கருங்கல்லால் ஆக்கப்பட்டுள்ளது. ஓர் மூங்கில் தடியை வளைத்து நாம் வில்லைத் தயாரித்தால் அந்த மூங்கிலின் துளை எப்படி இருக்குமோ அப்படி இந்த நாண் கருங்கல்லில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு துளையூடு பார்த்தால் மறுபக்க ஒளி தெரிகிறது. இது படைத்தவனின் அபாரத் திறமையன்றி வேறென்ன!

அங்கே அந்தக் கோவிலின் படியாகத் தானிருந்து அந்தக் கோவிலைக் காப்பது போன்ற சிந்தனை கொண்டு தன் உருவத்தை படியில் பதித்த அந்த மன்னனின் பக்தி! உண்மையில் சரியான ஆரோக்கியம் கொண்டவளாக நான் இருந்திருந்தால் அந்தக் கோவிலின் சிறப்பை மேலும் தெரிய வாய்ப்புக் கிடைத்திருக்கும். நான் எவ்வளவுக்கென்று மற்றவர்களுக்கு சிரமம் கொடுப்பது. அது மாத்திரமல்ல, இந்த நிலையிலும் இதையெல்லாம் பார்க்கக் கிடைத்தது பாக்கியமன்றி வேறென்ன.

தான் நடாத்தும் "ஸ்ரீ ஜானகிராம்" ஹோட்டலிற்கு தனது ஜீப்பில் அழைத்துச் சென்று சக்கர நாற்காலிக்கு இடமாற்றி அங்கு அத்தனை வேலையாட்கள் இருந்த போதும் தானே எல்லா இடமும் தள்ளிச் சென்று தன் இடங்களை எனக்குக் காட்டுவதில் மகிழ்ச்சியைக் கண்டார்.

அங்கு போனதும் பலரும் மிகத் தெரிந்தவர்கள் போல் சிரித்தார்கள். காரணம் தம்பி பலருக்கும் 'வெப் கமரா' மூலம் காண்பித்திருக்கிறார்.

எல்லாத்தளங்களுக்கும் அழைத்துச் சென்றார். மொட்டைமாடியில் மிக மெல்லிய ஒளியில் அமைந்துள்ள சாப்பாட்டு மேசைகள் என்னை 'வெளியே போய்விடாதே' என அழைத்தன. அவர்களது வசதி நிறைந்த அறைகளுக் கெல்லாம் அழைத்துச் சென்று காட்டினார். அங்கு கவிஞர் வைரமுத்து தன் எழுத்துப் பணிக்கு அடைக்கலம் புகுவாராமே! இது ஒரு புறம் அந்த ஹோட்டலின் சமையற் பகுதிவரை சக்கரநாற்காலியை உருட்டிச்சென்று காட்டினார். மிகத் துப்பரவாக பளிச் பளிச் என மினுங்கும் பெரிய பாத்திரங்கள், சுத்தமான தரைகள், புன்னகையுடன் வேலையாட்கள்! இதைவிட ஓர் ஹோட்டலுக்கு என்ன வேண்டும்? 127

தங்கள் முதலாளி எனக்குக் காட்டும் அக்கறை கண்டு விக்கித்துப் போக அவரது வேலையாட்கள் அந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து என்னைக் கௌரவப்படுத்திய என் தம்பி ராம்குமாருக்கு நான் எனது அன்பை மீண்டும் கூறுகின்றேன். நான் கொடுத்து வைத்தவள்.

இத்தனை நடந்த பின்பும் கூட என் மனமோ எப்படி யாவது மதுரை மீனாட்சியம்மனைத் தரிசிக்க வேண்டு மென்று மிகவும் விரும்பியது. இளங்கோ யாஹூவில் அரட்டை(சட்) செய்யும்போது என் ஆசையைத் தெரிவித்தேன். இளங்கோவின் நல்ல பண்பே இதுதான். மற்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் மகிழ்வு காண்பவர். நாம் சந்திப்பவர்களில் பலர் தங்கள் விருப்பத்தை மற்றவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நினைப்பார்கள். மற்றவர்கள் விருப்பத்தை நிறைவேற்று வதில் திருப்தி காண்கிறார்களா என்பது வினாத்தான்.

இளங்கோ சொன்னார் "உங்க தம்பி கிட்ட சொல்லுங்க. அவர் எப்படியும் அரேஞ் பண்ணுவார்" என்றார்.

தம்பியிடம் என் விருப்பத்தை தெரிவித்தேன். அவரும் அக்கா "நீங்க இளங்கோவை மதுரைக்கு வரச் சொல்லுங்க நாங்க போகலாம்" என்றார். நானும் இளங்கோவை மதுரைக்கு வரும் படியும் நாங்கள் அங்கு சந்தித்தால் அது உதவியாக இருக்கும் எனவும் கூற அவரும் சம்மதித்து விட்டார்.

தம்பியின் நண்பர்களான கஷாலி, மகேஷ் குடும்பத்தினரும் என்னைப் பார்க்க வந்திருந்தனர். அவர்களில் கஷாலியின் நடனத்தை தம்பி ராமின் கல்யாணக் கொண்டாட்ட வீடியோவில் பார்த்ததைச் சொல்லிச் சிரித்தோம். ஆலமரத்தான் என்ற அவர்களது வேலையாளின் வினோதக் கேள்விகள் எமக்கு விருந்தே. செந்தாமரை என்ற ஓர் நடுத்தர வயதுச் சிறுமியின் மௌனமும் அழகே! தம்பி ராமின் தாயாரும் மிக அழகானவர். என்னை மிக அக்கறையுடன் கவனித்தார். தண்ணீர் கூடப் பருக்கி ஆதரித்தார். பார்த்தால் அதிகம் பேசப்படாதவராகத் தெரிந்தார். பேசும் போது அவரின் ஆழம் புரிந்தது. பிள்ளைகளின் அன்பு எனும் சிறையில் அகப்பட்ட தங்கக்கிளி என்பது புரிந்தது. விடைபெறும் போது அழுதே விட்டார். ஓர் சிறிய பிள்ளையார் விக்கிரகத்தைத் தாங்கும் ஓர் பொன் சங்கிலி ஒன்றை அணிவித்து மகிழ்ந்தார்.



கிருஷ்ணாபுரம் கோவிலின் சிற்ப வேலைப்பாடு

இரண்டு குவாலிஸ் வாகனங்கள் தயாராகின. ஒரு வண்டியில் தலையணைகள் ஊன்று கொடுக்க என்னைப் படுக்க வைத்தே பயணம் செய்ய வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. என் வண்டியில் தம்பியும் சாரதியும் முன்னே உட்கார பின்னிருக்கையில் படுக்கை நிலையிலும் கிடத்தப்பட்டபடி பயணிக்கிறோம். நாம் மதுரை போகும் வேளை, ஈரோட்டிலிருந்து இளங்கோவும் மதுரையும் வந்தடைய வேண்டும் என்பது நாம் வரைந்த திட்டம். எனக்கு படுக்கவும் முடியாமல் உடல் வலிக்கிறது. இடையில் வண்டிகள் நிறுத்தப்பட்டு என் பணிப்பெண் என் கால்களை வேறு நிலைகளில் மடக்கி வைத்து தலையணை களை ஊன்று கொடுத்து உதவி செய்கிறார். தம்பி ராம்குமார் இடையில் இறங்கி அங்குள்ள வனப்புக்களை வீடியோ படம் பிடிக்கிறார். தூரத்தே ஓர் அழகுமயில்!

போகும் வழியில் வீரபாண்டிய கட்டபொம்மனின் தூக்கிலிடப்பட்ட இடத்தை கண்டதும் அங்கு எங்கள் வண்டி நிறுத்தப்பட்டு அதன் தொன்மை பற்றி விளக்கம் கொடுக்கிறார் மரணத்தறுவாயிலும் தன் தேசத்தை நேசித்த வனை நினைவு கூறுவதே பெருமை தானே. இரவு மங்கை பூமகளை தன் சேலை கொண்டு போர்த்தி னால் நாம் மதுரையை நோக்கி ஒரே மூச்சுடன் போய்க் கொண்டிருக்கிறோம். தொலைபேசி மாறி மாறிப் பல பக்கங் களுக்கும் அடித்த படியே இருக்கிறது. இதற்குள் திருச்சியிலிந்து கோவிந்தும் ஈரோடு வருகிறார் என்ற தகவல் வேறு. கோவிந்த் இந்தியாவிற்கு வருவிக்கப்பட்ட எனது பணத்தை



தம்பி ராமின் அம்மா
பேரப்பிள்ளைகளுடன்

ஈரோடு நோக்கி எடுத்து வருகிறார். திருச்சியிலிருந்து பேருந்து பிடித்து வரும் கோவிந்தை நாம் மதுரையிலிருந்து போய்ச் சந்திக்க வேண்டுமே.

நாம் மதுரைக்குப் போய்க்கொண்டிருக்கும் போதே நாம் திட்டமிட்டதைவிட அரை மணிநேரம் முன்பாகவே இளங்கோவும், இளங்கோவின் உறவுப் பையனான வினோத்தும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் தெருவுக்கு வந்து விட்டனர். தம்பி ராம்குமார் ஏற்கனவே தனது பால்ய நண்பணான குமாரைக் கோயிலுக்கு வரும்படி தொலைபேசியில் அழைத்து விட்டார். அது ஒரு புறம் இருக்க இளங்கோ என்னிடம் "நிலா நீங்க வாயே திறக்கக் கூடாது" ஒரு வார்த்தையிலேயே நீங்க சிறிலங்கன் என்று உங்களைக் கண்டுபிடித்து விடுவார்கள், அப்புறம் இருநூறுக்கு பதிலாக இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டிவரும் என்று கூறிவிட்டார். நான் ஏதோ டில்லி, பம்பாய் போன்ற பிற ஊரிலிந்து வந்தவள் போலும் எனக்கு இடம் காட்டுபவர்கள் போலும் இளங்கோவும், ராம்குமாரும் நடந்து கொண்டார்கள்.

■

# மதுரை மீனாட்சியம்மன் கோவில்

நகைச்சுவை என்னவென்றால் எனக்கு இடம் காட்டுவதற்கென சுற்றுலா வழிகாட்டுபவரை ஒரு சம்பிரதாயத்துக்காக இவர்கள் நியமித்து விட அந்த நபரோ பிள்ளையார் திருவுருவத்தைக் காட்டி இவர்தான் 'லோட் கணேஷா, சன் ஒவ்(க) லோட் ஷிவா (Lord Ganesha son of Lord shiva)' என்று பிள்ளையார் தான் இவரெனவும் சிவனின் மகனெனவும் விளக்கம் தருகிறார். இதைப் பார்த்த இளங்கோ வாய்க்குள் "நிலாவுக்குக் கணேஷைக் காட்டு கிறாங்க, நேரம் ஐயா! நேரம்!" என்றபடி மதுரை அம்மன் தலத்தினுள்ளே என சக்கர நாற்காலியைத் தள்ளுகின்றார்.

அந்த மதுரை அம்மன் கோவிலின் விசாலம், அந்தத் தூண்களின் உயரம், அங்குள்ள சிற்பங்களின் நேர்த்தி, அந்த இரவு நேரத்தில் எதுவித பயமும் இல்லாமல் இருக் கின்றோமே என்ற உணர்வு தந்த மகிழ்வைச் சொல்ல வார்த்தையில்லை. 98 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து இங்கிலாந்து போய்விட்டாலும் எங்கள் சொந்த நாட்டிலே எங்கள் இனத்தவர்க்குத் தங்கள் கோயில்களில், இரவு நேரத்தில் விழாக்கள் நடாத்தவோ அதை அனுபவிக்கவோ கொடுப்பனவு இருந்ததில்லை என்ற துன்பம் மனதின் ஓரத்திலே! இராணுவ கெடுபிடியின் கீழ் அடக்கு முறை கொண்ட அரசாங்கத்தின் கீழ் வாழ்ந்து சலித்துப் போன எங்களிற்கு இப்படியான சுதந்திரமான சூழல் தரும் ஏக்கம் கலந்த உணர்வு, உணர்வுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழனுக்கும் இருக்கவே செய்யும்.

இங்கிலாந்து வந்த காலங்களில் ஏதாவது வாகனங்களில் செல்லும்போது சந்திக்குச் சந்தி இராணுவச் சிப்பாய் நிற்பானே, என்ற உணர்வு மற்றைய சில மாதங்கள்

எடுத்தன என்றால் சுதந்திரம் தரும் உணர்வு எத்தகைய இனிமையானது!

எங்கே அந்த வழிகாட்டி என்ற கேள்வி. அவரது தொல்லை தாங்க முடியாமல் இளங்கோவிற்கு மட்டும் புரியும் விதமாக கிடைத்த இந்த இனிய வாய்ப்பை இவரது தேவைக்கு அதிக மான பேச்சு கெடுத்துவிடப்போகின்றது என்கின்றேன். இளங்கோவும் தந்திரமாக ராம்குமாருடன் அந்த வழி காட்டியை ஓரம் கட்டி விடுகின்றார். அவர் தமபி ராம்குமாருக்கு சீதா ராமன் பற்றிய விளக்கங்கள் கூறவும் அப்போது தான் செவியுற்றது போல் தம்பி ராமும் "ஆ! அப்படியா" என்று அவருக்குப் பேச்சுக் கொடுத்தலு மாக ஒருவாறு பணத்தைக் கொடுத்து அவரை அனுப்பி விட்டார்கள்.

அம்மனின் கருவறை நோக்கி விரைகின்றோம். அந்தக் கருவறை உள்ள அந்த சதுர வடிவமான தரையுடைய பகுதிக்குள் சக்கர நாற்காலியுடன் போகமுடியாதவாறு தடை விதித்து உள்ளார்கள். எனக்கோ அம்மனை தரிசிக்க வேண்டும் என்ற பேரவா. இவ்வளவு தூரம் வந்துவிட்டு அம்மனைத் தரிசிக்காமல் போகமுடியுமா? தம்பி ராம்குமாரும் இளங்கோவும் வினோத்துமாக சேர்ந்து என்னைத் தூக்கிக் கருவறைக்கு முன்பாக உள்ள அந்தப் பகுதியில் உட்காரவைத்து உள்ளார்கள்.

என்னால் அந்தத் தரையில் உட்கார முடியுமா என்ற பெரும் பிரச்சனை எமக்கு. என் மனதோ 'என்னால் உட்கார முடியும்' என்ற எண்ணத்தைத் தருகின்றது. சென்னையில் மேற்கொண்ட வைத்தியத்தின் காரணமாக ஏற்பட்ட அந்த மாற்றம்தான் என் உடற் தசைகளை இளக்கி இருக்கின்றது. என்னைத் தரையில் உட்கார்த்தி யதும், நீட்டியிருந்த எனது இரண்டு கால்களையும் ஒருவாறு மடித்துப் பிடித்து நான் பின்பக்கம் விழாதவாறு எனது சமநிலையைப் பேண முயற்சிக்கின்றேன்.

மிக வயதில் குறைந்த வாலிபனான வினோத் எனக்குப் பின்பாக நான் விழுந்து விடாமல் என் தோள்பட்டையைப் பிடித்துப் பாதுகாப்புத் தருகின்றார். வினோத் என்ற அந்தப் பையனைப் பற்றிச் சில வரிகளாவது கூறாமல் என்னால் மேலும் நகர முடியவில்லை. இளங்கோவிற்கு உறவினராக இருந்த போதும் இளங்கோ மீதும், இளங்கோ வீட்டார் மீதும் மிகப்பெரிய பாசம் கொண்ட வினோத் அதிகம்

வாய் திறந்து பேச மாட்டார். ஏனோ தெரியவில்லை அவருக்கு என் மீதும் அம்மா மீதும் ஓர் பெரிய அனுதாபமும் பற்றும் இருந்ததை பல தடவைகள் அவதானித்து இருக்கின்றேன்.

மதுரை மீனாட்சி அம்மனைத் தரிசிக்கும் போது என் மனதிற்குள் அம்மனின் அருளை நினைத்து வியந்து போகின்றேன். இங்கிலாந்தில் இருக்கும் போது மானசீகமாக மதுரை அம்மனை வேண்டி 'அம்மா நீ என்னை அழைத்துக் கொள்' என்ற எனது வேண்டுதலைச் செவிசாய்த்து குடும்ப அங்கத்தவர்களை விடுத்து என்னை மட்டுமே நாடு விட்டு நாடுகடந்து கூட அழைத்த அம்மனின் அருளை, தரிசிக்கக் கிடைத்த அந்த இனிய வாய்ப்பை என்னால் எப்படி மறப்பது! மனமுருக பிரார்த்திப்பதோடு நன்றியையும் தெரிவிக்கின்றேன். அம்மா இப்போதும், தான் விரைவில் தாலியை இழக்கப்போவது தெரிந்து தான் தன்னை அம்மன் அழைக்கவில்லை, அதனால் தான் விபத்துக்குள்ளாகி கோவிலுக்குப் போகக் கிட்டவில்லையென அடிக்கடி கூறுவார். இவை யாருக்குப் புரியும்?

அர்ச்சகர் எமக்காக அர்ச்சனை செய்து அம்மனுக்குச் சாத்திய மாலை மற்றும் பூக்கள் என்பன தந்து ஆசீர்வதிக்கிறார். அதைத்தொடர்ந்து மீண்டும் ஒருவாறு நான் சக்கர நாற்காலிக்கு மாற்றப்படுகின்றேன். மாபெரும் கோவிலைச் சுற்றி வரும் போது அங்கேயுள்ள ஒரு பெரிய தடாகம் என் கண்களைக் கவர்கின்றது. ஜெ.ஜெயலலிதா ஆட்சியில் உள்ளபோது அவது பணிப்பின் பேரில் அமைக்கப்பட்ட பொற்றாமரை அழகாகவே இருக்கின்றது.

அங்கெல்லாம் உள்ள புராதன வேலைப்பாடுகளையும் சிறு சிறு கோவில்களையும் பார்வையிட்டுக் கொண்டு வந்த என்னைத் திடீரென என் சக்கர நாற்காலியைச் சுழற்றி ஓர் விக்கிரகத்தைப் பார்ப்பதற்கு ஏற்ற விதமாக இளங்கோ செயற்படுகின்றார். நிமிர்ந்து பார்த்தால் மிகப்பெரிய பிள்ளையார் விக்கிரகமான 'முக்குருணிப் பிள்ளையாரின்' தோற்றம் என்னை வியக்க வைக்கின்றது. எனக்குப் பிள்ளையாரை பிடிக்கும் என்பதை உணர்ந்த இளங்கோவின் செயற்பாட்டை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். நாங்கள் எல்லோரும் அந்தக் கோவிலின் அந்த நாள் முடிவின் செயற்பாடுகள் அனைத்தையும் தரிசித்து வீடு திரும்புகின்றோம்.

■

# திருநெல்வேலியிலிருந்து ஈரோடு நோக்கி

எனது பணிப்பெண் கிறிஸ்தவப் பெண் ஆதலால் கோவிலின் உள்ளே வரப் பிரியப்படவில்லை. அங்கிருந்து ஈரோடு நோக்கி எங்கள் வண்டி போகவும் கோவிந்த் ஏற்கனவே ஈரோடு வந்ததைத் தொலைபேசி தெரிவிக்கின்றது. வாசலில் கார் வந்து நின்றதும் ஓய்வு எடுத்தே ஆகவேண்டிய சூழலிலிற்கு என் உடல் ஆகிவிட்டதால் சாதாரணமாக இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு நான் உள்ளே செல்ல வேண்டியதாகின்றது. கோவிந்த் தம்பி ராம்குமார், இளங்கோ எல்லோரும் நடந்த சம்பவங்களை மீட்பதில் மகிழ்ச்சி காண்பவர்களாக அவர்கள் உரையாடல் தொடர்கின்றது. இந்த கோவிந்த் தானே என் பயணத்தைப் பின்போட வைத்தவர்!



யாரேனும் சொல்லும் ஆலோசனை நல்ல பலனைத் தந்து விட்டால் பயன்பெறுபவர்கள். அதை சட்டைச் செய்ய மாட்டார்கள். அதுவே தற்செயலாக துன்பத்தை தந்து விட்டால் இந்தச் செயலை நாம் செய்வதற்கு எது தூண்டியது என்று காரணம் தேடிச் சிந்தித்து ஆலோசனை சொல்ப வர்கள் மேல் பழிபோடும் பழக்கம் எம்மிடையே உள்ளது. நான் அந்த விதமாகக் கோவிந்தைக் குற்றங்கூற தயாரில்லை. நாம் செய்யும் காரியங்களுக்கு நாமேதான் பொறுப்பு. காரணம் எம் வாழ்வே எம்கையில்தான் இருக்கிறது. கோவிந்த் எனது நன்மை, நலன் கருதியே என் பயணத்தைப் பின் போட ஆலோசனைத் தெரிவித்தார். காரணம் இத்தனை அல்லல்கள் அனுபவித்த நான் மகிழ்வை அனுபவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணமே காரணம்.

■

# யார் பெரியவர்?

இளங்கோவின் சகோதரி இந்து கல கலவென்று பேசக் கூடியவர். அவரது பிறந்த நாளன்றுதான் நாம் பயணம் போக முற்பட்டதும் விபத்துக்குள்ளானதும் என்பதால் எங்களைக் கண்டதுமே அது பற்றிச் சிரித்துப் பேசத் தொடங்கிவிடுவார். ஆம் நாம் போவதற்குச் சில நிமிடங் களிற்கு முன்புதான் இளங்கோ தனது அக்காவின் பிறந்த நாளுக்கென பரிசாகச் சேலை ஒன்றை வாங்கிக் கொடுத் திருந்திருந்தார். நான் இந்துவிடம் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் பார்த்த விநாயகரின் அழகு குறித்து வியந்து கொண்டிருந்தேன். அவரோ அதைவிடப் பெரிய பிள்ளையார் உருவம் கொண்ட ஓர் கோவில் உள்ள தாகவும் அதன் பெயர் ஈச்சனாரி பிள்ளையார் கோவில் எனக் கூறவும் இளங்கோ மறுத்துக் கூறவும் வாக்குவாதம் பெரிதாகி என்னைக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டி நிரூபிப்பதாக இளங்கோ கூறிவிட்டார்.

இரண்டு நாட்களில் இளங்கோவின் நீலநிற மகிழூர்தியின் முன்னிருக்கையில் நான் உட்கார்ந்து போகின்றேன். பின்னிருக்கையில் எனது பணிப்பெண்ணும் சக்கரநாற்காலியும் திணிக்கப்படுகின்றார்கள். இப்படியாக நான் மகிழூர்தியின் முன்னிருக்கையில் இருந்து எத்தனை வருடங்களாகின்றன! 'ஆம்'' பயணம் செய்யும் போது எப்போதும் வாகனங்களின் பின்னிருக்கையில்தானே நான் பயணம் செய்வது வழக்கம். எப்போதும் ஒரு பயணம் செய்வது என்றாலே அது ஒரு பெரிய காரியமாக, சுமையாக உள்ள நிலைதான் என் நிலையாச்சே. ஆனால் இன்றோ முன்னிருக்கையில் அமர வேண்டிய சூழல் அமைந்து விட்டது.

என்னுடன் பேசக் கூட நேரமில்லாமல் இளங்கோ மிக வேகமாக மகிழூர்தியைச் செலுத்துகின்றார். போகும் போது அந்த இடத்தின் தோற்றத்தை உள்வாங்கிக் கொள்கின்றேன். பொதுவாக வெளியே போகும் அனுபவம் குறைந்தவள் என்பதால் இப்படியான சந்தர்ப்பங்கள் வரும்போது வெளியிடத்தைப் பார்க்க வேண்டும், வெளியிடத்தைப் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உள்ளவள் நான். இதற்காகவே வெளியில் செல்லும் போது நான் ஐபொட் (Ipod) ஓ அல்லது தொலைபேசியிலோ இசைகள் கேட்பதைத் தவிர்த்துக் கொண்டிருப்பவள். இது 2003 இல்.

■

# இது கனவல்ல! நனவு!

**ஆ**னால் இப்போது என் கதையே வேறு. நான் மகிழூர்தி ஓட்டுகின்றேன். எப்படி என்கிறீர்களா? இந்த நிலையிலும் எனக்கேற்றவிதமாக வடிவமைக்கப்பட்ட மகிழூர்தி பலத்த சிரமங்களின் மத்தியில் அரசாங்கத்தினால் கிடைக்கப் பட்டுள்ளது. என் இருக்கையில் இருந்தபடி இயந்திரச் சக்கர நாற்காலியை ஓட்டுகின்றேனே, அதே போல் எனது மகிழூர்தியையும் ஓட்டுகின்றேன். விஞ்ஞானம் செய்துள்ள மகத்தான படைப்புதான் இது. என் வியாதியைக் கண்டிக்கவோ, இடைநிறுத்தவோ விஞ்ஞானம் மருந்து கண்டுபிடிக்கவில்லைதான்.

ஆனால் இந்த நிலையில் உள்ள நான், மற்றவர்களிற்கு நிகராக மணிக்கு 50 மைல்கள் வேகத்துடன் கூட லண்டனில் இந்த அவசர சாலைகளில் பயணிக்கும் விதமாக மின்சாரமும் இலத்திரனியலும் கலந்த தொழில்நுட்பத் திறனுள்ள மகிழூர்தியை அமைத்துத்தர வழிவகுத்துள்ளதே. வலது கையால் செங்குத்தாக அமைக்கப்பட்ட ஓர் பிடியை முன்னோக்கித் தள்ளினால் மகிழூர்தி நின்றுவிடும். அதே போல் அந்தப்பிடியை பின்னோக்கி இழுத்தால் மகிழூர்தியின் வேகத்தைக் கூட்ட முடிகின்றது. இடது கையிலுள்ள அடுத்த பிடியை இடது கைப்பக்கம் திருப்பி னால் இடது பக்கமும் வலது கைப்பக்கம் திருப்பினால் வலது புறமும் அதாவது (எனது பக்கமும்) மகிழூர்தி திரும்புகின்றது. இவற்றைச் செயற்படுத்தும் முன் இயந்திரத்தை இயக்க, வானொலியை முடுக்க, மற்றும் மகிழூர்தியின் கண்ணாடியை உயர்த்தித் தாழ்த்த என்றெல்லாம் பல நிறப்பொத்தான்கள் இடது பக்கம் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு எனது மகிழூர்தியின்

சாவியுடன் இணைப்பிலுள்ள பகுதியை அழுத்துவதன் மூலம் கதவுகளைத் திறக்கலாம். கதவானது வழுக்கிச் சென்று திறக்கக் கூடிய விதமாக உள்ளது. இடது பக்கக் கதவு திறக்கப்பட்டதும் ஓர் இரும்புத்தகடு பிரிந்து நிலத்தோடு ஓர் சாய்வை ஏற்படுத்த எனது சக்கர நாற்காலி உள்ளே சென்றதும் நான் மீண்டும் கதவுகளை மூட முடியும். சாரதியின் இருக்கைக்கு என உள்ள வெற்றிடத்திற்கு என் சக்கர நாற்காலி நகர்ந்ததும் கீழே உள்ளே ஓர் கொழுக்கி ஒன்றினுள் அது தானாகப் பொருந்தும். அதன் பின் பட்டியைப்பொருத்தி மகிழூர்தியைச் செலுத்த வேண்டியதுதான்.

வீட்டுக்குள்ளேயே ஏறக்குறைய, பதினாறு வருடங்கள் வாழ்ந்த நான் மேலும் பத்து வருடங்களின் பின் மகிழூர்தி ஓட்டுவதென்றால்! அந்த அனுபவம் மிகத் தனித்துவமானது. அதுமட்டுமல்ல, ஆரம்பத்தில் மணிக்கு முப்பது மைல்கள் ஓடும் போதே தலைக்குள் ஏதோவோர் வித்தியாசமான உணர்வு. நடக்கும் போது ஓர் சாதாரண மனிதனுக்குள்ள சமனிலை, சக்கர நாற்காலியில் உள்ள எனக்கு இருக்காது தானே, அதனால்போலும்! நான் குறுகிய இயக்கமுள்ள எனது கைகளால் மகிழூர்தியை இயக்கும்போது மிகவும் எச்சரிக்கையாகவே இருக்கின்றேன்.

■

# ஈச்சனாரிப் பிள்ளையார்

**கோ**விலுக்குச் சென்றதும் உள்ளம் மிகுந்த ஆறுதலடைகின்றது. அந்தக் கோவில் அமைந்துள்ள சூழலும் அதிகச் சன நடமாட்டமில்லாத அமைதியும் என்னை மேலும் மகிழ்விக்க மௌனமாகின்றேன். கோயிலின் உள்புறத்தை வெளியிலிருந்தே அவதானிக்கக் கூடியதாக இருந்தாலும் இளங்கோ என்னை கோவிலின் உட்புறத்திற்கு அழைத்துச் செல்கின்றார். அங்கு அமைந்துள்ள மிகப்பெரிய பிள்ளையாரை கண்களுக்குள் சிறைப்பிடிக்க முயற்சிக்கின்றேன். என்னுடன் கொண்டு சென்ற ஒளிப்படக்கருவியில் பதிவு செய்கின்றேன். இளங்கோவோ நான் பிராமண வீட்டில் பிறந்திருக்க வேண்டியவள் என்று பரிகசிக்கிறார். எனக்கு அந்தக் கோவிலை விட்டு வரவே மனமில்லை. அச்சூ+ழல் அந்தளவிற்கு மன ஆறுதலைத் தருகின்றது.

ஈச்சனாரி கோவிலில் இருந்து மீளும் போது இன்னுமோர் நட்புள்ளத்தைக் காணவெண்டுமென மனம் துடித்தது. என்னை 'அத்தை' என விழிக்கும் 'சுசி' என எங்களால் அன்பாக அழைக்கப்படும் சுசிகிருஷ்ணா கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். இந்த வாலிபனைச் சந்திக்க மனம் விரும்பினாலும் அதை இளங்கோவுக்குச் சொல்ல எனக்குள் தயக்கம். உங்களை வந்து பார்க்க வேண்டியவர்களை, நீங்கள் போய்ப் பார்க்க வேண்டுமா? என்று சத்தம் போடுவாரே என்ற அச்சம் என்னுள். தைரியத்தை வரவழைத்து என் விருப்பத்தைக் கூறினேன். எனது விருப்பத்தை நிறைவேற்றும் குணமுள்ள இளங்கோ மனமில்லாதபோதும் இதற்குச் சம்மதித்தார். அன்னபூர்ணா

ஹோட்டல் நோக்கி விரைந்தது வாகனம். அங்கு வந்து சுசி எம்மைச் சந்திப்பதாக தொலைபேசியில் தெரிவிப்பதால் இளங்கோ சாப்பாடு வாங்க என்னையும் பணிப் பெண்ணையும் மகிழூர்தியில் இருக்குமாறு விட்டுச் சென்றுவிட்டார்.

■

# மன்னிக்கலாமா?

சுசி வந்து என்னைச் சந்தித்து எக்கச்சக்க மன்னிப்புகளை அள்ளிச் சொரிந்தார். எத்தனையோ முறை வந்து என்னைச் சந்திப்பதாகச் சொல்லியும் வரவில்லையல்லவா? அது மட்டுமா, எம்.எஸ்.ஸி படிக்க லண்டன் வந்தும், என்னை வந்து பார்க்காமலேயே ஓரிரு மாதத்துள் வீட்டாரைப் பிரிந்து வாழப் பிடிக்காமல் மீண்டுவிட்டதால் என்னைப் பொறுத்தவரை குற்றவாளியாகவே அவர் தன்னை நினைத்துக் கொண்டார். அவர் அப்படி நினைக்கும்போது அவரை வாட்டி எடுக்காமல் விடலாமா?

சுசியின் வீட்டின் தோற்றத்தை வெளியிலிருந்தே அவதானிக்க வேண்டியவளானேன். புதிதாகக் கட்டப்பட்ட பார்வைக்கு அழகான வீடு அது. நான் இறங்கி உள்ளே போவது கடினமானதால் சுசியின் அம்மா, அப்பா, பாட்டி யாவரும் வெளியில் வந்து என்னைப் பார்த்தனர். ஏதாவது உட்கொண்டு விட்டுப்போக வேண்டுமென பாலும், வாழைப்பழமும் கொணர்ந்து தந்தனர். எப்படி மறுப்பது! சுசியின் அம்மா ஒரு பெருமாள் படமும் குங்குமமும் கொணர்ந்து அன்பாக அளித்தார். அவர் ஒரு பாடசாலையின் அதிபர் என்பது அவரது சொல்களிலும் செயல்களிலும் தெரிந்தது. அங்கிருந்து புறப்படும் போது இருட்டாகிவிட்டது. எம்மை அம்மா தேடிக் கொண்டிருப்பார் என்பதுவும் எனக்குத் தெரியும். நாளை மறுநாள்தான் நம் பயணமாச்சே!

■

# அம்மாவின் கலக்கம்

இன்னும் இரண்டு நாட்களுக்குள் சென்னை போவதாக நாங்கள் எண்ணியிருக்கின்றோம். எப்படியாவது நாம் மீண்டும் இங்கிலாந்து திரும்பி விட வேண்டுமே என்ற கலக்கம் அம்மாவிற்கு. ஏற்கனவே அதிக உடல் நலம் இல்லாத அப்பாவிடம் சேர்ந்து விடவேண்டுமென்ற துடிப்பு எங்களுக்கு.



அதேநேரம் திருச்சியிலுள்ள கோவிந்தையும் சிவாவின் பெற்றோரையும் சந்திக்க வேண்டும், அங்கிருந்து புறப்பட்டு பாண்டிச்சேரி சென்று சிவா குடும்பத்தினரைச் சந்திக்க வேண்டும், அங்கிருந்து சென்னை செல்ல வேண்டும் என்றெல்லாம் திட்டங்கள். இந்த நிலையில் இருண்டும் வீடு வந்து சேராத என்னை நினைத்து அம்மா மிகவும் கலங்கி விட்டார்.

■

# ஈரோட்டிலிருந்து பயணம்

**வி**பத்தின் பின்பு மேலும் எங்கள் மனதின் உறுதி குன்றி விட்டது. என்னதான் என்றாலும் துன்பம் வந்தவுடன் வீட்டாருடன் சேர்ந்திருக்க வேண்டும் என்ற மனநிலை எமக்கு வருவது இயற்கையே. இம்முறையும் இளங்கோ எமக்காக வாகன ஏற்பாடுகள் செய்கின்றார். கடந்த முறை போல்லாது இம்முறை தானும் வந்து பயணம் அனுப்பவேண்டும் எனவும் தேவைப்படின் நானும் அம்மாவும் படுத்தபடியே பயணிக்கக் கூடிய ஓர் வாகனத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என முடிவுகட்டி ஓர் ரெம்போ ரவல் வண்டியை ஒழுங்கு படுத்துகின்றார்.

இளங்கோ வீட்டாரின் அத்தனை குடும்ப அங்கத்தவர்களும் இப்போது எங்களுக்கு மேலும் பரிச்சயப்பட்டு விட்டதால் எல்லோருமே எங்களை வழியனுப்பக் கூடிவிட்டனர். எதுவித ஆபத்தும் இல்லாமல் நாம் சென்னை போய்ச் சேர்ந்து அங்கிருந்து இங்கிலாந்து போய்விட வேண்டுமே என்ற பிரார்த்தனை அவர்களிற்கு. என்னை உச்சிமோர்ந்து பயணம் அனுப்பி வைக்கிறார் சீதாம்மா.

■

# திருச்சி நோக்கி

பணிப்பெண்ணின் உதவியுடனும் இளங்கோவின் உதவியுடனும் நான் திருச்சி வரை பயணிக்கின்றேன். வாகனத்தில் உட்காரவே முடியாமல் மிகவும் துன்புறுகின்றேன். அம்மாவைக் கைத்தாங்கலாகவே மெல்ல மெல்ல அழைத்து வந்து வண்டியில் ஏற்றியதால் அம்மா தன் இருப்பிடத்தை விட்டு நகரவே இல்லை.



திருச்சியில் உள்ள ஷீலாவின் அம்மா அப்பாவை எங்கள் வண்டிக்கு வந்து என்னைப் பார்வையிடும்படி அழைத்து வருகின்றனர். அவர்களை நிமிர்ந்து பார்க்க முடியாதளவிற்கு நான் களைத்தே விட்டேன். அம்மா தன்னை இயக்கி கீழிறங்கி ஷீலாவின் பெற்றோரின் இருப்பிடம் சென்று எமது அன்பைத் தெரிவிக்கின்றார். அந்த சின்ன இடைவெளிக்குள் அம்மாவின் கால்களை நுளம்புகள் (தமிழ்நாட்டு வழக்கில் கொசுக்கள்) மொய்த்து விட அம்மா ஒருவாறு வந்து வண்டியுள் ஏறினார்.

அங்கிருந்து கோவிந்த் வீடு போகின்றோம். கோவிந்த் வீடு செல்லும் போது நள்ளிரவாகிவிட்டது. எங்களிற்கு வழி காட்டும் முகமாக மோட்டார் சைக்கிளில் இடையிலேயே வந்து எங்களை தன் வீட்டிற்குக் கூட்டிச் செல்கின்றார் கோவிந்த். கோவிந்தின் தாயார், மனைவி மற்றும் ஒன்று விட்ட சகோதரி எல்லோரும் எங்களை வரவேற்க அவரது புது வீட்டுக்குள் என்னையும் அழைத்துச் செல்லுகின்றனர். இன்னும் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றதே. அதனால் எனக்குச் சிறிது ஓய்வு தேவைப்பட்டது.

கோவிந்த் வீட்டிலோ எனக்கு எது பிடிக்கும் என்று தெரியாமல் பலவற்றையும் ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

பயணம் தந்த களைப்பில் எனக்கு காய்ச்சல் வருவது போன்ற உணர்வு. இரவு பன்னிரண்டு மணிக்கு என்னால் இந்த உணவை உட்கொள்ளத்தான் முடியுமா? மிகச் சிரமப்பட்டு கொஞ்சம் சோற்றை உட்கொள்கின்றேன். "உங்களுக்கின்னு சமைச்சதெல்லாம் வேஸ்ட் நிலா" என்று இப்போதும் தான் புலம்புகிறார் கோவிந்த்.

உணவு முடிந்ததும் அவர்களுடன் உட்கார்ந்து உரை யாடும் போதுதான் அவர்களிற்கு என் கவிதை ரொம்பவும் பிடிக்கும் என்றும், கோவிந்துடன் இணையத்தில் பரிமாறிய கவிதைகளை அவர்களும் சுவைத்திருக்கிறார்கள் என்றும் தெரிகின்றது. ஓரிரு கவிதைகளை அவர்கள் மகிழ்விற்காக ஒப்புவிக்கின்றேன். ஒன்று மட்டும் உண்மை என் எழுத்தின் மீது மற்றவர்கள் காட்டும் ஆர்வம் எப்போதுமே எனக்கு ஓர் அதீத சக்தியைத் தருகின்றது.

இல்லாவிடில் எப்படியென்னால் இந்தக் களைந்த நிலையிலும் எனக்குக் கவிதை சொல்ல முடிகின்றது. கோவிந்தின் பிள்ளைகள் உறங்கிவிட்டார்கள். அதனால் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

இரவு ஒன்றரை மணியளவில் மீண்டும் எங்கள் பயணம் பாண்டிச்சேரி நோக்கித் தொடர்கின்றது. இளங்கோவிற்கோ சாரதி மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிட்டதால் தானே அந்த வண்டியைத்தானே ஓட்டுவதற்கு முயற்சிக்கின்றார். நித்திரைக் கலக்கத்தில் சாரதி எங்காவது எம்மைக் கொண்டு போய் மோதி விடுவாரோ என்ற பயம் அவருக்கு. காலை ஆறு மணியளவில் பாண்டிச்சேரி சென்றடைகின்றோம்.

■

# பாண்டிச்சேரியில்...

அங்கு சிவா வழியிலேயே வந்து எங்களை வரவேற்றுத் தன் வீட்டிறிகு அழைத்துச் சென்றாலும், கண் திறந்து கூட பார்க்கமுடியதளவிற்கு எனது நிலை. வண்டியிலிருந்து சக்கர நாற்காலிக்கு இருத்தி உள்ளே கொண்டு செல்லும் போது சிவாவின் மகன் லோகேஷ் மிகச் சாதாரணமாக 'ஆன்ட்டி எப்படியிருக்கீங்க' என்று என்னைச் சுகம் வினவுகின்றான். சிறு வயதிலிருந்தே தொலைபேசி மூலம் அறிமுகமான அந்தப் பையனுக்கு என்னைக் காணும் போது எதுவித சங்கடமும் இருக்கவில்லை.



வீட்டினுள்ளே போகும்போது அவரது மனைவி, மகள் எல்லோரும் எம்மை வரவேற்று நாம் ஓய்வெடுக்க ஒழுங்கு செய்கின்றார்கள். சிவாவினது மூன்றாவது மகள் குழந்தை தர்ஷினி ஓர் தடுக்கின் மீதே கிடத்தப்பட்டிருக்கின்றது. சற்று நேரத்தில் என்னையறியாமலேயே நான் தூங்கி விடுகின்றேன். காரணம் என்னைத் தொற்றிவிட்ட காய்ச்சல் என்னைப் பாடாய்ப் படுத்துகின்றது. பயணம் மேற்கொண்ட களைப்பல்லவா? மதியம் ஆனதும் சிவாவினது மகள் ஹேமா தங்களது புகைப்படங்கள் பலவற்றையும் கொண்டுவந்து காட்டுவதோடு பட படவென்று கதைத்தும் கொள்கின்றார். சாப்பாட்டு மேசைக்குக் கொண்டு செல்லப்படுகின்றேன். எவ்வளவோ அக்கறை எடுத்து இவர்கள் எமக்காக சமைத்திருந்தாலும் உடல் நிலையும் அவற்றைச் சாப்பிட இடம் கொடுக்காத சூழல். பாண்டிச் சேரியில் உள்ள ஓர் தியான மண்டபத்திற்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும் என்பது சிவாவின் விருப்பமாக இருந்த போதும் அதற்கும் என் உடல் விட்டுக் கொடுக்கவில்லை.

மீண்டும் மற்றைய பயணத்திற்கு நாம் தயாராகுவோம். காரணம் சென்னை நோக்கி இன்று போனால்தானே நாளை காலை இலண்டன் நோக்கிப் பயணம் செய்ய முடியும். சிவாவும் சென்னை வந்து பயணம் அனுப்புவதாக இருந்தாலும் எம்மை முன்னே சென்னை அனுப்பிவிட்டு தான் ஓரிரு மணித்தியாலங்கள் கழித்து வருவதாகக் கூறி வீட்டில் நின்று விடுகின்றார்.

■

# சிங்காரச் சென்னை

**செ**ன்னையில் ஏற்கனவே வேலைக்கென ஒழுங்கு படுத்தப்பட்ட அந்த ஹோட்டலில் சில படிகள்தான் எனக்கு முட்டுக்கட்டையாக இருந்தன.

ஏற்கனவே நள்ளிரவாகி விட்டதால் அதிகாலையில் எழுந்து பயண ஏற்பாடு கருதி இரண்டு மணித்தியாலங்கள் படுக்கையில் சாய்வோம் என முடிவு செய்கின்றோம். ஒரு மணித்தியாலம் சேமிப்பு செய்வதற்காக பாண்டிச்சேரியி லிருந்து வந்த உடையுடனேயே பயணத்தை மேற் கொள்ளலாம் என முடிவெடுக்கின்றோம். அதிகாலை யிலேயே சிவா, இளங்கோ, இளங்கோவின் நண்பன் பாலா இவர்கள் சகிதம் சென்னை மீனாம்பாக்கம் நோக்கி விரை கின்றது எங்கள் வாகனம். அங்கு போனால் பல நடை முறைச்சிக்கல்கள். வரும்போது என்னை சக்கர நாற்காலியில் தள்ளிக்கொண்டு வந்த அம்மா இன்று சக்கர நாற்காலிக்கு உரியவராக பயணம் செய்கின்றார் என்றார் என்றால் எங்கள் நிலைமையை சிந்தித்துப் பாருங்கள்.

நேரடியாக பயணம் செய்ய வேண்டும் என்பதற்காக பிரிட்டிஷ் எயாவேசில் ஆயிரம் பவுண்டுகளைச் செலுத்தி மேலதிக நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றோம் அல்லவா. அந்தச் சுமையுடன் நாம் கொண்டு வந்த சுமையை கொண்டு செல்ல முடியாது என்ற சுமையும் சேர்ந்து கொண்டது. ஜுலை 15ஆம் தேதி பயணிக்க வேண்டிய நாங்கள் ஏறக்குறைய ஐந்து கிழமைகள் கழித்து ஆகஸ்ட் இருபதாம் திகதி பயணிக்கின்றோம்.

விமான நிலையத்தின் பிரயாணிகள், அனுப்புபவர்கள் அமரும் இடத்திற்குச் சென்று சிறிது நேரம் அமர்கின்றோம்.

நேரம் வந்ததும் அங்கேயுள்ள ஓர் பணிப்பெண் ஒருவரிடம் இளங்கோ உரையாடி ஒருவாறு எம்மிடம் உள்ளே செல்லும் வரை தொடர்கின்றார். ஒருவரால் இரண்டு சக்கர நாற்காலியைத் தள்ள முடியுமா? அவை மட்டுமா எங்களுடன் கொண்டு வந்த பொருட்களையும் ஓர் தள்ளு வண்டியில் வைத்து உள்ளே கொண்டு வந்ததெல்லாம் பெரிய பாடுகள். இந்த எமது நிலை பயணம் சொன்னது பாதி சொல்லாதது பாதி என்ற விதமாக நாம் உள்ளே சென்று விட அங்கிருந்த விமானத்துப் பணிப்பெண்கள், ஆண்கள் எங்களைப் பாரமேற்கின்றனர். மீண்டும் இந்தியா வரக் கிடைக்குமென எனக்கு அப்போது தெரியாது.

■

# 2009 இல் மீண்டும் இந்தியவுலா

இப்போதும் விமானத்தில் உட்கார முடியாமல் மிக அவஸ்தைப் படுகின்றேன். அம்மாவின் தோளில் சாய்வதும் நிமிர்வதுமாக மணித்துளிகள் மிக மெதுவாக நகர்கின்றன. எனது முன்னிருக்கையின் பிற்பகுதியில் பொருத்தப்பட்ட தொலைக்காட்சியில் நாம் பெங்களூர் செல்வதற்கு இன்னும் ஏழு மணித்தியாலங்கள் இருப்பதை அறிய முடிகின்றது. என்னுடைய உடல் நிலையின் நிமித்தம் பயணம் முடியும் வரை எனது சுகாதாரத் தேவைகளைக் கூட தீர்க்க முடியாது. ஆதலால் நீராகாரம் தவிர்த்து எனது பயணத்தை மேற்கொள்ளுகின்றேன்.



உணவுகள் பரிமாறப்பட்டால் கூட அதைப் பிரித்து உட்கொள்ளும் பலம் எனது கைகளுக்கில்லை. ஆதலால் எனது அம்மாதான் எனக்கும் உணவு தந்து தனக்கும் உட்கொள்ளுகிறார். எனக்கு உணவு தந்த அந்த இடைவேளைக்குள் அம்மாவின் உணவு ஆறிப்போவதைப் பார்க்கும் போது மனது வலிக்கிறது. இப்படி எத்தனை இழப்புகளைத் தான் தாங்கி என்னைச் சுமக்கும் எனது வயோதிபத் தாயார்! இப்போதும் தனக்குச் சக்தி இருக்கிறதோ இல்லையோ 'என்னால் முடியும் வரை நான் உன்னைச் சுமப்பேன்' என என்னுடன் பயணிக்கிறார்.

■

# பிரியாவின் பதட்டம்

**பெ**ங்களூர் விமான நிலையம் நாம் எதிர்பார்த்ததை விட மிக அழகாக, நவீனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. மெல்லிய குளிர் மேனியைத் தழுவுவது உற்சாகம் தருகிறது. என்னையும் அம்மாவையும் தனித்தனியே சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிக்கொண்டு போகும் இளம் வாலிபர்கள் தாங்களாகவே எங்கள் பயணப் பொதிகளை எங்களது உதவியுடன் இனங்கண்டு எடுத்து வைத்து வெளியே எம்மோடு கொணர்கிறார்கள். (அம்மாவால் நடக்க முடியும் என்றாலும் விமானத்திற்கும் வாயிலுக்கும் இடையில் உள்ள அதிக தூரம் கருதி அம்மாவுக்கும் சக்கர நாற்காலியில் கொண்டு செல்லப் பதிந்திருக்கிறேன்.)



என் கண்கள் பிரியாவிற்காக அலைய முற்படும் முன்பாக பிரியாவின் கையசைவு அவரை சுலபமாக கண்டு கொள்ள உதவுகின்றது. பிரியாவின் முகத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாகப் பதட்டம் தான் தென்படுகின்றது. அருகே அண்மித்த பிரியா "அக்கா! இன்னும் 'கெயா ரேக்கேர்ஸ்' வரல்லை." ஏன் என என் விழிகள் வினவும் முன்பாக "இன்னும் அரை மணிநேரம் எடுக்குமாம். என்ன செய்வோம்?". இன்னும் ஒரு மணிநேரம் பயணித்தே நாங்கள் ஏற்கனவே ஒழுங்கு செய்துள்ள 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி'க்கு போகலாமென்பதை அறிந்த நான் நிதானமாக நாம் அங்கே சற்றும் தாமதித்து நேரம் போக்காமல் உடனேயே போய் விடலாமென முடிவெடுக்கின்றேன்.

முன்பாக இருந்திருந்தால் பணிப்பெண்களின் தாமதம் கண்டு எனக்கு மூக்கிலே கோபம் வந்திருக்கும். ஆனால் இப்போதோ நான் வாழுங்கலையின் பயிற்சி பெற்றவள் ஆதலால் பொறுமை, நிதானம், சிந்திக்கும் ஆற்றல்

போன்றன எனக்குள்ளே சற்று அதிகரித்திருக்கின்றது. விமான நிலையத்து உதவியாட்கள் உதவியுடன் பிரியா என்னை காரினுள்ளே உட்காார வைக்கிறார். இம்முறை கடந்த முறைபோலல்லாது பலவித ஆயத்தங்களை நான் மேற்கொண்டு பயணித்திருக்கின்றேனே. இப்போது கூட ஓர் விதமான துணி ஒன்றை முதுகைச்சுற்றிப் போர்த்தி போட்டு அதன் மூலைகளில் உள்ள அதன் இழைகள் என் கால்களைப் பற்றும்விதமாக 'ஸ்லிங்' ஒன்றின் உதவியுடன்தான் இவர்கள் என்னை உள்ளே தூக்கி உட்கார வைத்தார்கள்.

பிரியா சென்னையிலிருந்து நேற்றே புறப்பட்டு பெங்களூர் வந்து இணையம் வழி என்னால் ஒழுங்கு படுத்தப்பட்ட 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' யில் முற்பணம் கொடுத்து, வாடகைக்கு எடுத்துவிட்டு அங்கிருந்து அதிகாலையில் அவர்களிடமே ஒழுங்கு செய்த மகிழூர்தியில் என்னை வரவேற்க வந்திருக்கும் எனது இணைய நண்பி. 2003 இல் நான் சென்னை வந்து இறங்கிய போதும் பல நண்பர்களுடன் என்னை வரவேற்றார். இம்முறை தன் பிள்ளைகளை கணவரின் கவனிப்பில் விட்டுவிட்டு எனக்காக இவ்வளவு தூரம் பயணித்திருக்கும் அவரது அன்பை அனுபவிக்க நான் கொடுத்து வைத்திருக்கிறேன்.

ஆறு வருடத்துக்குப் பின் சந்திக்கிறோம். இருவரது தோற்றத்திலும் ஆறு வருட ஓட்டம் தெரியத்தான் செய்கின்றது. பிரியாவின் கணவர் ரமேஷ், மகள் ரம்யா, மகன் ஹரி இவர்கள் பற்றி பேசியபடியே 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' வந்தடையும் போது மணி நாலரை ஆகி விடுகின்றது.

■

# வைஷ்ணவி ரெஸிடன்ஸியில் நாம்

ஒருவாறாக 104 ஆம் இலக்க அறைக்குள் என் சக்கர நாற்காலி சகிதம் நுழைகிறேன். கொண்டு வந்த 'ஹொய்ஸ்ட்' எனப்படுகின்ற என்னைத் தூக்கிப் பராமரிக்க உதவுகின்ற அந்த உபகரணத்தை பொருத்துவதற்கு உதவும் விதமாக ஏற்கனவே இலண்டனில் பிடித்து வந்த காணொளியை 'ஒளிப்படக்கருவி' உதவியுடன் மீள இயக்கி பிரியாவிற்குப் புரிய வைத்து பொருத்துவதற்கு ஆவன செய்கின்றேன்.

ஒருவாறாக இரு பணிப்பெண்களையும் பிரியா இயக்கி என் சுகாதாரத் தேவைகள் தீர்க்கப்பட்டு கட்டிலில் என்னைப் போடும்போது மணி ஏழாகி விடுகின்றது.

எனக்கும் பிரியாவிற்கும் தம்பி ராம்குமாருக்கு தகவல் கொடுத்துவிட வேண்டும் என்ற துடிப்பு. அவர் தங்கியிருக்கும் விடுதியோ எங்கள் தங்கும் இடத்திலிருந்து அரை மணிநேரம் காரில் பயணிக்க வேண்டியது. அவர் நள்ளிரவு பெங்களூர் பயணித்திருக்கிறார். அந்த நள்ளிரவில் என்னை வரவேற்க வந்து அலையவேண்டாம் எனக் கூறிவிட்டேன். ஏற்கனவே பயணக்களைப்புடன் இருக்கும் அவரை தொலைபேசியில் தொல்லை கொடுத்து நான் வந்து விட்டதை அறிவிப்பதில் பேரார்வம் பிரியாவிற்கு.

இன்னும் இரண்டு மணிநேரத்தில் தான் வந்து விடுவதாகக் கூறிவிட்டு மீண்டும் தூங்கி விட்டார் தம்பி ராம். படுக்கையில் மல்லாந்து படுக்கவோ சரிந்து படுக்கவோ முடியாமல் அவஸ்தைப்படும் நான். வியாழக்கிழமை என்பதால் காலை உணவு உட்கொள்ளவில்லை. காரணம் வியாழன் வெள்ளிக்கிழமைகளில் காலை உணவைத் தவிர்த்து விரதம் மேற்கொள்வது பழக்கமாக இருக்கின்றது.

■

# இன்னும் இருவர்

கதவு தட்டப்படுகிறது. ஆனந்தம் என் இதயத்தைக் கௌவிக் கொள்ளுகின்றது. காரணம் உடன் பிறக்கா விடினும் உடன் பிறந்தவனாய்த் தோள் கொடுக்கும் எனது அன்புத் தம்பி ராம்குமாரை ஆறு வருடங்களுக்குப் பின் காணப்போகின்றேன் என்ற அளவில்லாத மகிழ்ச்சி. உள்ளே நுழையும் தம்பி ராம்குமாருடன் என்னைப் பார்த்துச் சிரிக்கும் இன்னுமோர் பெண். நிச்சயமாக அந்தப் பெண் தம்பி ராம்குமாரின் மனைவி ஷீலா அல்ல.



அப்படியாயின் ஏற்கனவே பலதடவை தொலைபேசி மூலம் 'பெங்களூரில்' தொடர்புகொண்ட எனது இணைய நண்பி பத்மாவாக இருக்குமோ. என்பதை "இவங்க யார்? அக்கா!" என்ற தம்பியின் கேள்விக்குப் பதிலாகவும் வைக்கிறேன். "ஒதைப்பன்" என்ற அந்தச் சொல்லே எனது அன்புத்தோழி 'நிலாப்பெண்' என்ற 'யாஹூ ஐடிக்கு' அதிபதியான அனிற்றா. இவர் மும்பையிருந்து புறப்பட்டு என்னைக் காண வந்திருக்கும் ஒன்பது வருடத்திற்கும் மேற்பட்ட என் இனிய இணையத்தோழி.

தம்பி ராம்குமாரின் தோற்றத்திலும் மாற்றம். ஆனால் அப்பாவித்தனம் கலந்த சாந்தமான முகத்தைப் பார்க்கும் போது மகிழ்வாக இருக்கிறது. அவர் எனது இடபுறமும் நிலாப்பெண் எனது வலது புறமும் உடகார்ந்து கொள்கிறார்கள். நான் மகிழ்வை முழுதாக உணர்கிறேன். இவர்களைச் சந்திப்பதென்றால் சின்ன விடயமா என்ன? இன்றுதான் முதன்முதலாகப் பார்க்கின்றேன் நிலாப் பெண்ணை. இவரும் நானும் இணையத்து அரட்டை அறைகளுள் போட்ட அட்டகாசங்கள் பல. எப்போதுமே என்னை 'ஹாய் கியூட்டி பை' என மிக முக்கியத்துவம்

கொடுக்கும் அதே நேரம் உசார்ப்படுத்தும் அன்புக்குரிய சிநேகிதி. பிரியாவுக்கு நிலாப்பெண் என்னளவு பழக்க மானவரல்ல. ஆயினும் இயல்பாகப் பழகுகிறார்கள்.

இப்போதெல்லாம் தொலைபேசியில் கூட தொடர்பு வைத்திருக்காவிடினும் அந்தப் பிணைப்பு அவர் என்னை படுக்க வைத்து உட்கார வைத்து காட்டும் அன்பில் தெரிகின்றது. ஒருவரையொருவர் கண்டதில்லை என்ற போதும் காணும்போது எப்படி எங்களால் இவ்வளவு அன்யோன்யமாகப் பழக முடிகின்றது என்பது எனக்கு மட்டுமல்ல எனது அம்மாவுக்கும் கேள்விக்குறிதான். இணையம் மூலம் இதயங்கள் இணைவதால் ஏற்படும் விந்தை. நட்பின் பிணைப்பு!

■

# எதிர்பாராத சந்தர்ப்பம்

இந்தியா வந்த நான் சென்னைக்கு வராமல் பெங்களூருக்கு வந்ததற்கான முக்கிய காரணம் பெரும் மதிப்பிற்குரிய ஸ்ரீ ஸ்ரீ இரவிசங்கர் குருஜியை தரிசித்து அவர் ஆசியைப் பெறுவதற்காகவே. வாழும் கலை கர்த்தாவாகிய அவரைச் சந்திப்பதென்றால் அது மிகப்பெரிய விடயம். அதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டுமா கிட்டாதா என்ற ஆதங்கம் எனது மனதுக்குள் இருந்து கொண்டே இருந்ததால் இந்திய நாட்டின் நுழைவாயிலாக பெங்களூரைத் தேர்ந்தெடுத்தேன்.



சில வேளைகளில் நுழைவின் ஆரம்ப நாட்களில் அது கிட்டாது போகின் புறப்படும் போதாவது அதற்கான சந்தர்ப்பம் கிட்டக் கூடும் என்ற நப்பாசையின் நிமித்தம் புறப்படும் இடத்தையும் பெங்களூராகவே அமையும் விதமாக இருவழிப் பயணச்சீட்டை ஏற்பாடு செய்தே இந்தியா வந்தேன்.

இவ்வளவு எதிர்பார்ப்புள்ள எனக்கு வந்த மறுநாளே குருஜி அவர்களை தரிசிக்க அனுமதி கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இதற்குத் தம்பி ராம்குமாரின் முயற்சியும் காரணமான போதிலும் நானும் பாக்கியம் செய்தவள் என்றே கூறவேண்டும். நவராத்திரி தொடங்கு வதற்கு ஒருநாள் முன்பாக ஆசிரமமே மிகவும் பாதுகாப்புக்குரியதாக ஆக்கப்பட்டு வழமையான செயல்கள் தடைப்பட்ட அந்த நேரத்தில் எனக்கு சந்திக்கும் நேரம் தர குருஜியின் காரியதரிசி இணங்கினார் என்றால் தம்பி ராம்குமாரின் வேண்டுதலின் பெயரில் வாழும் கலையின் தொண்டரான சென்னை வாழ் கணேஸ்ஜி அனுப்பிய மின்னஞ்சல்தான் வழிவகுத்தது. அம்மின்னஞ்சலை தம்பி

ராம்குமாரின் தொலைபேசி மூலம் நான்பார்க்கப் பெற்றேன்.

வெள்ளிக்கிழமை காலை 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' யின் வாயிலில் நிறுத்தப்பட்ட வாடகைக் காரினுள் தன்னந்தனியாகத் தானே அலாக்காகத் தூக்கி என்னை உட்கார வைக்க உள்ளிருந்து நிலாப்பெண் என்னைச் சௌகரியப்படுத்துகிறார். எங்கள் வண்டி அம்மா, பிரியா இவர்கள் சகிதம் என்னைச் சுமந்து செல்ல தம்பி ராம்குமாரும், நிலாப்பெண்ணும் மற்றொரு காரில் எம்மைத் தொடர நாம் ஆசிரமம் செல்கின்றோம்.

எங்கள் கார் மட்டும் ஆசிரமச் சாலைகளில் செல்லுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. வெளியே வேறோர் இடத்தில் காரை நிறுத்திய தம்பி ராம் அந்தத் தாளாத வெயிலில் நடந்து வந்து என்னை மீண்டும் தூக்கிச் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளுகிறார். தியான மண்டபத்தில் மிக அமைதியாக எல்லோரும் அமர்ந்திருக்க மேடையில் குருஜி ஸ்ரீ ஸ்ரீ இரவிசங்கர் அவர்களுடன் மற்றும் சில சைவக் குருமார்கள் சிவலிங்கத்திற்குப் பூசை செய்ய சிறிது தூரத்திற்கு அப்பால் இருந்து பார்க்க முடிகின்றது. சிறிது நேரத்தில் பல கீர்த்தனைகள் ஒலிப்பது காதிற்கு இதமாக இருக்கிறது. அந்த மண்டபமே பல நாட்டு மக்களைக் கொண்ட இடமாக அதே நேரம் சூடு நிறைந்த தாகக் காணப்படுகின்றது.

பூசை நிறைவு பெற்றதும் வெகு அவசரமாக பலரும் மணடபத்தை விட்டு வெளியேற என்னையும் தம்பி ராம் அவசரமாக ஓரிடத்திற்குத் தள்ளிச் செல்கிறார்கள். அந்த வழி குருஜி காரில் பயணிப்பார் எனவும் அவரை அருகாமையில் தருசிக்கலாம் என்ற எதிர்பார்ப்புத்தான் அந்த அவசரத்திற்குக் காரணம் என்பதை அறிந்து கொள்ளுகின்றேன்.

ஓர் வெள்ளைக் கார் எம்மை நோக்கி வருவதைக் காண முடிகின்றது. அதை நகரவிடாமல் மக்கள் குழுமிக்கொள்ளு கிறார்கள். கறுப்புக் கண்ணாடிக்குள் முகத்தைத் தேய்த்து குருஜியை காணமுற்படும் போது அந்தக்கண்ணாடி சற்றுத் தாழ்கின்றது. அதனூடு தங்கள் மனக்கிடக்கைகளை எழுதிய காகிதங்களை, மலர்களை உள்ளே இடுகிறார்கள். அந்தக் குறுகிய நேரத்துக்குள் எனது அம்மா தனது

உள்ளக்கிடக்கையை எழுதிய மிகச்சிறிய தாளை (அதுவும் ஒரு கரையில் ஒட்டும் தன்மையுள்ள) தம்பியிடம் நீட்ட தம்பி அதை விரலில் ஒட்டி அதை உள்ளே நீட்டுகிறார். அதைக் குருஜி பெற்றுக்கொண்டார். அம்மாவுக்கோ மிகவும் மகிழ்ச்சி. இன்று காலைதான் அம்மாவிடம் கூறினேன். ஏதாவது மனக்குறை இருந்தால் எழுதி வாருங்கள் என. சொன்னவள் செயற்பட மறந்து விட்டேன்.

இதற்குப்பின் காரியதரிசியின் அறைக்கு அந்த சூடான கரடுமுரடான தளத்தையோ கருத்திற் கொள்ளாது எனது சக்கர நாற்காலியியை தம்பி தள்ளிச் செல்ல எனது கையிலுள்ள ஒளிப்படக்கருவி போகும் பாதையையும் ஆசிரமத்தின் அழகான காட்சிகளையும் படம்பிக்க முனைந்து போராடுகிறது. காரணம் கைகளை ஸ்திரமாக பிடிக்க முடியவில்லை. அரை மணித்தியாலமளவில் எங்கள் அழைப்புக்காக காத்திருக்கிறோம். அந்த வேளை எங்கள் அரட்டைகளை நாங்கள் மேற்கொள்ள அம்மாவும் ரசித்தபடி கலந்து கொள்ளுகிறார். தம்பி எங்கள் எல்லோரையும் ஒளிப்படக்கருவியில் படம் பிடித்துக் கொள்ளுகிறார். இருபது நிமிடங்கள் எம்மைக் கடந்து செல்கின்றன.



ஓர் பெண் வந்து இன்னுமோர் இடத்திற்கு எங்களை குருஜியைக் காண்பதற்காக அழைத்துச் செல்லுகிறார். வீடியோ படம் பிடிக்க முயற்சித்த எமக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. இன்னுமோர் மண்டபத்திற்கு வெளியே இருபது பேர் மட்டில் குருஜியின் வரவிற்காகக் காத்திருக்கிறோம். வெள்ளைக்கார் ஒன்று நிற்கிறது. குருஜியும் இன்னும் சிலரும் மண்டபத்திற்கு உள்ளே போகும் வேளை எல்லோரும் கைகூப்பி வணக்கம் செலுத்துகிறார்கள். உயர்த்த முடியாத இரண்டு கைகளுடன் அவர் முகத்தை பார்த்த அதே வேளை அவரும் என்னைப் பார்க்கிறார். "வாங்க'' என்று புன் முறுவலுடன் அழைத்துவிட்டு உள்ளே போய்விடுகிறார்.

எனக்கு மட்டுமல்ல என்னுடன் வந்த எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. உள்ளே நுழைகிறோம். வந்தவர்களில் ஒரு பகுதியினர் இந்தியப் பாராளுமன்றத்தில் பதவி வகிப்பவர்கள் என்பதை உணர முடிகிறது. பத்திரிகை யாளர்கள், தொண்டு நிறுவன அதிகாரிகள் எல்லோரும்

அங்கிருந்த இருக்கைகளில் அமர்ந்து தங்கள் விண்ணப் பங்களை, குறைகளை அவருடன் பகிர்ந்து கொள்ளு கிறார்கள். ஆங்கிலம், ஹிந்தி, கன்னட மொழிகளில் குருஜி பேசிக்கொள்ளுகிறார். நாமும் எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்குவதைப் பார்த்த அவர் "உக்காருங்க அப்புறம் பேசலாம்" என்று கூற அதுவே எங்களுக்கு ஆறுதலாக இருக்கின்றது. சற்றுத் தள்ளி உட்கார்ந்த நாங்கள் எங்கள் ஒளிப்படக்கருவியில் குருஜி அவர்களைப் பதிவு செய்கின்றோம்.

எங்கள் முறை வந்ததும் அவர் முன்னாகச் சென்று எனது கையிலுள்ள பூச்செண்டை அவரிடம் நீட்டு கின்றேன். எனது சிரமம் உணர்ந்த அவர் தன் இருக்கை விட்டு எழுந்து அதைப் பெற்றுக் கொள்ளுகிறார். தம்பி ராம்குமார் தான் கொணர்ந்த பொருட்களை குருவுக்குத் தட்சணையாக கொடுக்கிறார். அந்தப் பொருட்களுள் குருஜிக்குப் பிடித்தமான வெல்லம் இருந்ததாம். தம்பி ராம்குமாருக்கு சால்வை வரவழைத்துப் போர்த்துகிறார். எங்களுக்கும் பழங்கள் தனித்தனியே தருகிறார். என்னால் எதுவுமே பேசமுடியவில்லை மௌனமாக இருக்கிறேன். என்னைப் பார்த்து "எல்லாம் சரிவரும்" என்கிறார் குருஜி. அதற்குள் எத்தனை அர்த்தங்களோ!.

எங்கள் நாட்டு மக்கள் நிலை பற்றி குருஜி முன் "எங்கட மக்கள் கஸ்டப்படுகினம் ஐயா" என்கிறேன். "யாராவது சொந்தக்காரங்க அங்கே இருக்காங்களா?'' குருஜி கேட்கிறார். "எல்லாருமே எங்கள் சொந்தக்காரங்கதானே!" என்கிறேன் நான். "ஆமா. அது சரி" என்று கூறி அங்கிருந்த ஓர் தொண்டரை எனக்கு அறிமுகப்படுத்தி எங்கள் நாட்டு மக்களிற்கு உதவி செய்வதற்கான வழி பற்றி பேசிக் கொள்ளும்படி பணிக்கிறார். நாங்கள் எல்லோருமே மன மகிழ்வுடன் அவருடன் விடை பெறும் போது "சாப்பிட்டு போங்க" என்று குருஜி கூற அதுவே சாப்பிட்டது போன்ற ஓர் உணர்வை எமக்குத் தருகின்றது.

உணவருந்தும் இடத்தை நாம் அடையும்போது எங்களுக்கெனவே இருந்தது போன்று அந்த உணவு எமக்குக் கிடைக்கின்றது. அங்கே அந்தப் பிரதிநிதியுடனும் அளவளாவி விட்டு சில புகைப்படங்கள் பிடித்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்கிறோம். "டிவைன் சொப்"

இற்குச் சென்ற நாம் வெளியில் காத்திருந்த வேளை எனது நண்பி நிலாப்பெண் தனது அன்பளிப்பாக தன் கையிலிருந்த பொன் மோதிரத்தைக் கழற்றி எனக்குப் போடுகிறார்.

மழை தூறத் தொடங்குகின்றது. அவசர அவசரமாக தம்பியின் உதவியுடன் காருக்குள் இடம்மாற்றப்படு கின்றேன். நிலாப்பெண்ணையும் தம்பியையும் ஆசிரமத்தில் விட்டு விட்டு 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' நோக்கிப் புறப்படுகின்றது. நேரமோ மூன்றரையாகி விட்டது. தம்பி ராம் இன்று விமானத்தில் திருநெல்வேலி செல்லுகின்றார். அதேபோல் நிலாப்பெண்ணும் மும்பை செல்லுகிறார். நிலாப்பெண் என்னை விட ஒரு வயதால் இளையவர். மிகச் சிறிய வயதில் தனது தாய் மாமனைத் திருமணம் செய்து ஒரு மகனுக்குத் தாயாய் ஆனதோடு இன்று ஒரு மருமகளுக்கு மாமியார். பொறுப்பான பெரிய பதவி வகிக்கும் நிலாப்பெண் மிக நிதானமானவர். அவருடைய ஒவ்வொரு செய்கையும் முன்னெச்சரிக்கையான செயற் பாட்டைக் குறிப்பதை நான் கூர்மையாக அவதானித்தேன். முகத்தில் எப்போதும் அன்புடன் கூடிய புன்னகை அவருக்கு இன்னும் அழகு சேர்க்கிறது. அவர் எப்போதும் தம்பி ராமை அறிவுரை கூறி வழிநடத்துபவர். நிலாவுக்கு அம்மாவை மிகவும் பிடித்துக் கொண்டது. முக்கியமாக அம்மாவின் இலங்கைத் தமிழை மிகவும் ரசித்தார்.

தம்பி ராம் சக்கரநாற்காலியைத் தள்ளிக்கொண்டு போகும் வேளை, அம்மாவை நிலாப்பெண்ணும் பிரியாவும் ஆறுதலாக அழைத்து வந்தனர். இடைக்கிடை இளைப் பாறவும் செய்தனர். அப்போது அம்மா நிலாப்பெண்ணிடம், "நிலாப்பெண் எண்டு என்ரை மகள் சொன்னதும் ஓர் சின்னப்பெட்டை வருமெண்டு நான் நினைச்சன்" என்று வெளிப்படையாகவே சொன்னதும், அம்மாவின் பேச்சு அவருக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. ஊர் போயும் தொலைபேசியில் தான் தன் கணவருக்குச் சொல்லிச் சிரித்ததாகக் கூறி மகிழ்ந்தார்.

ஆசிரமத்தில் இருந்து 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' இற்கு வந்தாயிற்று. இந்த 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி' இல் பணிபுரியும் நபர்களைப் பற்றிச் சில வரிகள். இணையம் மூலம் இவர்களது முகவரி தெரிந்த நான் தொலைபேசியில்

அழைத்து என் உடல் நிலை பற்றிக் கூறினேன். அதற்குத் தகுந்த அறை கிடைக்குமா என வினாவினேன். சக்கர நாற்காலியில் செல்வதற்கான வழி இருக்குமா எனக் கேட்டேன். 'பரவாயில்லை வாருங்கள் மேடம், வாசலில் சில படிகள்தான் நாங்கள் உதவி செய்வோம். உள்ளே லிப்ட் உள்ளது'. அந்த சொல்லுக்கமைய அதே போல் எங்கள் மகிழூர்தி போய் நின்றதும் 'ஸ்லிங்'கின் உதவியுடன் என்னைத்தூக்கி உக்கார வைக்க ஆயத்தமாய் இருக்கும் என்னிலும் பல வயது குறைந்த பையன்கள். இப்படியான வரவேற்பே எங்களை மேன் மேலும் தங்க வைக்கும்.

அரை மணிநேரத்தில் தம்பி ராமும் நிலாப்பெண்ணும் அவசர அவசரமாக ஓடி வந்தார்கள் நான் கேட்டுக் கொண்டதற்கு அமைய வாங்கி வந்த பொருளை என்னிடம் தந்துவிட்டு எம்மிடமிருந்து பிரிய மனமின்றி விடைபெற்றார்கள். எனக்கும் பிரியாவிற்கும் மிகுந்த சங்கடமாகிவிட்டது. அம்மா இவர்களைப் பற்றி பேசிப் பேசி வியந்து போனார். தொலைபேசி அழைப்பு வந்தது. பெங்களூர் நண்பி பத்மா டில்லியிலிருந்து வந்த எனது பிறிதோர் சக்கர நாற்காலி பற்றி கூறினார். அச்சக்கர நாற்காலியைத் தனது வேலையாட்கள் மூலம் தனது அலவலகத்திற்கு வருவித்து பாகங்களாக வந்த அச்சக்கர நாற்காலியைப் பொருத்துவித்து அதை என் இடத்திற்கு அனுப்புவதற்கான வழிகளை அவர் மேற்கொண்டிருக் கின்றார். 

இது பற்றிய சிந்தனையிலிருந்த என்னை தனது நண்பன் கணேஷ் என்னைப் பார்க்கப் பிரியப்படுவதாகவும் அவனை அழைத்து வரவா எனவும் கேட்டார் பிரியா. ஆம் என்றேன். மோட்டார் சைக்கிளில் வந்து என்னைச் சந்திக்க வந்த அந்தப் பையனும் பழகுவதற்கு இனிமையானவர். பிரியாவின் வேண்டுதலை நட்போடு நிறைவேற்றத் தயாராய் உள்ளவர் போல் தோன்றினார்.

பிரியாவோ என்னை விட்ட பாடில்லை. 'அக்கா வாங்கோ கடைக்குப் போவோம்' என்று. எனக்குமே பெங்களூரில் பொருட்கள் வாங்க வேண்டுமென்ற விருப்பம் அடிமனதில் இருந்து கொண்டுதான் இருந்தது. உதவ கணேஷ் இருக்கிறார் என்ற துணிச்சலும் எட்டிப் பார்க்க கடைகளுக்குச் செல்ல முடிவெடுத்தோம். இரண்டு

பணிப்பெண்கள் சகிதம் நானும் பிரியாவும் காரில் கடையை நோக்கிப் புறப்பட கணேஷும் எங்களை மோட்டார் சைக்கிளில் தொடர்ந்தார். மறுபுறம் தம்பி ராம்குமாரும், நிலாப்பெண்ணும் தங்களை விமானங்களை தவறவிட்டு அடுத்த விமான ஒழுங்கு செய்து போனது பின்பு தெரிந்து கொண்ட புதினங்கள்.

■

# பெங்களூர் கடைகள்

பல மாடிகள் கொண்ட அந்தக் கடைகளின் கீழே உள்ள மகிழூர்தி தரிக்கும் நிலையத்தில் அந்தக் கார் நிறுத்தப்படுகின்றது. அங்கும் ஏழு படிகள் ஏறிச் செல்ல வேண்டும். அதன் பின்புதான் 'லிப்ஃட்' பாவிக்க முடியும். சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டு சக்கர நாற்காலியுடனேயே தூக்கிச் செல்லப்படுகின்றேன். ஒன்றரை மணி நேரத்துக்குள் கணேஷ் புறப்பட்டு விட வேண்டும் என்ற நிலை. ஒரேயொரு கடைக்குள் நான்கு சுடிதார் செட்டுகள் வாங்கிக் கொண்டு மீண்டும் என்னைக் காரினுள் ஏற்றிவிட்டு கணேஷ் புறப்படுகின்றார்.

களைப்புடன் படுக்கைக்குப் புறப்படுகின்றோம். வழமையாக வேலை செய்யும் எனது சுவாசத்திற்கு உதவும் இயந்திரம் இன்று இயங்க மறுக்கின்றது. எத்தனையோ முயன்றும் தோற்றுப்போய் படுக்கையில் சாய்கிறோம்.

நாளை நாங்கள் இன்னொரு நண்பன் ஜே.கே யைச் சந்தித்துவிட்டுச் சென்னை செல்வதாக ஏற்பாடு. இவை எல்லாவற்றின் மத்தியிலும் பெங்களூரில் உள்ள போதே திரைப்பட இயக்குனர் விசுவின் மனைவிக்கு தொலை பேசியில் அழைத்து திருவாளர் விசுவைச் சந்திப்பதற்கான வாய்ப்புள்ளதா என வினவுகின்றேன். தாங்கள் ஓசூரிலிருந்து சென்னை புறப்படப் போவதாகவும் விரைவில் ஓசூர் திரும்பி வரவிருப்பதாகவும் பதில் கிடைக்கிறது.

■

# சென்னை நோக்கி

எதிர்பார்த்தபடி நண்பன் ஜே.கே வருவதாக இல்லை. இலண்டனிலிருந்து கொண்டு வந்த அத்தனை பொருட்களையும் மீண்டும் பொதிகளாக்கி அதற்கான வாகனம் ஒழுங்குபடுத்தி என்னையும் அந்த வாகனத்துக்குள் திணித்து புறப்படும்போது சனிக்கிழமை மணி ஒன்றரையைத் தாண்டி விட்டிருக்கிறது. என்னைத் திணிக்கும்போது எனக்கு காலில் ஏற்பட்ட வலியை அம்மாவிற்குக் காண்பித்துக் கொள்ளாமல் அத்தனையையும் எனக்குள் விழுங்கிக் கொள்கின்றேன். அம்மா முன்புறம் உட்கார அடுத்த இருக்கைகளில் நானும் பிரியாவும் உட்கார எனது பணிப்பெண்கள் எனக்குப் பின் உட்கார பயணம் தொடர்கிறது.



நின்று நிதானித்து மதிய உணவை சாப்பிட்டுப் போயிருக்கலாம் என உதவிக்கு வந்த பிரியாவின் நண்பன் கணேஷ் குறைப்பட்டுக் கொள்கின்றார். சென்னை செல்ல கடைசி எட்டு மணிநேரமாகுமே என்ற ஒரே எண்ணம்தான் என் மனதுக்குள். ஒரே இருக்கையில் எத்தனை மணி நேரம்தான் உட்கார்ந்து பயணம் செய்வது? கர்நாடக எல்லை தாண்டி தமிழ்நாடு போனதும் எங்கும் தமிழில் எழுதப்பட்ட பலகைகள் மனதுக்கு இதமளிக்கின்றது. ஏதோ எமக்குப் பாதுகாப்பு இருப்பது போன்ற உணர்வு. எதிர் பார்த்ததை விட சாலைகள் அனைத்தும் புதியதாகப் போடப்பட்டதோடு பார்வைக்கு அழகாக இரு மருங்கிலும் பூச்செடிகள் நாட்டப்பட்டும் இருக்கின்றது ஆறுதல் தருகின்றது. வானமகள் தன் இருட்டு எனும் போர்வையை சூரியனிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ள என்னவோ போர்த்திக் கொள்ளுகிறாள்.

பிரியா சங்கீதம் பற்றிப் பேசிக்கொண்டு வருகிறாள். அதற்குள் அவருக்கு ஏராளமான தொலைபேசியழைப்பு களும் வேறு. என்னிடம் வந்ததால் தன் கடமையைச் சரிவரச் செய்ய முடியாமல் திண்டாடும் பிரியா. நவராத்திரியை அண்மித்த நாட்களாதலால் சங்கீத ஆசிரியையான பிரியாவிற்கு தனது மாணவர்களை ஊக்குவித்து பல நிகழ்ச்சிகள் நடாத்த வேண்டிய கடமை இருந்தது. அந்த விதமாக ஓர் நிகழ்ச்சிக்குத் தனது சீடர்களை தொலைபேசி மூலமே ஒழுங்குபடுத்தி அதைப் பொறுப்பாக நடாத்துவதற்கு தன் நண்பியொருத்தியை ஏற்பாடு செய்யும் மும்முரத்தில் தான் இந்த தொலை பேசியழைப்புகள். பயணத்தில் ஈடுபட்டிருக்கும்போதே அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடந்ததற்கான செய்தியும் தொலை பேசியில் கிடைத்துவிட எமக்கு ஆறுதல் கிட்டியது.

வேலூரை அண்மித்துக்கொண்டிருக்கிறது எங்கள் வாகனம். "பிரியா பாடலாமா!" என்கிறேன் நான். நிச்சயமாக அக்கா என்று விட்டு பிரியா அழகாக பாடுகிறார். அதன் பின் என்னைப் பாடும்படி வற்புறுத்த வழமையாக நான் இணைய அரட்டையரங்குகளில் பாடும் பாட்டான 'அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா?' என்ற பாட்டை இயன்றளவு சிரமப்பட்டு பாடுகிறேன். நான் சங்கீதத்தைப் பொறுத்தளவில் ஓர் ஞான சூனியம் என்பதை சொல்லியே தான் ஆக வேண்டும். பிரியாவின் தன்னடக்கமும் தனது சிறார்களுடன் அளவளாவும் அன்பு தொனித்த உரை யாடல்களும் இன்றும் என் மனதில் இனிக்கின்றன. ஒவ்வொருவரிடமும் ஓர் சிறப்பம்சம் இருக்கிறது என்பார்கள் இந்த இயல்பான தன்மைதான் எப்போதுமே உரிமையாக அவரிடம் உதவி பெற என்னைத் தூண்டுகிறதோ!

எவரும் மன உவப்புடன் உதவிபுரியும் போதுதான் எம்மனம் நிறைகிறதல்லவா?. சென்னையில் இன்னுமோர் அன்புள்ளம் ராகவன் எனக்கேற்ற வசதி கொண்ட அறைகளுடைய ஹோட்டல் ஒன்று எங்கிருக்கிறது என்பது பற்றியும் அந்த அறைகளின் தன்மை பற்றியும் அடிக்கடி பிரியாவிற்குத் தெரிவிப்பதோடு என்னுடனும் சுகம் விசாரிக்கிறார்.

■

# ஹோட்டல் அசோகா

ஒருவாறாக சென்னைக்குள் நுழைந்து விட்டோம். சந்தடி நிறைந்த சென்னைச் சாலைகள். பலவிதமான கடைகளின் பெயர்ப்பலகைகளை ஆவலுடன் பார்த்த படியே செல்லும் எனக்கு சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலகம் கண்டதும் ஒருவிதமான துன்பம் தொண்டைக்குள் வேதனையாக வெளிப்படுகின்றது. ஏனோ எங்கள் ஈழ மக்கள் துன்பம் தாளாமல் தன் உயிரையே தானம் செய்ய தன் உடலை தீக்கு ஈந்தவன் தியாகச்செம்மல் முத்துக்குமரன் நினைவு எனை உலுக்கியது. அவர் தன்னினிய உயிரை எமக்காகத் தாரைவார்த்தது சாஸ்திரிய பவனுக்கு முன்னால் தான். என்றாலும் நினைவுப்பறவை எங்கெல்லாம் பறக்குமே!

அதையடுத்துச் சற்றுத் தள்ளியுள்ள அசோக்கா ஹோட்டலுக்கு வழி காட்ட பிரியாவுடன் தொலை பேசியில் தொடர்பிலிருந்த ராகவன் வீதிக்கே வந்து விட்டார். என்னைக் கண்டதும் "அக்கா" என வாஞ்சையுடனழைக்க "போதும்! போதும்! உன்ரபாசம்" எனச் செல்லமாகக் கண்டிக்க உள்ளே அசைந்தேகி ஹோட்டல் அசோகா முன்றலில் தரித்து நிற்கிறது எங்கள் வாகனம். என்னைத் தவிர எல்லோருமே ஹோட்டலில் சென்று அந்த அறை என் தேவைகளை தீர்க்கும் வகையில் அமைந்துள்ளதா என்று பார்த்து விட்டு வருகின்றனர். சில அசௌகரியங்கள் இருந்தாலும் அதைச் சமாளிப்பதற்கான வழிகளையும் பிரியா என் முன் எடுத்து வைக்க நாம் அங்கே தங்கலாம் என்று முடிவு செய்து சக்கர நாற்காலிக்கு மாற்றப்படுகின்றேன். சுற்ற வர நிற்கும் ஆட்களை பார்க்கும்போது பெங்களூர் 'வைஷ்ணவி ரெஸிடென்ஸி'யில் இருந்த மனப்பாங்கு வரமறுக்கிறது.

அவர்களில் ஒருவன் என்சப்பாத்துகளைக் கூட போடுவதற்கு அவகாசம் அளிக்கும் எண்ணம் இல்லாமல் மற்றவனிடம் "ஷூவை எடுத்திட்டு வாடா" என அவசரப் படுத்தியது எனக்கு வலித்தது. நானோ அதைத்துடைக்க "ஷூ போடவும் உரிமையில்லையா" என்று சிரித்தபடி கூற அதை உள்வாங்கிய தம்பி ராகவன் என்னைத் தள்ளிச் சென்று மற்றவர்கள் உதவியுடன் அந்த கோட்டேஜ்ஜூக்குள் ஏற்றிவிடுகிறார். இங்கிலாந்தில் இப்படியாக எவருமே நடந்து கொள்ள மாட்டார்கள். இப்படி நடப்பவர்களைத் தண்டிக்க சட்டம் கூட இருக்கிறது. ஓர் வலது குறைந்த வரின் உரிமைகள், உணர்வுகளுக்கு அந்தளவு முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. நோயாளியை பார்ப்பதே பெரிய காரியம் என்ற மனப்பாங்கு ஆசிய, ஆபிரிக்க நாட்டவர் போக்காக இருப்பினும் அந்த நாட்டுச் சட்டத்துக்காக அடங்கித் தான் நடப்பார்கள்.

முன்னே ஒரு வரவேற்பறை. அதையடுத்து ஒரு பெரிய ஒரு விசாலமான அறை, வசதியான குளியலறை என ஒரு பகுதியை எமக்கும், எமது பணிப்பெண்களுக்கு மேலும் ஓர் அறையை வாடகைக்கு எடுக்கப்படுகிறது.

இங்கே எல்லோருமே கவனிக்க வேண்டியது என்னவெனில் சாதாரணமாக ஒருவர் பயணம் செய்வதற்கும் நான் பயணம் செய்வதற்கும் உள்ள பணவிரயம். எத்தனையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. நோயை, நோய் தரும் துன்பங்களை, வைத்தியத்தை, வைத்தியம் தரும் துன்பங்களை அதன் செலவுகளை, பராமரிப்புகளை, பராமரிப்பவர்களை அனுசரித்தலை என எத்தனை சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது!.

அவசர அவசரமாக ஓடர் செய்து வரவழைக்கப்பட்ட உணவை அம்மா எனக்கு ஊட்டி விட அதேபோல் ராகவனும் அவசர அவசரமாக சாப்பிட்டபடியே என் சுகநலம் விசாரிக்க பிரியாவோ தன் கணவருடன் தான் ஆட்டோ பிடித்து வீடு வந்துவிடுவதாக அனுமதி பெற்றுக் கொள்ளுகிறார். பிரியாவை வீட்டில் கொண்டு போய் விட ராகவனும் கிளம்பிவிடுகிறார்.

■

# இயங்க மறுத்த எனது இயந்திரம்

இது ஒரு புறம் இருக்க நாளைய தினம் என் வாழ்வு எப்படி இருக்கப் போகிறது என்ற கவலை என்னை வாட்டுகிறது. காரணம் என்னை இடமாற்றுவதற்குக் கொண்டு வந்த உபகரணம் இயங்கமறுக்கிறது. என்னை கட்டிலிலிருந்த சக்கர நாற்காலிக்கு மாற்றுவதற்கு என்ன பாடு படப்போகிறார்கள்!. அருகில் படுத்திருக்கும் அம்மாவிற்குக் கூட என் துன்பங்களை இப்போதெல்லாம் நான் பகிர்வதில்லை. காரணம் வயது போன என் அம்மாவின் தோளில் இன்னும் துன்பங்களை சுமத்த எனக்குப் பிடிக்கவில்லை.



போதாக்குறைக்கு இரவில் எனக்கு சரியாக சுவாசிப்பதற்குதவும் வென்டிலேற்றர் (Ventilator) எனப்படும் இயந்திரம் கூட எனக்கெதிராய் வேலை செய்கிறது. ஆம் அதுவும் இயங்கவில்லையே!. உடலசதியில் தூங்கினாலும் வென்டிலேற்றர் (Ventilator) பயன்படுத்தாததன் பாதிப்பு காலையில் தெரிகிறது. ஏதோவொன்றை இழந்தது போன்றவுணர்வு. உடலில் உற்சாகம் இல்லை.

நாளை காலை ஒன்பது மணிக்கு தன் மகனுடன் என்னைப் பார்க்க வருவதாக பாண்டிச்சேரி நண்பன் சிவா தெரிவித்திருக்கிறார். அவர் ஏற்கனவே பெங்களூரில் வந்து என்னை பார்க்க வருவதாக இந்த ஏற்பாட்டை நான் சென்னை வருவதாகக் கூறியதுடன் மாற்றியிருக்கிறார். ஆறு வருடங்களின் பின் எனது நண்பன் சிவாவின் மகன் லோகேஷ் நன்றாகவே வளர்ந்திருக்கிறான். எனக்குக் காண்பிக்கவெனக் கொணர்ந்த புகைப்படங்களைக் காண்பித்து பல இடங்களுக்கு சுற்றுலா போன புதினங்களையும் பகிர்வதோடு தன் நண்பர்களையும் எனக்குக்

காட்டுவதில் காட்டும் ஆர்வம் என்னை வியக்க வைக்கிறது.

எமக்குத் தேவையான சில பொருட்களை வாங்கிவர சிவா புறப்பட்டு விட தனது அக்கா ஹேமா என்னிடம் கொடுப்பதற்கென கொடுத்து விட்டிருந்த அவரது அன்பளிப்பான ஒரு அழகான பிள்ளையார் உருவமைப்பு அடங்கிய கண்ணாடிப்பெட்டியை என்னிடம் தருகின்றார். தன் அக்காவின் அன்பளிப்பை புதிதாக கொள்வனவு செய்துள்ள எனது மகிழூர்தியின் முற்பகுதியில் வைக்கும் படி அன்பாக வேண்டிக் கொள்ளுகிறார். இந்தப் பிள்ளைகளின் தூய அன்பை நினைக்கும்போது மனதில் பெருமிதம்!.

பிரியாவின் தம்பி பாலாஜி அம்மாவையும் என்னையும் பார்க்க வந்திருக்கிறார். கடந்த முறை நான் சென்னையில் தங்கியிருந்த போது எனது அம்மாவை சென்னையின் எல்லையில் உள்ள நாகதம்பிரான் கோயிலுக்கு அழைத்துச் சென்ற அவரது கரிசனையையும் அன்பையும் நாம் மறக்க முடியாது.

■

# கடல்தாண்டி எனக்காக...

எனது பணிப்பெண்கள் என்னை அன்றைய நாளுக்காகத் தயாராக்கி விட்டார்கள். காலையில் எழும்போதே மனதில் மகிழ்வு, துக்கம், பாசம் எனப் பல உணர்ச்சிக் கொந்தளிப்புகள் கொண்ட இனம் புரியாத பல உணர்வுகள். இந்த உலகத்தில் என்னை நேசிக்கும் முதல் பத்து நபர்கள் என்ற சிட்டைக்குள் அங்கம் வகிக்கும் ஓர் இனிய உறவை நான் ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்களிற்குப் பின் சந்திக்கப் போகின்றேன். ஒரு விதத்தில் எனக்கு முன்மாதிரியாகச் செயற்படும் உறவு இவர் என்று கூடச் சொல்லலாம்.



இவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை ஏராளம். முக்கியமாகக் குடும்ப ஒற்றுமையை எப்படிப் பேணலாம் என்பதையும் மற்றவர் குழந்தைகளையும் எங்கள் குழந்தைகளாக அன்பு காட்டலாம் என்பதையும் செய்யும் எந்த வேலைகளையும் செவ்வனே செய்ய வேண்டுமென்பதையும் நான் இவரிடம் கற்றிருக்கின்றேன். இவர் எனக்காக சமைத்துத் தந்திருக்கிறார். என்னைப் பராமரித்திருக்கிறார். என்னிடம் நண்பியாக பல இடங்களிற்கும் என்னை என்னால் நடந்து செல்லும் நாட்களில் கூட்டிச் சென்றிருக்கிறார். நானும் இவரும் பல படங்கள் யாழ்ப்பாணத் திரையரங்குகளில் பார்த்து இருக்கிறோம்.

என்னுடைய பிறந்த நாளை இவர் மறந்ததே இல்லை. முன்பெல்லாம் ஊரில் வாழ்ந்த நாட்களில் இவரிடமிருந்து எனக்கு தபால் மூலம் மடல்கள், பரிசுப்பொதிகள் என்றெல்லாம் வரும். எல்லாவற்றிற்கும் மேலாக இவர் எனக்கு இரத்த உறவு. ஆம்! என் அன்பு அப்பாவின் கடைசித் தங்கைதான் இலங்கையிலிருந்து என்னைப்

பார்ப்பதற்கென இந்தியா வருகின்றார். இத்தனைக்கும் இவர் பெரிய சுகதேகியும் அல்ல. ஆம்! 'மாமி' என்று எம் இலங்கை வழக்கத்தின் படி அழைக்கப்படும் எனது அத்தை மீனம்பாக்க விமான நிலையத்திற்கு வருவதால் அவரது அண்ணியான எனது அம்மா அவரை வரவேற்று அழைத்து வரச் சென்றுவிட்டார். அவரைப் பொறுத்தளவில் எனது அம்மாவைத் தாயாகவே அவர் போற்றி வருகின்றார்.

அம்மா அவரைத் திட்டுவதும் பேசுவதும் கடிந்து கொள்ளுவதும் அன்பு காட்டுவதும் எங்களைப் பொறுத்தவரையில் அதாவது அம்மாவின் பிள்ளைகள், மாமியின் பிள்ளைகளைப் பொறுத்தளவில் ஒருவித நகைச் சுவைதான். நான் இலங்கையிலிருந்து இலண்டன் போவதற்கு இரண்டு வருடங்களிற்கு முன்பு கொழும்பில் தங்கியிருந்த எம்மை கொழும்புவில் வந்து சந்தித்த எம் மாமி மிகக் கலகலப்பாக செழிப்பானவராகக் காணப் பட்டார். ஆனால் இப்போதோ இரண்டு வருடங்களிற்கு முன் தனது கணவரை அதாவது மாமாவைத் திடீரெனப் பறிகொடுத்தவராதலால் உடைந்து போய் இருப்பாரே என்ற அந்தத் துன்பம் எனக்குள் இருந்தது. அம்மா பிரியாவின் தம்பி பாலாஜியுடன் விமான நிலையத்திற்குப் போய் விட்டார் என்பதால் அவர்கள் போக்குவரத்துப் பற்றிக் கவலை எனக்கு இருக்கவில்லை.

என்னுடன் இலண்டனிலிருக்கும் மாமியின் மகளும் நானும் சாதாரணமாக எடுத்த திடீர் முடிவையடுத்து இந்தியா வருமாறு அவரிடம் எங்கள் ஆலோசனைகளை முன்வைக்க தனித்துப் பயணிக்க தன் உடல்நிலை குறித்துத் தயங்கினாலும் என்னையும் அம்மாவையும் பார்க்கும் ஆவலில் மாமி இந்தியா வரச்சம்மதித்துவிட்டார். அதற்குப் பின் தொலைபேசிக்கு மேல் தொலைபேசியழைத்து பெரிய தொல்லையே பண்ணிவிட்டார்.

நாங்கள் பெங்களூருக்கு போய் அங்கிருந்து கேரளா போய் வைத்தியத்திற்கு உட்படும் காலங்களில் இலங்கையிலிருந்து வந்து மாமி எம்முடன் ஒருவாரம் தங்கிவிட்டு மீள்வதாகத்தான் திட்டமிட்டிருந்தோம்.

இந்தத் திட்டத்தை உள்வாங்கிக் கொண்ட மாமிக்குத் தான் இந்தியா வந்தால்கூடத் தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குப் போய் எப்படி மொழிதெரியாமல் சமாளிக்கப் போகின்றேன் என்ற கலக்கம்தான் இந்தத்

தொலைபேசித் தொல்லைக்குக் காரணம். ஆனால் எனக்கோ இந்த மாமிக்கு எங்கள் மீது அவ்வளவு நம்பிக்கையில்லையா, நான் அவரை நடுவீதியில் விட்டுவிடுவேன் என்று நினைத்தாரா என்ற கேள்விகள். எதற்கும் மாமி வந்து சேரட்டும் கேட்கலாம் என்று கறுவிக்கொண்டிருக்கிறேன். என்மாமியுடன் மிகவுரிமையாகக் கதைப்பவள் இவளாச்சே.

எங்கள் ஹோட்டல் பங்களா வாசலில் முச்சக்கரவூர்தி வந்து நிற்கின்றது. என் ஆசை மாமி வந்ததும் இருவருக்குமே மிகுந்த உணர்ச்சிப் போராட்டம். இருவருமே எங்கள் உணர்ச்சிகளை மறைப்பதற்கு முயற்சிக்கின்றோம். சில நொடிகளில் துன்பம் போய் இத்தனை வருடங்களின் பின் சந்தித்து விட்டோமே என்ற மகிழ்ச்சி முகங்களில் பிரதிபலிக்கின்றது. எங்களைப் பொறுத்தளவில் இதுவொரு சாதனை. கணித ஆசிரியையான அவர் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் தனது உடல் நிலையை மீறி ஒழுங்குகள் செய்து வருகை தரக் கிடைத்ததும், இந்த இயலாத நிலையில் கூட, நான் சென்னை சென்று அவரைச் சந்திக்கக் கிடைத்ததும் பெரிய சாதனையாகத்தான் எனக்கு இருந்தது. எனது பணிப்பெண்ணிடம் எங்கள் சந்திப்பைப் படம் பிடிக்கும் படி ஏற்கனவே கூறியிருந்தேன். ஆனால் அதை என் பணிப்பெண் படம்பிடிக்கத் தவறிவிட்டாள்.

பெங்களூர் வந்த நாம் எதிர்பார்த்ததை விட சுலபமாகவும் விரைவாகவும் குருஜியை சந்திக்கக் கிடைத்ததால் மேலும் பெங்களூரிலிருந்து எங்கள் பணத்தையோ, நேரத்தையோ விரயப்படுத்தாமல் சென்னை வந்துவிட்டோம். கேரளாவிற்குத்தான் நேரடியாகப் போக நினைத்தாலும் பெங்களூரில் நாமுள்ளவரை, கேரளாவில் எமக்கு தங்கி வைத்தியம் செய்வதற்கு அறை கிடைத்ததாகத் தகவல் கிடைக்கவில்லை. இவ்வாறாகத்தான் நாங்கள் சென்னை வந்ததும் மாமியைச் சந்தித்ததுவும். நாம் பெங்களூரிலிருந்து சென்னை பயணிக்கும் போதுதான் எனது நண்பர் கிருஷ்ணாவின் அப்பா எமது அறை ஒழுங்காகிவிட்டது என்பதைத் தொலைபேசியில்த் தெரிவித்தார். நாமென்ன செய்யமுடியும். அந்த இடத்துக்கான பணத்தைச் செலுத்தி அந்த அறையை எமக்கெனப் பதிவுசெய்யும்படி கூறிவிட்டேன்.

■

# மாமியின் அழுகை

ஏற்கனவே குறிப்பிட்டபடி, நான் என்னுடன் கொணர்ந்த உபகரணத்தைப் பயன்படுத்தி எனது பணிப்பெண்கள் என்னைச் சக்கர நாற்காலியிலிருந்து கட்டிலுக்கு இடம்மாற்றுவதைக் கண்ணுற்ற எனது மாமி விம்மியழத் தொடங்கிவிட்டார். ஏனென்றால் ஏதோ ஒரு பொருளைப் பாரந்தூக்கி (கிரேன்) மூலம் தூக்குவது போலத்தானே அந்த உபகரணத்தின் செயற்பாடு. என்னைச் சிறுவயதிலிருந்தே தூக்கிச் சீராட்டி, பாராட்டி வளர்த்த மாமிக்கு என் உடல்நிலையின் மாற்றங்கள் எல்லாமே நன்கு தெரியும். எனினும் அவருக்கு என்னை இப்படி இயந்திரம் மூலம் தூக்குவது, இடம் பெயர்த்துவது அவருக்குத் துன்பம் தருகிறது.

அது ஒருபுறமிருக்க என்னுடைய மனநிலையையும் உணர்வுகளையும் புரிந்தவர். பலவாறாகச் சிந்தித்து அழுகின்றார். நானும் அம்மாவும் அவருக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவர்களாகின்றோம். இந்த உடல் நிலையில் உள்ள நான் இலங்கையில் இருந்திருந்தால் என்னுடைய நிலமை என்னவாக இருந்திருக்கும் என்றெல்லாம் எமக்குள்ளேயே பேசி சமாதானமடைகின்றோம். இப்படித்தான் சில வேளைகளில் என் நிலைகுறித்து கவலைப்படுபவர்களுக்கு நான் ஆறுதல் சொல்லும் நிலை கூட அமைந்துவிடும்.

■

# நிலாவைப் பார்க்கவே ...

**ந**ண்பர் விஸ்வநாதன் தனது சக நண்பர் மைக்கேலுடன் எனை வந்து சந்திக்கின்றார். "நான் சந்திக்க வந்தது உதயகுமாரியையல்ல. நிலாவை" என்பது இவரது விவாதம். எடுத்ததுக்கெல்லாம் சிரிப்பும் விதண்டவாதமும் பேசும் இவரின் விமர்சனப் போக்கே என்னை இவருடன் நட்பாக்கி வைத்திருக்கின்றது. இவருடைய அம்மாவுடனும் நான் தொலைபேசியில் கதைத்திருக்கின்றேன். எப்படியும் சென்னையிலுள்ள தன் வீட்டிற்கு வருகை தர வேண்டுமென மிகவும் வற்புறுத்தினார். எவ்வளவு தான் நான் என் நிலை பற்றி சொன்னபோதும் அதை ஒப்புக்கொள்ளும் மனநிலை அவருக்கில்லை. அவர்களையும் ஒளிப்பதிவு செய்கின்றோம்.

மேலும் என்னுடன் அண்மையில் அறிமுகமான ரவிசங்கரும் எனை வந்து சந்தித்தார். எங்கள் சுகநலன்கள் பற்றி அறிந்த ரவி அம்மாவுக்கு இருக்கும் சருமவியாதி பற்றிய செய்தி கிட்டியதும் தனக்குச் சொன்னால் தெரிந்த வைத்தியர் எம் தங்குமிடத்திற்கு அண்மையில் இருப்பதாகக்கூறி அது பற்றிய தகவலைத் தன் தந்தையிடம் தொலைபேசியின் மூலம் பெற்றுத்தருகிறார். ஏதோ அதிக காலம் பழகியது போல் எம் விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்படும் பண்பு அபரிதமானது. உதவுவது என்பது நம்முடன் பிறக்க வேண்டிய குணமோ!

■

## கணேஷ்

இந்த வேளையில் 'வாழும் கலை' அமைப்பில் ஆசிரியராக பணியாற்றும் கணேஷ் அவர்களின் வருகையை அவர் தொலைபேசி அழைப்பு தெரியப் படுத்துகின்றது. வதனத்தில் புன்னகையும் சாந்தமும் தவழ ஏறக்குறைய 55 வயதையொத்த கணேஷ் அவர்கள் வந்து சந்தித்து குருஜியின் உருவப்படங்களையும் அன்பளிப்பு செய்கின்றார். இந்த வேளையில் என் நண்பர்களும் விடை பெற கணேஷ்ஜியுடன் என் உரையாடல் தொடர்கின்றது. ஏற்கனவே திரு கணேஷ் நோர்வேயிலுள்ள போது தம்பி ராம்குமாரின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதால் தொலை பேசியிலும் ஜிடோக்கிலும் தொடர்பு வைத்திருந்தவள் என்பதால் அவரை நேரில் சந்திக்கும்போது எனக்கு அதிக சங்கடம் இருக்கவில்லை. அவரும் மிக சாவகாசமாக தன் குடும்ப சூழல் முதல் தன் தொழில் வரை தோழமையுடன் மனம் விட்டு பேசினார்.

■

# சந்திக்க சங்கடம்

அடுத்த நாள் காலை தம்பி ராம் எனை தொலை பேசியில் அழைத்து "அக்கா உங்களை ஒருவர் பார்க்க பிரியப்படுகிறார் ஆனால் நீங்கள் தன்னை இன்னும் நினைவில் வைத்திருக்கிறீர்களோ என்று சங்கடப்படு கின்றாங்க". "அது யார்?" என்றேன். "உங்களுக்கு ரெத்தியை ஞாபகமிருக்கிறதா" இது தம்பி. "ஏன் இல்லை? நிச்சயமாக இருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள அந்தப் பெண்தானே" என்றேன் நான். "ஆம் அக்கா அவள் இப்போது சென்னையில் இருக்கின்றாள். உங்களை வந்து பார்க்கணு மாம். உங்களுக்கும் இன்டர்னெட் வேண்டுமென்றீர்களே அவள் வந்தால் உங்களுக்கும் உதவியாக இருக்கும்" என்றார். நானோ "நிச்சயமாக அவரை வரச் சொல்லுங்கள்" என்றேன்.

அழகிய சுருண்ட கூந்தல் விரித்தபடி தோள்களில் தவழ, அழகிய சுடிதாரில் ரெத்தி கதவைத் தட்டினார். அவருடைய பேச்சில் அவர் எங்கள் 'அன்பு அரண்மனை' என்ற அரங்க அறையின் மீது வைத்திருந்த பற்றும் பாசமும் ஆச்சரியம் தந்தது. சாதாரணமாக இடைக்கிடை இணையத்தில் எம்முடன் இணைந்து அரட்டை அடித்தாலும் இந்தளவிற்கு அந்த சூழலை நேசித்திருக்கிறார் என்பது ஆச்சரியம் தான். பல நண்பர்களைப் பற்றியும் சுகம் விசாரித்தார். மின்னஞ்சல் முகவரிகள் பரிமாறிக் கொண்டோம். எனக்கு எப்படியாவது இணையத் தொடர்பை எடுத்து தந்து விட வேண்டுமெனத் துடித்தார்.

பிரியாவின் தம்பி பாலாஜி என் வேண்டுகோளுக்கு இணங்க வெளிப்புறத்தில் செருகக்கூடிய 'சிடி டிரைவ்' வாங்கி வந்தார். அவருடனும் இணைய இணைப்பை எப்படி எடுக்கலாமென்று பேசிக் கொண்டோம். ஓர்

கிழமைக்குள் நான் அங்கிருந்து புறப்படும் சாத்தியம் இருப்பதாலும் அதற்கான விலை அதிகம் கொடுக்க வேண்டுமென்பதாலும் அதற்கு மாற்று வழி ஏதும் இருக்கின்றதா என்று சிந்தித்தார் ரெத்தி. இது சார்ந்த துறையினரிடம் மிகவும் மரியாதையாக அதுவும் கனிவாக அவர் பேசிய பாங்கு இனிமையாக இருந்தது.

எம்வாழ்வில் உண்மையில் மென்மையாகப் பேசுவதென்பது மிகுந்த முக்கியமானதொன்று. அதைக் கடைப்பிடிக்க பலராலும் முடிவதில்லை. கோபப்பட்டுப் மிக விரைவில் வெளிப்படும் பேச்சும் காரமாக இருக்கும். காரமாகப் பேசுவதால் என்ன கிட்டுகிறது. உடலுக்கும் துன்பம் கொடுப்பதோடு மற்றவர்களையும் சங்கடப் படுத்துகிறோமே! நாம் சிந்திப்பதற்குள் எங்கள் நாக்கு நீண்டுவிடுமே! என்ன செய்வது.

எத்தனையோ தடவை தனது சுற்றத்தாரினிடமிருந்து அழைப்பு வந்த போதும் அவர்களை சமாளித்து எனக்காக ஒரு மணி நேரம் மட்டில் செலவு செய்து தன் வளர்ப்பு மகளை பராமரிக்க வேண்டுமென என்னிடமிருந்து என்னை மீண்டும் வந்து சந்திப்பதாகக் கூறி விடை பெற்றார். மறுநாள் காலை அவருடைய பணிப்பின் பேரில் ஒருவர் வந்து எனது மடிக்கணனிக்கு (லப்டொப்) ஒரு விதமான தொலைத் தொடர்பு சொருகி ஒன்றை பொருத்த முயற்சி செய்தும் பயனளிக்காமல் சென்று விட்டார். ரெத்தியோ தான் ஏதோ தப்பு செய்து விட்டது போன்று பல தடவைகள் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இந்தப் பெண்ணின் அன்பை நோக்கும் போது வியப்பதைத்தவிர வேறு தெரிவிருக்கவில்லை.

இணையம் இல்லாமல் வாழ்வை ஓட்டுவது என்பது எனக்குச் சிக்கலாச்சே! என் நண்பர்களின் தொடர்பும் தடைப்படும். பல தகவலும் பெறமுடியாதே! இணையம் என் போன்ற உடல் வாதைப்படுபவர்களுக்கு வரப்பிரசாதம் அல்லவா? பல விடயங்களும் அறியப்படுவதோடு பல காரியங்களையும் சாதிக்கலாமே! உதாரணமாக இந்தியாவில் எந்த இடத்தில் மதுரை இருக்கிறது, திருச்சி இருக்கிறது, பெங்களூர் இருக்கிறது என்று நானாகவே கண்டு பிடிப்பேனே. மேலும் விமானச் செலவு, நேர அட்டவணை போன்ற தேவைகளுக்கும் உதவுமே!

■

# அண்ணாவும் தங்கையும்

அன்று மதியமளவில் ஓர் அண்ணாவும் தங்கையும் திருச்சியிலிருந்து எமைப்பார்த்துப் பேசவென வந்திருந்தனர். அவர்கள் எனது பெரிய அண்ணியின் உடன்பிறந்தோர். இவர்களுடன் நேரடியாகப் பழக எமக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. காரணம் அண்ணாவின் காதல் திருமணம் என்பது மட்டுமல்ல அண்ணியின் குடும்பத்தினர் இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்ததும்தான். அண்ணியின் சகோதரன் எங்கள் பெரிய மாமியின் மகன் கண்ணனின் சினேகிதனாக இருந்த காலங்களில் கேள்விப்பட்ட ஒருவர். இவர்களுடன் தொலைபேசியில் உரையாடியிருக்கிறோம். அவர்களுக்கு என்னைப் பார்க்க வேண்டும் என்ற பேரார்வம் இருந்தது. எங்களுக்கும் தான். கடந்தமுறை இந்தியா வந்தபோது தன்னார்வத்தை தங்கை சுகுணா தொலைபேசி மூலம் தெரிவித்தாலும் அவர் தந்தையைப் பராமரிக்கும் பொறுப்பிலிருந்ததால் அவரால் செயற்படுத்த முடியவில்லையே.

இந்தப் பெண் தன் தந்தையாரை அன்பு காட்டிப் பராமரிப்பது போல் எல்லாப் பிள்ளைகளும் தத்தமது பெற்றோரைப் பாதுகாக்க மறந்து விட்டார்களே! இங்கிலாந்தில், ஐரோப்பிய நாடுகளில் பெற்றோர் வீடுகளினுள்ளே, பிள்ளைகள் வேலைக்குப் போய்விட முடங்கிக் கிடப்பதுவும், இல்லையேல் பிள்ளைகளின் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியவர்களாக, பராமரிக்க முடியாதவர்களாக ஒருவித சிறைப்படுத்துதல் அனுபவித் தலும் துன்பமானதே. பிள்ளைகளின் பிள்ளைகள் மீது அவர்கள் அன்பு காட்டலாம். இப்படிச் செய்வது தான் அன்பு காட்டுதலுக்குச் சாட்சியெனப் பிள்ளைகள் கருத்தைக் கொண்டிருத்தல் கண்டிக்க வேண்டியது.

திடீரென எனக்குள் எழுந்த எண்ணத்தால் வந்த விளைவால் நானும் இன்று சென்னை 'போத்தீஸ்' போவது என உறுதியானது. உண்மையில் அம்மா தான் அவர்களை தனக்கு உதவிக்கென வரும்படி முன்பே கேட்டிருந்தார். அவர்களும் மிக மனதுடன் சம்மதித்து திருச்சியிலிருந்து இங்கு வந்து உள்ளனர. அவர்கள் புறப்படத் தயாரானதும் எனது சிற்றறிவு வேலை செய்யத் தொடங்கியது. சென்னை வந்தும் கடைகளுக்குப் போகாமல் போவது மடமைத்தனம். ஆகவே இவர்களின் உதவி கிடைக்கும்போது அதைப் பயன்படுத்த வேண்டியது தான். கடைக்குப் போவது என்றால் இன்னொருவரில்லாமல் போக முடியாதே. அம்மாவிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன். மாமியும் அதை மிகவும் ஆதரித்தார். அவர்களும் "அதுதான் சிறந்த வழி" என்று கூறினார்கள். வந்தவர்கள் இருவர், நாம் மூவர், எமது பணிப்பெண்கள் இருவர், மொத்தம் ஏழுபேர்.

அவர்கள் ஏறிவந்த ஆட்டோவுடன் இன்னுமோர் மகிழூர்தியும் ஒழுங்கு செய்யப்பட்டு அவர்களும் எம்மை ஏற்ற வந்து விட்டனர். என்னை வாசல் வரை தள்ளிக் கொணர்ந்த என் பணிப்பெண் சுமதி திடீரெனக் கதவோரத்தில் நிறுத்திவிட்டுப் படியிறங்கி கீழே போனாள். ஒன்றும் புரியாத நானோ "சுமதி இங்கே வாங்க, எங்கே போறீங்க?" என்றேன். ஆனால் அவளோ "வாங்க சார்! வாங்க சார்! புடிங்க சார்!" என்று அங்கிருந்த வேலையாட்களை அழைத்தார். காக்கி நிறத்தில் உடையணிந்த அவர்கள் இது தான் தாமதம் என்று என்னை அணுகினார்கள். இதற்கு இடையில் நான் சக்கர நாற்காலியுடன் ஆட்டோவுக்கு அருகாமைக்கு இறக்கப் பட்டேன். அழைத்தவர்களுள் ஒருவன் என்னை சுற்றிப் போடப்பட்ட துணியைப் பற்ற வந்தான். எனக்கு அதை சீரணிக்க சக்தியிருக்கவில்லை. ஆங்கிலத்தில் 'ஐ டோண்ட் எனிவண் டு டச் மி' என்று என்னை எவரும் அண்மிக்காத விதமாக ஆங்கிலத்தில் பொரிந்தேன். உடனே அவர் பின்வாங்கி விட்டார்.

பெங்களூரில் எனக்கு உதவிபுரிய வந்தவர்கள் மிக இளையவர்கள். அவர்கள் கண்களில் கபடம் இருக்க வில்லை. புன்னகை மாறாத முகமும் கடமையுணர்வும் உதவும் குணமும் தெரிந்தன. ஆனால் இவர்களோ எதிர்மாறான குணம் உடையவர்களாக எனக்குப் பட்டது.

என் அனுமானம் கூடத் தவறாக இருக்கலாம். ஆனால் என் உள்ளுணர்வு அருவருத்தது. பார்வைக்குச் சாதாரண பெண்ணாகத் தோன்றுமொரு நோயாளியின் இயலாமையைச் சாதகமாக்க நாம் அனுமதிக்கலாமா? என் உணர்வு கோபமாக வெளிப்பட்டது தப்பல்லவே! சில இடங்களில் கோபமும் ஆயுதமாக இருக்கின்றது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அண்ணியின் சகோதரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "விலகுங்க சார் நாங்க பார்த்துக்குவம்" என்று கூறி தங்கையைப் பார்த்தார் உதவ வரும்படி.

■

# போத்தீஸில் கொள்வனவு

**அ**ண்ணியின் தங்கை மிகவும் கனிவாக அதே நேரம் உரிமையாக என்னை வாரியணைத்துத் தூக்கி முச்சக்கர வூர்தியின் உள்ளே அமர்த்தினார். மகிழூர்தியினுள் என்னை உட்கார வைப்பதிலும் முச்சக்கரவூர்தியினுள் உட்கார வைப்பது சுலபமானது. தூசி நிறைந்த சென்னைச் சாலைகளைத் தாண்டும்போது என் சுவாசம் பற்றிக் கவலை எழுந்தாலும் சாதாரண மனிதர்களைப் போல் நானும் போகிறேனே என்ற மகிழ்வு உந்த அண்ணியின் தங்கை ஒரு புறம், மறுபுறம் என் பணிப்பெண் கிருபாவும் என்னைத் தாங்கிப் பிடிக்க நாம் போத்தீஸ் நோக்கிப் போகிறோம். எம்மைத் தொடர்கிறது மற்றைய மகிழூர்தி. இவ்வளவு சனநெரிசல் நிறைந்த தெருக்களாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. பல ஜவுளிக்கடைகள் கண்ணில் தென்படுகின்றன. எல்லாக்கடைகளுமே பல படிகளையுடையதாகவே காணப்படுகின்றன.

இங்கிலாந்தில் எல்லாம் உயரமான தரையில் கடைகள் நான் வாழும் பகுதியில் இல்லையே. நான் 80 வீதமான கடைகளுக்குட்புகும் வசதி இருக்கின்றது. இனிமேல் கட்டும் கடைகள் யாவுமே சக்கரநாற்காலி உட்புகும் வண்ணம் கட்டப்பட வேண்டுமென சட்டம் இயற்றப்பட்டிருக் கின்றன. ஏன் பல வீடுகளும் இப்படித் தான் கட்டப்படு கின்றன. இப்படியான பொற்காலம் எப்போது எம்போன்ற நாடுகளில் வாழும், என் போன்ற உடற்பாதிப்பு அடைந்தவர்களுக்கு அல்லது வயோதிபர்களுக்கு வாழ்வின் சுமை குறைக்கும் காலம் வருமோ!

எமது முச்சக்கரவூர்தி நின்றதும் அண்ணியின் சகோதரியும் சகோதரரும் மற்றும் பணிப்பெண் கிருபாவும்

சேர்ந்து என்னை சக்கர நாற்கலிக்கு இடம் மாற்றுகின்றனர். அதைத் தொடர்ந்து அங்கிருந்த பாதுகாவல் பணியாட்களும் பலரும் சேர்ந்து கடைக்குள் ஏற்றிவிடுகின்றனர். அப்பாடா என்று இருக்கிறது. அம்மாவும் மாமியும் மனதால் மட்டும் என்னைச் சுமக்கக் கூடியவர்களாக இயங்குகின்றனர். என்ன தான் அவர்களால் செய்ய முடியும் அதைத் தவிர? அங்குள்ள லிப்டின் மூலம் நானும் மாமியும் என் பணிப் பெண்களும் மேல்மாடிக்கு போய்விட அம்மா மற்றவர் களுடன் கீழே தனது விருப்பத்திற்கிணங்க உடைகளை வாங்க புறப்படுகிறார். பல விலைகளில் புடவைகள் சுற்றவர அடுக்கி இருந்தாலும் ஓர் சேலையைத் தெரிவு செய்ய ஒரு மணி நேரம் செலவு செய்து ஓர் பொன்னிற சேலையைத் தெரிவு செய்கிறேன். அந்த இடத்தில் அம்மா இருந்திருந்தால் என்னை திட்டித் தீர்த்திருப்பார். என் மாமி என்னை மிகவும் உற்சாகம் தந்து இந்தபுடவையைத் தேர்ந்த்தெடுக்க உதவுகிறார். பல இடர்களின் மத்தியில் என் பயணம் அமைவதால் என் முழுத் தேவைகளையும் தீர்க்கும்படி மாமி என்னிடம் கேட்டுக்கொள்கிறார்.



அதிகமாக கொள்வனவு செய்ததால் கொஞ்சமாவது தள்ளுபடி செய்யும்படி வேண்டுகிறோம். அந்த விற்பனையாளர் தன் முகாமையாளரைச் சுட்டுகிறார். அவரை அண்மிக்கிறோம். அந்த முகாமையாளர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் தன் மறுப்பை சற்று இன்முகத் துடன் கூறியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். வேறு சந்தர்ப் பங்களிலும் மீண்டும் வரத் தூண்டுமே! நாமும் ஒன்றும் இலவசமாக வாங்கவில்லையே. சாதாரணமாக பேரூந்து செலுத்தும் சாரதி கூட இன்முகத்துடன் தென்பட்டால் எமக்கு சற்று ஆறுதலாக இருக்கும் அல்லவா?

திருச்சிக்குப் போகும் பேரூந்து நாலரைக்கு இருப்பதால் நாம் அவசரமாகப் புறப்பட்டு வரவேண்டியிருந்தது. எனினும் அவசர அவசரமாக கீழே வந்தும் சில சேலைகள் வாங்கிப் புறப்படும் வேளை அண்ணியின் அண்ணா பணத்தை செலுத்திவிட்டு வருவதற்கு இடையில் பணிப்பெண் சுமதி அங்கிருந்த வேலையாள் ஒருவரிடம் பேசிய விதம் சிரிப்பைத் தந்தது. எப்போதும் கூறுவது போல் "நான் குவாலிவைட் நேர்ஸ்" எனத் தன்னை அறிமுகப்படுத்திய தோடு வழமைபோல்" இவ என்னோட அசிஸ்டன்ட்' எனக் கிருபாவையும் தாழ்த்திச் சொன்னது மட்டுமல்லாமல்

எம்மைக் காட்டி "இவங்க லண்டனிலிருந்து வாராங்க" என்று சொல்லவும் செய்தார். மேலும் பேசும் போது சிரிப்பையள்ளி வீசி அத்துடன் மூக்கையும் சுழித்து ஒருவிதப் பாணியில் பேசுவதாக அவர் பேசும் பாங்கு நகைப்புத் தரத்தக்கது.

இவரின் போக்கே வினோதமானது. விவேகமானது என்று கூடச் சொல்லலாம். தன் தடித்த சரீரத்தை நோகாமல் வைத்திருப்பது எப்படி என்ற வித்தை தெரிந்தவர். பணம் செலுத்தியது தான் தாமதம் அங்கு சுற்றவரத் தென்பட்ட ஆட்களிடம் "வாங்க சார், புடிங்க சார்" எனக் கூவியழைத்து கீழே எனைக் கொண்டு வர முயற்சி செய்தார். அப்படி அவர்கள் தூக்கினால் நான் முன் நோக்கி விழும் அபாயம் இருந்தது. நல்ல வேளை கிருபா முன்வந்து "அப்படித் தூக்கதீங்க சார்", என்று அலறியதால் அவர்கள் மீண்டும் அந்த இடத்திலேயே வைத்து விட்டனர். பின்பு சக்கர நாற்காலியை மறுபக்கம் திருப்பித் தூக்கி வந்ததால் தான் நான் பத்திரமாகத் தரையிறங்கக் கூடியதாயிருந்தது.

■

# திருச்சியிலிருந்து நண்பர்

மீண்டும் யான் முச்சக்கரவூர்திக்கு இடம் மாறுவதற்கு இடையில் திருச்சியிலிருந்து வந்த எனது நண்பன் பாபு என் இருப்பிடம் தேடி வந்ததை அவர் தொலை பேசியழைப்பு தெரிவித்தது. நான் என் நிலமையைத் தெரிவித்து அவரை இரவுக்கு எனைச் சந்திக்க வரும்படி கூறினேன். குறிப்பிட்டபடி பாபுவும் வந்தார். மனம் மிகுந்த மகிழ்ச்சி பிறந்தது.



இந்த நண்பர் என்னைத் 'தோழி' என விழித்து மடல் எழுதுவதை மறக்கவே முடியாது. இவருடன் பழகும்போது பள்ளிக்கூட நண்பனுடன் பழகும் இனிமை என் மனதுள். எப்போதும் 'பொடியன்' என்று தன்னைத் தானே அழைக்கும் என் வயதையொத்த இவர் விடுமுறைக்கு திருச்சி வந்து இருக்கிறார். ஏறக்குறைய மூன்று வருடங் களிற்கு மேலாக தொலைத்தொடர்பில் உட்படாதவர் விடுமுறையிலுள்ளபோது திருச்சியில், எதேச்சையாக ஒரு நாள் தனது மகனை பேரூந்து நிலையத்தில் இருந்து கூட்டிப் போக வந்து இருக்கும் அந்த சிறிய அவகாசத்தில் இணையம் நாடி இருக்கிறார். அப்பொழுது நான் தெரிவித்த தகவலின் அடிப்படையில் தனது தொலைபேசி எண்ணை எனக்குத் தர பெங்களூர் வந்த நான் சென்னை போகும் விபரத்தையும் கூற எனைத் தேடி வருகிறார்.

இவருக்கும் இரண்டு பிள்ளைகள். பல தடவை என் கவிதைகளை கணனியுதவி கொண்டு அலங்கரிப்பவர். இவருக்கு என் கவிதைகள் ரொம்பப் பிடிக்கும். என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் போது மேல்மருவத்தூர் போகும் என் ஆசை அறிந்து "நீங்க விரும்பினா நாளை நாங்க மேல்மருவத்தூர் போகலாம்" என்கிறார். இவரின் இந்த

வாக்கியம் என்னுள் இருந்த ஆசைக் குதிரையை ஓட்டுகிறது. நானும் "ஆம் பார்க்கலாம்" என்று கூறி வைக்கிறேன்.

வியாழன் விடிகிறது. அம்மாவோ பதினொன்றரை யளவில் உள்ள வைத்திய நியமனத்துக்குச் செல்லத் தயாராகிறார். அவரைக் குழப்ப மனம் ஒப்பாமல் இருந்தும் சாடை மாடையாக சந்தர்ப்பம் அமைந்தால் சிலசமயம் நாம் மேல்மருவத்தூர் போகக்கூடும் என்பதையும் கூறுகிறேன் அம்மாவுக்கும் கோவிலென்றதும் வைத்தியம் பற்றிய அக்கறை போய் ஆயத்தம் ஆகிறார்.

மாமிக்கும் என்னுடன் பயணிப்பதில் மகிழ்ச்சியே. நானும் மாமியும் தான் ஒருமித்துப் பயணிக்க சந்தர்ப்பம் கிட்டுவதில்லையே! பாடசாலை செல்லும் நாட்களில் மிகவும் வற்புறுத்தி என்னை யாழ்ப்பாணக் கடைகளுக்குக் கூட்டிப்போவார். சிரமமான போதும் அவரது அன்பு என்னை இயக்கியது. என் இயலாமை மேலும் வளர காலப் போக்கில் எல்லாம் பகற்கனவானது. இன்று ஒன்றாகப் பயணிக்க ஓர் இனிய வாய்ப்பு மலர்ந்திருக்கிறது.



மதியமாகிறது. கதவு தட்டப்படுகிறது. பார்த்தால் என் நேசத்துக்குரிய பிரியா சிவப்பு சேலை சரசரக்க உள்ளே வருகிறார். ஏற்கெனவே நாம் மேல்மருவத்தூர் போவதை தொலைபேசியில் அறிந்து ஆயத்தமாக வந்து இருக்கிறார். பாபுவும் வருகிறார். என் வற்புறுத்தலின் பேரில் மதிய உணவாக சாதம் உட்கொள்கின்றனர்.

பாபு வண்டி ஒழுங்கு செய்யப் போன அதேவேளையில் எங்கள் கட்டிலை தனது மேடையாக்கிப் பிரியா "நிலவே தூங்கும் வேளை நீ ஏன் தூங்கவில்லை?" எனத் தொடங்கி அதே ராகத்தில் "இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப் பூவில்" என்று தொடங்கும் பாட்டின் ஒரு பகுதியை இணைத்து அத்தோடு "புன்னை மரத்துப் பூங்குயில்" என்ற பாடலையும் அதனுடன் இணைத்து இனிமையாகப் பாடி என்னையும் மாமியையும் மகிழ்விக்க அம்மாவோ உண்ட களைப்பில் தூங்கிவிட்டார். பிரியாவின் பாடலின் ராகம் என்னவென்பதை உங்களிற்குச் சொல்ல முடியாத நான்தான் ஞான சூனியமாயிற்றே.

அதுவொரு காலம். நான் பன்னிரண்டு வயதுவரை சாதாரண சுகமுள்ளவளாகவே இருந்தேன். சிறிது சிறிதாக

எனது ஆரோக்கியம் என்னிடம் மறையும் காலங்கள். நான் கணிதத்தில் வல்லவளாகவும் சங்கீதத்தில் எதுவித ஞானமற்றவளாகவும் இருந்தேன். நான் படிக்கும் நாட்களில் மதியம் பன்னிரண்டு மணியளவில் ஒரு மணி நேர இடைவெளியில் மாணவர்கள் வீடு போய் சாப்பிட்டு வருவார்கள். சில மாணவர் பிற்பகல் பாடசாலையிலிருந்து வீடு போய்விடுவார்கள். அது போல் நானும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தலைமறைவாகி விடுவேன். பிற்பகல் மூன்று பாடவேளையில் இரண்டு பாடவேளை சங்கீதமும் ஒரு பாடம் கணிதமுமாக இருக்கும். சங்கீதம் பாடவராமல், பாடப்பிடிக்காமல் தலைமறைவாவது என்பழக்கமாக இருந்தது, ஆம் அந்தளவிற்கு சங்கீத ஞானம்! (ஹி! ஹி! ஹி!). சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராலும் சில பாடங்களில் வெறுப்பும் பயமும் எமக்கு வந்துவிடும்.!

பிரியாவின் மகளின் நிகழ்ச்சி இரவு பத்து மணிக்கு இருப்பதால் பிரியாவால் எம்முடன் இணைந்து கொள்ள முடியவில்லை. நாம் அதற்கு முன்பாக திரும்பிவர முடியாமல் போய்விடும் என்பதால் பிரியா மிக மென்மை யாக மறுத்து விட்டார். அது மட்டுமல்ல என்னை மகிழூர்தியில் ஏற்றுவதற்கு உதவிசெய்து விட்டே போனாள். போவதற்கு முன்பாக எனது பணிப்பெண்களை என்மீது அக்கறையுடன் நடந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டாள்.

■

# மேல்மருவத்தூர்

எங்கள் மகிழூர்தி மேல்மருவத்தூர் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. என்னுள்ளம் மிகவும் ஆனந்தத்தில். எனக்குப் பக்கத்தில் இருபறமும் என் பணிப்பெண்கள். எனக்குப் பின்னிருக்கையில் அம்மாவும் மாமியும் அமர்ந்து வருகின்றனர். பாபுவோ முன்னிருக்கையில் அமர்ந்து வருகின்றார். நாம் பேசுவதற்கு முன்பாக தன்னுடைய கருத்தைத் திணிக்க அல்லது தன்னுடைய நிலைப்பாட்டை முன்னிறுத்தத் தயங்காத பணிப்பெண்ணான சுமதி மறைமுகமாக தங்களிற்கு இன்னும் சலுகைகள் கிடைக்காதா என்ற எதிர்ப்பார்ப்பில் என் நண்பன் பாபுவிடம் சிரிப்பு கலந்த பேச்சாக "சார் நீங்க இன்னும் நிறையப் பழங்கள் கொண்டு வாங்க மேடமிற்கு. எங்களிற்குத்தான் கொண்டாட்டம்" அது எனக்குத் தர்ம சங்கடத்தைத் தருகின்றது.

கோயிலுக்குப் போகும் நான் ஏதாவது பக்திப் பாடல்கள் கேட்டால் இனிமையாக இருக்குமே என்ற எண்ணத்தில் அந்த சாரதியிடம் நான் அது பற்றி வினவ அதை மடக்கி 'சார் ஏதாவது சினிமாப் பாட்டுப் போடுங்க.' என்று கூறும் சுமதியை என்ன செய்யலாம். மௌனமாகவே எங்கள் வாகனம் மேல்மருவத்தூர் நோக்கிப் பறக்க நான் அந்த இயற்கைக் காட்சிகளை உள்வாங்கியபடி அமர்ந்திருக்க கோயிலின் முன்னால் எங்கள் வாகனம் தரிக்க பாபு, சுமதி, கிருபா எல்லோரும் என் முதுகைச் சுற்றிவரவுள்ள துணியைப் பற்றுவதன் மூலம் என்னை சக்கர நாற்காலிக்கு மாற்றுகிறார்கள். என்னைத் துளைக்கும் கேள்விக் கணைகள். கோயிலின் பின்புற வழியாக உள்ளே மண்டபத்துக்குள் செல்லுகின்றோம்.

ஆம்! பாபு தான் எனது சக்கர நாற்காலியைத் தள்ளுகின்றார். ஓர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த இவர் கோவிலைச் சுற்றிவரும் போது ஓரிடத்தில் நவராத்திரிக்குக் கொலு வைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே ஓர் பெரிய வினாயகர் சிலையையும் கண்டு "இதோ உங்களிற்குப் பிடித்த ஆள்" என்று எனக்குக் காட்டுகின்றார். எங்கோ ஐக்கிய ராச்சியத்தில் இருக்கும் எனக்குப் பிடித்த கடவுளை இத்தனை வருடங்கள் தொடர்பில்லாமல் இருந்த போதும் கூட சவுதி அரேபியாவில் இருக்கும் ஓர் இஸ்லாம் மதத்தவரிற்கு, எனக்குப் பிடித்த கடவுள் பிள்ளையார் என்பது தெரிந்திருக்கின்றது என்றால் இதுதான் எம் நட்பின் வலிமை. அது மட்டுமல்ல என் மகிழ்வை நேசித்துத் தானே முன்வந்து கோவிலுக்கு அழைத்து வந்திருக்கும் பெரியமனம்!

அங்கோர் இலங்கைப் பெண்ணை சந்திக்கின்றோம். அங்குள்ள பலரும் போல் அவரும் சிவத்த உடை அணிந்திருக்கின்றார். அந்தக் கோவிலில் அமைந்துள்ள அம்மனின் திருவுருவம் என்னை மிகவும் கவரவே அந்தக் கோயிலின் சிறப்பு என்னவென அறிய முயற்சிக்கின்றேன். ஏற்கனவே எப்போதும் கண்ணுற்ற 'மேல் மருவத்தூர்' என்ற பெயர் கொண்ட திரைப்படம் வேறு ஞாபகத்திற்கு வருகின்றது. திரைப்படத்தில் குறிப்பிடும் அளவிற்கு அந்தக் கோவிலின் சிறப்பு என்ன என்ற ஆவல் உந்த அந்த இளம்பெண்ணிடம் அந்தக் கோவில் பற்றி விசாரிக்கின்றேன்.

அந்தப் பெண்ணோ அந்தக் கோவிலைச் சுற்றி அங்குள்ள படங்களைக் காட்டி அதன் வரலாறு பற்றிச் சொல்ல முயற்சிக்கின்றார். அந்த ஊரின் மரங்கள் நிறைந்த சூழலில் ஒரு பையன் களைப்புற்று அங்கு நித்திரை கொண்டதாகவும் திடீரென அங்கே ஓர் இடத்தில் பால் சுரந்ததாகவும் அதை வியந்த அந்தப் பையன் எல்லோரையும் கூப்பிட்டு அந்த இடத்தைக் காட்டியதாகவும் அங்கே ஓர் மரம் வளர்ந்ததாகவும் அவ்விடம் வணக்கத்திற்குரியதாக மாறி காலப்போக்கில் அந்தப் பையனே வளர்ந்து ஆசிரியராகி அவரின் வாக்குகள் பல பலித்ததாகவும் அவரே இன்று பலராலும் "அம்மா" என்று அழைக்கப்பட்டு போற்றப்பட்டு வருவதாகவும் கூறினார்.

அவரின் அற்புதங்கள் பலவற்றையும் தாங்கிய புத்தகங்களை வாங்கித் தந்தும் அந்தக் கோவிலின் ஒரு

அந்தத்தில் அமைக்கப்பட்ட பூச்சிய வடிவத்தில் அமைந்த மண்டபத்திற்கு என்னை அழைத்துச் சென்று 'இங்கு தங்கி யிருந்து இந்தக் கோவிலைத் தரிசியுங்கள்' என அறிவுரை கூறவும் எனக்கும் அதுவே சரியாகப்பட்டது. முக்கியமாக அந்த அறைகளின் விசாலம் அதன் அமைப்பு எல்லாம் வசதியாகத் தென்பட எனது மாமியும் என்னுடன் ஒத்தோத அங்கேயே தங்க முடிவுசெய்து 'அன்றிரவுக்குள் சென்னை ஹோட்டல் அசோகாவில் கணக்கு முடித்து இங்கு வரலாமா' என பாபுவிடம் விசாரித்தேன். "ஓம் அதற் கென்ன?" என்று அவரும் சொல்ல அம்மாவும் சம்மதித்தார்.

இதற்கிடையில் சுமதி "சார் இங்கே வாங்க" என்று பாபுவைத் தனியாக அழைத்து அறைக்கு வெளியே கூட்டிச் சென்று ஏதேதோ எல்லாம் மிகப்பெரிய விளக்கம் கொடுப்பதை நாங்கள் கவனிக்கத் தவறவில்லை. எனக்குள் ஒரே சிரிப்பு! எனது நண்பனிடம் எனக்கு முன்னாலேயே அழைத்துச் சென்று எனது பணிப்பெண் விளக்கம் கொடுக்கின்றார் என்றால் சிரிப்புத் தானே வரும்? அவர் மூலம் நான் அறிந்தது என்னவெனில் நாம் திடீரென முடிவெடுப்பதாகவும் சென்னையிலிருந்து பொருட்களை இங்கு கொண்டு வருவது எல்லாம் அதிக சிரமமென்றும் கூறியிருக்கின்றார். விந்தையான மனிதர்கள்! நாடு விட்டு நாடு வந்து ஓரிடத்திலே நாம் தங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அல்லது எங்கள் நேரமோ பணமோ வீண் விரயமாவதை சிந்திக்க மறுக்கும் நெஞ்சங்கள்!

அங்கிருந்த படித்த இரண்டு பெண்கள் தாமாகவே முன் வந்து தாங்கள் என்னைப் பராமரித்துக் கொள்வதாகவும் அந்த நேரத்தில் சென்னை சென்று அங்குள்ள அறையைக் காலி செய்யும்படியும் வேண்டிக் கொண்டனர். பயணம் செய்த களைப்பும் அந்தக் கொளுத்தும் வெயில் தந்த அசதியும் ஒருங்கு சேர அங்கே உள்ள கட்டிலில் நான் சாய்ந்து கொண்டேன். என் இருபுறமும் அந்தப் பெண்கள் இருவரும் படுத்துக்கொண்டனர்.

மற்றைய பெண் தெலுங்கு மொழி பேசும், அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து தங்கி நிற்கும் மிக அழகான பெண். அவரின் அழகு எங்கள் எல்லோரையும் அசர வைத்தது. அதைவிட அவருடைய மென்மையான தன்மை என்னை அசரவைத்தது. நான்கு வயதில் ஒரு

குழந்தையும் உண்டு என்றால் நம்பவே முடியாது. இரவு இரண்டு மணிக்கு நாம் மீண்டும் கோவிலுக்குப் போவதாக அவர்கள் கூறியதால் அதற்கேற்றபடி அலாரம் வைத்து தூக்கத்தில் ஆழ்ந்தோம்.

திட்டமிட்டுச் செயலாற்றுவது நல்லது தான். முழுதாக ஒத்துக் கொள்கிறேன். ஆனால் வாழ்க்கை நாம் நினைப்பது போல் சீரான நீரோட்டமாய் இல்லையே. இருந்தால் தான் வாழ்வும் சுவை நிறைந்ததாய் இருக்காதே. என் வாழ்வில் நான் செயற்படும் விதமே மிக வித்தியாசமானது. சந்தர்ப் பங்கள் வாய்க்கும்போது வாழ்க்கையெனும் சதுரங்கத்தில் செயல் என்ற காய்களை நகர்த்த எப்போதும் தயாராய் இருக்கிறேன். அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன் படுத்துகின்றேன். அதற்குத் தயாராக எப்போதும் என் மனதை வைத்திருக்கிறேன். இப்படியான என் செயற் பாடுகளை அறிந்தவர்கள் அம்மாவும், மாமியும். அவர்கள் அதற்குப் பழகியவர்கள். என் திடீர்முடிவுகள் என்னைப் புதிதாகச் சுற்றியுள்ளவர்களுக்கு ஆச்சரியம் ஏற்படுத்துவது ஒன்றும் புதினமல்லவே. அவற்றுள் ஒன்று தான் இந்த முடிவெடுத்தல்.



சென்னை போய் அறையிலுள்ள அத்தனை பொருட் களையும் பொதிகளாக்கி அறையைக் காலிசெய்து வண்டியிலேற்றி மேல்மருவத்தூர் வந்த பாபு, அம்மா, மாமி மற்றும் பணிப்பெண்கள் இவர்கள் வந்து கதவைத் தட்டும் போது இரவு ஒன்றரை மணியாகிவிட்டிருந்தது. அதே வண்டியில் பாபு மீண்டும் பயணம் செய்ய இருப்பதாலும் அவரை படம் பிடிக்க சந்தப்பம் கிடைக்காததாலும் நான் மிகுந்த பிரயத்தனப்பட்டு வெளியில் கொண்டு வரப் பட்டேன். பாபு பட்ட பாட்டை நினைக்கும்போது ஒரு விதத்தில் கவலை வந்தாலும் ஒருவிதத்தில் பெருமையாகவும் இருந்தது. பாபுவிற்கு பிரியாவிடை கொடுத்துவிட்டு அந்த நள்ளிரவு கோவிலுக்குப் போனோம். அந்தக் கோவிலுக்கு அந்த நேரத்திலும் ஆட்கள் போய்வருவதைப் பார்க்கும் போது எத்தனையோ வருடங்கள் முன்பு கதிர்காமத்தில் இரவு தங்கியிருந்து அப்பாவுடன் கோவிலுக்குப் போன ஞாபகம் வருகின்றது.

நான் வியாழனன்று புறப்பட்டு மேல்மருவத்தூர் வந்து விட்டேன். நான் சென்னையிலுருப்பதாக என்னைத் தேடி

நண்பர்கள் வருவார்களே! பாபுவால் எனக்கும் ஆரிஃபுக்கு தொடர்பு கிடைத்து விட அவர் வெள்ளியன்று என்னைப் பார்க்கவென வர இருக்கிறார். அவரைச் சந்திக்க முடியாத நிலையை நான் ஏற்படுத்திக் கொண்டேனே. அதுமட்டுமல்ல கலீலும் பானுப்பிரியாவும் சென்னை வந்து பார்க்க விருக்கின்றனரே! பானுவுக்கும் ஆரிஃபுக்கும் அழைத்து நான் மேல்மருவத்தூர் போனதைத் தெரிவித்தேன். மன்னிப்பும் கோரினேன்.

நண்பன் ஆரிஃப் எங்கள் ஆரம்பகால நண்பர். சவுதி அரேபியாவில் தமிழ் மன்றமொன்றின் தலைவராகவும் தமிழில் மட்டுமல்ல பாடுவதிலும் பிரியம் கொண்ட வராகவும் இருப்பவர். இன்றும் தனக்கென அரங்க அறைகள் அமைத்து பழைய பாடல்களைப் பாடி பலர் மனதைக் கவர்கின்றார். எனக்கென ஒரு வாழ்த்து பல வருடங்களுக்கு முன்னே எழுத, அதை பாபு அழகாக அலங்கரித்து அனுப்பியதை நினைவு படுத்தல் பொருத்தம்.



## அந்தக் கவிதை உங்கள் இரசனைக்காக (ஆரிஃபின் கவிதை)

### உதயத் தமிழே வாழ்க

பதியனிட்ட பைந்தமிழின் புதியமொழிச் சிந்தனைகள்
இதயமதில் ஏந்துகின்ற எமதருமை தோழமைகொள்
உதயகுமா ரிஉங்கள் தமிழுணர்வின் பேரலைகள்
நதிவழியும் வெளளம்போல் கவிதைகளாய் கரைபுரளும்

முத்தமிழும் முத்தமிடும் முக்கடலின் சங்கமமாய்
இத்தரணி பத்தினியின் நெத்திநிறை குங்குமமாய்
புத்தம்புது தத்துவங்கள் செப்புகின்ற சித்திரமாய்
சித்தமதில் தமிழினிக்க வாழ்ந்திடுக பத்திரமாய்

யாதும்ஊர் யாவரும்நம் கேளிரென குரல்கொடுக்கும்
பேதமிலா தமிழ்வாக்கால் உலகமதை அரவணைக்கும்
நீதியுடன் தான்பிறந்த நாட்டுக்காய் அர்ப்பணிக்கும்
சோதியென சேரும்புகழ் தங்களையே அலங்கரிக்கும்

தமிழ்த்தாயின் சேலைகளாய் ஆக்கங்களை நெய்திடுக
தமிழுலகின் தனிப்பெருமை தலைதூக்கச் செய்திடுக
தமிழ்மணக்கும் சோலைகளில் கவிமழையைப் பெய்திடுக
தரணியெலாம் புகழுரைகள் பெருமைகளைக் கொய்திடுக
என உளங்கனிய வாழ்த்துவது

அன்பன்
**ஆரிஃப்.**

நான் திரும்பிச் சென்னை போனாலும் ஈரோடு போவதாக இருப்பதால் இவ்வழிதான் போகவேண்டுமே! அதற்காக ஏற்படும் உடலுளைச்சலைத் தவிர்க்கவும் மேலும் சென்னையில் திரைப்பட இயக்குனர், மக்கள் அரங்க மன்னன் விசுவைப்பார்க்கும் திட்டம் சரிவரவில்லையே என்ற காரணமும் வேறு. நான் சென்னைவந்ததும் அவர் ஒசூர் போய் விட்டதைக் கேள்விப்பட்டதால் சென்னையில் தங்கும் நாட்டம் குன்றிப்போய்விட்டது.

பாலாஜி என்னிடம் "அக்கா நீங்க யூஸ் பண்ணுங்க" என்று தன் தொலைபேசியை வேறு இரவலாகத் தந்திருக்கிறார். அப்போது சனிப்பெயர்ச்சி என்பதால் சனீஸ்வரனுக்கென பொள்ளாச்சியிலுள்ள தலத்துக்கு தான் போவதாகவும் எமக்கும் அர்ச்சனை செய்வதாகவும் கூறி எமது கையால் பணம் வாங்கிச் சென்றார்.

■

# மதுரையிலிருந்து மங்கை

சவூதி அரேபியாவில் இருக்கும் இன்னுமோர் அன்பு நண்பன் செந்தில். இவர் தான் எனது முன்னைய வெளியீடுகளில் ஒன்றான 'எந்தையும் யானும்' என்ற நூலை இந்தியாவில் இருக்கும் தன் மனைவி, மனைவியின் சகோதரன் மூலம் பதிப்பித்து, இங்கிலாந்துக்கு வருவித்து உதவிய நண்பன். இவரது மனைவி பானுவும் எனக்கு இணையம் மூலம் அறிமுகமாகி தன் அன்பைச் சொரியும் அன்புப் பெட்டகம். என்னை உற்சாகப்படுத்தும் என்னை முழுதாக நம்பும் நம்பகத்துக்குமுரிய நட்புத் தம்பதி.



இவர்களுக்கு இரண்டு பையன்கள். ஒன்பது வயதில் ஒருமகன்.செந்தூர். செந்தூரின் தம்பி கவினுக்கு ஆறு வயது. இவர்களுடன் தொலைபேசியில் கதைத்திருக்கிறேன். நான் இவர்களையும் பார்க்க வேண்டும் என்று கூறிவிட்டதால் பாடசாலையால் வந்த பிள்ளைகளை ஓய்வு கூட எடுக்க அனுமதிக்காமல் தன் தம்பி சகிதம் எனைப் பார்க்கவென வந்து இருக்கிறார். அதிகாலை மூன்றரை மணியளவில் அவர்கள் மேல்மருவத்தூர் புகையிரத நிலையத்துக்கு வந்து எனை அழைத்தார். நான் அவர்கள் அழைப்பை எதிர்பார்த்து இருந்தவள் என்பதால் எனது பணிப் பெண்ணின் உதவியோடு எனது சுவாசம் செய்ய உதவும் முகமூடியை விலக்கிப் பதிலளித்தேன். வழியறிந்து வந்து கதவைத் தட்டினார். மற்றவர்களின் தூக்கத்தைக் குழப்பாமல் இரகசியமாக தான் ஓர் அறை எடுத்துத் தங்குவதாக கூறிப் போனார்.

காலையானதும் பணிப்பெண்கள் உதவியுடன் அடுத்த நாளுக்குத் தயாரானேன். அம்மாவுக்கு நேற்றுச் சென்னைக்கும் போய் வந்ததால் உடல் உளைச்சல், காய்ச்சல் வேறு. எனது மாமியோ எங்களுடன் தங்கிப் படிக்கும்

தன்மகளுக்கு எம்மிடம் தந்துவிட சேலை எடுப்பதற்கு சென்னை போய்விட்டார். அன்று மேல்மருவத்தூர் கோவில் பாத பூஜைக்கு அழைத்துச் செல்ல தெலுங்கு மொழிப்பெண் "சொரூபா" வந்து விடுவார் என்று தெரிந்திருந்தது. அதற்குள் பானு அவர் குழந்தைகளையும் பார்த்து விடவேண்டுமென விரும்பினேன்.

விரும்பியதிற்கிணங்க அவர்கள் கதவைத் தட்டினர். துடிதுடிப்பான குட்டிப் பையன்கள் சகிதம் நீல நிறத்தில் அழகுச் சேலையணிந்து காட்சி அளித்தார் பானு. அவரையும் குழந்தைகளையும் படம் பிடித்தேன். அவர்கள் உணவு உட்கொள்ளச் செல்ல நான் மேல்மருவத்தூர் கோவிலுக்குப் போனேன். ஏறக்குறைய எல்லோரும் சிவப்பு நிறை உடை அணிந்திருந்ததால் அந்த இடமே வித்தியாசமான பிரகாசம் நிறைந்ததாகக் காணப்பட்டது. இந்தப் பிரபஞ்சத்தில் அனைத்து மக்களுடைய குருதியும் சிவப்பு என்ற சமத்துவத்தைப் பிரதிபலிக்கும் செயற்பாடு தான் இது என்று கூறக் கேள்விப்பட்டேன்.



சொன்னபடி என்னை மீண்டும் இரண்டு மணியளவில் பானு தன் குழந்தைகளுடனும் தன் தம்பியுடனும் வந்து சந்தித்தார். பானுவின் தம்பிக்கு ஏற்கெனவே திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. பானுவின் பிள்ளைகளின் இடைவிடாத பேச்சுக்களும் வித்தியாசமான சிந்தனைகளும் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போன்ற எண்ணத்தை உண்டு பண்ணுகின்றது. அந்தளவிற்கு இனிமையான பேச்சு அவர்களது. பெரிய பையன் தான் மாமாவின் நிச்சய தார்த்தத்திற்கு போனதாகக் கூற சிறிய பையன் 'நான் அத்தையைப் பார்த்திருக்கின்றேன்' என்று சொல்கிறான். அதற்கு செந்தூர் 'அவங்க அத்தை இல்ல அக்கா. மாமாவிற்கு கல்யாணம் ஆனாத்தானே அத்தை' என்று சொல்கிறார். இதைக் கேட்டு சிரித்து முடிவதற்கிடையில் சிறிய பையன் மாமாவிற்குத் தான் கல்யாணம் ஆச்சே என்கிறார். இவர்களை என்னவென்பது! என்னுடன் சாய்ந்து நின்றபடி தோற்றம் அளிக்கிறார்கள். சவூதியிலிருந்து தொலைபேசியில் அழைத்து இவரது தந்தை செந்தில் இவர்களிடம் பேசும் பொழுது "நாங்க தான் அவங்களைப் பார்த்திட்டோமே" என்று வீறாப்புடன் பதில் சொன்னார்களாம்.

■

# கோயம்புத்தூர் வாலிபன்

சந்துரு எனும் இந்த வாலிபன் கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள ஓர் கிராமத்தில் வசிப்பவன். "ஏனுங்கக்கா" என்று இவன் பேசும் கோயம்புத்தூர் தமிழில் இனிமை காண்பவள் இவள். இவன் பேசும் தன்மை இவன் ஓர் கள்ளங்கபடமற்றவன் என்ற எண்ணத்தை எனக்குள் உண்டு பண்ணியது. இந்தப் பையனின் பேச்சு தான் இவனிடம் எதுவித சங்கடமும் இல்லாமல் இவனின் உதவியை ஏற்கலாம் என்ற எண்ணத்தை எனக்குள் தூண்டியது. நான் இங்கிலாந்திலிருக்கும் போதே "நீங்க வாங்க அக்கா கேரளாவுக்கு!, அங்கே உங்க இடத்துக்கு அடுத்து ஹோட்டலோ அல்லது அறையோ எடுத்து தங்கி வைத்தியம் செய்யும் இடத்தில் எனது எல்லாத் தேவை களுக்கும் உதவி செய்கிறேன்" என்று உறுதி மொழிகள் கூறிய படியால் எனக்கும் ஓர் இனிய எதிர்பார்ப்பு இருந்தது. அப்போதும் அவன் தொழில் தடைப்படுமே என என்கவலையைத் தெரிவித்தேன். ஏற்கனவே தான் அதிகம் வேலைசெய்து விட்டதால் மேலிடம் தனக்கு அனுமதி வழங்கும் என்றான்.

அந்தப் பையனை சிற்றூந்து கொண்டுவந்து ஈரோட்டுக்கு அழைத்துப் போகும்படி கூறினேன். அவனும் சம்மதித்தான். அது போல் வண்டியும் வந்தது. ஏற்கனவே பொதியிடப் பட்ட பொருட்கள் அவனின் உதவியுடன் ஏற்றப்பட்டன. வழமைபோல் சுமதி மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதிலும் காவலாட்களை உதவிக்கு அழைப்பதிலும் ஈடுபட வண்டி தயாரானது. எங்கள் தரப்பில் ஐந்து பேரும் தம்பி சந்துருவும் அவர் அழைத்து வந்த வண்டிச் சாரதியும் ஏற வண்டி புறப்பட்டது.

■

# ஈரோடு நோக்கி

எம்மைப் போர்த்தும் இருட்டு. மிக வேகமாக வண்டி விரைகிறது. தம்பி சந்துருவும் அவர் அழைத்து வந்த சாரதியும் எங்களுடன் எம் நாட்டுத் தமிழர் நிலை குறித்து மிக வருந்திப் பேசிக்கொண்டு வருகின்றனர். வரும் வழியில் ஓர் கோவில் நோக்கிப் போகும் நபர்களைப் பார்க்கிறேன். விசாரித்ததில் அக்கோவில் விளக்கு ஏற்றுவது மிகப்பெரிய வழக்கம் எனக் கூறுகின்றனர். அந்தக் கோவிலின் பெயர் திருவண்ணாமலை என்கின்றனர்.



போய்க்கொண்டிருக்கும் போது அவ்வண்டி அதிகம் செயற்படும் நிலையில் இல்லையெனவும் ஆதலால் சேலத்தில் இன்னுமோர் வண்டிக்கு எம்மை மாற்ற வேண்டுமெனவும் புரிகிறது. ஐயகோ! இந்த வண்டியில் பயணித்து நொந்த என்னுடல் எப்படி மேலும் கஷ்டப்பட இஷ்டப்படும்?. என்ன செய்வது! ஆகித் தானாக வேண்டிய வலி!

சேலத்தில் வண்டிக்கு எதிராக மறு வண்டி நிறுத்தப் படுகிறது. காரணம் ஓர் கதவைத் திறந்து அதே வேகத்தில் மறுகதவினுள் என்னைச் செலுத்த வேண்டிய அவல நிலை எமது. அந்த இருட்டில் முதலில் எம்வாகனத்தின் மேலுள்ள பொருட்களனைத்தையும் எடுத்து மறு வாகனத்தின் மேற்பகுதிக்கு மாற்றப்படுகிறது. அப்புறம் பலத்த சிரமத்தின் மத்தியில் தசையும் என்பும் உணர்ச்சியும் கொண்ட இந்த மனிதச் சுமை இடம்மாற்றுவிக்கப்படுகிறது. இயங்காத என் கைகால்கள் எத்தனை பேரை வருத்துகிறது!

இளங்கோ ஈரோடு அருண் ஹோட்டல் வாசலில் அந்த நள்ளிரவில் தனது மனைவி சகிதம் எமக்காகக்

காத்திருக்கிறார். இளங்கோவை ஆறு வருடத்தின் பின்னர் சந்திக்கப் போகிறேன் என்ற என் ஆவல் தீர்க்கப்படுகிறது. திருவுருவப் படத்தில் மட்டுமே கண்ணுற்ற அவரது மனைவி செல்வியை ஆர்வத்துடன் பார்க்கிறேன். சுடிதாரில் புகுந்து வசீகரமாகச் சிரிக்கிறார். இந்த நள்ளிரவு நேரத்திலும் எம்மை வரவேற்கவெனக் காத்திருக்கும் இவர்களது நட்பை மதிக்காமலிருக்க முடியுமா?

எமக்கு, பணிப்பெண்களுக்கென தனித்தனி அறைகள் முற்பதிவு செய்து வைத்து இருக்கிறார் இளங்கோ. இன்றிரவு எங்களறையில் நான், அம்மா, மாமி கட்டிலில் உறங்க பணிப்பெண்களும் தரையிலுறங்குகின்றனர். சந்துரு அவர்களுக்கென ஒதுக்கிய அறையில் தங்குகின்றார். காலையானதும் ஒருவாறு ஆயத்தமாகி அன்றைய நாளுக்குத் தயாராகுகின்றேன். இளங்கோவின் சகோதரி இந்து வந்து படபடவென்று வழமைபோல் பேசுகிறார். தன் வேலைத்தலத்தைத் திறக்கும் முன்பாக என்னை வந்து சந்திப்பதாகச் சொன்னார். மிகுந்த மகிழ்வாக இருக்கிறது. அவருக்கு நடந்த சிகிச்சைகள், அவரது மகள் ஆர்த்தி, தொழில் பற்றிப் பேசி அறிகிறோம். இந்துவின் தோற்றத்தில் எதுவித மாற்றமும் காணப்படவில்லை. ஆனால் அவர் மகள் ஆர்த்தியை சுஜீ வீட்டுக்குப் போய் விட்டதால் சந்திக்க முடியவில்லை.

இளங்கோ தன் மனைவி செல்வியுடன் வருகிறார். வழமைபோல் தொட்டதுக்கெல்லாம் வம்புக்கிழுக்கும் தன்மை கலந்த பேச்சு மகிழ்வைத் தந்தாலும் இந்த ஆறு வருடத்துள் இவர் தோற்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் வருத்தத்தையும் தருகிறது. அம்மாவும் அவரை உரிமையுடன் வழமை போல் கண்டிக்கிறார். "இளங்கோ இந்த ஸ்மோக்கிங்கை விட்டால் தான் உருப்படுவீர்" இது அம்மா. அதற்கும் ஒரு கேலிப் பேச்சுப் பேசி சமாளிக்கும் இளங்கோ. சந்துரு எல்லோரையும் படம் பிடிக்க கலகலப்பு மிஞ்சுகிறது.

எமைப்பார்க்க பகீரதன், தன் மகனுடன் வருகிறார். எனது படைப்புகளான இரு புத்தகங்களையும் அவரிடமும் கொடுக்கிறேன். மிக வாஞ்சையுடன் பெற்றுக் கொள்கிறார். அவரது மகனையும் எம் கமராவுக்குள் பதிப்பதில் ஆர்வம் காட்டுகிறார். அவர் ஒரு வாசகம் தன் மோட்டார்

வண்டியின் பின்புறம் எழுதியிருக்க வலம் வருவார். இப்போதும் உள்ளதா என்ற என் கேள்விக்கு "ஆம்" என்கிறார். அந்த வாசகம் என்னவென்றால் "வாழ்வினிலும் தமிழ் படித்தே வாழ வேண்டும். என் சாவினிலும் தமிழ் மணந்தே நான் வேக வேண்டும்" என்பதே.

இன்று எங்களுக்கு இளங்கோவின் அக்கா சசி வீட்டில் காலையுணவாம். ஆனால் என்னால் அன்று காலை சாப்பிட முடியாதே. காரணம் வருடா வருடம் நான் கடைப்பிடிக்கும் கேதார கௌரிவிரதத்தின் ஆரம்ப நாள் அன்று என்பதைத் தெரிவித்து சசி வீட்டுக்குப் புறப்பட்டோம். போகும் வழியில் வண்டியிலேயே இருந்தபடி சசி வீட்டிலுள்ள சீதாம்மாவைப் பார்க்கலாம் என்று நாம் திட்டமிட்டால் இளங்கோ "அது நடக்கிற கதையல்ல, சசிக்கா வீட்டுக்குப் போய்த்தான் அப்புறம் வேறு பஸ் பிடிக்கிறது'' என்று அழுத்திக் கூறிவிட்டார். மறுப்பேது? அருண் ஹோட்டலிலிருந்து வீடு போவதற்கு எனை ஏற்ற இறக்கச் சுலபமாக ஒரு சிற்றூந்து எனக் கெனவும் மற்றும் கேரளாவுக்கு போகக் கூடிய பெரிய அளவுடைய சிற்றூந்தும் ஒழுங்கு செய்யப்படுகிறது. போகும் வழியில் தன் வணிகத் தலத்தின் வழி பயணம் செய்து செல்வியின் தங்கையையும் இளங்கோ அறிமுகப்படுத்த எம் வண்டி பயணிக்கிறது.

வண்டி நின்றதும் அந்த உயர்ந்த உருவம் எது வித பேச்சுமன்றி என்னை அலாக்காகத் தூக்கி சக்கர நாற்காலியில் வைத்தது யார் தெரியுமா? அந்த உருவத்துக்குரியவன்? அதுதான் அன்புத்தம்பி வினோத். அதிகம் பேசமாட்டார் ஆனால் எம்மீது பிரியமுள்ளவர். ஆறு வருடத்தில் அவரிலும் மாற்றங்கள். ஆம்! இப்போது மணம் முடித்து, அப்பாவாகி விட்டார். கேட்டதற்கெல்லாம் ஒரு புன்னகை தான் பதில்!

அழகான நவீன வீடு சசியினது. திவ்யா, சுபஸ்ரீ யாவரும் வளர்ந்து விட்டனர். குட்டிச் சிறுமி சுபஸ்ரீ குமரிப் பெண்ணாக வளர்ந்திருப்பதைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. திவ்யாவும் தான் வளர்ந்து விட்டாலும் சுபஸ்ரீயின் வளர்த்தி வியப்பைத் தருகிறது. இம்முறையும் சுஜீ குடும்பத்தினரைப் பார்க்கக் கிடைக்காதது கவலைக்குரியதே. இளங்கோ முன்பெல்லாம் தன்

தங்கையைப் பற்றி அடிக்கடி பேசிச் சிரிப்பார் இளங்கோ விற்கு அவ்வளவு பிரியம் அவர் மீது. அதுமட்டுமல்ல சுஜி தானே எனக்கு இம்முறை பணிப்பெண் ஒழுங்குபடுத்தித் தந்திருக்கிறார். இவரையும் குழந்தைகளையும் பார்க்கப் பிரியப்பட்டேன். கிட்டவில்லை.

சீதாம்மா வந்து எனது கையைப் பிடித்துக் கொண்டார். எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. என் அன்புக்குரிய சீதாம்மாவை காணும் பாக்கியம் பெற்றேனே அந்த ஆறுதல் தான் அது. சம்பத் அண்ணாவின் மருமக்களுடனான சீண்டுதலும் அவரது கலகலபேச்சும் எம்மை நகைப்புக்கு உள்ளாக்குகிறது.

இவற்றையெல்லாம் புன்னகையுடன் கூட இரசிக்கும் எனது மாமி தான் வாசித்த கதைப்புத்தகங்களில் கண்ட பாத்திரங்களை நேரில் பார்ப்பது போலுள்ளது என்று கூறிச் சிரிக்கிறார். ஒருபுறம் அம்மாவுடன் தன் விகடப் பேச்சுடன் சொந்த விசாரிப்பில் இளங்கோ தன் மனைவியுடன் சேர்ந்து ஈடுபட்டிருக்கிறார். சுசி மேலும் ஏதோவெல்லாம் சமைத்துக் கொண்டு இருக்கிறார். நான் மதியம் பன்னிரண்டு மணியானதும் சோறு சாப்பிடலாம் என்பதை அறிந்து அதற்கான முனைப்பில் அவர்.

சீதாம்மா தன்கையால் 'காபி' (இலங்கை வழக்கில் கோப்பி) தருகிறார். இந்தக் காபியைக் குடிக்க நான் கொண்டிருந்த என் அவா தீர்க்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக நான் தேனீர், கோப்பி உட்கொள்ளாதவள். காரணம் வாழுங்கலை மூச்சுப் பயிற்சியில் தீவிர ஈடுபாடு கொண்டது நான். காரணம் வாழுங்கலை பயிற்சியில் ஈடுபட்டபோது கொக்கோ கோலா, செவன் அப் இவை போன்ற பானங்களைத் தவிர்ப்பது நல்லது என்று கூறப் பட்டிருப்பதால் தேநீர் கோப்பி குடிப்பதையும் தவிர்த்து இருக்கிறேன். நான் முற்றாக மாமிசம் உண்பதையும் நிறுத்தி விட்டிருக்கிறேன். ஆனால் ஒருவர் அன்பாகத் தரும் போது விடம் கூட அமிர்தம் தான். அதுவும் சீதாம்மாவின் கோப்பியைத் தவிர்க்க என்னால் முடியாது.

இந்தியா போகத் தீர்மானித்ததும், இளங்கோவுக்கு இந்தியா வரவிருப்பதை அறிவிக்கும் போதே கூறிவிட்டேன். நான் யாரைப் பார்க்க சந்தர்ப்பம் வாய்க்காவிடினும் சீதாம்மாவை நான் எப்படியும் காணவேண்டும் என்றும்

அவரின் கையால் காபி குடிக்கவேண்டும் என்ற வேண வாவையும் கூறியிருந்தேன். அந்த அளவுக்கு என் மனதில் பதிந்துவிட்ட அவரது இனிய செய்கைகள் எப்போதும்.

இரவானதும் நானும் அவரும் ஒன்றாகத் தான் படுக்கைக்குப் போவோம் தன் மகனின் முதல்நாள் இந்தப்பூமியில் அவதரித்தது முதல்நாள் அவருக்கு கழுத்தில் சங்கிலி அணிந்தது முதல் அவர் தந்தை இருந்த காலங்களில் தன் மகனின் மகிழூர்தி வீட்டு எல்லைக்குள் வரும்வரை தூங்காமல் காத்து இருப்பது வரை எல்லாப் புதினங் களையும் படக்கதை போல் கூறுவார். ஏதாவது பதில் கூறினால் அவர் குறட்டை ஒலிதான் மறுமொழியாகக் கிடைககும். தன் மகன் இளங்கோ பற்றிக்கதைப்பதே இந்தத் தாய்க்குப் பெரிய புளகாங்கிதம். இதுதான் உன்னத தாய்மனமோ?

சம்பத் அண்ணாவின் தொலைபேசியை அடுத்து அவர் மனைவி, இரண்டு மகன்கள் யாவரும் எம்மைக் காண வந்துள்ளனர். சசியின் கணவரும் இலண்டனில் வாழும் தனக்குத் தெரிந்த ஒருவனின் முகவரியடங்கிய அட்டையைத் தன் மனவி மூலம் தருகின்றார். இப்படி நாம் அமதுமளியாயிருக்க நாற்பது வயதைத் தாண்டிய எமது பணிப்பெண் சுமதி இளங்கோவின் மனைவியை 'அண்ணி' என்று விழித்திருக்கிறார். சுமதிக்கு இளங்கோ அண்ணன்! அவர் மனைவி, அண்ணி! என்ன கொடுமை இது. இளங்கோ பாடுதான் திண்டாட்டம்.

■

# கேரளா நோக்கி

ஒருவாறு எங்கள் சிற்றூந்து கோட்டக்கல் என்ற இடத்தை அதாவது கோட்டக்கல் வைத்தியசாலையை வந்தடைந்தது. மிகவும் புதிதான சூழல் புதியமொழி என்ற அச்சவுணர்வு மனதுள். ஒரேயொரு தைரியம் இருந்தது. அது என்னவென்றால் என் நண்பன் கிருஷ்ணாவின் தந்தை அங்கு எமக்கு அறை எடுத்து விட்டதாகவும் அவர் அந்த இடத்தில் எம்மைத் சந்திக்கத் தயார் என்ற செய்தி தான்.



இவ்வளவிற்கும் அந்த நண்பன் பெரிதாக அறிமுகமாவன் அல்ல. வேற்றுமொழி பேசுபவனும் கூட. எல்லோர்க்கும் பயணம் கூறிக் கொண்டிருந்தேன் ஓண்லைனில். அப்போது அவருக்கும் செய்தி அனுப்பினேன். அப்போது தான் எனக்குள் உறைத்தது அட இந்த நண்பன் கேரளாவைச் சேர்ந்தவனாச்சே என்று நினைப்பதற்குள் அவன் அந்த இடத்திற்கு மிக அருகாமையில் வசிப்பவன் என்ற உண்மை புரிந்தது. தனது தந்தை மிக அண்மையிலும் வைத்தியத்திற்கு உட்பட்டு உடல் தேறியுள்ளார் என்ற செய்தியையும் கூறினார். அது பற்றித் தன் தாயுடன் தான் பேசுவதாகவும் கூறினதோடு எனக்கும் அவர்கள் தொடர்பிலக்கத்தையும் கூறினார்.

நான் கிருஷ்ணாவின் தந்தையுடன் அதிக தடவைகள் பேசி இருக்கிறேன். தாயுடன் பேச மலையாளம் தெரியாத போதும் ஓரளவு சிரமப்பட்டு சில பல வணக்கங்கள், சுகங்கள் தெரிவித்தும் இருக்கிறேன். இந்தளவு தெரிந்திருந்த இவர்களை ஓரளவுக்கு நம்பித்தான் எம்பயணம் அமைந் துள்ளது. எனது பணிப்பெண் சுமதிக்கு மலையாளம் தெரியும் என்பது மேலதிகத் தகைமை. மாலையைத் தாண்டி ஒரு மணி நேரம் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

சிற்றூர்ந்தில் நான் முன்னாக, பணிப்பெண் கிருபாவுடன் அமர்ந்திருக்க அம்மா தன் மைத்துனியான எனது மாமியுடன் ஊர்ப்புதினங்களை, குடும்ப நலங்களை எல்லாம் பேசிக் கதைத்தபடி அமர்ந்திருக்கின்றனர். சந்துரு பற்றிய வினாப்பொறி எனக்குள் பரவுகிறது. அண்மித்து விட்டோம். ஆனால் சந்துருவிடமிருந்து எதுவித தொலை பேசியழைப்பும் இல்லையே. என்னிடம் சந்துருவின் தொலைபேசி ஒன்று இருக்கிறதே. எதுவும் செய்தி இருந்தால் என்னுடன் தொடர்பு கொள்வாரே என்ற எண்ணம் கவலையாக எனது தொலைபேசியிலிருந்து முயற்சிக்கிறேன்.

■

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



சசியும் கணவரும்



சுபஸ்ரீயும் இளங்கோவும்



சம்பத் அண்ணா



சுபஸ்ரீ





2009 இல் இளங்கோ வீட்டில்

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



நிலா, நிஷா



கலீல், நிலா, நிஷா



கிருஷ்ணாவுடன் நிலா



நிலா



பத்மாவுடன் நிலா



ஜே கே

# தொ(ல்)லைபேசி

இந்தியாவில் தொலைபேசி ஒரு தொல்லைபேசியாய் இருக்கிறது. எங்கும் தான் என்கிறீர்களா? எனக்கு இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தொலைபேசி பாவித்த அனுபவம் தான் இருக்கிறது. அதைவைத்துத் தான் இப்படிக் கூறுகிறேன். இலங்கையில் ஒரு கைத்தொலைபேசி கைவசம் இருந்தால் அந்தக் கைபேசியில் இலங்கை நாட்டின் எந்தப்பகுதிக்கும் எந்நேரமும் பேசலாம். இங்கிலாந்திலும் தான். ஆனால் இந்தியாவில் அப்படியல்லவே! அதற் கென்றால் அதிகூடிய பணம் செலுத்த வேண்டுமோ! பொதுவாக ஒரு மாநிலம் விட்டு மறுமாநிலம் போனால் அந்த இடத்துக்கான சிம்காட் வாங்கிப் பாவிக்க வேண்டும். இதனால் நாம் பட்ட அவலங்கள் பல. பெங்களூரில் ஒரு தொலைபேசி. சென்னை வந்தபின் பாலாஜியின் மேல்மருவத்தூரிலிருந்து இன்னுமோர் 'சிம்காட்'. அது சந்துரு தந்தது. அங்கிருந்து கேரளா போனால் அங்கு தொலைபேசி வசதியில்லையே. புதிய சிம் காட் வாங்க முயற்சித்தோம். தாமதித்தது. மூன்று நாட்கள் கழித்து ஒரு சிம்காட் இரவலாகக் கிடைத்தது, கிருஷ்ணாவின் தந்தை யிடமிருந்து. இது தொலைபேசியா? தொல்லைபேசியா!

சற்று நேரத்தில் சாரதியின் தொலைபேசியில் தம்பி ராமின் குரல் ஒலிக்கிறது. இலண்டனிலிருந்து என் பெரியண்ணா எம்மைத் தொடர்புகொள்ள முடியாமல் தவிப்பதாகவும் நாம் சுகந்தானா என்ற கேள்வியும் அவரிடமிருந்து. நாம் பயணிப்பதால் எம்முடன் தொடர்பு கொள்ள முடியாதெனவும் நாம் இனிக் கேரளா போய்த்தான் அவர்களிடம் தொடர்பு கொள்ள முடியு மெனவும் கூறும்படி கூறினாலும் இதயத்தால் இரணமாய்

சந்துருவின் நினைவு. இருக்கும் தொலைபேசியில் மின்கலத்தின் சக்தி குன்றி வருவது தெரிகிறது. தம்பி ராமிடம் சந்துருவைத் தொடர்பு கொண்டு நாம் கோட்டக்கல் அண்மித்த சேதியைத் தெரிவிக்கும்படி கூறுகின்றேன்.

நான் சென்ற வேளை அவர்கள் நாம் தங்கப்போகும் இடத்தை மூடப்போகிறார்களாம் என்ற சேதி வேறு. ஓர் வெள்ளை மகிழூர்தியில் தான் வருவதாகவும் இன்னும் ஐந்து நிமிடத்தில் அண்மித்து விடுவேன் எனவும் கூறி அவ்விடம் வந்ததும் எங்களைத் தங்கள் மகிழூர்தியைத் தொடரும்படியும் தொலைபேசியில் கேட்டுக் கொண்டார் கிருஷ்ணாவின் தந்தை. தொடர்ந்த எங்கள் வண்டி நின்றதும் என்னை வெளியே கொண்டுவரும் முயற்சியில் எனது இரு பணிப்பெண்களும் சாரதியுடன் வந்த அவரது சகோதரனும் ஈடுபட்டனர்.

■

# கிருஷ்ணாவின் குடும்பத்தினர்

ஒருவாறு சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கவனித்தால் கிருஷ்ணாவின் அம்மா, அப்பா, தங்கை பிரியா ஆகிய மூவரும் அங்கு பிரசன்னமாயிருப்பது புரிந்தது. நான் இங்கும் கொடுத்து வைத்து இருக்கிறேன். ஆம்! அவர்கள் மூவரும் அழகானவர்கள். அவர்கள் மனமும் தான்.

நாம் அங்கு வருகிறோம் என்று ஒரு குடும்பமே காத்திருக்கிறது. அதே போல் ஈரோட்டில் நண்பன் தன் மனைவி சகிதம் அந்த நள்ளிரவில் காத்திருக்கிறார். இப்படியான செய்கை மக்கள் வாழ்வில் மனித உள்ளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இந்தப் பாங்கு அழகானது. இளங்கோவின் அக்கா சசி வீட்டிலும் பலரும் வந்து எம்மைச் சந்தித்ததும் சிறப்பானதே.

■

# கோட்டக்கல்லில் நம் வாசம்

எட்டாம் நம்பர் அறைக்குள் நாம் புகுந்தோம். எதிர்பார்த்தபடி மிகமிக அடிப்படை வசதிகள் மட்டும் கொண்ட அறை தான் அது. ஓர் உயரமான மெத்தை யில்லாத கட்டில், அத்துடன் நோயாளியின் கட்டிலுக்கும் மிகத் தாழ்ந்த சிறிய கட்டில். அந்தக் கட்டில் நோயாளியைப் பராமரிப்பவருக்கானது என்ற ஊகிப்பு சரியாக இருந்தது. அந்த அறையின் ஒரு பகுதியில் மலசலகூடம். அதுவும் மிகச் சாதாரனமாகவே இருந்தது. சக்கர நாற்காலி உட்புகும் விதத்தில் அமைந்த அதன் கதவுவாசல்.



இருந்த உடற்களைப்புக்கு எங்களிற்கு சாய்ந்தால் போதும் என்றிருந்தது. நான் படுக்கையில் கிடத்தப்பட்டேன். அம்மா அந்த சிறிய கட்டிலிலும் மாமியும் பணிப்பெண்களும் இருக்கும் அந்தக் குறுகிய தளப்பரப்பில் தூங்க வேண்டிய வர்களாயினர். நாம் நினைத்தபடி அந்த வைத்தியசாலைக்கு அண்மித்தும் எதுவிட இடமும் தங்கும் படியாக அமைய வில்லை. என் பணிப்பெண்கள் நேரத்துக்கு நேரம் வந்து என்னைப் பராமரிக்க எனக்கு அடுத்த அறைகளில் தங்கினால் தான் உதவியாக இருக்கும். ஆனால் இங்கு நிலைமைகள் அப்படியாக இல்லையே. என் மனதைப் பொறுத்தளவில் சுகங்களை அனுபவிக்க வேண்டுமென்றால் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டுமென்ற தீர்மானம் இருந்தது. அது போக நான் வந்தது வைத்தியத்துக்கே தவிர உல்லாசத்துக்கல்லவே!

■

# ஏ ஸி இல்லாமலா?

ஆனால் "ஐயோ மேடம்! இங்கு எப்படி சீவிக்கிறது" என்று அலுத்துக் கொள்ளும் என் பணிப்பெண் சுமதி. என்ன செய்யலாம் இவர்களை? நாம் எத்தனையோ இடர்களை தாண்டி ஓர் சவாலை எதிர்நோக்கும் மனநிலையில் இருக்கிறோம். ஏதோ வெளிநாடு என்றவுடன் அங்கு பணம் காய்க்கும் மரத்திலிருந்து கரண்ஸி நோட்டுக்களை பிடுங்கி வந்திருக்கிறோம் என்ற மனப்பாங்கில் சிலர்.

நாம் இதுவரை பெங்களூர், சென்னை, ஈரோடு ஆகிய இடங்களுக்குப் போனபோதும் எல்லாம் வசதி நிறைந்த அறைகளை வாடகைக்கெடுத்து வந்ததால் இங்கும் அப்படி வசதியான அறைகளைத் தான் வாடகைக்கெடுப்போம் என நினைத்து விட்டார்கள். இவையெல்லாம் இப்படியிருக்க எங்கள் பின்னே தொடர்ந்த சந்துருவுக்கு நடந்தது என்ன? நானே தொலைபேசியிலழைத்து ஏமாந்து போனது தான் மிச்சம்.

■

# போர்வையும் வேர்வையும்

**வை**த்தியங்கள் பலவற்றையும் சந்தித்தவள். என்றாலும் இன்றும் ஓர் வைத்தியத்தை எதிர்நோக்குகிறேன். ஆம் ஓர் பெரிய அறைக்கு நான் கொண்டு செல்லப்படுகிறேன். நான் நினைத்ததுபோல் உயர்ந்த மேசையொன்று அங்கே காணப் பட்டாலும் அதன் மேற்பரப்பு ஒரு செவ்வகவடிவப் பாத்திரமாகத் தென்படுகிறது. காரணம் அவர்கள் எம்மீது ஊற்றும் எந்தத் திரவப்பதார்த்தமும் அதனுள் தங்கி வாய்க்கால் போன்று ஒரு துவாரத்தினூடு ஒரு கலயத்துள் சேரும் விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மேசையின் மேல் ஒருவாறு ஹொய்ஸ்ட்டினுதவியுடன் மேலே படுக்க வைத்துவிட்டார்கள். அதனையடுத்து இருபுறமும் நிற்கும் வெள்ளைச் சேலையணிந்த பெண்கள் அந்தக் கஷாயத்தை அங்கு ஏற்கனவே ஏற்றப்பட்டிருக்கும் வாயு அடுப்பு (gas cooker) உதவி கொண்டு உடனுக்குடன் சூடாக்கி கெண்டியொன்றினுள் நிரப்பி என்மேல் ஊற்றுவார்கள்.

அந்தவிதமாக குறிப்பிட்ட உயரத்திலிருந்து ஊற்றும் அந்த சூடு கஷாயம் உடலில் ஏற்படுத்தும் மாற்றம் விபரிக்க முடியாதது. ஏறக்குறைய ஒரு மணி நேரசிகிச்சை முடிந்ததும் அறைக்கு அழைத்துச் செல்லச் சொன்னார்கள். மேலிருந்து சக்கர நாற்காலிக்கு மாற்றுவதென்பது மிகச் சிக்கலானது என்பது எனக்குத் தெரியும். அந்த எண்ணம் தொடக்கம் முதல் கவலையாக எனக்குள் இருந்தது. உதவிக்கு வெளியே சென்று ஆண்களையும் அழைத்துப்பார்த்த சுமதியும், தாதிமார்களும் நம்பிக்கையிழந்த நிலையில் சுமதி பிந்து எனப்படும் ஒரு மலையாளப்பெண்ணை அழைத்து வந்தார். பிந்து தானாக மேசையின் மேல் ஏறி எனக்குப் பின்புறமாக சுற்றியிருந்த துணிகளின் இழைகளை இறுகப்பற்றி என்னை

சக்கர நாற்காலிக்கு மாற்ற உதவினாள். பிந்து ஒரு தமிழனின் மனைவி என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். அறைக்குள் வந்ததும் என் பணிப்பெண்கள் இருவரும் என்னை கட்டிலின் மீது கிடத்தி முற்றாகப் போர்த்தி விட்டார்கள். மழை வேறு விட்டு விட்டுத் தூறியதால் கால நிலை சுமாராகத் தானிருந்தது. நன்றாகத் தூங்கி விட்டேன்.

கோட்டக்கல் ஆர்யா வைத்தியசாலையில் வைத்திய முறை பிரத்தியோகமான பாணியைக் கொண்டது. வாழ்வியலுடன் கூடிய வைத்தியம் என்று சொல்லலாமா? ஓர் குடும்பமே தங்கி இருந்து வைத்தியம் செய்யும் விதமாக அமைந்ததே இந்த அறைகள். தினமும் அதிகாலை எல்லோர் கதவுகளும் தட்டப்பட்டு கஷாயம் வழங்கப்படும். இரு மணித்தியாலங்களின் பின்னர் எட்டு மணியளவில் கஷாயம், குளிகைகள், லேகியம் என வழங்கப்படும். எட்டு மணிக்குப்பின் அடுத்தடுத்து ஒவ்வொரு நோயாளிக்கும் விதம் விதமான வைத்தியங்கள் ஓர் அறையில் ஒருவருக்குப்பின் ஒருவராக அழைத்துச் சென்று வழங்கப்படும். இந்த வேளை யில் அறையில் இருப்பவர்கள் அங்கு விநியோகிக்கப்படும் மிகச் சுத்தமான பாலையும் வெண்கோதுமையிலான பாண் என இலங்கை வழக்கத்தில், அழைக்கப்படும் பிரெட்டையும் சிறிதளவு அவித்த பயறையும் பெற்று வைப்பர்.

இங்கு வைத்தியத்துக்கு உடன்படுபவர்கள் தாவர உணவு மட்டுமே உண்ணலாம். அத்துடன் பாலும் குடிக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். ஓர் மணித்தியாலத்தில் நடைபெறும் இவ்வைத்தியத்தால் உடலே சோர்வாகிவிடும். அந்த நாளின் சிகிச்சை தீர்ந்ததும் மேலும் ஓர் மணி நேரம், அந்த கொளுத்தும் வெயில் வெளியில் எறித்தாலும் கூட நோயாளர்களை தலையிலிருந்து கால்வரை போர்த்தி படுக்கவிடுவது தான் அவர்கள் வைத்தியமுறை. அவர்கள் தூங்கவும் முடியாது அப்படித்தான் கண்ணயர்ந்தாலும் கட்டிலின் தலைமாட்டில் அடித்து திகிலுக்குள்ளாக்கி எழுப்பி விடுவர். தூங்கி எழுந்ததும் பயறுப்பொடி தேய்த்து வெந்நீரில் குளிக்க வைப்பர். அதன் பின் அங்கு விநியோகிக்கப்படும் பாலுடன் சேர்த்து அரிசியையும் நன்றாக அவித்த கஞ்சியும், அவித்த பயறும் தான் பலருக்கும் உணவாகும்.

■

## புட்டு சாப்பிட ஆசை

கேரளா போகிறோம் என்றதும் "அங்க புட்டு சாப்புடலாம்" என்று என் பணிப்பெண்கள் கூறிவிட்டனர். இலங்கையைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதால், அது எமது வழக்கமான உணவு என்ற உணர்வில் என் நண்பர்களும் முக்கியமாக இளங்கோவும் எதிர்பார்த்தனர். ஆனால் கதை வேறாகிவிட்டது. அங்கு 'பிட்டு' என்பதைக் காணவே கிடைக்கவில்லை. நாம் வாழ்ந்த பகுதியில் பரோட்டா, சப்பாத்தி, மிகச் சில வேளைகளில் இடியப்பம் தோசை என்பனதான் கிடைத்தன. அதுவும் காலை ஏழு மணிக்கு முதல் கடைக்குப் போனால் தான் சில உணவுகள் கிடைக்கும். சோறு கூட பெரிய அரிசியிலாக்கப்பட்டவை. தான். போடப்படும் சாம்பாரோ, குழம்போ மிகுந்த ஐதாக விருக்கும். நான் தான் சாப்பாட்டு விடயத்தில் பிரச்சினைக்குரியவளாச்சே! இருக்கும் சொற்ப தளப்பரப்பில் ஒரு சிறிய வாயு அடுப்பு வைத்து உணவு தயாரித்து எனக்குப் பரிமாறும் என் அன்புக்களஞ்சியமான எனது அம்மா!

வாயு அடுப்பு என்றதும் என் மாமியை என் பணிப் பெண் சுமதி செய்த பித்தலாட்டம் ஒன்று நினைவுக்கு வருகிறது. கடைக்குத் துணைக்குப் போன சுமதி, மாமியை பலவற்றையும் சொல்லி அதிக விலை வித்தியாசத்தில் வேறோர் அடுப்பை வாங்குவித்து கொணரப்பண்ணி விட்டாள். நான் அதுபற்றி விசாரித்து அந்த அடுப்பை மீளளித்துப் புதிய அடுப்பு வாங்கினேன். இப்படி எத்தனை! எத்தனை! பித்தலாட்டங்கள்!! இந்த இலட்சணத்தில் சந்துரு எமை ஏமாற்றிவிட்ட தோரணையில் அவள்பேச்சு! "என்நண்பனைக் குறைகூற எவருக்கும் அனுமதி

தரமாட்டேன்" என்று நான் கூறிவிட்டேன். ஒருநாள் எனக்கும் சந்துருவுக்கும் பழக்கமான ஜே ஜே தொலை பேசியில் சந்துரு ஏதோ மனவருத்தத்தில் பாதிக்கப்பட்ட தாகக் கூறக்கொஞ்சம் ஆறுதல் வந்தது. எனினும் எம்மன்பைக் கவர்ந்த சந்துரு தொடர்ந்து தொடர்பு கொள்ளாதது அம்மாவைக்கூடப் பாதித்தது.

■

## கிளிகள் பலவகை

இங்கு வைத்தியம் மேற்கொள்ளும் பலர் கிளிகளைச் சந்திக்காமல் போகமாட்டார்கள். நீங்கள் நினைப்பதுபோல் பலரின் மனதைக் கவரும் பட்சிகள் அல்ல இந்தக் கிளிகள். நவரக்கிளி, பொடிக்கிளி, தைலக்கிளி, எலகிளி என இவை பலவகையான வைத்திய முறைகள். சில குறிப்பிட்ட தானியங்களின் பொடியை ஓர் துணிக்குள் போட்டு முடிச்சுப் போட்ட பொட்டலங்களை சூடாக்கி உடம்பெல்லாம் மொத்துவர், அல்லது அழுத்தித் தேய்ப்பர். பல விதமான பொடிகளைக் கலந்து ஒரு பொட்டலமாகத் கட்டித் தேய்ப்பது பொடிகிளி எனவும், தைலம் தேய்த்து செய்யும் வைத்தியத்தை தைலக்கிளி எனவும், இலைகளை வாட்டி அதனைப் பொட்டலமாக்கித் தேய்ப்பதை பொடிக்கிளி என்றும் கூறுகின்றனர். மிகப் பிரபலமானது நவரக்கிளி! ஒருவிதமான அரிசியை அவித்து நன்றாக வெந்த நிலையில் ஊழியர் கொணர்ந்து தர அதைப்பொட்டலமாக் காய்ச்சிய பாலில் தோய்த்து உடல்முழுதும் தேய்ப்பர். இந்தப் பலவகைக்கிளிகள் தனித்தனியே ஒருவாரத்துக்கோ பலவாரங்களுக்கோ மேற்கொள்ளுவர்.

■

# அறை மாற்றம்

**நா**ம் திடீரென 8 ஆம் இலக்க அறையிலிருந்து 303 ஆம் இலக்க அறைக்கு மாறும் படி கேட்கப்பட்டோம். அதுவோ மாடியில் உள்ள ஒரு அறை. நாம் அங்கு சென்று பார்த்ததோடு பணிப்பெண்களின் கருத்தையும் தெரிந்து அவர்கள் சம்மதத்துடன் அந்த அறைக்கு மாற முடிவு செய்தோம். அந்த அறையில் நாம் இருந்தாலும் சாய்வான தளம் வழியே மறு மாடிக்கும் அங்கிருந்தும் சாய்வான தளம் மூலம் மறுமாடிக்கும் எனச் செல்லுவிதமாக அமைந்துள்ளது. ஆகவே மேலே என்னைத் தள்ளிப் போவது என்பது சிரமம் என்பதால் தான் பணிப் பெண்களின் கருத்தையும் அறிய வேண்டியவளானேன்.

■

# பிரியமானவரின் பிரியாவிடை

**மா**மி எங்களைப் பார்க்கவென்று நாடுவிட்டு நாடு வந்தாலும் எம்முடன் பகிரக் கிடைத்த பொழுது மிகக் குறைவே. காரணம் தான் நாடு திரும்புமுன் தன்னாலியன்ற உதவிகளை எமக்குச் செய்துவிட வேண்டுமென்று துடித்தார். அடிக்கடி கடைகளுக்குப் போய்வந்து எம்மைத் திடப்படுத்தி விட்டுவிட்டுச் செல்லவேண்டுமென்று பாடுபட்டார். ஒரு நாள் எனக்கென அப்பிளை வெட்ட முயன்ற மாமியின் இடது கையை எமது கூரான கத்தி பதம் பார்த்து விட்டது. அது தந்த பாதிப்பு மாமி மயங்கி கட்டிலில் சாய்ந்து விட்டார். அந்தளவிற்கு நலிவான அவர் தேகம். அந்த நிலையைப் பார்த்துக் கொண்டும் ஒன்றும் தெரியாதது போல் தன் சேலையைச் சரிபார்க்கும் சுமதி. இதற்குக் காரணம் என் மாமி இவர்கள் என்னைக் கடுமையாகக் கையாளும் போது தான் முன் வந்து சரி செய்வது, 'அப்படிச் செய்', 'இப்படிச்செய்', 'பிள்ளைக்கு கஷ்டம் கொடாதே' என்று சொல்லி இவர்களை வழி நடத்துபவர் அல்லவா! அதனால் மாமியை சுமதிக்கும் பிடிக்கவில்லையோ!

இவற்றையெல்லாம் கவனித்த மாமிக்கு எங்களைப் பிரிந்து போவது சொல்லொணாத் துயரத்தைத் தந்தது. தாங்க முடியாத விம்மலுடன் கூடிய அழுகையுடன் நாம் தயார் பண்ணிக்கொடுத்தபடி விமானத்தில் கோழிக்கூடு (calicut) எனும் விமான நிலையத்திலிருந்து சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தையடைந்து எமக்குத் தொலைபேசியில் தகவல் தந்தார். அங்கிருந்து கொழும்பு போகும் விமானத்தில் ஏறுமுன்பாக, ஏற்கனவே உடல் வலுக்குன்றிய மாமி இத்தனை பயணக்களைப்பு, கையில்

கத்தி வெட்டிய காயம், மற்றும் பிரிவு தந்த வலியுடன் வந்த பத்து நாட்களுக்குள் பயணஞ் செய்தது எம் மனதுக்கு துன்பத்தையே தந்தது என்றாலும் என் மாமியைப் பார்த்துப் பேசியது எனக்கும் மாமிக்கும் வார்த்தையில் வடிக்க முடியாத ஆறுதலைத் தந்துள்ளது. வாழ்வில் மிக வேண்டியது மனதுக்கு விருப்பமானவர்களின் அண்மையில் வாழ்வது அல்லது நேருக்கு நேர் சந்திப்பது! வாழ்வென்பதே நினைவுகளின் கோர்ப்புத் தானே!

■

# தங்கி இருந்த தங்கமானவர்கள்

எனக்கு வைத்தியங்கள் பல மேற்கொள்ளப்பட்டாலும் இந்தத் தங்குமிடம் மனதுக்கு இதம் தருவதாக அமைந்திருந்தது. காரணம் என்னைச் சுற்றியிருந்த அறைகளில் தங்கியிருந்த குடும்பங்கள். எங்கள் அறைக்குப் பக்கத்து அறையில் ஓர் முன்னாள் தாதி தனது முதுகுத் தண்டில் உள்ள வலியின் நிமித்தம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு இருந்தார். அது போல் இரண்டு அறைகள் அடுத்து 'அம்மு' எனும் ஒரு வயதுக்குழந்தை தனியாய் பேத்தியார் சகிதம் தங்கியிருந்தார். குழந்தையின் தாய் ஓர் நாகரீக அலங்கார அமைப்பாளர். (fashion designer) அவருக்கும் இடுப்பில் வலியும் மற்றும் சற்றுத் தடித்த சரீரம் என்பது அவரது. இவர்களுடன் நாம் தங்கியிருந்த அனுபவத்தைத் தரவில்லை.

அதேபோல் இடது புறம் அமைந்துள்ள அறையில் ஓர் வயதுபோன தம்பதியும் அந்தப் பெண்ணின் தாயும் தங்கியுள்ளனர். பெண்ணின் தாயாருக்கு பக்கவாதம் வந்து நடக்கச் சிரமப்படுகிறார். மாமியாரைத் தன் தாய்போன்று பராமரிக்கும் மருமகன். (தாயைப் பராமரிக்க மறந்த, மறுக்கும் பிள்ளைகள் தான் எத்தனை) அந்த வயோதிபப் பெண்ணுக்குத் தினமும் எண்ணையில் உருவுதல், மொத்துதல் என்று எல்லாம் எமக்கு முன்னால் உள்ள அறையில் நடைபெறுவதும் அந்த மருமகன் தன் மனைவி சகிதம் அவருக்குப் பணிவிடை வழங்குவதும் கண்ட காட்சிகள்.

அந்த மனிதருடன் பலரும் சதுரங்கம் ஆடுவர். ஆனால் எவரும் அவரை வென்றதை நான் காணவும் இல்லை. கேள்விப்படவும் இல்லை. அந்தளவுக்கு வல்லமையாக

சதுரங்கம் விளையாடக் கூடியவர். அவர் பல பொதுப் போட்டிகளில் பங்குபற்றுபவராம். எனக்கு சதுரங்கம் ஆடத் தெரிந்திருந்தாலும் அவருடன் விளையாடி என் திறனை வளர்க்க விரும்பி கிடைத்த தருணங்கள் எல்லாம் விளையாடினேன். ஒரு முறைகூட அவரை தோற்கடிக்க என்னால் முடியவில்லை. அதிக நேரம் விளையாட்டைத் தங்க வைப்பதில் நிறைவு கண்டேன்.

■

# எல்லோர்க்கும் தெரிந்தவர்

ஒருவரை எல்லோர்க்கும் தெரியும் என்றால் அவரிடம் ஓர் சிறப்பம்சம் இருப்பதாகத்தானே அர்த்தம். இவரை வைத்தியர்கள், தாதிகள், சிற்றூழியர், அங்கு தங்கி இருக்கும் நோயாளிகள், பராமரிப்பவர்கள் வைத்திய நிலைய ஊழியர்கள் யாவர்க்கும் தெரியும் என்றால்? அவர் எங்கள் அறைக்கு அடுத்த அறையில் வசிப்பவர். இவ்வளவுக்கும் றிச்சு எனும் பெயரைக் கொண்ட இவருக்கு வயது நான்கு. தன் தாயாருடன் தங்கித் தானும் வைத்தியத்துக்கென வசித்துவரும் அந்த பாலகனின் சுறுசுறுப்பும் துடிப்பான பேச்சும் தான் இவனது பிரபலத்துக்குக் காரணம். இவரை ரசிப்பது தான் எனதும் அம்மாவினதும் ஏன் பணிப்பெண்களதும் பொழுதுபோக்கு. எனக்கு மருந்தை வாயில் ஊற்றுவது போல் போக "ஒண்டா" என மலையாளத்தில் தனக்கு வேண்டாம் எனும் இவனின் அழகு அப்பப்பா!

உண்மையில் றிச்சுவின் அம்மாவுக்கு இடுப்பில் ஓர் பெரிய நோவு. அந்த உடல்வாதையைத் தீர்ப்பதோடு கண்பார்வை சற்றுக் குன்றி அவஸ்தைப்படும் றிச்சுவுக்கும் வைத்தியம் செய்யவே அவள் தங்கி இருக்கிறாள். இவர்களுக்கு ஆதரவாக அவள் தாய். அவளும் தனது சிறு சிறு சுகவீனங்களை அங்குள்ள போதே வைத்தியரிடம் காட்டி வைத்தியம் செய்தும் கொண்டிருக்கிறார். றிச்சுவின் தாயார் மிகவும் புரிந்துணர்வுள்ள அன்பான பெண்மணி. இவர்களைப் பார்வையிட வருபவர்களை எப்போதும் என்னிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தி உளம் மகிழ்ந்தாள்.

சதுரங்க வல்லுனர் அறைக்கு முன்னுள்ள அறையில் வந்து சேர்ந்தார் ஒரு பெண். அவர் சரும வியாதிக்குட்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு வினீஷ், அம்மு என ஒரு மகனும் மகளும் இருக்கின்றனர். வினீஷ் சில நாட்களில் இந்த மனிதருடன் சதுரங்கம் விளையாடுபவர். அவனுடன் நான் விளையாடி பல தடவைகள் வென்று இருக்கிறேன். அந்தப் பையன் அவர்கள் வீட்டில் இரண்டாவது மகனாம். வீட்டில் பொறுப்புள்ள அதேநேரம் அன்புடன் பழகும் தன்மை அவரது.

பக்கத்து அறை சதுரங்க வல்லுனர் குடும்பம் இவ்வருடம் வைத்தியம் முடிந்து போய்விட அந்த அறைக்கு வினீஷ் குடும்பத்தினர் இடம் பெயர்ந்தனர். இரவு 11:30 மணி மட்டும் அந்த பரந்த சாரத்தில் நானும் வினீஷும் சதுரங்கம் விளையாடிவிட்டு 'மாலை வணக்கம்' கூறிப் பிரிவோம். தினமும் அந்த வினீஷின் பண்பும் பரிவும் அவர் தங்கை அம்முவுடன் தம்பி இவர்களுடன் காட்டும் நேசமும் இவரிடம் பெருமதிப்பை உண்டுபண்ணின. இவருடன் றிச்சு ஒட்டிப் பழகுவார்.

ஏனோ தெரியவில்லை நாம் எதிர்பார்த்தது போல் குளிர்மையான காலநிலை அங்கில்லை. அதனால் வெளியேயுள்ள திறந்த தரைகளில் காற்றுவாங்க பலரும் நின்றிருப்பர். அப்போது நானும் பலரையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. நானாகச் சென்று ஆண்களிடம் கதை கொடுப்பவளல்ல. அவர்கள் கதைத்தால் கதைப்பேன். அங்கு ஓர் வாலிபன் என்னிடம் பேச்சுக் கொடுத்தார். அறிந்ததில் அவருக்குக் கண்பார்வையில் கோளாறு. அதற்கும் ஆயுர்வேத வைத்தியம் உண்டு. ஏதோ தைலத்தை கண்ணின் மீது படும்படியாக ஓட விடுவது வைத்திய முறையாம். ஓர் குறுகிய காலத்துக்குப்பின் கறுத்தக் கண்ணாடி போட்டு விடுவார்கள். இன்னுமோர் வயதானவரும் இப்படி வைத்தியத்துக்குள்ளானதைக் கண்டேன். அவரும் குணமடைந்து வீடு திரும்பும்போது பாயாசம் வழங்கி விடைபெற்றார்.

■

# இது தான் உலகமோ?

கடைக்குப் போவதற்கு சுமதியை அனுப்பினால் பேரூந்தில் போய் வந்துவிட்டு, தான் வாடகைக்கு முச்சக்கரவூர்தியில் போய் வந்ததாகக் போலிக்கணக்குக் காட்டுவதும், மேலும் அவர்களுக்கென தினம் உணவுக்குத் தனியாகப் பணம் கொடுத்தும் கூட அதைச் செலவு செய்யாமல் எங்களுக்கு வாங்கும் உணவைத் தங்களுக்கும் சாதகமானதாக வாங்குவதும் வைத்தியரிடம் கூட தேவைக்கதிகமாகக் கதைப்பதாகவும் இருக்கும் அறைக்குள் மதியம் என்று பாராமல் நடுவறையில் பாய் விரித்து மல்லாந்து படுப்பதுவும் என்ற ஒரு மாதத் தொல்லை தாளாமல் அவரை அதற்கு மேலாக வேலைக்கு வேண்டாமென்றதும் சுமதி பட்ட பாடு! அப்பப்பா!

தன்னுடன் வேலை செய்த கிருபாவைத் தன்னோடு வரும்படி பிடிவாதமாக நின்று கொண்டார். கிருபாவோ ஒருவாறு அவரிடமிருந்து மறைந்து சுமதியை பேரூந்தில் போக வழிபண்ணிவிட்டார். அந்தப் பேரூந்துச் செலவுகூட சுமதியின் தில்லுமுல்லால் மூன்றுமடங்கு பணமே நாம் செலவு செய்ய வேண்டியதாயிற்று. சுமதி போகவும் பிந்து பணிப்பெண்ணாக எம்மிடம் சேர்ந்து கொண்டார். பிந்துவின் கணவர் வைத்தியத்தின் நிமித்தம் அவருக்கு உதவியாக இருந்த பிந்து அங்கும், இங்கும் எனத் தான் வேலை புரியக் கூடியவளாய் இருந்தாள். நாம் சற்று மனம்விட்டு மற்றவர்களிடம் நடப்பதைத் தமக்குச் சாதகமாக எண்ணும் மாந்தர்கள் இது தான் உலகமோ?

■

# கலீலும் நிஷாவும்

நேரம் இரவு ஏழு பத்தாகப் போகின்றது. இன்று என்னைப் பார்க்க கலீலும் நிஷாவும் வருகிறார்கள் இங்கு என்று காத்திருக்கிறேன். அவர்களோ வந்த பாடில்லை. ஒன்பது மணியளவில் எங்கள் இருப்பிடம் தான் மூடப்பட்டு விடுமே என மனம் கிடந்து தவிக்கிறது. பின்னே என்ன! சென்னையிலிருந்து பட்டுக்கோட்டை ஏகி அங்கிருந்து நிஷாவையும் கூட்டிவருவதாக கலீல் தொலை பேசியில் தெரிவித்திருந்தார். இன்னும் வந்த பாடில்லையே! பாவம் அவர்கள். காலை கோயம்புத்தூர் வந்த போதும் புகையிரதத்தைத் தவறவிட்டு விட்டார்கள்.



மலேசியாவிலிருந்து ஏதோ வீட்டுவிவகாரமாய் இந்தியா வந்திருக்கும் நிஷா நான் கேரளா வந்திருப்பதையறிந்து கலீலுடன் தானும் வருவதாகப் புறப்பட்டிருக்கிறாரே. அந்தளவுக்கு என்மீது தனிமதிப்பும் அன்பும் வைத்திருக்கும் நிஷாவைப் பார்க்கக் கிடைத்தது இரட்டிப்பு மகிழ்ச்சி தானே!

கலீலோ சவூதி அரேபியாவில் இருந்து இந்தியா வந்திருக்கும் நண்பர். இவரது விகடம் கலந்த அறிவு நிறைந்த பேச்சு எனக்கு இவரை நண்பனாக்கியது. அது மட்டுமல்ல இவராலும் கவிதைகள் எழுத முடியும். ஒருமுறை நான் இலண்டன் தீபம் 'கவிதை நேரம்' நிகழ்வில் பங்கேற்ற போது அந்த நிகழ்ச்சியை தன்னறையில் தொலைக்காட்சியில் நேரடி ஒலிபரப்பாகப் பார்த்து மகிழ்வில் திளைத்து என்னைத் தொலைபேசியிலழைத்து உணர்ச்சிவயப்பட்டு 'நிலா..... நீங்க நிகழ்ச்சி செய்யும் போது.... இது என் பிரண்ட் நிலா என்று சொல்லி மகிழ

முடியாமல் நான் மட்டுமே அறையில் தனியாகப் பார்த்தேன்' என்று பெருமை பொங்க வாழ்த்தி மகிழ்ந்தார்.

இவர்கள் இருவரும் எட்டரைமணியளவில் ஒருவாறு வந்து சேர்ந்தனர். மனமே மகிழ்வில் துள்ளியது. இத்தனை நாள் வைத்தியம் தந்த களைப்பு நீங்கியது போன்ற உணர்வு. மூவருக்கும் ஓரே மகிழ்ச்சி. இருவரும் என் இருமருங்கிலும் அமர அவர்கள் கொணர்ந்த பூச்செண்டு என் மடியில் அமர புகைப்படக்கருவிகளுக்குள் நாம் சிறைப்பிடிக்கப் பட்டோம்

காற்றுவாங்க வெளியில் நான் ஏற்கனவே வெளிக் கூடாரத்தில் அமர்ந்திருந்ததால் இவர்களும் எனக்கருகே அமர எமை மொய்த்துப்பிடித்த என் அயல் அறைவாசிகள் பலரும் இஸ்லாம் மதத்தவராக இருப்பது பற்றி கலீல் வியந்தார். கேரளாவில் மல்லபுரம் பகுதியில் வசிப்பவர்கள் மேலதிகமானவர்கள் இஸ்லாமியர் என்பதை நானும் ஒப்புக்கொண்டேன்.

■

# முக்கடலின் சங்கமம்

**வை**த்தியம் வைத்தியம் என உடலும் மனமும் சலித்துப்போன சூழலில் சற்று மாற்றம் தேடும் மனது. இந்த கலீலும் நிஷாவும் வந்த இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் ஓர் இனிய நாளை என் வாழ்வெனும் ஏட்டில் பதிக்கத் துடித்தது இவள் மனது. அந்த விதமாக எனது வைத்தியரிடம் என் நண்பனும் நண்பியும் வேற்று நாடுகளில் இருந்து என்னைப் பார்க்கவென பிரதேசங்கள் தாண்டி வரும் சேதியைச் சொல்லி வெளியே சென்று வர அனுமதி கேட்டேன். நான்கு மணித்தியாலங்கள் அவகாசம் தரப்பட்டது.

பணிப்பெண் பிந்துவின் கணவர் ஓர் தமிழன், அவர் வாடகைக்கு ஒழுங்குபண்ணிய வாகனத்தில் நான், அம்மா, பணிப்பெண், கலீல், நிஷா யாவரும் போய்க் கொண்டிருக்கிறோம். " தில்லானா, தில்லானா தித்திக்கின்ற தேனா" என்ற பாடல் தேனாக இனித்தது. நான் என் வாகனத்தில் அமர்ந்த விதம் ஆசுவாசமாக இல்லாத போதும் அதை மறந்து பாட்டில் லயிக்கும் என் மனது.

பத்தியம் காப்பவள் என்பதால் நான் வெளியில் எந்த உணவும் உண்ண முடியாது. நான் தான் வைத்தியத்துக் குள்ளாகிப் பத்தியம் காக்கிறேனே. அங்கு சில இடங்களில் சில காய்களை உப்புக்குள் ஊறவைத்து விற்கிறார்கள். கலீல் அதை வங்கித் தான் வாயில் போடுகிறார். நிஷாவிற்கும் வாங்கிக் கொடுக்கிறார். மாலைப் பொழுதில் அந்தக் கடற்காட்சி மிக மிக அழகாக இருக்கிறது. குளிர் காற்று வீசினாலும் பறந்து செல்லும் புள்ளினங்கள் வானம் மீது கோலம் போடுவது போன்று ஒருங்கே பறப்பதைக் காண முடிகிறது.

ஒரு ஒடுங்கிய மண் பாதையில் எமது வண்டி போகிறது. எங்கள் பணிப்பெண் அங்கு பயணிக்கப் பயந்து, தான் இறங்கி நடந்து வருவதாகவும் எம்மைப் போய்பார்த்து திரும்பி வரும்படியும் கூற நாம் தொடர்கிறோம். எமது வண்டிச்சாரதி சற்றுத் தடுமாறினால் நாம் கடலுக்குள் சங்கமமாவதைத் தவிர வேறு தெரிவிருக்காது. இங்கு மட்டுமா? சாலைகளிலும் தானே! நம்பிக்கையுடனே தானே இத்தனை மக்களும் தங்கள் வாகனங்களை வெளியே கொண்டு செல்கிறார்கள். நாம் மட்டும் கவனமாக வண்டியைச் செலுத்தினால் போதாதே! வீதியால் போகும் மற்றவர்களும் தான் கவனமாகச் செலுத்தவேண்டும்! நம்பிக்கை தானே வாழ்க்கை!

இங்கு கடலை மேலும் இருபுற நதிகள் சந்திக்கின்றன நம்மூன்று நண்பர்களைப் போல. அந்த அந்திமாலையில் அதன் அழகும் கலீலின் கனிவுடன் கூடிய நகைச்சுவையும் மனதிற்கு ரம்யமளிக்க அங்கே ஒரு கடையில் சில பொருட்களை வாங்க எங்கள் வாகனத்தைத் தரிக்கும்படி கேட்டுக்கொண்டேன். நினைவுப் பொருளாக, மரத்திலான ஒரு சுவர்மாட்டியை வாங்கும்படி வண்டியிலிருந்தே வேண்டிக்கொண்டேன். பிந்து அங்குமிங்கும் போயப் பொருட்களைக் காண்பிக்க உதவிசெய்தாள். மூன்று குரங்குப் பொம்மை இருக்கிறதா பார் என்று கேட்க அதேநேரம் கலீல் அதேவடிவிலான மரப்பொம்மையை எனக்கென தெரிவு செய்து கொண்டிருந்திருக்கிறார். என்மனது அறிந்த எனது நண்பன் கலீல்.

நேரமாகி விட்டதால் இருப்பிடம் திரும்ப வேண்டிய வர்களானோம். வரும்வழியில் ஒரு ஹோட்டலின் உள்பகுதியில் உள்ளமரங்களின் கீழே நிறுத்திவிட்டு கலீல் எம்வண்டிக்கே உணவாக தோசை, இட்டலி எல்லாம் வாங்கி வந்தார். நிஷாவோ என்முதகைத் தடவி எனக்கு ஆறுதலளித்தார். நிஷா என்னில் காட்டும் அன்பு எப்போதுமே பெருமையையும் வியப்பையும் எனக்குத் தருவது. இவருடன் பழகச் சந்தர்ப்பம் மிகக்குறைவான போனபோதும் என்னிடம் அன்பைச் சொரியும் மலேசிய மாது. மறுநாள் மதியம் என்னிடம் வந்து விடைபெற்றனர்.

■

# மலையாள மனோரமாவும் மற்றுமோர் தொலைக்காட்சியும்

பக்கத்து வீட்டுப் பெண்ணும் எனது புதிய பணிப் பெண் பிந்துவும் தங்களுக்குள் பேசி எப்படியும் தங்கள் ஊடகங்களில் என்னைக் கொண்டு வருவதற்கு பாடுபட்டனர். எனது ஹொய்ஸ்ட் பற்றியும் இந்த உடல் நிலையிலும் என் விடாமுயற்சி பற்றியும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனப் பாடு படுகின்றனர். 

காலையில் எழும்போதே இவர்கள் வருவார்களா? என்ற ஐயம் எனக்குள் இருந்தது. நடப்பது நடக்கட்டும் என்ற எண்ணத்தில் நான் எனது பணிப்பெண்கள் உதவியில் கருப்பின் மேல் வெள்ளைப் பொட்டுகள் அடங்கிய கறுப்பு வெள்ளைப் பாவாடை, மேலங்கி சகிதம் அன்று தயாராகின்றேன். பொதுவாக தொலைக்காட்சியில் காண்பிக்கும் படப்பிடிப்பென்றால் என் இருப்பிடத்தை ஓர் சின்ன இடம் விடாமல் அடுக்கி அழகுடன் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பவள். ஆனால் நான் தங்கியுள்ள சூழல் தான் அப்படியில்லையே. சொல்லப்பட்டது போல் அவர்களும் நேரத்திற்கு வந்தார்கள். 'மலையாள மனோரமா' என்ற மலையாளப் பத்திரிகையில் இருந்தும் 'கேரள விஷன்' எனும் தொலைக்காட்சியிலிருந்தும் வந்து ஆங்கிலத்தில் என்னுடன் செவ்வி கண்டனர். என் ஹொய்ஸ்டையும் அதை எப்படி இயக்குவது என ஏற்கனவே படம்பிடித்து சேமித்து கணனியில் வைக்கப்பெற்ற காட்சியையும் பார்வையுற்று படமாக்கினர். இரு சாராரும் இப்படி அமளிதுமளிப்படுகையில் ஏற்கனவே வாசலருகில் நின்று ஒரு கூட்டம் நோக்கிக் கொண்டிருந்தது.

எம்மை அந்தக் கூட்டத்தினூடு எட்டிப் பார்த்து "ஹலோ! நிலா" என்று முகமெல்லாம் புன்னகையாக, நைஜீரியாவில் இருந்து வந்த எனது நண்பன் கிருஷ்ணா, தன் அம்மா, ஒன்றுவிட்ட சகோதரி, அவள் மகன் சகிதம் என்னைப் பார்க்க ஆவலுடன் வந்திருக்கிறார். எங்கள் இருவருக்கும் சொல்லி விபரிக்க முடியாத மகிழ்ச்சி! காரணம் நான் இன்னும் இரண்டு நாட்களில் கோட்டக்கல்லிலிருந்து பெங்களூர் போகிறேன். அந்த இறுதித் தறுவாயில் பல சிக்கல்களைச் சமாளித்து தன் கறுப்பு இன முதலாளியிடம் பணயமாக இருந்த கடவுச்சீட்டை (Possport)ப் பெற்று என்னை எப்படியும் சந்திக்க வேண்டும் என கிருஷ்ணா பட்டபாடு எனக்குத் தெரிந்ததே! ஒருவரையொருவர் இந்த படப்பிடிப்பு நடக்கும் மகிழ்வான நேரத்தில் கண்டதும் மகிழ்வின் அளவு மேலும் பன்மடங்காயிருந்தது. எமக்கென சொக்கலேட்டுக்களும், சுடிதார் தைப்பதற்கான துணியும் கொணர்ந்து தந்து மகிழ்ந்தார். கிருஷ்ணாவின் அம்மா வழமை போல் தான் அர்ச்சனை செய்து வந்த பிரசாதத்தை தந்து மகிழ்ந்தார். ஏதோ முக்கிய விடயம் காரணமாக வந்து சில நிமிடங்களிலேயே தான் நாளை என்னுடன் பொழுதைக் கழிப்பதாகக் கூறிச் சென்றார்.

நான் வழமை போல் மாடிப்படிக்குப் போகும் ஏற்றங்கள் சந்திக்கும் இடமான ஓர் மூலையில் அமர்ந்து அங்குள்ள இயற்கையை இரசிக்கலானேன். அங்கு பலரும் வந்து காற்று வாங்குவார்கள். ஒரு சிறுபிள்ளை ஏதோ உயரத்திலிருந்து விழுந்ததால் கழுத்தின் பிற்பகுதியில் அடிபட்டு தன்னிரு கைகளின் இயக்கத்தை இழந்ததைச் சொல்கிறார். அந்தப் பிள்ளையின் அத்தை. இங்கு வைத்தியம் மேற்கொண்டதால் முன்னேற்றம் தெரிகிறதாம். ஆண்டவன் தான் அந்தப் பிள்ளையின் வாழ்வில் வெளிச்சத்தைக் காட்டவேண்டும்.

■

# பாராமுகம்

சுமதி போனதும் பிந்து அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டாலும் இரவு வேளைகளில் நானும் அம்மாவும் கிருபாவும் தான் ஓர் அறைக்குள் தங்குவோம். இப்போதெல்லாம் வழக்கத்துக்கு மாறாக கிருபாவின் செயற்பாட்டில் மாற்றத்தைக் காணக்கூடியதாய் இருந்தது. இரவில் எனக்கு ஒரு பக்கமாகப் படுக்க முடியாது. படுக்கும் போது இடுப்புப்பகுதி, கால் என்பன வலியெடுக்கும். அவ்வப்போது என்னைத் திரும்பிப் படுக்க வைக்க வேண்டி யிருக்கும். அதற்குக் கிருபாவை எழுப்பினால் அவரின் போக்கில் ஓர் மாற்றம். "என்னா.... மேடம்" என்று இழுத்துக் கூறும் அவளின் பாங்கே தேவைப்படினும் உதவிகோர எனக்குள் சங்கடத்தை உண்டு பண்ணத் தொடங்கிவிட்டது.

காலை நேரங்களில் அம்மாவின் முன்பு ஒரு விதமாகவும் அம்மா நித்திரையாய் உள்ள வேளைகளில் ஒரு விதமாகவும் நடப்பது என்னை வாட்டியது. அம்மாவிடம் இதைத் தெரிவித்தேன். அம்மா "பிள்ளை நீ என்னை எழுப்பு ! நான் உன்னைத் திரும்பி படுக்க வைப்பன்" என்று கூறினார். சில நாட்களில் அம்மாவே முதலில் எழுப்பி எனக்கு உதவுவதும் நடந்தது. ஒரு நாள் இவளது பாராமுகம் பொறுக்காமல் அம்மாவை, இவள் பாராமுகம் பொறுக்காமல் அவள் விழிப்பாயுள்ள போதே எழுப்பினேன். அதற்கும் அவள் "மேடம் நீங்க ஏன் அம்மாவை எழுப்பிறீங்க" என்றும் விசனப்பட்டாள். " உங்களுக்குத்தான் கஷ்டமாயிருக்கே" என்றேன். பாருங்கள்! முன்னையதை விட மேலும் ஊதியம் கொடுத்தும் கிடைக்கும் சேவையை!

■

# குருவாயூரப்பா! குருவாயூரப்பா!

கேரளாவில் குருவாயூர் கோவில் இருக்கிறது என்று கேள்விப் பட்டதுமே அந்த கோவிலுக்கு எப்படியும் போக வேண்டும் என்ற பேரவா எனக்குள் எழுந்தது. குருவாயூரப்பா! குருவாயூரப்பா! என்ற சினிமாப்பாடலில் இடம் பெறுமளவுக்கு இந்தக் கோவிலின் பெருமை என்ன என்ற கேள்வியும் எனது பணிப்பெண் பிந்துவும் தந்த விளக்கமும் எனக்குள் ஆர்வத்தை உண்டுபண்ணியது. ஏற்கனவே உடல்நலம் பெருக கிருஷ்ண வழிபாடு நன்றல்லவா. அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பும் இவற்றுள் ஒன்று. அதற்கேற்ப எனது பணிப்பெண்ணும் அந்த கோவிலைப் பற்றி அதிகம் கூறியிருந்தாள்.

ஆகவே அந்தப் பயணத்தை நான் பெங்களூர் போகும் நாளில் அங்கு சென்று வந்து விமானம் ஏற எண்ணித் திட்டம் போட்டிருந்தேன். கோவிலுக்கு முதல் நாள் இரவு போய்த் தங்கி இறைதரிசனம் பெற்று வருதல் வழக்கம் என்று கூடக் கூறிவிட்டாலும் எனது உடல் நிலையில் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் பயணிப்பது அங்கு தங்குவது எல்லாம் மிகுந்த சிரமமும் முடியாத காரியமும் என்ற சிந்தையும் காரணமாக அமைய என் திட்டம் இப்படி அமைந்தது. மதியமளவில் எமது விமானப் பயணம் ஒழுங்காகி விட்ட நிலையில் அதிகாலை 4 மணியளவில் பயணத்தை ஆரம்பித்து 7 மணியளவில் விமானநிலையம் போகலாம் என நினைத்தேன்.

யார் என்னைத் தூக்க உதவுவார்கள் என்ற கேள்வி மனதை அரித்தபடி. இளங்கோவையும் மனைவியையும் அழைத்தால் நன்றாக இருக்குமே. இளங்கோவுடன் இம்முறை செலவுசெய்ய கிடைத்த நேரம் அரிதாக

இருந்ததே. இப்படி வந்தாலாவது அவரது பரிகாசப் பேச்சால் நானும் அம்மாவும் சற்று மனங்குளிரலாமே. கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்துவோமே என்றெல்லாம் நினைத்தேன். இந்தச் சாக்கில் அவர்களும் குருவாயூரப்பனைத் தரிசிக்கட்டுமே என்ற நினைப்பும் என்னுள் இருந்தது.

தொலைபேசியில் அழைத்து சொல்லியும் பார்த்தேன். இளங்கோ சிரித்துச் சிரித்துச் சமாளித்தார். தானும் தன் மனைவியும் வருவதற்கு ஹோட்டலில் தங்குவதற்கான செலவைப் பொறுப்பேற்கும் படி கூறினார். அதற்கும் சம்மதித்தேன். போதும் "நிலா! நீ போய்ப் பார்த்துட்டுவா" என்று சிரித்தார். அம்மாவும் நானும் வலியுறுத்தினோம். "பார்க்கலாம்" என்று கூறிவிட்டார். நேற்று பேட்டி கொடுத்தலில் எனது நேரமும் கரைந்து களைத்தும் விட்டேன். அத்துடன் மிக அமளியாகப் பொழுது கரைந்து விட்டதே. இந்தச் சுழலில் எப்படி இளங்கோவுடன் தொடர்பு கொள்வது?

■

# திடீர்ப்பயணம்

காலையில் கிருஷ்ணாவிடமிருந்து தொலைபேசி ஒலித்தது. "Shall we go to Guruvayur temple today?" என்றார். நாம் அன்றே குருவாயூர் போவதா? என்று சில நிமிடத்துளிகள் தான் சிந்தித்தேன். அதுவும் சரியாகவே பட்டது. காரணம் கிருஷ்ணா எம்முடன் வரும்போது எப்படியும் உதவிக்கு பஞ்சம் இருக்காது. கிருஷ்ணா சிவத்த ஜீப்பை வாடகைக்கமர்த்தி வந்து எமை அழைத்துச் சென்றார். வழக்கமான சக்கர நாற்காலித் தள்ளுகை, என்னை இடம்மாற்றுதல் என்பவற்றிற்குத் தனது பூரண ஒத்துழைப்பைத் தந்து எமது பயணம் பிந்து, அம்மா சகிதம் குருவாயூர் நோக்கியிருந்தது. இடையில் கிருஷ்ணாவின் தந்தை ஓட்டிவர கிருஷ்ணாவின் அம்மா, பெரியம்மா சகிதம் வெள்ளை மகிழூர்தியில் எம்முடன் இணைந்தது. தந்தையாரை எமது ஜீப்பிற்கு அனுப்பி விட்டு என்னிடம் மன்னிப்புக் கோரி வெள்ளை மகிழூர்தியை ஓடப் புறப் பட்டுவிட்டார். நாமோ எமது வண்டியில் போன கிருஷ்ணா போட்டு விட்டுச் சென்ற தமிழ்ப்பாட்டில் 'ஏனோ மனிதன் பிறந்து விட்டான்' என்ற அந்தப் பாடல் அருமையாக இருந்தது. நான்கு தடவைகளுக்கு மேல் அதை மீண்டும் மீண்டும் ஓடவிட்டுக் கேட்குமளவுக்கு நானும் அம்மாவும் பிந்துவும் ரசித்தோம். பாட்டு என்றால் களியாட்டம் மிகுந்ததாக மட்டுமல்லாமல் அர்த்தம் நிறைந்ததாக இருக்கவேண்டுமென்பதற்கு இதுவோர் சாட்சி.

வண்டியைத் தொடர்ந்து ஓட்ட முடியாதளவுக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கம் காரணமாக மீண்டும் தன் தந்தையிடம் வண்டியோட்டும் பொறுப்பைக் கொடுத்து விட்டு எங்கள் வண்டியின் முன்னிருக்கையில் கிருஷ்ணா

அமர்ந்து தூங்க முயன்றார். எங்கள் வண்டி குருவாயூர் வாசலையண்மித்தது. அங்கும் சற்றுத் தூரம். சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டேன். வெளியில் போகும் எமது சக்கர நாற்காலியை உள்ளே கொண்டு போவது ஆசாரக் குறைவு என நினைத்தார்களோ! அதுபோக வாசலில் "இந்து மதத்தினர் மட்டும்" என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந் ததையும் என் கண்கள் உள்வாங்கியது.

உள்ளே தள்ளப்பட்ட என் நாற்காலி மேலுமோர் வாசலில் தரித்துவிட்டது. காரணம் உள்ளே அந்த சக்கர நாற்காலி புக முடியாது. புக அனுமதியும் இல்லை. ஒரு மனிதன் போகக்கூடிய வழி மாத்திரமே இருந்தது. கிருஸ்ணா, அவரின் தந்தை, பிந்து, கிருஸ்ணாவின் அம்மா ஆளுக்கொரு ஸிலிங் எனப்படும் ஓர் துணியின் இழைகளைப் பற்றித் தூக்கி அந்தக் கோவில் உள்வீதி முழுவதும் கொண்டு சென்று ஒவ்வொரு சாமியையும் தரிசிக்க வைத்தனர். அதுவும் குருவாயூரப்பனின் பிரகாசிக்கும் அழகை அருகிலிருந்து தரிசிக்கும் வாய்ப்பை என்னைச் சுமந்தவர்களும் பெற்றனர்.

■

# கேரளத்து வல்லியம்மா

வெள்ளை நிறத்தில் மெல்லிய பொன்னிறக் கரையுடன் கூடிய நூல் சேலை சகிதம் முகமெல்லாம் புன்னகை படர என்கைககளைப் பற்றும் அன்புப் பெட்டகம் இவர். உதயகுமாரி என் தந்தையார் எனக்கிட்ட பெயர் என்பதால் ஓரளவு பிடிக்கும். ஆனால் இந்தக் கேரளப் பெண்மணி என்னை "உதயகுமாரி சுகமானோ?" என்று அடிக்கடி கேட்டுமனதில் சட்டிக்கறுப்பெனப் பதிந்து விட்டதால் இப்போது என்பெயர் ரொம்பவும் பிடித்திருக்கிறது. இந்தளவுக்கு என் மனதில் பதிந்து இருப்பவர் எனது நண்பன் கிருஷ்ணாவின் பெரிய தாயார். ஆம் பெரியதாயை மலையாளத்தில் வல்லிய அம்மா என்றழைப்பர்.



நான் எவ்வளவு கொடுத்து வைத்தவள்! பாருங்கள்! எங்கோ இந்திய தேசத்தில் கேரள மாநிலத்தில் என்னை இப்படிக் கைத்தாங்கலாகக் குழந்தைபோலத் தாங்கி யெனைத் தரிசிக்கவைக்க இவர்கள் படும்பாடு! எமக்குக் கைகொடுத்த சில ஆண்களுக்கு சிறுதொகைப் பணத்தை கிருஷ்ணாவின் தாயார் கையளித்தார். உண்மையில் கிருஷ்ணாவின் அம்மாவோ, பெரியம்மாவோ என்னைப் பெறாமகள் போலப் பராமரித்ததை உயிருள்ளளவும் மறவேன்.

■

# ஆனைப்பந்தி இங்குமா?

குருவாயூரிலிருந்து மீளும்போது ஏற்கனவே எல்லோரும் களைத்து விட்டோம். வேகமாக விரைகிறது இரு வாகனங்களும். என் நண்பர் கிருஷ்ணா எமது ஜீப்பை எங்கோ நோக்கி செலுத்துகிறார். ஓரிடம் பல மரங்களைக் கொண்டு பழைய யாழ்ப்பாணமாகக் காட்சியளிக்கிறது. மனமெல்லாம் ஒரு வித பூரிப்பும் பரவுகிறது.

எங்கள் வாகனம் ஒருவாறாக ஓரிடத்தை அடைகிறது. அங்கே ஆறேழு யானைகள் கட்டப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அவை பல வாழைமரங்களை தனதுணவாக்கிக் கொண்டிருக்கின்றன. என்னைச் சிவந்த ஜீப்பிலிருந்து கிருஷ்ணா, அவரது தந்தை, எனது பணிப்பெண் பிந்து ஆகியோர் இடம் மாற்றுகின்றனர். எனக்கோ மிக்க மகிழ்ச்சி. எல்லாக் காட்சிகளையும் ஒளிப்படக்கருவிக்குள் படமாக்கத் துடிக்கிறேன். என் எண்ணமறிந்து கிருஷ்ணா செயற்படுகிறார். என்னையும் எங்கோ தூரத்தில் தெரியும் யானையையும் இணைத்துப் படம் பிடிக்கிறார். கிருஷ்ணாவும் தனது கலகப்பான பேச்சால் ஆங்கிலத்தில் தன் உணர்வை வெளிப்படுத்துகின்றார். மற்றவர்களை மகிழவைப்பதும் மகிழ்வு தருமல்லவா? அந்த மகிழ்வில் என் நண்பர்.

இது வெளிப்புறம், உட்புறத்தேயும் இன்னும் பல யானைகள் இருக்கின்றன. அங்கே படம் பிடிப்பதற்கு ஆயிரம் ருபாய் கட்ட வேண்டுமாம். அதற்கு அம்மா மறுத்து விட்டார். ஏன் தேவையற்ற பணச் செலவு என்பது அம்மாவின் வாதம். எனக்கோ அங்குள்ள யானைகளை என் ஒளிப்படக்கருவிக்குள் சிறைப்படுத்த வேண்டுமென்ற துடிப்பு.

எல்லோரும் வேறு மிகவும் களைத்துவிட்டோம். இந்நேரம் அடம்பிடிப்பது நல்லதல்ல என நான் வாளாவிருந்துவிட்டேன். என் நண்பர் தன் களைப்பையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு பகுதிக்கும் என் சக்கர நாற்காலியை அந்த கற்கள் நிறைந்த தரையில் தள்ளுகிறார். எனது பணிப்பெண் உட்பட எல்லோரும் எமைத் தொடர்கிறார்கள்.

அம்மா சென்று அங்கு கட்டப்பட்டு மிகவும் சாந்தமாக நிற்கும் யானையைத் தொட்டுப் பார்க்கிறார். 90 வயதுள்ள யானையைக் கூட நாம் பார்த்தோம். அதன் உயரம் பார்க்கவே அச்சம் தருவது. ஓர் நோயாளி யானை கூடக் கட்டப்பட்டிருக்கிறது. எலும்புகள் தெரிய அதன் தோற்றம் பரிதாபம் தர திடீரென ஓர் யானை சற்று நகர என் நண்பரோ பதறிவிட்டார். அது எம்மை நோக்கி நகர்வது போன்ற பிரமை ஏற்படுத்தி விட்டது. அப்போது சக்கரநாற்காலியை உருட்ட அவர் முற்படுவது நட்பின் வலிமையை உணர்த்துகிறது. அதாவது எனக்கு ஆபத்து வரக் கூடாது. என்ற எண்ணத்திலுள்ள உறுதியை உணர்கிறேன்.

அந்த இடத்தை சுற்றி வரும் போது கூட எனக்கு அந்த சூழலை படம்பிடிக்க அனுமதிபெற்றால் என்ன? என என் மனம் துடித்தாலும் என் பணிப்பெண்கூடச் சற்றுப் பின் தங்கியவளாகவே காணப்படுகிறார். நாளை பயணம் என்பதால் அவளின் சம்பளம் வேறு கொடுத்தாயிற்றே. அதனால் இனி இவள் தன் வேலையில் நாட்டத்தைக் காட்டமாட்டாளோ! நாம் மீண்டும் வாகனத்துள் ஏறுகிறோம். வண்டி புறப்படுகிறது. இந்த இடத்தின் பெயர் ஆன பந்தி! யாழ்ப்பாணத்திலும் ஆனைப்பந்தி என்ற இடம் இருக்கிறது. அங்கு ஆனையும் இல்லை. பந்தியும் இல்லை!!

எல்லோருக்கும் அதிகபசி. ஒரு உணவகத்தின் முன் வண்டி நிறுத்தப்படுகிறது. என்னால் இறங்கி ஏறுவது சிரமமாதலால் என் வாகனத்துக்கே சாப்பாடு கொண்டு வரப்படுகிறது. ஏற்கனவே தன்னுணவுத் தேவையை நிறைவு செய்த அம்மா என் இருக்கைக்கருகிலமர்ந்து எனக்கு ஊட்டுகிறார். அம்மாவின் முகத்தில் சிறு மாற்றத்தை என்னால் காணமுடிகிறது. அம்மா வெளியேயுள்ள படிகளால் மேலேறிப் போவதை நான் கண்ணுற்றதால்

அதன் காரணத்தை வினவுகிறேன். தான் சைவ உணவு வேண்டும் என்பதால் மேலே போய் உண்டதாகக் கூறுகிறார். அப்படியாயின் மற்றவர்கள் அசைவ உணவு உண்டிருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்! இப்போது தான் அம்மாவின் முகமாற்றத்துக்கான காரணம் புரிகிறது. கோவிலுக்குப் போய் வரும் போதே அசைவ உணவு உண்பதை ஏற்க மறுத்த அம்மாவின் உள்ளம் தந்த மாற்றத்தின் விளைவே அம்மாவின் முக மாற்றத்துக்குக் காரணமாகும்.

இடத்துக்கு இடம், குடும்பத்துக்கு குடும்பம் மக்களின் பழக்கம் மாறுபடுகிறது அதை நாம் ஏற்றுக்கொள்வது சற்றுத் சிரமமாகத் தானிருக்கிறது. எம்பழக்க வழக்கங் களுக்கூட மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?

உதாரணத்திற்கு என் அண்ணாவை ஒரு கறுப்பு இனப் பெண்ணுக்கு இலண்டனில் அறிமுகம் செய்து வைத்தேன். "இருவரும் ஒரே பெற்றோருக்குப் பிறந்தவர்களா" என ஆங்கிலத்தில் சர்வசாதாரணமாகக் கேட்டாள். ஆரம்பத்தில் விந்தையாகத் தெரிந்தது ஏன் சினத்தைக் கூடத் தந்தது. காலப் போக்கில் பழகிவிட்டது அவர்களது கலாசாரம் அது எனமனதைத் தயாராக்கி விடுகிறோம். சிலர் மாமிசவுணவை சாப்பிட்டுவிட்டுக் குளித்து விட்டுக் கோவிலுக்குள் போவார்கள். நம் குடும்பத்தவர் கோவிலுக்குப் போய்வந்த அன்று மாமிசம் தவிர்த்து விடுவார்கள். மாமிசமா? என்று முகம் சுழிக்கும் வாசகர்களே பொறுத்துக் கொள்ளுங்கள்.

எல்லோரும் மீண்டும் வாகனத்துள் முடக்கப் படுகிறோம். நான் கேட்டதற்கிணங்க வல்லிய அம்மா, கிருஷ்ணாவின் அம்மா நான் பயணம் செய்த வாகனத்துள் ஏற்றுகின்றனர். வல்லிய அம்மா என்னைத் தோளில் சாய்த்துக் கொண்டு என் வலது கையை தன் கரங்களுக்குள் புதைத்தபடி பயணிக்கிறார். இந்த வல்லிய அம்மாவால் எப்படி இப்படி மாறாத புன்னகையுடன் பேச முடிகிறது? "உதயகுமாரி நீ பறை" என்று என்னைக் கூறும் அந்த அழகு!

முன்னே அமர்ந்திருக்கும் சாரதியுடன் மலையாளத்தில் பேசினாலும் அதை புரியுமளவிற்கு நான் தேறிவிட்டேன். அவர்கள் சம்பாஷணையில் வல்லியம்மாவும் கலந்து கொள்ள கிருஷ்ணாவின் அம்மாவின் மெல்லிய குறட்டை

காதில் விழுகிறது. எமது சாரதி இஸ்லாம் மதத்தவர் என்பதால் அவர்கள் வாழ்வுமுறை பற்றி வல்லியம்மா வினாக்களைத் தொடுக்கிறார். அத்தோடு கிருஷ்ணா பிறந்த போது தாயார் மிகச் சுகயீனப்பட்டதாகவும் அவருக்கு குருதி தேவைப்பட்ட பட்சத்தில் அவரது வைத்தியர் தனது குருதியை உடனடியாக வழங்கி அவரைக் காத்ததாகவும் கூறி நெகிழ்கிறார். மனித உயிரின் பெறுமதி பேணும் வைத்தியர்களுக்கு எனது தலைதாழ்ந்த நன்றிகள்.

கிருஷ்ணாவின் வீடு போகாமல் எப்படி நாம் திரும்புவது? கிருஷ்ணாவும் விடுவாரா? என்ன? ஏற்கனவே அங்கு போவது எனத் தெரிவித்த நான் ஓர் அழகான பிள்ளையார் சிலையொன்றை வாங்கி வைத்திருந்தேன். இருபக்கமும் மதில்கள் தொடர ஒடுங்கிய பாதை வழி விரைகிறது எமது வாகனம். எமைத் தொடரும் வெள்ளை நிற மகிழூர்தி.

இறங்க முடியாமல் என்னுடல் வாதைப்பட்டாலும் இறங்கியே தீர்வது என்பது எனது தீர்மானம். சக்கர நாற்காலியுடன் மூன்று நான்கு படிகள் உயரம் கொண்ட வீட்டினுள் ஏற்றப்படுகிறேன். கிருஷ்ணாவின் அம்மா அரிசியில் ஆக்கப்பட்ட பாயாசம் வழங்குகிறார். அன்பிற் காகவே அருந்துகிறேன். ஒளிப் படம் எடுக்கப்படுகிறது. வல்லியம்மாவின் அன்பு சுரக்கும் பேச்சே தேவாமிர்தம் தான்.

இதற்குள் எனக்கு அடுத்த பணிப்பெண் தொலை பேசியில் அழைத்துப் பேசுகிறார். காரணம் அவள் இன்று பெங்களூர் போகிறார். விமானத்தில் கூட்டிக் கொண்டு போனால் பணச் செலவை உண்டு பண்ணினாலும் வசதியாக இருக்கும் என எண்ணினேன். அவளிடம் தகுந்த சுய அடையாளப் பத்திரம் இல்லாததால் சாத்தியமாக வில்லை. அந்தப் பணிப்பெண்ணை நாம் திரும்பியதும் அதே ஜீப்பில் புகையிரத நிலையம் கொணர்ந்து விடலாம் என்று புறப்படும் போது கூறியிருந்தேன். சாத்தியம் இல்லையெனில் ஆறு மணியளவில் அவளையே வாகனம் ஒழுங்கு செய்து புகையிரத நிலையத்துக்குப் போவென. ஆனால் ஏழு மணியளவில் தொலைபேசியில் பேசுகிறாளே என்று பார்த்தல் பின்பு தான் தெரிந்தது மற்றைய மகிழூர்ந்தில் வந்த பணிப்பெண் செய்த தொலை

பேசியழைப்புத் தான் காரணம் என. மற்றவர்கள் விடயத்தில் தலையிடுவதில் சிலருக்கு அலாதி சுகம்.

கிருஷ்ணாவின் வீடு அழகான தரைகள கொண்ட சிறப்பான வீடு. கிருஷ்ணாவின் அம்மாவுக்கென நான் அன்பளித்த ஒரு வென்னீர்க் குடுவையொன்றை "கிருஷ்ணாவின் அம்மா" என்று பெயரிடப்பட்ட கடதாசியோடே தங்கள் கண்ணாடி அலுமாரிக்குள் வைத்துள்ளார்கள். அவர்களுக்கு தங்களுக்கென லண்டனிலிருந்து பெயரிட்டுக் கொண்டு வந்துள்ளேன் என்ற பெருமை. அவர்களிடமிருந்து நாம் விடைபெற்று பலத்த பிரயத்தனத்துடன் வண்டியேறி எம்மருத்துவமனை நோக்கிப் புறப்பட்டோம்.

கிருஷ்ணாவீட்டார் இன்றிரவு கிருஷ்ணாவின் தங்கை பிரியாவின் நடன நிகழ்ச்சி காரணமாக திருவனந்தபுரம் செல்ல வேண்டியிருக்கிறதே. அந்த அவசரச் சூழலிலும் எங்களைக் கூட்டிக் கொணர்ந்து அறையில் சேர்க்கிறார். தன்னால் என் பயணச் செலவில் பங்கு கொள்ள முடியவில்லையே என வருந்துகிறார். அவர் வேலைபார்த்த கொம்பெனி அவருக்கு நான்கு மாதச் சம்பளத்தை கொடுக்காமல் படுத்துகிறார்கள். எந்தநிலையிலும் அவர் என் பயணச் செலவில் பங்கெடுக்க வேண்டுமென நான் எப்போதும் எதிர் பார்க்கவில்லை.

தன்னால் இந்த இறுதி நேரத்திலாவது நைஜீரியாவில் இருந்து வந்து சந்திக்க கிடைத்தது பெரும் பாக்கியமென மிகவும் மனம் மகிழ்ந்தார். எப்போதும் கன்னத்தில் குழிவிழப் புன்னகைத்து அன்பு மணக்கப் பேசும் நண்பன் கிருஷ்ணா கண்கலங்கி விடை பெற்றான்.

■

# மீண்டும் பெங்களூர்

வெள்ளியன்று கேரளாவிலிருந்து புறப்பட்டு பெங்களூர் வரும்போது விமான நிலையத்துள் அம்மா எதிர்பாராது விழுந்தும் விட்டார். நான் சக்கர நாற்காலி உபயோகிப்பவர் என்பதால் என்னைத் தனியாக ஓர் பேருந்தில் விமானம் நோக்கிக் கொண்டு போயிருந்தனர். கோழிக்கூடு விமானத் தளத்தில் பெங்களூர் வந்ததும் தனித்தே நான் கொண்டு செல்லப்படுவேன் என நினைத்து அம்மாவை எனக்கு முன்பாகவே செல்லும் கூட்டத் தினருடன் இணையும்படி கேட்டதால் அம்மா முன்பாகச் செல்ல, விமானத்தின் வெளியே தங்கள் குழுவை நோக்கியபடி கதைத்துக் கொண்டு வந்த வாலிபன் அம்மாவை முட்டவும் அதிகம் சமனிலை இல்லாத அம்மா விழுந்து விட்டார். அந்தக் குழுவே அம்மாவிடம் பெரிய மன்னிப்புக் கோரி என்னுடன் அம்மாவையும் விமானம் இறங்கிய இடத்திலிருந்து மக்கள் வரவேற்கும் பகுதிக்கு அனுப்பி வைத்தனர்.

இங்கும் இரண்டு பையன்கள் அம்மாவையும் என்னையும் தனித்தனி சக்கர நாற்காலிகளில் வெளியில் கொணர்ந்து சேர்க்க வைஷ்ணவி ரெஸிடென்ஸி எம்மை ஏற்றிச் செல்லவென அனுப்பி வைத்த சாரதி எங்களைப் பாரமேற்றார். அந்தப் பையன்களும் சாரதியும் உதவி செய்ய நான் வண்டிக்குள் ஏற்றுமதி செய்யப்பட்டேன். எம் வண்டி ஏறத்தாழ ஒரு மணி நேரம் பயணித்து வைஷ்ணவி ரெஸிடென்ஸி நோக்கி விரைந்தது. இவ்வளவு தூரத்தில் கூட போய்த்தங்கத் தூண்டும் அவர்களது கவனிப்பு.

அங்கே ஏற்கனவே புகையிரதத்தில் வந்து சேர்ந்த பணிப்பெண் கிருபா எனைப் பாரமேற்றார். வேறு

அறையை இம்முறை எமக்கென ஒதுக்கி இருந்தனர். மீண்டும் ஹொய்ஸ்ட் பொருத்தி என்னைப் பராமரித்தார் பணிப்பெண். நாம் கட்டிலில் சாய்ந்து கொண்டோம். பாவம் அம்மா! இன்று வீழ்ந்து வேறு தன் உடலை நோகச் செய்து விட்டாரே! பெங்களூர் வந்தாயிற்று.

கிடைத்துள்ள இந்த வேளையில் உருப்படியாக ஏதாவது காரியம் செய்ய வேண்டுமே என மனது துள்ளியது. ஜே.கேயைப் பார்க்க வேண்டும், மற்றும் கனத்த பொறுப்புக்களால் கடந்த தடவை என்னைக் காணக் கிடைக்காத பத்மா இம்முறை எப்படியும் என்னைச் சந்திப்பதாக கூறியிருக்கிறாரே. அவரைப் பார்த்துப் பழகி அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில் பம்பாயிலிருந்து வருவிக்கப்பட்ட சக்கர நாற்காலியை தன் வேலையாட்கள் மூலம் பெங்களூர் புகையிரத நிலையத்திலிருந்து தனது இடத்திற்கு கொண்டு வரச் செய்து தன் வேலையாட்கள் மூலம் அதை பொருத்துவித்தது மட்டுமன்றி அதை என்னிடத்திற்கு தனது செலவில் ஆட்டோவில் அனுப்பி வைத்த அவரின் அன்பை நான் மறக்கலாமா என்ற துடிப்பு மனதுள். இவை ஒரு புறம் ஈரோடு நண்பன் இளங்கோவின் ஒன்று விட்ட சகோதரன் சம்பத் அண்ணாவிடம், ஈரோட்டிலிருந்து நாம் புறப்படும்போது எமது சேலைகள் கொண்ட பொதியை, லண்டனுக்கு அனுப்பிவிட கேட்டுக் கொண்டோம். முடியாததால் சம்பத் அண்ணா அதை பெங்களூருக்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறாரே!

■

## மேலுமிரண்டு பேர்

பத்மா வந்தார். மிக உயரமான மானிறத் தோற்ற முடைய நடுத்தர வயது மாது. அழகாகப் புன்னகைத்தார். அணைத்துக் கொண்டார். எனக்கும் அம்மாவுக்குமென அடையும் கததரிக்காய் கூட்டும் வெல்லமும் கொணந் திருந்தார். கீழிருந்து தட்டுக்கள் வருவித்துப் பரிமாறிக் கொண்டார். மிக நேசத்துடன் எனது நண்பர்கள், அவரது நண்பர்கள் எமது நண்பர்கள் பற்றிக் பேசிக் கொண்டோம். என்னை ஏற்கனவே கணனியில் காணொளியில் பார்த்தற்கும் நேரில் பார்ப்பதற்கும் அதிக வேறுபாடில்லை எனக் கூறினார். ஆம்! அவர் நான் மகிழூர்தி ஓட்டுவதைக் காணொளியில் கண்டிருக்கிறார். தனது தாய் பற்றிச் சுவைமிகப் பேசிய இவர் ஒரு தொழிலதிபர். எதுவித பெருமையும் இல்லாமல் மிகநட்புடன் அளவளாவி என்னைக் கட்டியணைத்து என்னுடன் படம்பிடித்தது பெருமையாக இருந்தது.

ஹேல்மெட்டுடன் வந்து எங்கள் இருப்பிடத்தில் எம்மைப் பற்றி ஜே. கே விசாரிக்க அவர்களும் வழிகாட்டி யிருக்கினறனர். ஜே கே எனப்படும் ஜெயகுமாரன் என்ற இந்த வாலிபன் என்னை 2003 இலும் நண்பன் இளங்கோ வீட்டில் சந்தித்திருக்கிறான். என்னை 'எல் கே ஜீ' என என்னைக் கேலிபண்ணுவதே இவன் வேலை. உண்மையில் ஒரு அரங்க நிகழ்வுக்குப் போவதாகவே நாம் திட்டம் போட்டோம். அது வெற்றியளிக்காத வருத்தம் அவனுக்கு. பெங்களூரில் பிரபலமான லால்பாக் பூங்காவுக்கு (Lalbagh Botanical Garden) போவோமா என்று விசாரித்தால் அவனுக்கு அதில் நாட்டம் இல்லை. போவதாயின் நேரமுள்ளபோது மைசூர் அரண்மனைக்கு போய்வரும்படி

கூறிவிட்டான். அது எனக்கு சாத்தியமில்லை என்பதைப் புரிந்து எதுவும் வேண்டாம், என்னை வந்து சந்தித்தால் போதும் எனக் கூறிவிட்டேன். நாடு விட்டு நாடுவந்து என் நண்பர்களைப் பார்ப்பதே எனக்குப் பெரிய திருப்தி!

■

# அம்மாவின் ஏச்சு மழை

பெங்களூரில் உள்ள 'காவேரி எம்போரியம்' நோக்கி மகிழுந்தில் போய்க்கொண்டிருக்கின்றோம். அம்மாவோ எனக்கு என்றும் இல்லாத ஏச்சு ஏசுகின்றார். நானோ பல்லைக் கடித்துக்கொண்டு மௌனம் காக்கின்றேன். ஏன் தெரியுமா? என் விடயம் ஆக வேண்டுமே அதற்காகத்தான். ஜே.கே யிடம் பெற்றுக்கொண்ட அறிவுரையின்படி என் வீட்டின் விருந்தினர் அறையில் மாட்டுவதற்கு ஏதாவது ஓவியம் சார்ந்த 'சுவர் மாட்டி' ஒன்றை வாங்க எண்ணம் கொண்டு அம்மாவுடன் பயணிக்கின்றேன். வெளியில் மழை தூறுவதால் தான் இந்த ஏச்சு மழை. அண்மையில் கேரள வைத்தியம் முடித்து வந்த நான் மழையிலோ வெயிலிலோ குறிப்பிட்ட நாட்களிற்குப் போகக் கூடாது என்றனர் கேரளாவில் வாழ்பவர்கள். இந்த எச்சரிக்கை தந்த எரிச்சல்தான் என் மீது தகிக்கின்றது.

கடைவாசல் வந்தாயிற்று. மழைவேறு நின்றபாடில்லை. மகிழுந்தை நிறுத்த வசதியாக இடமேதும் தென்பட வில்லை. "அம்மா நீங்கள் போய்ப் பார்க்கிறீங்களா" மிகத் தன்மையாக நான. "ஓம், நான் போய்ப் பார்த்து வாங்கிறன் நீ காரில் இருந்து கொள்" ஆறுதலடைந்த தொனியில் அம்மா. காரில் இருந்து அம்மா இறங்கிவிட எமது கார் புறப்பட்டு அதைத் தரிக்க ஏற்றவிடம் தேடி, கார் நிறுத்தப்படுகிறது.

மழைத்தூறல் இலேசாகி விட்டது. அப்பாடா! என்று இருந்தது. ஒருவாறு சக்கரநாற்காலியில் உட்கார்ந்து கடைக்குள் போனாலும் அங்கும் சிக்கல். "ஆம்" அந்தக் கடையொன்றும் சமதரை கொண்டதல்ல. அதற்குள்ளும் உயர்ந்த தரைகளில் உட்புறமாக பலவிதச் சாமான்கள்

இருக்கின்றன. என் பணிப்பெண்ணும் மனதார உதவி செய்யும் ரகமாய் இல்லை. இப்படி இருக்கும்போது உள்ளேபோன அம்மாவைக் காணவில்லை. பணிப்பெண் போய் அம்மாவுடன் வந்தாள்.

கடையின் பணியாட்கள் ஒரு சுவர்மாட்டியைக் கொணர்ந்தனர். அந்த சுவர்மாட்டி மனதைக் கவரும் விதமாய் அமையவில்லை. அளவில் பெரியதாகவும் அதன் உட்கிடக்கையும் எனக்குப் பிடிக்கவில்லை. வரவேற்கும் பாணியுடனான சித்திரம் அமைந்தால் நன்றென எனக்குப் பட்டது. அம்மாவின் எண்ணமும் அப்படித்தானிருந்தது என்பதைப் பின்பு தெரிந்து கொண்டேன். மற்றுமொரு 'வனத்தில் விளையாடிமகிழும் யானைகள் கொண்ட குழு'வைக் கொண்ட சித்திரம் என் கண்களைக் கவர்ந்தது. இதன் அளவும் பெரியதுதான் கொண்டுசெல்வது பணச்செலவை உண்டுபண்ணும் என்பது தெரிந்தபோதும் அதன் உட்கிடக்கை நட்பைத் தொனிக்கும் விதமான சித்திரமாக அமைந்ததால் 'நடப்பதை முகம் கொடுப்போம்' என்ற எண்ணத்தில் வாங்கி வந்தேன். சில விடயங்களில் இது தான் முடிவு என முடிவு எடுப்பவளல்ல நான். செய்து கொண்டே போவோம் நடப்பதைப் பார்ப்போம் என நடத்திக் கொண்டிருப்பேன். எது தான் எம் கையில்!

■

# இனிய அதிர்ச்சி

**வை**ஷ்ணவி ரெஸிடென்ஸி வரவும் அந்த முகாமையாளர் புன்னகையுடன் "மேடம்! யாரோ உமா மேடம் கோல் பண்ணினாங்க, உங்களை ஐந்தரை மணிக்கு வரட்டுமாம்" என்றதும் எனக்கு அதிர்ச்சியாகி விட்டது. காரணம் ஏற்கனவே நாலரை ஆகிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்துள் புதிதாக வண்டி ஒழுங்கு செய்து சாப்பாடு முடிந்து இதரதேவைகள் முடித்து ஏறக்குறைய ஒன்றரை மணிநேரம் பயணம் செய்து இதற்கிடையில் ஈரோட்டிலிருந்து வந்திருக்கும் சேலைகள் கொண்ட பொதியையும் ட்ரவல்ஸ்சிடம் போய் பெற்றுக்கொண்டு எப்படி ஐந்தரை மணிக்குப் போய் இயக்குனர் விசுவைச் சந்திப்போம் என்ற பயம் தந்த அதிர்ச்சி தான் அது.



அறைக்குப் போய் சாப்பிட்டபடியே கீழே தொலைபேசியிலழைத்து வண்டிக்கு ஏற்பாடு செய்வித்தேன். அம்மா களைத்தாலும் ஆயத்தமானார். அம்மா வரமறுத்திருந்தாலும் நான் எப்படியாவது விசு அவர்களைப் பார்க்கப்போவது என முடிவெடுத்திருந்தேன். என் பணிப்பெண்ணுக்கு வேறு ஒரே முகச்சுழிப்பு. நாளை போகும் இவள் இன்றும் இப்படி இயங்க வேண்டுமா, அதற்காக என்னை இப்படிப்படுத்த வேண்டுமா என்று நினைத்தாளோ!

"மேடம் நீங்க போயிட்டு வர்றீங்களா?" இது என் பணிப்பெண். அவள் குரலில் அவளுக்கு எம்முடன் வர விருப்பமில்லை எனத் தொனித்தாலும் இவளை விட்டுப் போனால் நான் எப்படிச் சமாளிப்பேன் என்பதால் நான் அவளையும் அழைத்தே போக வேண்டியதாயிற்று. காரில் போனால் வாந்தி வருமாம் அவளுக்கு. என்ன செய்வது?

தேவைப்பட்டால் உதவுவதற்குப் பெண் தேவையல்லவா? பயணம் முழுவதும் தூங்கி வழிவது போல் வந்தாள் அவள். அம்மாவும் நானும் கூட அதிகம் பேசும் மனநிலையில் இல்லை.

போகும் வழியில் ஓர் ட்ரவல்ஸிற்கு சேலைகள் கொண்ட பொதியை எடுப்பதற்கு போனோம். என்ன செய்வது? இந்தப் பொதிகளை விமானத்திலோ கப்பலிலோ அனுப்புவதாயின் அவற்றை வாங்கியதற்கான சிட்டைகள் என்னிடம் இல்லையே. சிட்டைகள் கையிலில்லாததால் நாமேதான் எம்முடன் விமானத்தில் கொண்டுசெல்ல வேண்டியுள்ளதே.

என்னையும் பணிப்பெண்ணையும் காரில் இருக்க விட்டுவிட்டு சாரதியும் அம்மாவும் அங்குள்ள கட்டிடத்துள் சென்று பல சம்பிரதாயங்கள் முடித்து வெளியே வர அரை மணி நேரம் எடுத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடியாமல் போய் விடுமோவென என் இதயம் வெளியே கிடந்து துடித்தது.

எங்கள் சாரதியும் காலையில் எம்மைக் கடைக்கழைத்துப் போனவனல்ல. அதிகம் வழி தெரியாதவன் இவன் என்ற கவலையும் வேறு. புறப்படும்போது வைஷ்ணவி ரெஸிடென்சி முகாமையாளர் கன்னடத்தில் விளக்கம் கொடுத்திருந்தார் என்றாலும் என் நம்பிக்கையின் சதவீதம் 50 வீதத்திற்கு கீழே தான். ஐந்தரைக்கு விசு அவர்களின் தங்குமிடத்தில் நிற்க வேணடியவர்கள் நான்கு நாற்பது அளவில் இங்கு நிற்கிறோமே?

போகிறோம். போகிறோம். கர்நாடக எல்லை தாண்டி தமிழ்நாடும் வந்தாயிற்று. காலம் எமக்காக காத்திருக்குமா? இரவுக்காரிகை தன் கடமையைச் செய்ய வயிற்றுள் ஏதோ பிசைவது போன்றவுணர்வு. இவ்வளவு தூரம் வந்தும் இயக்குனர் விசுவைச் சந்திக்க சந்தர்ப்பம் கை கொடுக்குமா? இந்த சாரதி தான் இடத்தைச் செவ்வனே விரைவில் கண்டு பிடிப்பாரா. எல்லையைக் கடப்பதற்குச் சோதனைச் சாவடியில் பணம் கொடுத்தாயிற்று. பல சிரமங்கள் பட்டு வந்தும் பயன் கிடைக்காவிடில்? ஒசூர் எங்கிருக்கிறது என்பதை அறிய மகிழூர்தியை விட்டிறங்கி சாரதி பலரையும் விசாரிக்க சற்றுத்தூரம் சென்று விட்டார். பயம் வேறு தலை காட்டுகிறது.

எனது தொலைபேசிதான் இயங்கும் தன்மையில் இல்லையே! சாரதியிடம் இரவல் கேட்டுவாங்கி அழைத்தால் திருமதி விசு உமா "யாருங்க நிலாவா உங்களை அஞ்சரைக்கு வரச் சொன்னோம், இப்போ ஆறரையாச்சே" என்றார். "ஆமாங்க நாம் செக் போஸ்ட் வரை வந்துட்டோம்" என்றேன். என்ன நினைத்தாரோ தெரிய வில்லை, விசு அவர்களின் காரியதரிசி பாபுவிடம் தொலை பேசியைக் கொடுத்து விட்டார். அவரிடம் விடயத்தைச் சொன்னதும் "சரிங்க சாருக்கு அடுத்த அப்பொயின்மென்ட் இருக்கு. ஒரு அஞ்சு நிமிஷம் வந்து பார்த்துவிட்டுப் போங்க" என்றார்.

இருட்டினூடு அந்தக் கிராமத்தின் வழி எங்கள் வண்டி செல்கிறது. கட்டிடங்கள் அதிகம் கண்களுக்கு புலப்பட வில்லை. ஒருவாறு வீடுகள் கொண்ட பகுதியை அடை கிறோம். அங்கே அழகான பல வீடுகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட காலணியை சென்றடைகிறோம். காரியதரிசி பாபு தான் எம் சாரதிக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டுச் செல்லும் இலக்குபற்றி விளக்கம் கொடுக்கிறார்.



மகிழூர்தி நிறுத்தியதும் அங்கு ஆறு ஆண்கள் கண்களுக்குப் புலப்படுகிறார்கள். சாரதியும் பணிப் பெண்ணும் படும் அவஸ்தை கண்டு கைகொடுக்கிறார்கள். நான் அந்த போர்ட்டிகோவில் அமர்ந்திருக்கிறேன். விசுஐயா உள்ளிருந்து வருவாரா, அல்லது அடுத்த வீட்டில் தங்கி உள்ளாரா என்று எனக்குள் கேள்விகள்!

பாபு விசாரிக்கிறார். "நீங்க ஏன் சாரைப் பார்க்கணும்?". சொல்வதற்கு பொழிப்பான பதில் என்னிடம் இல்லை. நான் என்ன பத்திரிகையை சார்ந்தவரா அல்லது ஏதாவது தொலைக்காட்சியில் இருந்து வந்தவரா? அல்லது நான் பணியாற்றும் லண்டன் தமிழ் வானொலியின் நிகழ்ச்சிக்கேதும் பேட்டி எடுக்க வந்தேனா? எதுவும் இல்லையே.

அவர் திறமையிலும் "ஆம்" அவரது திரைப்படங்கள் கதையம்சம் நிறைந்த, அடுத்தது என்னவோ என்றெம்மை எண்ணத் தூண்டும் தன்மையுள்ள 'அவள் சுமங்கலி தான்', 'சம்சாரம் அது மின்சாரம்', 'புதிய சகாப்தம்' போன்ற திரைப் படங்களால் கவரப்பட்டவள். மேலும் 'மக்கள் அரங்கம்' மூலம் பல தரப்பட்டவரையும் உலகுக்கு அறிமுகப்படுத்தும்,

உதவும் கரங்களை ஒருங்கு சேர்க்கும் அவர் ஆற்றல் தான் என்ன! இவைதான் அவரை எப்படியும் சந்திக்க வேண்டும் என்ற ஆவலை எனக்குள் வளர்த்தது.

இதன் உந்துதலாக ஓர் இணையத்தளத்தில் வெளியான செவ்வியொன்றின் இணைப்பை கலகம்.கொம் இணையத் தளத்திலிருந்து நான் எல்லோர்க்கும் பொதுவாக அனுப்பிய மின்னஞ்சல் இவருக்கும் போய்விட விசு ஐயாவும் அதைக் கண்ணுற்று எனக்கு வாழ்த்தி 1999 பெப்பிரவரியில் ஓர் மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். நன்றி கூறி எழுதிய மடலில் நான் மேமாதம் மட்டில் இந்தியா வரக் கூடும் எனத் தெரிவிக்க "You are Most Welcome" என பதில் எழுத, அதுவே எனக்கு வேகம் தர எப்படியோ அவரது தொலைபேசி இலக்கம் அறிந்து அவரது மனைவியுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

■

# இயக்குனர் விசுவுடன் நிலா

லண்டனில் இருந்தும் இந்தியா வரவிருப்பதைத் தெரிவித்தேன். பெங்களூர் போன போது அவரை ஒசூரில் சந்திக்க முயற்சி செய்தேன். அவர் சென்னை போய் விட்டார். சென்னை போய் தொடர்பு கொள்ள ஒசூர் போய் விட்ட சேதி கிட்டியது. கேரளாவிலிருந்து புறப்படும் போதும் தொலைபேசியில் அழைத்து வாய்ப்புக்கு முயற்சி செய்தேன். இப்போது கேரளா போய் வந்து விசாரித்தால் அவர் சென்னையில் என்று அறிந்தேன். அவரது நிகழ்ச்சியொன்றை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தேன். தொலைபேசியில் அழைத்தேன்.



திருவாளர் விசுவே பதிலளித்தார். தாங்கள் சென்னையிலிருப்பதாகவும் திங்களன்று ஒசூர் வரக் கூடிய வாய்ப்புண்டென்றும் அப்படியாயின் செவ்வாய் சந்திக்கலாமென்றும் கூறினார். "நான் செவ்வாய் காலை ஏழு மணிக்கே லண்டன் பயணித்து விடுவேன்" என்றேன். "அப்படியா பார்க்கலாம். நாளைக்கு போன் பண்ணி பாருங்க" என்றார். விடிந்ததும் கூட அழைத்தேன். தாங்கள் சென்னை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதாக அவர் மனைவி கூறினார். அவர்கள் ஒசூர் வந்ததும் என்னை அழைத்திருக்கிறார். நான்தான் வெளியில் போய்விட்டேனே. என்றாலும் எனது தொடர்ந்த அயராத நம்பிக்கையுடன் கூடிய முயற்சி வெற்றி அளித்துள்ளது.

இயக்குனர் விசு வரவும் எனது பணிப்பெண் என்பணிப்பிற்கிணங்க படக்கருவியை இயக்கினார். "நிற்பாட்டுங்க! ஒருவருக்கும் பேட்டி கொடுக்க முடியாது" என்றார். நானும் என் பணிப்பெண்ணிடம் நிறுத்தும் படி அவசர அறிவிப்பைக் கண்ணால் கொடுத்தேன்.

வணக்கங்கள் பரிமாறி அமர்ந்து கொண்டார். அவரது காரியதரிசி பாபுவுக்கு என்னைப் பற்றிக் கூறுகிறார். "இவங்க எழுத்து வீரமும் வேகமும் நிறைந்ததாய் இருக்கும்" என்றபோது மகிழ்வு கட்டியணைத்தது. என்னைப்பற்றி மேலும் தெரிய என்னிடம் சில கேள்விகள் கேட்கிறார்.

என் நண்பர்களே கேட்டால் சண்டைக்கு வந்து விடுவார்கள். இயக்குனர் விசு எனது வயது என்னவென வினவ நானும் "நீங்க சொல்லுங்க பார்க்கலாம்" என்றேன். எனது வயதை விட பத்துவயது குறைத்து கூறினார். நான் எனது உண்மைவயதைக் கூறினேன். அவர் சிரித்துவிட்டு "நீங்கள் சந்தோசப் படட்டும் எண்டு 5 வயசு கூடுதலாகக் குறைச்சுச் சொன்னேன்" என்று கூறினார். என்றாலும் எத்தனையோ நடிகைகளைத் தேர்ந்தெடுத்த அனுபவமுள்ள திரைப்பட இயக்குனரான விசு அவர்களுக்கு நான் என்னைவிட ஐந்துவயது குறைந்தவளாகத் தோன்றுகிறேனே அதில் எனக்குத் திருப்தியே!

உங்க உடம்பிலை என்ன வியாதி என்று கேட்டார். "மஸ்கியூலர் டிஸ்ரொபி" என்றேன். அந்த வியாதியின் பெயரே என் வாயால் வெளிப்பட்டதும் அவருக்கு ஆச்சரியம். அவரால் நம்ப முடியவில்லை. காரணம் அன்றோ முதல்நாளோ தான் ஒரு வைத்தியருடன் இது பற்றிப் பேசினாராம். அந்த வைத்தியரிடம் தான் இயக்குனர் விசுவும் வைத்தியம் பெறுகிறாராம். அவரைத் தொலைபேசியில் அழைத்து அவருக்காகக் காத்திருந்தோம். இந்த இடைவேளையில் பல விடயங்களும் பேசினோம். நம் நாட்டுக்கு நிம்மதி கிடைத்த சான்று ஏதும் தெரிகிறதா என்று கேட்டார். எம் தமிழன் இன்னும் திருப்தியாகத் தூங்கும் காலம் வரவில்லை என்று வருந்தினேன். என் தமிழ் உச்சரிப்பை பாபு தங்கப்பன் அதிகம் புரிந்து விசு ஐயாவுக்கு தெளிவு படுத்தினார்.

திடீரென விசு ஐயா எழுந்து என்னருகில் நின்று எம்முடன் வீடியோ எடுத்துக்கொள்ள ஆயத்தமாக, அவரது தரப்பிலிருந்து ஓர் இளைஞர் எம்மைப் படம்பிடித்தார். பாருங்கள்! காலம் எப்படி வேலை செய்கிறது! அவரிலும் நாம் குற்றம் சொல்ல முடியாது. அவர் தான் பிரபலம் ஆனவராச்சே! சிந்தித்து தானே செயற்படுவார். இதைத் தொடர்ந்து விசு ஐயா உள்ளே சென்று விட எம்

உரையாடல் மற்றவர்களுடன் தொடர்ந்தது. வைத்தியரோ வந்தபாடில்லை.

ஒருவர் வந்து நீங்கள் முன்பு நடந்த மக்கள் அரங்கத்தில் "இலங்கைப் பெண் பேசுவது பார்த்தீங்களா!" என்று கேட்டார். "இல்லை" என்றேன். "நீங்கள் சம்மதித்தால் உங்களை இந்த நாற்காலியுடன் உள்ளே கொண்டுபோக நாம் தயார் என்றார்". முழுமனதுடன் சம்மதித்தேன். கரும்பு தின்னக் கைக்கூலியா? என்ன!

■

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு


நிலா, கீதாம்மா


நிலா, வல்லியம்மா


கிருஷ்ணா


மகிழூர்தியில் ஏறும் நிலா


சிவாவின் பிள்ளைகள்

# நிலாவின் இந்திய உலா

## புகைப்படத் தொகுப்பு



விசேட மகிழூர்தியில் நிலா



இயக்குனர் விசு, நிலா, தாயார்

# மக்கள் அரங்கம்

**வி**சு அவர்களின் மக்கள் அரங்கம் பார்த்தாலே மனதில் உற்சாகம் தன்னாலே பிறக்குமல்லவா? மக்களின் பேச்சுத்திறன், துணிச்சல், கலந்துள்ள தங்களை வெளிப்படுத்தும் ஆற்றல், வீறுகொண்ட முயற்சி இவையெல்லாவற்றாலும் பிரமிப்பை ஏற்படுத்தும் விதமாக அவர்களை உலகிற்கு வெளிப்படுத்தும் திருவாளர் விசுவின் பரந்த நோக்கம் பாராட்டியேள ஆகவேண்டியது. இவரைப்பார்ப்பதே எனக்குள் உற்சாகக் கடலை ஏற்படுத்தும் என்றுதானே வைத்தியம் மேற்கொண்டு தளர்ந்து இருக்கும் உடலை உள்ளம் கொண்டு சுமந்து இங்கு வந்திருக்கின்றேனே!



உள்ளே என்னைச் சக்கர நாற்காலியுடன் கொண்டு போயினர். அங்கே ஒரு கணனியுடன் தொடுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சியில் முக்கியமான பகுதிகளைக் காட்டி எங்கள் விமர்சனம் என்ன என்பது அவர்கள் வினாவாக இருந்தது. அந்த நிகழ்வில் பங்கு கொண்ட அந்த வஞ்சியின் துயருடன் சேரந்த மண்தாகம் கொண்ட பேச்சு நிச்சயம் கேட்பவர்கள் மனதைத் தொடாமல் இருக்காது. இலங்கைச் சூழலால் அவதியுற்ற அவள் குடும்பம் ஓர் அகதிமுகாமிலோ வேறெங்கோ தங்கி உயர்படிப்பு முடித்தும் இந்தியக் குடிமகள் அவள் இல்லையென்பதால் அவள் படும் துன்பமும் கூட மனதை உருக்கியது. அவளைப் போல் எமக்குத் தமிழீழம் ஒன்றே தீர்வாக இருக்க முடியும் என்ற கருத்தை திடமாக நாமும் முன்வைத்தோம்.

■

# இன்னுமோர் வைத்தியம்

**வை**த்தியர் வந்து விட்டார். தான் ஏதோ பதிப்புக்குத் கொண்டுபோன கட்டுரையை விசுஐயாவிடம் கொடுத்தார். அவர் அதைப்பார்க்கவே மறுத்து விட்டார். எம்மை பேசிக் கொள்ளும்படி கூறிவிட்டு விசு ஐயா நகர்ந்துவிட பாபு எம் சார்பாக வைத்தியரிடம் கதைத்தார். வைத்தியரும் தனது முன் நோயாளிகளின் அனுபவத்தைப் பகிர்ந்தார். மஸ்கியூலர் டிஸ்ரொபி வியாதியுள்ள பலருக்கு வைத்தியம் செய்ததையும் சிலர் ஓரளவு சுகம் வரவே வைத்தியத்தை நிறுத்தியதையும் குறைப்பட்டார்.

திருவாளர் விசுவோ தனக்கும் இந்த வைத்தியத்துக்கும் எதுவித பொறுப்புமில்லையெனவும் தான் ஒரு வழிகாட்டிமரமாகச் செயற்படுவதாகவும் கூறினார். அவரது காரியதரிசி பாபு தங்கப்பன் மிகவும் கரிசனையாக நடந்து கொண்டார். நாம் அங்கிருந் மற்றவர்களின் உதவியுடன் மகிழூர்ந்துக்குள் ஏறி உட்கார்ந்ததும் என்பணிப்பெண் சொன்ன வரிகள் இன்றும் இதயத்துள் முள்ளாக.

*தீயினாற் சுட்டவடு ஆறும் - ஆறாது*
*நாவினாற் சுட்டவடு!*

■

## பயண ஏற்பாடு

**வை**ஷ்ணவி ரெஸிடென்ஸியை இரவு 11.30 மட்டில் வந்தடைந்தோம். ஏற்கனவே சென்னையில் இருந்து பிரியா வந்து சந்தித்திருந்தாலும் இன்றும் எம்மை வழியனுப்பு வதற்காக மீண்டும் பெங்களூர் வந்திருக்கின்றார். நான் கேரளாவில் இருக்கும்போது எனது தொலைபேசியில் அழைத்து "அக்கா கவலைப்படாதீங்க, எப்படியும் உங்களை வழியனுப்புவதற்கு நான் வருவேன்" என்று சொல்லி யிருந்தார். அதன்படி இன்று 5 மணியளவில் பெங்களூர் புகையிரத நிலையத்தில் வந்திறங்கியும் எம்மைச் சந்திக்க அவகாசம் போதாததால் திரு விசுவைச் சந்திக்கும் வாய்ப்பை இழந்து விட்டார். நாம் வந்ததும் மிகவும் இதுகுறித்துக் கவலைப்பட்டார்.



இவர் பெங்களூர் வருகின்றார் என்ற துணிவில்தான் நான் அந்த இறுதி நேரத்திலும் திரு. விசுவைப் பார்க்கும் முயற்சியை நடைமுறைப்படுத்த முடிந்தது. இவரது உதவி இல்லாவிட்டால் எப்படி நாம் எமது பொருட்களை எல்லாவற்றையும் பொதிகளாக்கி அதிகாலையில் விமானம் ஏறுவது. நான் உடலளவில் செய்யாவிட்டாலும் 'அதைச் செய், இதைச் செய்' என்று செய்விக்கும் பழு கூட பிரியாவின் வரவால் குறைந்தது. சம்பத் அண்ணா அனுப்பி வைத்த பொதியுள் சிறிது தண்ணீர் போய்விட்டதை பிரியா காண்பித்தார். என்ன செய்வது? சேலைகள் விரித்து வைத்து நீரையுறிஞ்சும் விதமாக வேறு உடைகளை அவற்றின் மேல் மடித்து வைத்து சூட்கேசுகளைப் பூட்டினாள்.

முக்கியமாக அதிகாலையில் எனைத் தூக்கிப் பராமரிக்கும் உபகரணமாகிய ஹொய்ஸ்ட்டை (Hoist)

உபயோகிக்க இருப்பதால் அதை வேறு கழற்றி பொதியாக்க வேண்டுமே. இப்படி எத்தனையோ சுய பிரச்சனைகள். பிரியாவின் தம்பி பாலாஜியும் கூட என் அம்மாவின் மீது பிரியம் காரணமாக "அம்மாவைப் பயணம் அனுப்ப நானும் வருவேன்" என்று சொல்லியிருந்தார். ஒருவாறு பிரியாவின் உதவியுடன் ஹோட்டலில் தங்கியதற்கான பணம் செலுத்துவது ஈறாக முக்கியமான விடயங்கள் தவிர்த்து மீதியைத் தயார்படுத்தி தூக்கத்திற்குப் போவோம் என்றால் அப்போது நேரம் இரண்டரைக்கு மேல்.

எப்படியும் நான்கு மணிக்காவது எழுந்து ஆயத்தப்படுத்தினால் தான் எம்மால் மேலும் ஒரு மணி நேரம் பயணம் செய்து விமான நிலையம் அடையலாம். அங்கு ஆறு மணியளவில் போய்விட வேண்டுமே. 'நான் தூங்க மாட்டேன்' என்று பெரிதாக வாயடித்த எனது பணிப்பெண்ணும் தூங்கி விட நான்தான் நாலரை மணியளவில் திடுக்கிட்டெழுந்து எல்லோரையும் எழுப்ப வேண்டியதாயிற்று. ஐந்து மணியளவில் பாலாஜி கதவைத் தட்டினார்.



இதற்குள் எனது பணிப்பெண்ணை திருச்சிக்கு அனுப்புவதற்கான பொறுப்பும் எம்மிடம் இருந்தது. மேலும் எம்மிடம் இருந்த மேலதிகப் பொருட்களைச் சென்னை போனபின் கப்பல் மூலமோ அல்லது வேறுவிதமாகவே அனுப்பும்படி கூறுகிறேன். என்னைத் தயார் படுத்தியபின்பு, என்னைத் தூக்கி இடம்மாற்றும் உபகரணத்தை பகுதிகளாக்கி அவசர அவசரமாக அதற்கான உறைகளிலிட்டுப் பூட்டுகின்றனர். பிரியாவும் பணிப்பெண் கிருபாவும் பாலாஜியும் மற்றைய பொதிகளைக் கொண்டு கீழே செல்கின்றனர். இவர்களின் இப்படியான நிகரற்ற உதவிகளுக்கு நிகரேது? வைஷ்ணவி ரெஸிடன்ஸி ஊழியர்க்கு நாம் மனமார்ந்த நன்றி கூறிப் புறப்பட்டோம்.

■

# உலாவின் நிறைவு

அந்த அதிகாலையில் எமது வண்டி பெங்களூர் விமான நிலையத்தை நோக்கி விரைகின்றது. சாதாரண மனிதர்களைப் போல் பல இடங்களிற்கும் பயணம் செய்யும் அனுபவம் இல்லாத நான் சிறு சிறு விடயங்களையும் உள்வாங்கிக் கொள்கின்றேன். பூட்டப்பட்டிருக்கும் கடைகள் தெருவோரத்து வண்டிகள், சுருண்டு படுத்திருக்கும் நாய்கள் அன்றைய உழைப்பிற்காக சென்று கொண்டிருக்கும் மனிதர்கள் எல்லாவற்றையும் விடாமல் பதிகின்றது எனது மனது. அடிக்கடி எங்கள் கடிகாரங்களையும் பார்த்துக் கொள்ளுகின்றோம். அழகிய காலநிலை மெல்லிய குளிராக எம் மேனிகளில் பதிய பெங்களூர் விமான நிலையத்தை வந்தடைகின்றோம்.

பிரியாவும் தம்பி பாலாஜியும் அன்பாக எமக்கு விடைதருகின்றனர். எம்மைப் பயணம் அனுப்பவெனச் சென்னையிலிருந்து பெங்களூர் வந்து வழியனுப்பும் இவர்கள் அன்பை என்னவென்பது! “அக்கா உங்களுக்காக அல்ல அம்மாவுக்காக வந்தேன்” எனும் தம்பி பாலாஜியின் அன்பு தனித்துவமானது. பணிப்பெண் தன் கண்ணைக் கசக்குவது போலித்தனம் போல் தோன்றுகிறது. “என் கடைசி இரத்தத்தையும் எடுத்துத் தான் போவீங்களோ மேடம்”, என்று நேற்று இரவுதானே விசு அவர்களிட மிருந்து புறப்படும்போது, இவள் எனக்குச்சொன்னாள். மனதுக்குள் சந்துரு பற்றிய கவலையில்லாமலில்லை.

எங்கு போனாலும் எனக்கு ஏதாவதொரு தடை இருக்கும். அது எனக்குப் பழகிவிட்டது. இங்கும்தான். வரவேற்புப் பகுதியில் உள்ளவர் எனது பொருட்கள் எல்லாவற்றையும் விமானத்திலேற்ற கட்டணம் செலுத்த வேண்டுமென அடம்பிடிக்கின்றார். எனது உபகரணமோ

23 கிலோவிற்கு மேற்கொண்ட நிறைகொண்டது. அத்தோடு எனது சுவாசத்திற்குப் பயன்படும் உபகரணமும் வேறு. இவை மருத்துவ உபகரணம் என்பதால் எல்லாவற்றையும் நான் இங்கிலாந்திலிருந்து வரும்போது எதுவித பணச்செலுத்தலும் இல்லாமல் கொண்டுவர பிரிட்டிஷ் எயார்வேய்ஸினரால் அனுமதிக்கப்பட்டிருந்தேன்.

அத்துடன் நானோ அம்மாவோ சாதாரண பயணியாக தலைக்கு 25 கிலோ நிறையுள்ள பொருட்கள் இலவசமாகக் கொண்டு போகலாம். இலண்டனிலிருந்து வரும்போது வாசலில் இருந்தே பாரமேற்று என்னை மிகப்பக்குவமாக ஏற்றிவிட்டனர். ஆசியநாடுகளில் வாடிக்கையாளர்களை நடாத்தும் பண்பு அதைப்போல் மாறவேண்டும். நான் ஆணித்தரமாக அதை பெங்களூரிலும் வாதாடி இறுதியில் அதன்பயனாக எனது ஏறக்குறைய 8 கிலோ நிறையுடைய அந்த சுவர்மாட்டியையும் இலவசமாக, விமானத்துக்கு அனுப்ப அந்த பெல்ற்றில் ஏற்றிவிட்டனர்.



இன்னும் பத்துமணிநேரம் பயணித்துத் தான் இலண்டனைச் சேரமுடியுமே என்ற ஏக்கத்தில் நான் அம்மாவுடன் போகின்றேன். விமான நிலையத்துள்ளும் லஞ்சம் தலைவிரித்தாடுவதைக் காணமுடிகின்றது. முன்னே அம்மாவுடனான சக்கரநாற்காலி தள்ளப்படப் பின்னே எனது சக்கரநாற்காலியை ஒருவன் தள்ளிப் போகிறான். அம்மாவின் வயோதிபத்தைத் தனக்குச் சாதகமாக்கும் விதமாக ஒருவன் அம்மாவின் முன்னால் சென்று ஒளிப்படக் கருவியிலிருந்து அம்மாவை மறைத்து அம்மாவிடம் பணம் கேட்கிறான். என்னைத் தள்ளிச் செல்பவனும் என்னிடம் பணம் கேட்கும் படி சமிக்ஞை கொடுக்கிறான். என்னிடம் வாலாட்ட இவன்தயங்குவது சிரிப்பைத் தர என்பயணம் விமானம் நோக்கித் தொடர்கிறது, மீண்டும் அடுத்தவருடம் இந்தியா போகவேண்டும் என்ற நிலைப்பாட்டோடு.

■

சுபம்

தன் இயலாமையை
ஒதுங்குதலாகக்
கொண்டுவிடாமல் சவாலாகக்
கருதும் ஈழப்பெண்ணான
நிலா தற்போது லண்டனில்
வசித்து வருகிறார். அவரது
இந்தியப் பயண
அனுபவங்களே இங்கே
நூலுருவம் பெறுகின்றன.
பொதுவாக பயணக் கட்டுரை
என்பது சுவாரஸ்யம் மிக்க
வழிப்போக்கர்களின்
அனுபவத்தைப் பறைசாற்றி
நிற்பதென்பதே. ஆனால்
இப்படைப்பு முழுவதும் நிலா
எதிர்கொள்ளும் உபாதையும்
வலிகளும், அதை அவர்
எதிர்கொண்ட விதமும், அந்த
போராட்டத்திற்கு
உறுதுணையாய் நிற்கும்
உறவினதும் நட்பினதும்
பெருமையும் தவிர நமது
தேசத்தின் சீர்கேடுகள் குறித்து
எழும் அவரது சாடல்களுமே
"நிலாவின் இந்திய உலா".

முகில்